# தெ.பொ.மீ.
# ஒரு தமிழ்க்கடல்

டாக்டர் க.த. திருநாவுக்கரசு

சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல்

# தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல்

பொதுப்பதிப்பாசிரியர்

**முனைவர் இ. சுந்தரமூர்த்தி**

பேராசிரியர் - தலைவர்

தமிழ் இலக்கியத் துறை

சென்னைப் பல்கலைக் கழகம்

ஆசிரியர்

**முனைவர் க.த.திருநாவுக்கரசு**

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னை

2001

தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல்

க.த. திருநாவுக்கரசு

முதற்பதிப்பு : நவம்பர் 2001

© சென்னைப் பல்கலைக் கழகம்

விலை ரூ : 66/=

*அச்சும் அமைப்பும் :*
**அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்,**
5, ஐய்யா முதலி தெரு,
இராயப்பேட்டை,
சென்னை 600 014

# அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழறிஞர்களுள் ஒருவரான பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் தமிழ்ப்பணிகள் பல்வகையின. மொழியியல், பண்பாட்டியல், கல்வியியல், சமயவியல், திறனாய்வியல், பதிப்பியல் எனப் பல்வேறு துறைகளிலும் தம் நுண்மாண் நுழைபுலம் துலங்கப் படைப்புகளைத் தந்தவர்.

விடுதலைப் போராட்டத்திலும், சமுதாயப் பணியிலும், அரசியலிலும் தொண்டாற்றிய தமிழறிஞர் தெ.பொ.மீ. எளிய பண்பால் தம் மாணவர்களையும், பிறரையும் ஈர்த்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையினைத் தோற்றுவித்து அறிஞர் பெருமக்கள் பலரையும் உருவாக்கியவர்.

பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ. தமிழ்ப் பண்பாட்டையும் இந்தியப் பண்பாட்டையும் ஒருங்கிணைத்துப் போற்றியவர். மேலைத் தாக்கத்தால் ஏற்பட்ட புத்தாக்க உணர்வினையும் புதுமையாக்கத்தையும் மரபுநெறி நின்று ஆராய்ந்து ஏற்றுக் கொண்டவர். அவர் எழுதிய கானல்வரி மரபில் கண்ட புத்தாக்கம். பாட்டிலே புரட்சி புதிய திறனாய்வு அணுகுமுறையின் வெளிப்பாடு. பேராசிரியர் பழமையையும் புதுமையையும் இணைக்கும் பாலமாக விளங்கினார்.

பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு ‘தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல்’ என்னும் இந்நூல் வழித் தெ.பொ.மீ.யின் பன்முக ஆற்றல்களையும் திறம்பட ஆராய்ந்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறையின் சார்பில் நிகழ்ந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு இப்பொழுது பல்கலைக் கழக வெளியீடாக வருகின்றது. பல்லாண்டுகளுக்கு முன்நிகழ்ந்த அப்பொழிவுகள் தெ.பொ.மீ. அவர்களின் நூற்றாண்டில் வெளிவருவது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது.

பேராசிரியரின் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நூலாக வெளிவரப் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட பேராசிரியர்கள் நீதிவாணன், பேராசிரியர் இராமசுந்தரம் ஆகியோருக்கு நன்றி.

இந்நூல் அச்சுருவாக்கம்பெற அனைத்துநிலைகளிலும் பெரிதும் துணைநின்ற சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்கட்குப் பாராட்டுதல்கள்.

**பொன். கோதண்டராமன்**

சென்னை
2.6..2001

(பொற்கோ)
துணை வேந்தர்
சென்னைப் பல்கலைக்கழகம்

# பதிப்புரை

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நிகழ்த்திய அறக்கட்டளைச் சொற்பொழிவு இன்று நூலாக வெளிவருகின்றது. பேராசிரியர் டாக்டர் க.த. திருநாவுக்கரசு அவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி இயக்குநராக இருந்தபோது இச்சொற்பொழிவினை நிகழ்த்தினார்கள். பன்மொழியறிஞர் தெ.பொ.மீ.யின் பல்கலைப் புலமையைப் பேராசிரியர் க.த.தி. அவர்கள் இந்நூல்வழி இன்றைய தலைமுறையினருக்கு உணர்த்தி யுள்ளார்கள்.

தெ.பொ.மீ. அவர்களின் ஆய்வு அணுகு முறையையும் ஆராய்ச்சி நுட்பத்தையும் அவர்தம் படைப்புகள் கொண்டு ஆராய்ந்து புலப்படுத்தியுள்ளார்கள்.

இலக்கியத் திறனாய்வாளராகவும், இலக்கிய ஆராய்ச்சியாளராகவும், இலக்கியக் கொள்கையாளராகவும், மொழியியல் அறிஞராகவும் தெ.பொ.மீ. ஆற்றிய பணிகள் என்றும் நினைவு கொள்ளத்தக்கனவாய் விளங்குவன.

மேலை நாடுகளுக்குச் சென்று தமிழ்மொழியின் ஆழ அகலங்களை அறிஞர்களுக்குப் புலப்படுத்தியவர். மொழியியலின் நுட்பத்தைத் தமிழர்களுக்கு உணர்த்தியவர். மொழியியல் அறிஞர்கள் பல்லோரையும் உருவாக்கிய அறிஞர்பெருந்தகை தெ.பொ.மீ.

பல்லாண்டுகளுக்குமுன் பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு ஆற்றிய இச்சொற்பொழிவு தெ.பொ.மீ. அவர்களின் நூற்றாண்டு விழாவில் சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாக வருவது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது.

பல்கலைக் கழக நூல்கள் வெளிவருவதில் ஆக்கமும் ஊக்கமும் காட்டிவருகின்ற மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ அவர்கட்குப் பெரிதும் நன்றி.

சென்னை
5.6.2001

**இ. சுந்தரமூர்த்தி**

## தெ. பொ.மீ. ஒரு தமிழ்க் கடல்

பொருளடக்கம் பக்கம்


| | | | |
|---|---|---|---|
| | பல்கலைப் புலமை | ,, | 9 |
| 2. | இலக்கிய ஆராய்ச்சியாளர் | ,, | 27 |
| 3. | இலக்கியத் திறனாய்வாளர் | ,, | 83 |
| 4. | தமிழ் இலக்கியக் கொள்கையாளர் | ,, | 103 |
| 5. | மொழியியல் அறிஞர் | ,, | 141 |

*இயல் 1*

# பல்கலைப் புலமை

# இயல் - 1

## மீனாட்சி சுந்தரனாரின் பல்கலைப் புலமை

### முன்னுரை

பொதியமலை பிறந்த மொழி வாழ்வறியும் காலம் எல்லாம் புலவர்களால் போற்றப்படும் சிறப்பிற்குரியவர் தென்பட்டினம் பொன்னுசாமி கிராமணியாரும் ருக்குமணி அம்மையாரும் பெற்றெடுத்த அருந்தவச் செல்வர் மீனாட்சி சுந்தரனாராவர்.

### ஊரும் பேரும்

'தொண்டை நாடு சான்றோர் உடைத்து' என்னும் பழமொழியை நாம் அறிவோம் தென்பட்டினம் எனும் ஊர். பாலாற்றுப் பள்ளத்தாக்கில் கடற்கரையோரத்தில் உள்ள ஊராகும். பதினெட்டாம் நூற்றாண்டில், டச்சுக்காரர்களின் வாணிகத் தொழிலகமாக அது இருந்தது. இதனைத் 'தெனாக்பட்டாம்' (Tenagpattam) என்று டச்சுமொழியில் சுட்டினர். பிரெஞ்சுக்காரர்களின் கைக்கு மாறிய இந்த ஊர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயரின் கைவசமாயிற்று. இதன் பிறகு, இவ்வூர் பொலிவினை இழந்ததோடு, பாழடைந்து போயிற்று.

### சென்னைக்குக் குடியேறுதல்

இந்தக் காலகட்டத்தில் தான் (1840 அளவில்) பேராசிரியரின் பாட்டனாருக்குத் தந்தை, சென்னை நகருக்கு வாழவந்தார். முப்பக்கமும் கூவம் ஆற்றினால் சூழப்பட்டு, தீபகற்பம் போல் விளங்கும் சிந்தாதிரிப்பேட்டையில் தம் குடும்பத்தோடு பேராசிரியரின் மூதாதையர் குடியேறினர். அக்காலம் முதல் 1960 வரையில், அவருடைய குடும்பத்தினர், அங்கேயே வாழ்ந்து வரலாயினர்.

### புலமையும் தொழிலும்

அவர்களுள் சிலர், சிறு வணிகர்களாக விளங்கினர். பேராசிரியரின் பாட்டனாரும், தகப்பனாரும் வாணிகம் புரிந்ததோடு, சிறந்த

புலவர்களாகவும் விளங்கினர். டாக்டர் மீனாட்சி சுந்தரனாரின் தந்தையார் ஆதிபுரீஸ்வரர் தல புராணத்தையும், கந்தகோட்ட மான்மியத்தையும் இயற்றியுள்ளார். அவற்றைச் சென்ற நூற்றாண்டின் இறுதியில் சாதுரத்தின சற்குரு புத்தகசாலையினர் வெளியிட்டுள்ளனர். மற்றும், சேரமான் பெருமான் நாயனாருடைய பொன் வண்ணத் தந்தாதி என்னும் பிரபந்தத்திற்குத் தெளிவுரையோடு கூடிய விரிவுரையையும் பொன்னுசாமி கிராமணியார் எழுதியுள்ளார். இந்த நூல்கள் யாவும் பேராசிரியர் தெ.பொ.மீ. ஐயாவின் சொந்த நூலகத்தில் நான் பார்த்தவையாகும். இவை அல்லாமல் வேறு சில நூல்களையும் அப்பெரியார் இயற்றி இருக்கலாம்.

## இளமைப்பருவம்

பேராசிரியர் தெ.பொ.மீ. இருபதாம் நூற்றாண்டு பிறந்தவுடன் (8-1-1901) இந்த மண்ணுலகில் தோன்றினார்.

பேராசிரியருடைய அண்ணா, கிருஷ்ணசாமிப் பாவலர் தமிழ்ப் புலமையோடு, நடிப்புத்திறனும், தேசியவுணர்வும், விடுதலை வேட்கையும் வாய்ந்தவராக விளங்கினார். அவருடைய தலைமையில் சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு தொடக்க நிலைப்பள்ளி நடத்தப்பட்டது. அதன் தலைமை ஆசிரியர் பாவலரேயாவர். அப்பள்ளியில், ஆட்சி மொழிக் காவலர் கீ.இராமலிங்கனாரும், நம் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களும் ஒரே வகுப்புத் தோழர்களாய் முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு முடியப் படித்துள்ளனர்.

பேராசிரியரின் இல்லம், தேசியப் பாசறையாக விளங்கியது. அதற்குத் தமிழகம் என்பது பெயர். பிரிட்டிஷ் காவலாளிகளிடம் சிக்காமல், தலைமறைவாக மகாகவி பாரதியார் மூன்று நாட்கள் இங்குத் தங்கி இருந்தார். வ.உ.சி. அவர்கள் சென்னைக்கு வரும்போது, தங்குமிடமாகவும் ஐயாவின் வீடு, பயன்பட்டது. முதல் உலகப் போரின் பொழுது பரலி.சு. நெல்லையப்பர், பேராசிரியர் வீட்டில் பிற்பகுதியில் குடியிருக்க வந்தார். 1948 வரை அங்கேயே அவர் வாழ்ந்தார். இந்தச் சூழல், தேசபக்தர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பை இளைஞர் சுந்தரனாருக்கு அளித்தது; தேசிய உணர்வு அந்தப் பிஞ்சு உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இதன் விளைவாகத் தேசியம் வளர்த்த தமிழறிஞராகப் பேராசிரியர் தெ.பொ.மீ. பொலிவுற்றார். முரட்டுக் கதருடை அணிந்த அறிஞராகக் கடைசி வரை காட்சி தந்தார். 1942, ஆகஸ்டில் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு எனும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, அவர் அதற்காகச் சிறைத் தண்டனையும் பெற்று ஆறு மாத காலம், சிறையில் இருந்தார்.

## கல்வி கற்ற முறை

### கல்லூரிப் படிப்பு

சென்னைப் பச்சையப்பன் பள்ளியில் முதலில், அவர் பயின்றார். பிறகு பச்சையப்பன் கல்லூரியில் முதலில் மெய்ப்பொருளியலில் இளங்கலைப் (B.A.) பட்டமும், பிறகு வரலாற்றில் முதுகலைப் (M.A.) பட்டமும் சுந்தரனார் பெற்றார். இவற்றுக்கு இடையில் பி.எல். (B.L.) பட்டமும் பெற்றதோடு, சென்னை நீதிமன்றத்தில் வழக்குரைஞராகவும் அவர் பணியாற்றினார். காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தின் உந்துதலால், வழக்கறிஞர் தொழிலை உதறி எறிந்தார்.

### தமிழ்க் கல்வி

இயல்பாகக் குடும்பச் சூழலால், தமிழ்ப் புலமை கைவரப்பெற்ற சுந்தரனார், பல்வேறு இலக்கண, இலக்கியங்களில் தனித்திறமை பெற்றிருந்த ஆசான்களை நாடி, அந்நூல்களை அவர்களிடம் ஆர்வத்தோடு பாடம் கேட்டு, தம்முடைய புலமையை விரிவாக்கிக் கொண்டார்.

### தத்துவஞானம் பெற்றமை

இதைப் போன்றே தம்முடைய தத்துவப் பசியைப் போக்கிக் கொள்ள அத்துவிதத்தைக் கோ.வடிவேல் செட்டியார், சுப்பையா சுவாமிகள் என்பவர்களிடத்தும் வைணவத் தத்துவத்தை இராமாநுச நாயுடு, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார், அகோபிலமட ஜீயர் முதலியோரிடமும் முறையாகப் பாடம் கேட்டு அவர் தெளிவு பெற்றார். சைவத்தைத் தம் தந்தையாரிடமும், பூவை கலியாண சுந்தர னாரிடமும், வேறு சில துறவிகளிடமும் கசடறக் கற்றார்.

### பன்மொழிப் புலமை

இந்தப் பயிற்சிகளுக்கு இடையே, தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி போன்ற மொழிகளையும் பேராசிரியர் கற்றுத் தேர்ந்தார். அவர் 1937 முதல் பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலும் பெருஞ் சான்றிதழ் பயிற்சி பெற்றார். 1939 - 40 -இல் ஒரே தேர்வில் தமிழ் வித்துவான் இளநிலை, நிறைநிலைத் தேர்வுகளை எழுதி, அவர் முதல்வராக வெற்றி பெற்றார். பின்னர் தமிழில் பட்டமும் பெற்றார்.

சிந்தாதிரிப்பேட்டையில் வேதாந்த சங்கத்தை நிறுவி, அத்துவை தத்தைப் பரப்பிய கோ. வடிவேலு செட்டியார், பேராசிரியரின் ஞானத்தந்தை ஆவார். செட்டியார் மறைந்த பிறகு, பேராசிரியர் அச்சங்கத்தின் தலைவரானார்.

### மொழியியல் பயிற்சி

பிற்காலத்தில் மொழியியல் துறையில் சிறந்து விளங்கிய பேராசிரியருக்கு, 1937-இல் புதுச்சேரி 'இந்தியப் பண்பாட்டுக் கழக'த்தின் தலைவரும், பிரான்சு நாட்டின் சிறப்புமிகு மொழியியல் அறிஞருமான டாக்டர் யூலே பிளாக் (Jules Block) என்பவரின் நட்பு கிடைத்தது. அவருடைய மேற்பார்வையில், பேராசிரியர் தமிழ் ஒலிகள் (Tamil Sounds) என்னும் தம்முடைய M.O.L. ஆய்வுப் பட்டத்திற்குரிய ஆய்வேட்டினை எழுதி 1938-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் M.O.L. பட்டம் பெற்றார். நூலை அறிஞர் யூலே பிளாக் எழுதுவதற்குச் சங்கத் தமிழில் இருந்தும் இடைக்காலத் தமிழிலிருந்தும் பல்வேறு சான்றுகளை நம் பேராசிரியர் திரட்டித் தந்தார்.

இந்த நூல், முதலில் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டது. 1954-இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, நூலாக வெளிவந்தது. கால்டுவெலின் ஒப்பிலக்கணத்தில் இடம் பெறாத 'சங்கத் தமிழின் இயல்புகள்' இடைக்காலத் தமிழின் இயல்புகள் விரிவாக இந்த நூலில் விளக்கப்பட்டுள்ளன. ஐயாவின் கருத்துகள் பல, ஆசிரியருடைய கருத்துகளாக வெளிப்பட்டிருப்பதை அந்த நூலை அவரிடம் பாடம் கேட்ட என் போன்றவர் அறிவர்.

## சிறப்புப் பட்டங்கள்

### பன்மொழிப் புலவர்

1939 அளவிலேயே பன்மொழிப் புலவர் எனும் பட்டத்தைச் சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில், டாக்டர் உ.வே. சாமிநாதையர் அளித்துப் பாராட்டியுள்ளார்.

### குருதேவர்

1950 அளவில் பேராசிரியரிடம் தனிநிலையில் தமிழ் இலக்கண இலக்கணங்களைப் பாடம் கேட்ட டாக்டர் மொ.அ. துரையரங்கனார், பேராசிரியர் அ.ச.ஞான சம்பந்தன், பேராசிரியர் முருகன், அடியேன் போன்றவர்கள் 'குருதேவர்' எனும் சிறப்புப் பெயராலேயே பேராசிரியரைச் சுட்டத் தொடங்கினோம்.

நம் நாட்டில் குரு மகராஜாக்கள் பலர் உண்டு. ஆனால், குரு தேவர்கள் இருவரே. ஒருவர் வங்கம் தந்த உலகமகாகவி இரவீந்தரநாத தாகூர்; மற்றொருவர் தமிழகம் பெற்றெடுத்த பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

## பல்கலைச் செல்வர்

1955 தருமையாதீனம் 'பல்கலைச் செல்வர்' எனும் பட்டத்தைப் பேராசிரியருக்குச் சூட்டி மகிழ்ந்தது.

## அறிஞர்

1975 ஆம் ஆண்டு, ஜுலை 5 ஆம் நாள் சாகித்திய அக்காதமி, நம் பல்கலைச் செல்வரைத் தன்னுடைய சிறப்புறு அறிஞர் என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டியது. அப்பொழுது பேராசிரியருக்குச் சூட்டப்பட்ட புகழ்மாலையின் சிறுபகுதிகளையாகிலும் இங்கு நினைவுகூருவோமாக.

தமிழகத்தில் தோன்றிய இவர், பாரதத்தின் திருமகனாவார். சமூகப்பணியும் தேசத்தொண்டும் இவரது இலக்கிய, மொழியியல் முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கவில்லை. பல மொழிகளைப் பயின்று, இலக்கியப் பட்டங்கள் பெற்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

மொழியியல் துறையில் முன்னோடியாக விளங்கி, சாதனைகளும் புரிந்த அவரை, விருதுகளும் பெருமைகளும் தொடர்ந்து நாடி வருவதில் வியப்பென்ன? திராவிட மொழியியல் கழகம் இவரைத் தனது முதல் சிறப்பு உறுப்பினராக்கியது.

முதுபெரும் அறிஞரும், ஆசிரியரும், இலக்கிய வரலாற்றாளரும், மதிப்புமிக்க திறனாய்வாளரும், பன்மொழிப் புலமையும், பல்கலை அறிவும் நிறைந்தவருமான இவ்வறிஞர், ஆசிரியர்களுக்கு எல்லாம் ஆசான்! குருமார் பலருக்கும் இவர் ஒரு 'குருதேவர்!'

தமிழ்நாட்டில், இன்றுவரை இத்தகைய விருதினைப் பெற்றவர் மூதறிஞர் இராஜாஜி, பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ. டாக்டர் கே.ஆர். சீனிவாச ஐயங்கார் எனும் மூவரேயாவர். இதனால் இவ்விருதின் அருஞ்சிறப்புப் புலனாகிறது.

1976-இல் நடுவண் அரசு, 'பத்மபூஷன்' எனும் பட்டத்தை ஐயாவுக்கு வழங்கிப் பெருமையுற்றது.

தமிழ்நாடு அரசின் 'இயல் இசை நாடகமன்றம்' 1977-இல் கலைமாமணி பட்டம் அளித்துப் பேராசிரியரைப் போற்றியது.

பல டாக்டர் பட்டதாரிகளை உருவாக்கிய பேரறிஞர் தெ.பொ.மீ. அவர்களுக்கு மதுரைப் பல்கலைக் கழகம் மதிப்புறு முதுநிலை டாக்டர் பட்டம் 1968-இல் வழங்கிப் பூரிப்பு அடைந்தது.

## சமூக சேவை

இளமையிலேயே பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முதியோர் கல்வி கற்பிப்பதிலும், சுற்றுப்புறச் சூழல் சுகாதாரத்தைப் போதிப்பதிலும், தனிநிலையில் நம் பேராசிரியர் அரும்பணியாற்றி வந்தார். கையில் அரிக்கன் ராந்தலை எடுத்துக் கொண்டு சேரிப் பகுதிகளுக்குச் சென்று அவர் முதியோர் கல்வி வகுப்புகள் நடத்தினார். சமூகப் பணியின் ஒரு முக்கியத்துறையாகக் கல்விப் பணியைப் பேராசிரியர் போற்றினார்.

### கல்விப்பணி

தொடக்கப்பள்ளி மட்டும் இருந்து வந்த சிந்தாதிரிப்பேட்டையில், உயர்நிலைப் பள்ளியை அவர் 1925 அளவிலேயே தொடங்கினார். பிறகு அப்பள்ளியை 1948 அளவில், ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, கலியாணம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி எனும் இருபள்ளிகளாகப் பெருகி வளரச்செய்தார்.

இதற்கிடையே அங்கிருந்த பல்வேறு உயர் தொடக்கப் பள்ளிகள் எல்லாவற்றையும் இணைத்து, ஒரு பொது நிருவாகத்தின்கீழ்க் கொண்டுவந்தார்.

### மாண்டிசோரி பள்ளி

கல்விப் பணியில் பேராசிரியர் செய்த மற்றொரு சிறப்புமிகு செயல், மாண்டிசோரி அம்மையாரின் கல்விக் கொள்கையைப் பின்பற்றி, சென்னையில் (சிந்தாதிரிப்பேட்டையில்), முதன் முதலாக 1945-இல் 'மாண்டிசோரிக் குழந்தைகள் பள்ளி'யைத் தொடங்கி, அதைச் சிறந்த முறையில் நடத்தி வந்ததாகும்.

### தனிநிலை வகுப்புகள்

இவை யாவற்றையும் விட, தம்முடைய வீட்டிலேயே, தமிழைப் படிப்பவர்களுக்கும், ஆராய்ச்சி செய்ப்வர்களுக்கும் விடியற் காலையிலும் விடுமுறை நாள்களிலும், பேராசிரியர் பாடம் சொல்லி வந்தார். இதனோடு அமையாது. வேதாந்த சங்கத்தின் ஓர் அமைப்பாகத் தமிழ்க் கல்லூரி ஒன்றினைத் தொடங்கி, மாலை நேரத்தில் வித்துவான் தேர்விற்குப் படிப்போர்க்குப் பேருதவி புரிந்தார்.

இவற்றோடு, சென்னை ஜார்ஜ் டவுனில் உள்ள ஜெயின் பள்ளியில் ஞாயிறு தோறும் பிற்பகல் மூன்று மணிக்குச் சீவக சிந்தாமணியையும், சூளாமணியையும் முறையாகச் சுந்தரனார் பல ஆண்டுகள் பாடம் சொல்லி, நிறைவு விழாக்களைக் கோலாகலமாக நடத்தியுள்ளார்.

## தொழிற்சங்கத் தலைவர்

இந்தியாவில் தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடியாகத் திரு. வி. கலியாண சுந்தரனாரைப் போல, நம் பேராசிரியரும் சென்னை அலுமினியத் தொழிலாளர் சங்கத்தினை நிறுவி, அதன் தலைவராக இருந்து பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

## தத்துவநூல் பாடம் சொல்லுதல்

மற்றும் வேதாந்த சங்கத்தின் சார்பில், கைவல்யம், நானாஜீவ வாதக் கட்டளை, ஞானவாசிட்டம், திருமந்திரம், திருக்குறள் ஆகிய நூல்களை முறையாகப் பேராசிரியர் வெள்ளிக்கிழமை மாலைகளில் பாடம் நடத்தி வந்தார்.

## மாநாடுகள் நடத்துதல்

இவையல்லாமல், தாம் தொடங்கி நடத்தி வந்த சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அடிக்கடி இலக்கிய மாநாடுகள் தமிழ்மறைத் திருவிழாக்களைப் பன்மொழிப் புலவர் நடத்தி வந்தார். அவற்றுள் பத்துப்பாட்டு மாநாடு, புறநானூற்று மாநாடு, திருக்குறள் மாநாடு என்பன அவருக்குப் பெருமையைத் தேடித்தந்தன.

## தேவதாசிமுறை ஒழிப்பு

அவருடைய சமூகத் தொண்டில் மேலும் இரண்டு அரிய நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கன.

கோயில்களில் தேவதாசிகளின் இழிநிலையைப் போக்க, தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தை, டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் 1927-இல் சட்டமாக்கினார். ஆனால், அதனைப் பல அமைப்புகள் பின்பற்றவில்லை.

கோயில் திருவிழாக்காலங்களில், தெய்வத் திருமேனிகள் திருவுலா வரும்பொழுது அதன் பின்னர், தேவதாசிகள் நடனக் கோலத்தில், சதிராடிச் செல்லுவது வழக்கம்.

சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரி ஈஸ்வரர் கோயிலில் பேராசிரியர் குடும்பத்தினர், ஆண்டுத் திருவிழாவின் போது நடத்தும் வாகனத் திருவிழாவில், தேவதாசிகள் கோயிலுக்குள்ளே ஆராதனைத் தட்டுகளை எடுத்துக் கொடுத்தனர். தூபதீப வழிபாடு நடந்த பிறகு, மூன்று தேவார திருவாசகப் பாடல்களைப் பாடினர். திருவுலாப் புறப்பட்ட பிறகு, தெய்வத் திருமேனிகள் திரும்பி வரும் வரையில், கோயிலில் உள்ள வசந்த மண்டபத்தில் திரளான மக்கள் முன்னிலையில் சதிராட்டம் எனப்படும் பரதநாட்டியத்தை ஆடி, அவர்களை

அத்தேவதாசிகள் மகிழ்வித்தனர். இந்நிலையில், ஊர்வலத்தின் முன்னர் தேவதாசிகள் வராமல் போனது, அப்பொழுது அங்கு வாழ்ந்த சில பெருங்குடி மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. இதன்பிறகு, சிந்தாதிரிப்பேட்டைக் கோயில்களில் தேவதாசிகள் இடம்பெற வில்லை. இந்தச் சாதனையை அமைதியாகச் செய்து முடித்தவர் நம் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாராவார்.

### பலிநிறுத்தல் சத்தியாக்கிரகம்

பெரியபாளையம் அம்மன் கோயிலில், உயிர்ப்பலி கொடுப்பது வழக்கம். அதைத் தடுத்து நிறுத்த 1927 முதல் ஓர் இயக்கம் சென்னையில் நடைபெற்றது. ஒருமுறை, மீனாட்சி சுந்தரனார், ஆட்டை வெட்டுவதற்கு வைக்கப்பட்டிருந்த பலிபீடத்தின் மீது, தம் தலையை வைத்தவண்ணம், 'முதலில் தம்மை வெட்டிவிட்டு, பிறகு அந்த இடத்தில் ஆடுகளையும் கோழிகளையும் பலியிடுமாறு கூறி' சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியுள்ளார். இதனைச் ஜீவபந்து ஸ்ரீபாலும், ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி அவர்களும் கூற, நான் இதைப் பற்றி அறிந்தேன். இந்தப் போராட்டம் 1948 வரை நீடித்தது. இந்தியாவின் விடுதலைக்குப் பிறகே சட்டபூர்வமாக, இந்த உயிர்க் கொலை தடை செய்யப்பட்டது என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது. இவற்றைப் போன்ற பல சமூகத் தொண்டுகளை நம் பேராசிரியர் செய்துள்ளார்.

## திரு.வி.க. கண்ட தெ.பொ.மீ.

திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்களைக் குருவாகவும், அண்ணனாகவும் மதித்துப் போற்றியவர் பன்மொழிப் புலவர். 1941 அளவில், தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார்.

> "தெ.பொ.மீனாட்சி சுந்தரம் பிள்ளை புலவரா? கலைஞரா? கலையா? கலைக் கழகமா? தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரைச் சிலர் 'பல்கலைக்கழகம்' என்று கூறுபவர். எனக்கு அவர் அவ்வாறு தோன்றுகிறாரில்லை! அவர் பல்கலைக் கழகத்தையும் கடந்த ஒருவர்! என்பது என் உட்கிடக்கை. மீனாட்சி சுந்தரனாரின் காட்சி எனக்குக் குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலும் சேர்ந்த ஒரு கழகமாகத் தோன்றுகிறது. தமிழ் அணங்கு மீனாட்சி சுந்தரனாரை வக்கீல் தொழிலுக்கு விடுவதில்லை! பள்ளி ஆசிரியத் தொழிலுக்குச் செலுத்துவது இல்லை! வேறு தொழிலுக்கும் உந்துவதில்லை! அவரைத் தன்வயப் படுத்தினாள்; சுந்தரனார் தமிழ்த் தொண்டரானார்"

என்று பாராட்டியுள்ளார். இவ்விழுமிய மதிப்பீட்டுரை உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை என்பதனைப் பல்கலைச் செல்வரின் வாழ்வும் தொண்டும் பறைசாற்றுகின்றன.

## பேராசிரியரின் பரந்துபட்ட புலமை

சங்கத் தமிழ் முதல் ஜெயகாந்தன் தமிழ் வரையில் உள்ள தமிழ் நூல்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தவர் நம் சுந்தரனார்.

இந்தியாவின் அறுவகைத் தரிசனங்களையும் கரைகண்ட பேராசிரியர், ஐரோப்பிய தத்துவத்தில் மூழ்கித் திளைத்தவர். மதுரைப் பல்கலைக்கழகத்தில், 'பெட்ராண்ட் ரசலும் தந்தை பெரியாரும்' குறித்து அவர் ஆற்றியுள்ள அரியதோர் ஆராய்ச்சிச் சொற்பொழிவு, அவருடைய முதிர்ந்த அறிவையும், கனிந்த அனுபவத்தையும் காட்டுவதாகும்.

### புதுமைச் செம்மை இலக்கிய வாதியா?

துறைதொறும் துறைதொறும் துடித்தெழுந்து, தமிழுக்குத் தொண்டு செய்த மாபெருந் தொண்டர் தெ.பொ.மீ. தம்முடைய வாழ்க்கையை அவர் புதுமைச் செம்மை இலக்கியப் பண்பாளராகத் தொடங்கினார். ஆனால் விரைவில் புனைவு நிலைக் கற்பனையாளராக வீறுணர்ச்சிக் கலைஞராக (Romantist) மாறிவிட்டார். இறுதி நாள் வரையில், அவர் ஒரு 'ரொமாண்டிக்' சிந்தனையாளராகவே விளங்கினார்.

### புதுமை வேட்கை

'எங்கும் புதுமை எதிலும் புதுமை'யை அவர் அறிவு உலகில் நாடிய சான்றோர். ஆனால் அன்றாட வாழ்க்கையில் நெறியோடு இயைந்த பழமையைப் போற்றியவர் பல்கலைச் செல்வர். அவருடைய அறிவியல் வேட்கை நாளும் பெருகி வந்தது

### அறிவியல் ஆர்வம்

"புத்தம் புதிய கலைகள் - பஞ்சபூதச் செயல்களின் சம்பந்தம் கூறும் கலைகள் மெத்த வளருது மேற்கே! - அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை." என்று எண்ணிய பேராசிரியர் அறிவுத்துறையில் இறக்குமதியும் செய்தார். அதே சமயத்தில் ஏற்றுமதி செய்யவும் அவர் அரும்பாடு பட்டார். 'மானத சாத்திரம்' முதல் 'சார்புக் கொள்கை' (Theory of Relativity) வரையில் பல அறிவியல் நுட்பங்களைத் தமிழில் தந்தவர் தெ.பொ.மீ. சென்னையில் சிறப்புற்று விளங்கும் அறிவியல் கழகத்திற்கு (Academy of Science) இருபது ஆண்டுகளுக்கு மேல் தலைவராக அவர் விளங்கினார்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் சிறப்புற்று விளங்கிய தமிழறிஞர் பலர், சட்டம் பயின்றவர்; ஆங்கிலத்தில் வல்லவர். ஆனால், அவர்கள் இரண்டு மூன்று நூல்களுக்கு மேல் தமிழைப்பற்றி, தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதியது இல்லை

நம் பேராசிரியரோ, ஆங்கிலத்தில் 14 நூல்களை வெளியிட்டுள்ளார். 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் ஓர் மகிமை இல்லை! திறமான புலமை எனில், அதை வெளிநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்!' எனும் பாரதி வாக்கிற்கு இணங்க, அவர் 'ஏற்றுமதி' செய்துள்ளார் என்பது சிறப்புமிக்க செய்தியாகும்.

## கலைச் சொல்லாக்கம்

கலைச் சொல்லாக்கத்தில் வல்லவரான தெ.பொ.மீ.யை முப்பது கலைச் சொல்லாக்கக் குழுக்களுக்குத் தலைவராக மதிப்பிற்குரிய ஜி.ஆர். தாமோதரன் அமர்த்தி இருந்தமை இங்கு நினைவுகூரத் தக்கது. ஆளுமை, துகிலியத் தொழில் நுட்பம், சார்புக் கொள்கை போன்ற ஆயிரக்கணக்கான கலைச் சொற்களைப் படைத்து அளித்தவர். நம் பேராசிரியர் என்பதை யாரும் மறக்க இயலாது.

## தியானம்

ஆழ்நிலைத் தியானத்தை உலகம் எங்கும் பரப்ப, மகரிஷி மகேஷ் யோகியோடு சேர்ந்து, ஒரு பத்து ஆண்டுகள் பேராசிரியர் அரும்பாடுபட்டார்.

யோகத்தால் தாம் பெற்ற பயனை "எனக்குப் பல நோய்கள் உண்டு; சிறு நீரில் சர்க்கரை கல்லீரல் கோளாறு; ஆஸ்த்மா எல்லாம் உண்டு. இவை என்றும் என் பணிக்கு இடையூறு செய்யாமல் தடுப்பது ஆழ்நிலைத்தியானந்தான். இது என் குணத்தையும் மாற்றி வருகிறது. துணைவேந்தராக இருக்கும் போது அடிக்கடி கோபப்படுவேன். இப்போது கோபம் என்ன என்றே எனக்குத் தெரியாது." என்று அவர் எடுத்துரைத்துள்ளார்.

## சான்றோர்

இந்தக் காலகட்டத்தில் பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. அவர்கள் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராக உள்ளொளி பெற்ற ஞானியாக, விளங்கி ஞாலம் அனைத்தும் அளந்த தமிழின் மேன்மையை உலகம் உணரச் செய்தார்.

# பலதுறைப் படைப்புகள்

மாபெரும் படிப்பாளியான பேராசிரியர், படைப்பாளியாக - படைப்பு இலக்கியத் தலைவராகத் திகழவில்லை. தம்முடைய தமையனாரின் தாக்கத்தால், இளமையில் கவிதைகள் - சிறப்பாக ஆசிரிய விருத்தங்கள் எழுதியதாகத் தெரிகிறது.

## கவிதை

ஆர்க்காடு, வண்டிக்காரத் தெருவின் கோடியில் மௌன சுவாமிகளின் சமாதி இருக்கிறது. அந்தச் சுவாமிகளின் குருபூசை ஒன்றுக்கு (1941 ஆக இருக்கலாம்), நாள் என் சிறிய பாட்டனாரோடு சென்றிருந்தேன். என் தாயாரின் தாய்வீடு அந்தத் தெருவில் இருந்தது. மற்றும் என் மாமன்மார்கள், குருபூசை விழாக்களில் முக்கியப் பங்கு பெற்று இருந்தனர். நான் விழாவிற்குச் சென்றிருந்த ஆண்டு நம் பேராசிரியர் ஐயாவும், வேறு சிலரும் பேச்சாளராக அங்கு வந்திருந்தனர். நம் பேராசிரியர் 'நான் யார்? சிவம் யார்?' எனும் தலைப்பில் பேசியதோடு, 'மௌனகுரு பாமாலை' எனும் தாம் இயற்றிய விருத்தப்பாக்கள் அடங்கிய 16 பக்கச்சுவடி ஒன்றைப் பாடி அரங் கேற்றினார்.

1930-இல், தம் குருநாதர் கோ. வடிவேலு செட்டியார் மறைந்த பிறகு, அவருக்குச் சிலை ஒன்று பேராசிரியரின் அரிய முயற்சியால், வேதாந்த சங்கத்தில் அமைக்கப்பட்டது. அந்த விழாவின் நினைவுப் பிரசுரமாகப் பேராசிரியரின் பாடல்கள் பொதிந்த சிறுநூலை வெளியிட்டுள்ளனர். இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை என்னிடம் இருந்த அந்த இரு நூல்களும், இன்று என்னிடம் இல்லாமைக்கு வருந்துகிறேன்.

இவற்றால், பேராசிரியருக்குப் பாட்டியற்றும் திறன், நன்கு கைவரப் பெற்றதாக இருந்ததை அறிய முடிகிறது.

## நூல்கள் காட்டும் பேராசிரியர்

இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் பன்மொழிப் புலவர் பேராசிரியரின் நூல்கள் ஐம்பத்து இரண்டு. அவற்றுள் நான்கு, அவரால் பதிப்பிக்கப் பட்டவை. எஞ்சியுள்ள 48 நூல்களுள் 14 ஆங்கில நூல்களாகும். இவை போக மீதமுள்ள 34 தமிழ் நூல்களுள், தமிழ் இலக்கிய வரலாறு, சங்க காலம், பத்துப்பாட்டு ஆய்வு, உலக நாகரிகத்தில் தமிழரின் பங்கு என்பன ஐயா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு வெளியிடப் பட்டவை. பேராசிரியரின் 48 நூல்களுள் 'கோயிலை இடிப்பதா? கொண்டு திருத்துவதா?' 'இராமாயணப் போராட்டம்' என்பன துண்டு அறிக்கைகளாகும். வள்ளுவரும் மகளிரும், சம்பந்தரும் சமணரும், சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, கவிஞர் இரவீந்தரநாத தாகூர்,

சயாமில் திருப்பாவை திருவெம்பாவை, தமிழும் பிற பண்பாடும், வாழுங்கலை, தேனிப்பு, என்பன நூல்களாகவே முதலில் வெளியிடப்பட்டவை.

## சொற்பொழிவுகள்

இரண்டு ஆங்கில நூல்களும், சிகாகோ பல்கலைக் கழகத்தில் செய்யப்பட்ட சொற்பொழிவுகள் மற்றும் Advaita in Tamil, Some asepcts of Indian Social philosophy, Aesthetics of the Tamils எனும் மூன்று நூல்களும், சென்னைப் பல்கலைக் கழகத்து டாக்டர் இராதா கிருஷ்ணன் மேல்நிலை மெய்ப்பொருள் ஆய்வு மையத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளின், நூல் வடிவங்களாகும். The Philosophy of Tirkkural என்பது சென்னைப் பல்கலைக்கழகத்தின், தமிழ்த்துறையின் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவின் நூல் வடிவமாகும்.

## கட்டுரை நூல்கள்

இந்த ஆறு சொற்பொழிவு நூல்களோடு மேலே முதலில் கண்ட பதினோரு நூல்களும் நீங்கலாக மற்றவை எல்லாம் (32 நூல்கள்) பேராசிரியர் அவ்வப்போது கட்டுரைகளாக எழுதிப் பல்வேறு இதழ்களில் வெளியிட்டவற்றின், தொகுப்பு நூல்களாகும்.

அவை, கலாநிலையம், லோகோபகாரி, தமிழ் முரசு, கலைக்கதிர், சக்தி, கலைமகள், தினமணிச்சுடர், தினமணி, சுதேசமித்திரன், நவ இந்தியா, ஈழகேசரி, செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், விந்தியா, Journal of Annamalai University, Journal of Madras University, Annals of the Oriental Research, Journal of Madurai University, Journal of the Indian Institutes, Journal of the Mythological society முதலியவற்றில் கட்டுரைகளாக வெளிவந்தவையாகும். மற்றும் சில ஆண்டு மலர்களிலும், சிறப்பு விழா மலர்களிலும், உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகளிலும் வெளிவந்தவை யாகும்.

இந்நூல்கள் யாவற்றையும் பன்னிரண்டு தலைப்புகளில் தொகை வகைப்படுத்தலாம். அவை வருமாறு:

1. அறிவியல் (1)
2. ஆராய்ச்சி நூல்கள் (தமிழ் 10 + ஆங்கிலம் 1 = 11)
3. கல்வி (தமிழ் 1)
4. தத்துவம் (ஆங்கிலம். 4)
5. மொழியியல் (தமிழ் 3 + ஆங்கிலம் 3 = 6)
6. முருகியல் (ஆங்கிலம் 1)

7. வசனம் (தமிழ். 1)
8. யோகம், தியானம் (தமிழ். 3)
9. இலக்கிய வரலாறு (தமிழ். 3 + ஆங்கிலம். 1 = 4)
10.வரலாறும் பண்பாடும் (தமிழ். 2)
11.வாழ்க்கை வரலாறு (தமிழ். 1)
12.மொழிபெயர்ப்பு (தமிழ். 1)

இவை அல்லாமல், இந்தப் பன்னிரண்டு துறைகளில் அமைந்த கட்டுரைகளின் தொகுப்பு நூல்கள் (தமிழ் 6 ஆங்கிலம் 4) பத்தும் சேர்ந்து பேராசிரியருடைய 48 நூல்கள், பன்னிரண்டு துறைகளைச் சேர்ந்தனவாக உள்ளன.

## மொழிபெயர்ப்பு

இவற்றுள் கால்டுவெல் ஒப்பிலக்கணத்தின் முதற்பகுதியான அடிச்சொற்கள் ஆங்கிலத்தில் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது. கோ. வடிவேல் செட்டியாரின் 'திருக்குறள்-பரிமேலழகரின் உரை விளக்க நூலில் காணப்படும் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு, நம் பேராசிரியரால் செய்யப்பட்டதாகும். “சிறு பிள்ளைத்தனமாக தவத்திரு ட்ரூ என்பாரின் ஆங்கில மொழிபெயர்ப்பினைத் தழுவிச் செய்ய முயன்றேன். ஆனால், அந்த முயற்சியில் வெற்றிகிட்டவில்லை” என்று அவரே தெரிவித்துள்ளார்.

## பிறர் பேரில் உள்ள அறிவியல் நூல்கள்

பேராசிரியரின் அறிவியல் வேட்கையை அளவிட்டுரைக்க இயலாது. உளவியலை, 'மானத சாத்திரம்' எனும் தலைப்பில் இரு பகுதிகளாகத் தமிழில் வெளியிட்டமை, இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

மாண்டிசோரி அம்மையாரின் கல்விக் கொள்கையை விளக்கும் நூல் ஒன்றினை அவருடைய நண்பர் பேராசிரியர் ஈ.த. இராசேசுவரி அம்மையார் எழுதி உள்ளார். அந்த நூலிற்குக் குழவி உள்ளம் என்பது பெயராகும். அதனுடைய பெரும்பகுதி, பேராசிரியர் அவர்களால் எழுதப்பட்டது என்பதை ஒருமுறை படிப்பவரும் எளிதில் உணர்வர்.

டாக்டர் ஈன்ஸ்டினுடைய சார்புக் கொள்கையைப் பல ஆய்வரங்கங்களிலும், சிறப்புச் சொற்பொழிவுகளிலும் பேராசிரியர் தமிழில் விளக்கிப் பேசியுள்ளார். இதனுடைய சில பகுதிகள் கலைக்கதிரில் வெளிவந்தன.

இரண்டாவது உலகப் போரை ஒட்டி, அணுக்கொள்கை உலகெங்கும் பரவியது. நம்முடைய பேராசிரியர் அணுவின் புராணம் எனும் தலைப்புகளில் பல சொற்பொழிவுகள் செய்துள்ளார்; எழுதியும் உள்ளார்.

ஆனால், பிற்காலத்தில் இவையாவும், இயற்பியல் பேராசிரியரான ஈ.த. இராசேசுவரி அம்மையாரின் பேரிலேயே நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு பலபட்டை தீட்டப்பட்ட வைரமாகப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் விளங்கினார். பன்முக ஆளுமை உடைய அறிஞர் எனத் தெ.பொ.மீ. யைப் போற்றுவது பொருந்தும்.

## அடக்கவுணர்வு

ஆனால், 'நான் எடுப்பார் கைப்பிள்ளை. நான் கற்றதோ மிகக் குறைவு கற்க விரும்புவதற்கோ இவ்வாழ்நாள் போதாது எனும் எண்ணம் உடையவன். மக்களோ என்னை அறிஞர் எனவும், பெரும் புலவன் எனவும், பல்கலைச் செல்வன் எனவும் பாராட்டுகின்றனர். இதற்கெல்லாம் நான் தகுதியுடையவன் தானா? என்பது எனக்குப் புரியவில்லை தமிழ் மக்கள் என்னிடம் கொண்டுள்ள அன்பு பெரிது என்பது இதனால் தெரிகிறது அல்லவா?' என்று பல்கலைச் செல்வர் எழுதியுள்ளமை அவருடைய அடக்கவுணர்வை வெளிப்படுத்துகிறது. அவர் பல்கலைகளில் செல்வராக உயர, உயர உலகியல் செல்வத்தில் வறியவராக மாறிய கதை, நம் உள்ளத்தை நெகிழ்விப்பதாகும்.

## கீழைப்பண்பாடு மேற்குப் பண்பாட்டை மணத்தல்

பல்கலைச் செல்வர் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தமிழ்ப் பண்பாட்டு வழி மலர்ந்த இந்தியப் பண்பாட்டின் முழுநிறை வடிவமாக விளங்கினார். அத்துடன் மேற்கு நாட்டுக் கல்வி வழியாகப் பெற்ற பண்பாட்டையும் தமதாக்கிக் கொண்டார். அவருடைய எண்ணத்தில் எழுச்சியையும், இதயத்தில் மலர்ச்சியையும் அளித்தது மேற்கு நாட்டுப் பண்பாடு. கிழக்கு மேற்குப் பண்பாட்டுக் கலவையின் ஒட்டு மொத்த வடிவமாகக் குருதேவர் காட்சியளித்தார். அவரிடம் ரூடியார்ட் கிப்ளிங்கின் எனும் கொள்கை பொய்த்து விட்டது.

பேராசிரியர் தெ.பொ.மீ. கிழக்கு பெற்றெடுத்த குழந்தை ஆனால், அதே சமயத்தில் மேற்கு கொடுத்துதவிய புட்டிப்பாலைக் குடித்துத் தம் சிந்தனையை வலிவும் பொலிவும் பெறச் செய்து கொண்ட ஞானி அவர்

## முடிவுரை

"அவனே புலவன்!
அவனே அறிஞன்!
அவனே தமிழை
முழுதுணர்ந்தோன்!

எனும் பழம்பாடலிற்கு இலக்கியமே நம் பல்கலைச் செல்வர்! அவர் தமிழகத்தில் தோன்றினார்! இந்திய தேசிய எழுச்சி பெற்ற பாரதப் புதல்வனாக வளர்ந்தார்! பேரறிஞராக மலர்ச்சியுற்றபொழுது உலகக் குடிமகனாக உயர்ந்து நின்றார்! இதனால், உலக அரங்கில் தமிழிற்குப் புதுவாழ்வு கிடைத்தது! தமிழ்ப் பண்பாடு புத்தொளி பெற்று, புதுமைக் கோலம் பூண்டது! தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு!'' எனும் உணர்வு, அறிவுலகில் அலையலையாக வீசத் தொடங்கியது.

இயல் 2

# இலக்கிய ஆராய்ச்சியாளர்

# இயல் - 2

## இலக்கிய ஆராய்ச்சியாளர்

இந்நூற்றாண்டில், தமிழிற்குப் பன்முகப் பணியாற்றிய அறிஞர்கள் சிலர். அவர்களுள், நம் பேராசிரியருக்கு ஒரு தனி இடம் உண்டு. பழைய தமிழ்க் கல்வியைப் பரப்பும் பணியை, உரை விளக்கங்களின் மூலமாகவும், விரிவுரைகளின் வாயிலாகவும், பொழிப்புரை விளக்கவுரை வழியாகவும் கொண்டு ஆற்றியவர்களே மிகப் பலர். அவை யாவும், ஏறக்குறைய ஒரே வார்ப்பில் வடிக்கப்பட்டதைப் போன்று, பொருட் பொலிவும், கருத்தாழமும் அற்றனவாக விளங்கின. உயிரோட்டம் அற்ற வெற்றுச் சொற்கோவைகளாக - அறிமுகவுரை களாகவே இருந்து வந்தன.

### வழிகாட்டி

ஒருவர், 'சீவக நம்பி' எனும் தலைப்பில் ஒரு நூலினை எழுதுவார்; மற்றொருவர், அதே செய்திகளை 'வீணை வித்தகன்' என்று வேறொரு நூலின் மூலம் வெளியிடுவார்; இன்னொருவர், 'காந்தருவகாதையில் காதலன்' எனவும், மற்றும் சிலர், 'கலையரசிகள் பதின்மரின் கணவன்' எனவும் நூல்களை வெளியிடுவர். இவை யாவும் 'சீவக சிந்தாமணி' எனும் காப்பியக் கதையைச் சொல்லுவதாகவே இருக்கும். சிலவற்றில் ஆசிரியர் வரலாறு, சமயம், காலம் பற்றிய இயலும், முக்கியப் பாத்திரப் படைப்புகளைப் பற்றிச் சில கட்டுரைகளும் சேர்க்கப்பட்டு இருக்கு மானால், அவற்றை 'ஆராய்ச்சி நூல்கள்' எனப் பெருமை கொள்ளுவர். இந்த நிலை 1965 வரையிலும், பெருவழக்காக இருந்தது.

இந்த மெத்தனப் போக்கினை மந்த நிலையை, 1930 அளவிலேயே மாற்ற முயன்றவர் தெ.பொ.மீ. யாவார். இவ்வாறு 'தமிழ் இலக்கிய

---

(1) இவருக்கு முன்பே, மறைமலையடிகள் 'ஆராய்ச்சி' எனும் பெயருடன் கூடிய இரு நூல்களை வெளியிட்டு இருந்தார். அவை எழுபது விழுக்காடு திறனாய்வு முறையிலும், இருபது விழுக்காடு ஆராய்ச்சிக் கண்ணோட்டத்திலும், பத்து விழுக்காடு 'அறிமுக' முறையிலும் அமைந்தவை.

ஆராய்ச்சித் துறையில் ஒரு புது வழியைக் காட்டியதோடு அமையாது, அந்த ஆராய்ச்சி முறை தற்சார்பற்றதாகவும் (Objective) உண்மை நாடும் வேட்கையுடையதாகவும், புதுமைப் பொலிவும், கருத்துச் செறிவும், தெளிவும் உடையதாகவும் அமைய வேண்டும் எனும் நெறிமுறைகளைத் தம் ஆராய்ச்சி நூல்களில் முதன்மை இடம் பெறச் செய்துள்ளார். இதனால், தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் புதியதொரு விழிப்புணர்வைச் - சகாப்தத்தைத் தொடங்கி வைத்தவர் பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் எனக் கூறலாம்.

## இலக்கியத் தோற்றம்

இலக்கியம் பற்றிப் பேராசிரியர் கொண்டு இருந்த கொள்கை, மிகவும் செறிவானது; ஆழமானது; தெளிவானது; பொருட் பொலிவு மிக்கது கருத்தோட்டம் வாய்ந்தது.

“இலக்கியம் மக்களுக்கு இன்றியமையாதது. மனிதனுக்கு நெஞ்சு ஒன்று உண்டு என்பதனை இந்த உண்மை வற்புறுத்துகிறது. அவனுக்கு வயிற்றுப் பசி இருப்பது போல, உணர்ச்சிப் பசியும் உண்டு. இலக்கியம் படைப்பது மனிதனுடைய இயல்பு”[2] என்று இலக்கியத் தோற்றத் திற்குரிய காரணத்தை அறிஞர் தெ.பொ.மீ. வெளிப்படுத்தியுள்ளார்.

தொடக்க காலத்தில் இலக்கியம் எவ்வாறு இருந்திருத்தல் கூடும் என்பதை அவர், “முதலில் இந்த இலக்கியம் இசையோடும், கூத்தோடும் கலந்து விளங்கியது. பொது மக்கள் கூடிக் கலந்து, பாடிஆடி மகிழ்ந்தனர். அவர்கள் தொழிலோடும் விழாவோடும் ஒன்றாக வளர்ந்ததுதான் இம்மூன்றும்”[3] எனத் தெளிவுறுத்தியுள்ளார். இந்தக் கருத்தினைப் பின்னணியாகக் கொண்டதே, தமிழருடைய ‘முத்தமிழ்க் கோட்பாடு’ என்பதனை, நாம் இங்கு நினைவுகூர்தல் வேண்டும்.

## இலக்கிய வளர்ச்சி நிலை

அடுத்து, இலக்கியம் வளர்ந்த நிலையைப் பேராசிரியர், ‘இலக்கியம் என்றால் இன்று, தனித்தனிக் கவிஞர்களின் படைப்பே நினைவிற்கு வருகிறது. எழுத்தில் எழுதப் பெற்ற செய்யுள்களே, இலக்கியம் என மயங்குகிறோம் மொழி, செவி வழியே அனுபவிக்கும் (ஒரு வகை) அனுபவம் என்பதனை மறந்து விடுகிறோம். கூடி அனுபவிப்பதே இலக்கியத்தின் பழங்காலச் சிறப்பு. வாய்வழியே வந்த காவியங்கள் உலகில் உண்டு. பொதுவாக எல்லோரும் பாடி, ஆடும்போது

---

*2 தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மக்கட் பாடல், கலைக்கதிர், நவம்பர், 1985, ப.27.*

*3 மு.கு.நூ., 22.*

அனைவரும் சேர்ந்தே படைத்தனர். நாளடையில், அது பொதுவுடைமை ஆயிற்று. பின்னே, அதனைப் பாடுவோரும் தமக்கும் தம் காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்றாற்போல் மாற்றியும், புதியது புகுத்தியும் பாடி வருவாராயினர். நாடு, நாடாய்ப் பறந்து வருதலின், இதனை 'நாடோடிப் பாடல்' என்றனர். நாகரிக(முற்ற) மக்கள், இந்தக் கட்டுத் திட்டங்களுக்கு அடங்கி எழுதப்பெறும் செய்யுள்களையே கற்று வந்ததால், இதனைப் (நாட்டுப்புறப் பாடல்களைப்) புறக்கணித்து வந்தனர். அதனால், இது நாட்டுப்புறப் பாடலாக எழுத்தறியாதவர் பாடலாக அமைந்து விட்டது[4] என்று தெளிவுறுத்தியுள்ளார்.

பண்டைத் தமிழ் இலக்கியத்திலும் 'வாய்மொழிப்' பாடல்களின் கூறுகள் இடம் பெற்று இருப்பதைத் தொல்காப்பியத்தின் வழிநின்று விளக்க நம் பேராசிரியர் முயன்றுள்ளார்.

தமிழில் கிடைக்கும் பழைய இலக்கணம் தொல்காப்பியம், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழின் நிலைமையை இதில் காணலாம். செய்யுள்களை - இலக்கியங்களை இரண்டாகப் பிரிக்கிறார் தொல்காப்பியர். தனித்தனிக் கவிஞர்கள் இயற்றிய செய்யுள்களின் பல்வேறு கவிமரபுகள், அடிவரையறை முதலியன எழுந்தன. இவை ஒரு புறம். இவற்றிற்கே சிறப்பாக இவர் இலக்கணம் கூறுகின்றார். இத்தகைய வரையறை இல்லாத பாடல்களும் அவர் காலத்திலேயே வழங்கி வந்தன. அவற்றையும் அவர் குறித்துள்ளார். பழமொழிகள், விடுகதைகள், புதிர்கள், நகைச்சுவையும் கற்பனையும் கலந்த விளையாட்டுக் கதைகள் முதலியன இன்றுபோல் அன்றும், எங்கும் போல் அங்கும், பொது மக்கள் படைப்பாக எழுந்து பரவின. நாட்டுப் பாடல்கள் இசையோடு கலந்து வரும்போது, ஆடலிசைப் பாக்களாக வெளிப்படும்போது, மக்கள் பாடல்களாகப் பண்ணத்தி என்ற பெயரோடு வழங்கின போலும்[5] எனத் தொன்மைக் காலத்தில், தமிழில் வழங்கியுள்ள மக்கள் பாடல்களைப் பற்றிய தம் கருத்துகளை எடுத்தியம்பியுள்ளார்.

மனித இனம், காலந்தோறும் தான் பெற்ற அனுபவத்தையும், சிந்தித்த சிந்தனையையும், உணர்ச்சிப் பெருக்கோடு கற்பனை நயந்தோன்ற எடுத்துரைப்பதே இலக்கியம் எனும் எண்ணப் போக்கு நம் பேராசிரியரிடம் காணப்படுகிறது. இந்த விளக்கம், எழுதப்பட்ட இலக்கியத்திற்குத் தரப்பட்டுள்ளதாகும்.

## இலக்கியம் ஒரு வரையறை

பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளில், பல்கலைச் செல்வரின் இலக்கியக் கொள்கை சிதறுண்டு கிடக்கிறது. அவற்றை எல்லாம் தொகை

4. மு.கு.நா. ப.27.
5. தொல்.செய்யு. 173-178.

வகைப்படுத்திக் காண்போமானால், 'கருத்தினைத் தெரிவிப்பது இலக்கியம், இயற்றப்பட்ட காலச் சூழலைப் பிரதிபலிப்பது இலக்கியம், படிப்பவரை மகிழ்விப்பதோடு, அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்திச் சிறப்புறச் செய்வது இலக்கியம்' எனும் உண்மைகள் புலப்படும். இவற்றைப் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் இலக்கியக் கொள்கையாகக் கூறலாம்.

## இருவகை நெறியாளர்

பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ. அவர்களின் சிந்தனைப் போக்கு கடந்த ஐம்பது ஆண்டுகளில் 1927 முதல் 1977 வரை, எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதை, அவருடைய நூல்களைக் கொண்டு ஓரளவிற்கு உய்த்துணர முடிகிறது.

கல்லூரிப் பருவத்திலிருந்து 1945 வரை அவருடைய எண்ணங்களும் எழுத்துகளும் 'புதுமைச் செம்மை இலக்கிய நெறியை' (Neo-Classicist). சார்ந்தனவாக இருந்தன. பின்னர், 1975 வரை, 'புனைவு நவிற்சி' (Romanticist) நெறிப்பட்டனவாக வளர்ந்தன. அவருடைய வாழ்நாளின் கடைப் பகுதியில், 'சமவுடைமை மெய்ம்மை,' (Socialist Realism) போக்குடையனவாக மலர்ந்தன. இப்பாகுபாடு என் மனப்பதிவுச் சார்பினால் செய்யப்பட்டது. ஆயினும், பேராசிரியரின் எண்ணப் போக்கினைப் புரிந்து கொள்ள உதவுவது. இந்தப் பின்னணியில் தமிழறிஞர் தெ.பொ.மீ. அவர்களின் தமிழாராய்ச்சி முறைகளைக் காண முயலுவோமாக.

மொழிப்பற்றும், நாட்டுப் பற்றும் வீறிட்டு எழுந்த நிலையில், தமிழ்க் கல்வியைக் கற்க அவர் முனைந்தார். அதன் அருமை பெருமைகளை மற்றவர்க்கு எடுத்துரைப்பதில் பேரீடுபாடு கொண்டார். திருக்குறள் முதலிய பண்டை இலக்கியங்களில் மூழ்கித் திளைத்தார். இது முதல் கால கட்டம். இதனைப் 'புதுமைச் செம்மை நெறிச் சார்புக் காலம்' எனலாம்.

அடுத்த நிலையில், தமிழ்நாட்டுத் தூய்மை நெறியாளர்களின் (Purists) கருத்துகளைப் பன்மொழிப் புலவர் எதிர்க்கலானார். உலகில் முதன் முதலில் தோன்றியது தமிழ்மொழி; தமிழன் தோன்றிய இடம், உலகில் மனிதன் முதன் முதல் தோன்றிய இடமும் கடல்கொண்ட குமரிக்கோட்டமே; பிறமொழிக் கலப்பு இல்லாமல் தமிழ்மொழி வழங்கப்பட வேண்டும் எனும் கருத்துகளைச் சாடினார். எதிர்த்துப் பேசியும், எழுதியும் வந்தார். சில சமயங்களில், இக்கருத்துகளை அவர் நையாண்டியும் செய்துள்ளார்.

இக்கால கட்டத்தில், அவர் பலமொழிகளைக் கற்றுத் தேர்ந்த பன்மொழிப் புலவரானார். மேற்கு நாட்டு மொழியின் ஒளியாகத் தமிழை ஆராய்ந்தார்; சமய இலக்கியத்தில் பேரீடுபாடு கொண்டார்; கம்பராமாயணத்தையே தலை சிறந்த இலக்கியப் படைப்பாகப் போற்றலானார்.

வாழ்க்கைக்குப் பயன்தராத பழமையைக் கண்மூடித்தனமாக வழிபடுவதை நம் பேராசிரியர் கைவிட்டார். நாட்டில் நிலைபெற்று விளங்கும் சமுதாயப் பழக்க வழக்கங்களையும், சிந்தனைகளையும் எதிர்த்துப் போர்முரசு கொட்டினார். எங்கும் புதுமை எதிலும் புதுமையைக் காண விழைந்தார். புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார் எனும் கம்பன் கருத்திற்குச் சிறந்த இலக்கியமாகப் பேராசிரியர் விளங்கினார்.

தம் வாழ்நாளின் நிறைவுப் பகுதியில் 'பெட்ராண்ட் ரசலையும் பெரியார் ஈ.வெ. ரா.வையும் ஒப்பிட்டு ஆய்வுச் சொற்பொழிவுகள் செய்த காலத்தில், அவர் 'சமவுடைமை மெய்ம்மை நெறியாளராக'த் தோன்றினார். "மக்களின் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையானவை பயன்படத் தக்கவை யாவை?'' என்பதைக் கண்டறிந்து, அந்த நோக்கிலேயே, அவர் செயல்பட்டார். வாழ்க்கையில் அவர் பெற்ற கசப்பான அனுபவங்கள் இந்த மாற்றத்திற்கு உந்துதல் சக்திகளாக அமைந்து இருக்கலாம்.

பொதுவாகத் தமிழ் நாட்டின் அரசியல், சமுதாயச் சூழ்நிலைகளே, நம் பேராசிரியரின் சிந்தனைப் போக்கினைப் பெரிதும் பாதித்து இருக்கின்றன. இந்தப் பின்னணியில், டாக்டர் தெ.பொ.மீ. அவர்களின் வாழ்வையும் தொண்டையும் மதிப்பிட முயலுவோமாக.

## ஆராய்ச்சி

'ஆராய்ச்சி என்பது யாது?' எனும் எண்ணம் அடுத்து எழக்கூடும். எல்லாருக்கும் நன்கு தெரிந்த சொல் இது. ஆனால், எளிதில், வரையறுத்துக் கூற இயலாதது. 'ஆராய்ச்சி' எனும் சொல், தொல்காப்பியத்தில், மெய்ப்பாட்டியலில் (12), இடம் பெற்றுள்ளது. இச்சொல்லினைப் பேராசிரியர் (12 நூ.ஆ) எனும் உரையாசிரியர் ஆராய்ச்சி என்பது ஒரு பொருளை, நன்று, தீது என ஆராய்தல்"[6] என்று தெளிவுறுத்தியுள்ளார். இதனால், ஒரு பொருளின் நன்மை, தீமைகளைக் கூர்ந்து நோக்கிக் கண்டு அறிவதே 'ஆராய்ச்சி' என்பது புலப்படுகிறது. நாம் உண்மையைக் கண்டறியும் நோக்கத்தோடு ஒரு நூலினையோ, ஒரு பொருளையோ துருவித் துருவிப் பார்த்தலே ஆராய்ச்சி எனலாம்.

6. தொல்.மெய்ப். 12-பேரா. உரை.

பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் ஆராய்ச்சி பற்றிய கருத்தினை அறிய முயலுவோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இந்நூலாசிரியன், எம்.லிட் பட்ட ஆராய்ச்சியாளராக இருந்தபொழுது, (1960), இரத்தினச் சுருக்கமாக ஆராய்ச்சியைப் பற்றிப் பேராசிரியர் தெரிவித்துள்ள கருத்துகள் இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும். "ஆராய்ச்சித் தலைப்பினைத் தேர்ந்து எடுத்தல், மிகவும் முக்கியமான செயலாகும். அதன் பிறகு, அத்தலைப்பை ஒட்டி, அதற்குத் தேவைப்படும் கருத்துகளைத் திரட்ட (சேகரிக்க) வேண்டும். இது ஆய்வு செய்த பின் முதற்படியாகும். பின்னர், சேகரித்த செய்திகளையும் கருத்துகளையும் வகைப்படுத்த வேண்டும். இது இரண்டாவது படி நிலையாகும். இதற்கு அடுத்து, வகைப்படுத்தப்பட்ட கருத்துகளை அதிகாரத் தலைப்போடும் ஆய்வேட்டுத் தலைப்போடும் தொடர்புபடுத்தி, விளக்கியுரைக்க வேண்டும். இதனை முறையே சேகரித்தல் அல்லது திரட்டுதல் (Collection), வகைப்படுத்துதல் (Classification), விளக்கியுரைத்தல் (Interpretation) எனக் கூறுவார்.

மூன்றாவது நிலையான விளக்கியுரைத்தலை, மேலும் விரிவுபடுத்தி விளக்கிக் கூறுதல், திறனாய்ந்து தெளிதல், பின்னர் மதிப்பீடு செய்தல் (Evaluation) என மேலும் வகையான நுட்பங்களைக் கொண்டது என்று தெளிவுறுத்தியுள்ளார். இவ்வாய்வுப் பணியில் ஈடுபடும் பொழுது, ஒருவனுக்குத் தேவைப்படுவது விருப்பு, வெறுப்பற்ற உள்ளம் - தற்சார்பற்ற நோக்கு (Objective Outlook) என்று வற்புறுத்திக் கூறுவது இவருடைய வழக்கம்.

இன்றைக்கு, நூற்றுக்கணக்கான பக்கங்களில் வெளியிடப்படும் 'ஆராய்ச்சி நெறிமுறைகள்' பற்றிய நூல்கள் எல்லாம், மேலே கண்ட மூவகை அடிப்படைகளைக் கொண்டே விரித்துரைக்கப்படுகின்றன.

பல்கலைச் செல்வர் அமைத்துக் கொடுத்த ஆராய்ச்சி முறையினை உரைகல்லாகக் கொண்டே, அவருடைய இலக்கிய ஆராய்ச்சி நூல்களை மதிப்பிட முயலுவோம்.

## பேராசிரியரின் தமிழ்ப்புலமை

வரலாற்று மாணவராகவும், மெய்ப்பொருளியல் மாணவராகவும் விளங்கியவர் தெ.பொ.மீ. என்பதை முன்னரே கண்டோம்.

இக்கல்லூரிப் படிப்புகளுக்கு அப்பால், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கில மொழி இலக்கியங்களைக் கற்பதில், இளமை முதலே அவர் ஆர்வம் காட்டி வந்தார். அவருடைய தகப்பனாரே, சிறந்ததொரு தமிழ்ப் புலவர் என்பதை நாம் மறத்தலாகாது.

## பரந்துபட்ட புலமை

பேராசிரியரின் தமிழ்ப் புலமை தொல்காப்பியம் முதல் மேத்தாவின் கண்ணீர்ப் பூக்கள் வரை விரிந்து பரந்த ஒன்றாகும்.

இவ்வாறே இருக்குவேதம் முதல், காண்டேகர் படைப்புகள் வரையிலான இந்திய இலக்கியங்களை ஆர்வத்தோடு அவர் கற்றுத் தேர்ச்சியுற்று இருந்தார். பண்டைக்கால இலக்கியங்களைப் போற்றினார். அத்துடனமையாது, தம்முடைய சமகால இலக்கிய வளர்ச்சியைப் புறக்கணிக்காது, அவற்றின் முதன்மைப் போக்குகளைக் கண்டறிந்து, தம் சிந்தனையை வளப்படுத்திக் கொள்ளுவதற்கு அவர், என்றும் தயங்கியது இல்லை

மொழியியல் அறிஞரான தெ.பொ.மீ. அவர்கள், தமிழின் பழமையைப் போற்றும் 'பூசை மனப்பான்மை'யை வெறுத்தவர். ஆனால், அதே சமயத்தில் தமிழின் உண்மையான சிறப்பு இயல்புகளை உலகிற்கு உணர்த்த அவர் அரும்பாடுபட்டார். புதிய துறைகளில் - சிறப்பாக அறிவியல் துறையில் தமிழை வளர்க்க அவர் முயன்றார்.

ஜி.ஆர். தாமோதரம், ஈ. தா. இராஜேசுவரி போன்ற அறிவியல் அறிஞர்களை ஊக்குவித்தார்.

"உண்மையிலேயே தமிழ் வாழ வேண்டும், வளர வேண்டும் என்றால், முதலில் தமிழ் மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழ வேண்டும்; வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும். அப்பொழுதுதான், தமிழ் வளரும்; வளமார்ந்த வாழ்வைப் பெறும்" என்பது பேராசிரியரின் அசைக்க இயலாத நம்பிக்கையாகும்.

## ஆராய்ச்சி நூல்களின் வகைப்பாடு

மாபெரும் படிப்பாளியாக விளங்கிய நம் பேராசிரியர், சிறந்த ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்தார். பல்கலைச் செல்வர், படைப்பாளி யாகப் புத்தம் புதிய நூல்களைப் படைப்பவராக - விளங்காமற் போனது, தமிழின் தவக் குறைவே எனலாம். இதனால், அவர் இயற்றியுள்ள நூல்கள் அனைத்துமே, ஆராய்ச்சி மனம் கமழ்வனவாக உள்ளன. அவற்றுள் இலக்கிய ஆராய்ச்சி நூல்களாக உள்ளனவற்றை மட்டும், இங்கு நம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளுவோம்.

பேராசிரியரின் இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் தமிழில் பத்தும், ஆங்கிலத்தில் ஐந்தும் உள்ளன. இவற்றுள் சில திறனாய்வு நூல்களாக உள்ளனவற்றை மட்டும், இங்கு நம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளுவோம்.

பேராசிரியரின் இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் தமிழில் பத்தும், ஆங்கிலத்தில் ஐந்தும் உள்ளன. இவற்றுள் சில திறனாய்வு நூல்களாகத் தோன்றுகின்றன. இவற்றை எட்டு வகையாகப் பாகுபடுத்தலாம். அவை

(1) சங்க இலக்கிய ஆராய்ச்சி
(2) திருக்குறள் ஆராய்ச்சி
(3) சிலப்பதிகார ஆராய்ச்சி
(4) தேவார, திவ்வியப் பிரபந்த ஆராய்ச்சி
(5) கம்பராமாயண ஆராய்ச்சி
(6) பெரியபுராண ஆராய்ச்சி
(7) பாரதியாரின் படைப்புகளின் ஆராய்ச்சி
(8) புதுமைத் தமிழ் ஆராய்ச்சி

என்பனவாகும்.

இவற்றுள் தேவார - திவ்வியப் பிரபந்த ஆராய்ச்சி நூல்களையும் பெரிய புராண ஆராய்ச்சி நூலையும், 'பக்தி இலக்கிய ஆராய்ச்சி' எனும் தலைப்பில், பின்னர்க் காண்போம். இதனால், இப்பகுதியில் அறுவகை ஆராய்ச்சி நூல்களே, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

## 1. சங்க இலக்கிய ஆராய்ச்சி

தமிழின் தொன்மைக்கால இலக்கிய - இலக்கணங்களில் பேராசிரியருக்குப் பேரீடுபாடு இருந்து வந்தது. தம்முடைய வீட்டில், பலவகைத் தொழிலில் ஈடுபட்டிருந்த தமிழ் ஆர்வலர்களுக்குச் சங்க இலக்கியங்களை ஞாயிறு தோறும் முறையாகப் பாடம் சொல்லிய பெருமைக்குரியவர் நம் பேராசிரியர். இந்த நூலாசிரியன் நற்றிணை, பத்துப்பாட்டு எனும் சங்க இலக்கியங்களைப் பல்கலைச் செல்வரிடம் 1950-1954-ஆம் ஆண்டுகளில் மேலே குறிப்பிட்ட நிலையில் பாடம் கேட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

மற்றும், பல சமயங்களில், அவர் சங்கப்பாடல்களைப் பற்றி எழுதியுள்ள கட்டுரைகள் பல தொகுக்கப்பட்டு, சில நூல்களாக வெளியிடப்பட்டும் உள்ளன. இங்கு நம் ஆய்விற்குப் பயன்படும் நூல்கள்:

(1) நற்றிணை நாடகங்கள்
(2) பத்துப்பாட்டு ஆய்வு
(3) முல்லைப் பாட்டு ஆராய்ச்சி (ஆங்கிலத்தில்),
(4) தமிழ் இலக்கிய வரலாறு - சங்க காலம் என்பன.

முதலில் 'சங்க கால இலக்கிய வரலாற்றை' எடுத்துக் கொள்ளுவோம். இந்நூலினை இலக்கிய வரலாறு எனக் கூறுதல் ஓரளவிற்குத்தான்

பொருந்தும். பேரளவிற்கு இந்நூல், சங்க இலக்கிய ஆராய்ச்சியாகவே அமைந்து இருக்கிறது.

பேராசிரியர் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள தமிழ் இலக்கிய வரலாறு எனும் நூலின், மொழி பெயர்ப்பு அன்று இந்நூல்.

நெடுங்காலமாகச் சங்கப் பாடல்கள் பற்றித் தம் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களை எல்லாம் தேக்கிவைத்து இருந்த பேராசிரியர் அவற்றை முறைப்படுத்தி, இந்த நூலின் வாயிலாக வெளியிட்டுள்ளார் எனக் கூறலாம்.

### நூலின் நுவல் பொருள்

இந்நூலினுள் சங்கம் பற்றிய மரபுவழிச் செய்திகள் முதலில் ஆராயப்பட்டுள்ளன. அடுத்து இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும், சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள், அகப்புறப் பாகுபாட்டு நயம், இலக்கியக் கலைத் திறன்கள், சில திணை-துறை விளக்கம், சிறப்புமிகு புலவர் சிலரின் கவித்திறன், நாட்டுப்புறப் பாடல்களின் சாயல் என்பன போன்ற தலைப்புகள் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

### இலக்கிய வளர்ச்சி நிலை

வாய்மொழிப் பாடல்களே ஆதிகாலத் தமிழில் வழக்கில் இருந்தன. அப்பாடல்களைப் பாணரும், பாடினியும், வேலனும், சாலினியும், அகவன் மகளும் போற்றி வளர்த்தனர். அடுத்த நிலையில், புலவர்கள் எனப்படும் படைப்பாசிரியர்கள், பாடல்களைப் புனைந்தனர். இக்காலத்தில்தான் இலக்கியம், எழுத்தில் வடிக்கப் பட்டது. மூன்றாவது நிலையில், புலவர்களுள் சிலர், மாபெரும் சிந்தனையாளர்களாகவும், ஞானிகளாகவும் சிறப்புற்றவர். அவர்கள். பாடல்கள் வாயிலாகவே, பல அரிய தத்துவக் கருத்துகளை, உலகிற்கு உணர்த்த முயன்றனர்.

இவ்வாறு, தமிழ் இலக்கியம் 'பாணர்-பாடினியர் காலத்தில் அரும்பியது; புலவர்களால் போற்றி வளர்க்கப்பட்டது; அறிஞர்களால் சிந்தனை முதிர்ச்சியைப் பெற்றது' என்பது பேராசிரியரின் துணிவாகும். இம்மூவகை இலக்கிய வளர்ச்சி நிலைகளையும், நமக்குக் கிடைத்துள்ள சங்கப் பாடல்களில் இன்றும் காணலாம் என்பது பன்மொழிப் புலவரின் கருத்தாகும்.

### சங்கப்பாடல்கள் தனிநிலைக் கூற்றுகள்

தொகை நூல்களாகிய சங்க இலக்கியம் ஒவ்வொன்றும் உதிரிப் பூக்களாகிய தனிநிலைப் பாடல்கள் பலவற்றின் தொகுப்பாகும்.

"தனிச் செய்யுட்களுள் ஏதேனும் ஒரு வாழ்க்கைச் செய்தியின் நுட்பத்தைப் பாடும் போது, அந்தச் செய்தியின் முன்நிகழ்ந்தவற்றையும்,

பின் நிகழ்ந்தவற்றையும் தம் கற்பனைத் திறத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ள உரிமை தருவது போல், அவ்வாழ்க்கைச் செய்தியின் நுட்பத்தின் ஆழத்தையும் நம் கற்பனைத் திறத்திற்கே விட்டுவிடு கின்றனர். வாழ்க்கைச் செய்திகளைத் தம்முடைய செய்திகளாகப் புலவர்கள் பாடுவது இல்லை. அவ்வாழ்க்கைச் செய்திகளைக் கதையில் தொடர்புடைய ஒரு பாத்திரத்தில் பேச்சாகவே பாடுவர். இவ்வகையில், ஒவ்வொரு தனிச்செய்யுளும், ஒவ்வொரு நாடகப் பாத்திரத்தின் பேச்சாம். ஆனால், ஒரு தனிச் செய்யுளுக்கும், மற்றொரு தனிச் செய்யுளுக்குமிடையே பொதுவாகத் தொடர்பு இருப்பதில்லை. ஆதலால், நாடகத்தில் மாறி மாறிப் பாத்திரங்கள் பேசி வருவதிலிருந்து கதை வளருவது போல, இவற்றைக் கொள்வதற்கு இல்லை. தனி நாடகப் பாத்திரத்தில் பேச்சேயன்றி, நாடகம் ஒன்றும் உருவாகவில்லை. இதனைப் பேராசிரியர், நாடகத் தனிநிலைக் கூற்று (Dramatic Monologue) எனும் பெயரினால் சுட்டியுள்ளார்."[7]

இவ்வாறு சங்கப் பாடல்கள் அனைத்தையுமே (பத்துப்பாட்டு நீங்கலாக) நாடகத் தனிநிலைக் கூற்றுகளாகக் கொண்டு விளக்கம் தந்துள்ள பெருமை, நம் பேராசிரியருக்கே உரியதாகும்.

## அகம் - புறம்

பன்மொழிப் புலவர் "அகம் - புறம்" எனும் பொருள் இலக்கணப் பாகுபாட்டிற்குத் தந்துள்ள விளக்கம் நம் கருத்தைக் கவருவதாகும்.

"அகம் என்றால் 'உள்' என்று பொருள். 'மனம்' என்றும் கூறலாம். மனத்தால் மட்டும் உணரக் கூடியதைப் பாடுவது, அகப்பாட்டு. அப்படியல்லாமல், பிறவகையாலும் அறியத்தக்கதனைப் பாடுவது புறப்பாட்டு. புறம் என்றால் வெளி. புறத்தே நிகழ்வதை நம்முடைய புலன்களால் அறியலாம். புலன் உணர்வு என்னும் போது புறக்காட்சி மட்டும். பழைய நினைவும் உண்டு. உய்த்துணர்தலும் உண்டு. எனவே, தன் அனுபவத்தைப் பாடுவது எல்லாம் புறப்பாட்டு"[8] எனும் விளக்கம் எளிமையானது; தெளிவானது; சங்கப் பாடல்களின் நோக்கையும் போக்கையும் எளிதில் புரிந்து கொள்ள உதவுவது.

'மரபு வளர்ச்சியும் மரபைத் தூண்டுதலும்' எனும் தலைப்பில், வாய்மொழிப் பாட்டு மரபு, எவ்வாறு பையப்பைய வளர்ந்து, இலக்கிய மரபாக வளர்ந்தது என்பதை ஆசிரியர் நன்கு தெளிவுறுத்தியுள்ளார். இங்கு, எவ்வாறு தனிமனிதருடைய மதிநுட்பமும், மரபும் இணைந்து (Tradition and Individual Talent) வளர்ந்துள்ளன என்பதனைப் பேராசிரியர் இக்காலத்திய திறனாய்வு நோக்கில் புலப்படுத்தியுள்ளார்.[9]

7. *தமிழ் இலக்கிய வரலாறு - சங்க காலம், ப.28.*
8. *தமிழ் இலக்கிய வரலாறு, சங்க காலம், ப. 35.*
9. *மு.கு.நூ, பக். 92*

## வீர காவியமும் சங்கப் பாடல்களும்

சங்க காலத்தைப் பொதுவாக 'வீரயுகம்' (Heroic Age) எனக் கூறுவது, நம்மிடையே இருந்து வரும் வழக்கமாகும். இவ்வாறு பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் முதன் முதல் குறிப்பிட்டார். ஆனால், இவ்வாறு கூறுவது பொருந்தாது என்பது டாக்டர் க. கைலாசபதியின் கருத்தாகும்.

நம் பேராசிரியரும், அறிஞர் கைலாசபதியைப் போன்றே, 'வீர யுகப் பிற்காலமே சங்க காலம்' (Post - Heroic Age) எனும் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.[10]

தம்முடைய கருத்தை நிலைநாட்ட அவர் காட்டியுள்ள காரணங்கள் மூன்று. 'வீரயுக காலத்திய சமுதாயம்' 'பழங்குடி இனக் குழுக்களின்' போராட்ட காலமாக இருக்கும். ஆனால், நம் சங்க காலத்தில் முடியுடை மூவேந்தரின் ஆட்சிக்குட்பட்ட நிலப் பிரவுத்துவ சமுதாயமாக மலர்ந்துவிட்டதைக் காணுகின்றோம். இனக் குழுக்களின் எச்சமிச்சங்கள் சில இருந்தன. ஆனால், நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பில் கலந்துவிட வேண்டிய நெருக்கடி நிலையில் அவை இருந்தன. வீரயுகம், கதைப் பாடல்களைத் தோற்றுவிப்பது. சங்கப் பாடல்கள் கதைப் பாடல்கள் அல்ல. மற்றும் வீரயுகம், கல்வி அறிவு இல்லா மக்கள் சமுதாயத்தில், வாய்வழிப் பாடப்படும் தொடர்நிலைச் செய்யுள்களாகிய காப்பியங்களை உலகிற்கு அளிப்பது மரபு. சங்கப் பாடல்கள் இதற்கு நேர் மாறானவை.[11]

மறைந்துவிட்ட முன்னோர்களின் - மாவீரர்களின் வீரதீரச் செயல்களைப் புகழ்ந்து பாடுவன வீரயுகப் பாடல்கள், சங்கப் பாடல்கள் சமகாலத்திய அரசர்களையும் வள்ளல்களையுமே பெரிதும் சிறப்பித்துப் பாடுகின்றன.

மேலும் வீரயுகப்பாடல்ககளில் வீரமும், கொடையுமே போற்றிப் புகழப்படும். சங்கப் பாடல்களில், அறம் பற்றிய எண்ணப் போக்கு மேலோங்கி நிற்கிறது. இக்காரணங்களால், சங்கப் பாடல்கள் யாவுமே வீரயுகப் பாடல்களாகா; வீரயுகத்திற்குப் பிற்பட்ட நிலப்புரபுத்துவ சமுதாய அமைப்பின் தொடக்க காலத்தையே அவை சித்திரிக்கின்றன என்பது பேராசிரியரின் துணிவாகும்.[12]

## இலக்கியக் கலைத்திறன்

சங்க இலக்கியக் கலைத் திறன்களுள் இறைச்சியும், உள்ளுறை உவமையும் முதன்மை இடம்பெறுகின்றன.

10. K.Kailasapathy, Tamil Heroic Poetry P.92.
11. தமிழ் இலக்கிய வரலாறு - சங்க காலம், ப.48.
12. மு.கு.நூ.பக். 48-50.

"இறைச்சி என்றால் வளைந்தது என்பது பொருள். நேரான பொருளில் கூறாமல், குறிப்பாகப் பொருள் உணர்த்துவதை நேராக அல்லாமல் வளைவாகப் பொருள் உணர்த்துவது என்பார்கள். பழந்தமிழர் இதனை 'இறைச்சி' என்றனர். இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் என்பதே பொருளாம். கருப்பொருள் ஆழமான குறிப்புப் பொருளைத் தருவதற்கு வருகிறது" எனும் விளக்கம் அகப்பொருள் இலக்கியத்தில் இறைச்சிப் பொருள் பெறும் இடத்தை நன்கு தெளிவுறுத்துகிறது.

## உள்ளுறை உவமம்

இதனோடு நெருங்கிய தொடர்பு உடையது; 'உள்ளுறை யுவமம்' என்பதாகும். குறிப்புப் பொருளைப் பலவாகப் பண்டைச் சான்றோர் வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றில், இறைச்சிக்கு அடுத்த நிலையில் சிறப்பிடம் பெறுவது, 'உள்ளுறை' எனப் படுவதாகும். 'ஒப்பீடு' என்றும், 'பிறிதுமொழிதல்' என்றும் கருதத்தக்க வகையில் அமைவது. இதுவும், கருப்பொருளைச் சார்ந்து நிற்பதாகும். "உள்ளுறை என்பது கருப்பொருளை ஒட்டணியாகக் கூறும் போது, அங்கே குறிக்கப் படுகின்ற ஒவ்வொன்றுக்கும் மதிப்பீடு கண்டுபிடிப்பது போன்றது. இந்த வகையில், இது பொதுவான தொனியைவிடச் செயற்கை எனலாம். இதனோடு உவமை அமைவதும் உண்டு. இந்த உவமையே, உள்ளுறையின் உயிராக அமைகிறது"[13] என்பது இங்குக் கருதத்தக்கது.

அகப்பொருள் பாடல்களில் இயற்கை பெறும் இடத்தை முதற்பொருளும் கருப்பொருளும் அமைத்துத் தருகின்றன.

இதற்கு அடுத்து, புறப்பொருள் பாடல்களைப் புலவர் சிலருடைய பாடல்களைக் கொண்டு, நம் பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார். புறப்பாடலும் நாடகப் பேச்சே என்பதைத் தக்க சான்றுகள் தந்து பேராசிரியர் நிறுவியுள்ளார்.

இவ்வாறு, சங்கப் பாடல்களின் அமைப்பும் அழகும், நோக்கும் போக்கும், கலைத் திறன்களும் டாக்டர் தெ.பொ.மீ. அவர்களால் வெளிப்பட்டிருக்கின்றன. சங்க இலக்கியத்தைப் படிப்பதற்கு முயலும் பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில், 'சங்க இலக்கியத்திற்கு ஓர் அறிமுகம்' எனப் போற்றத்தக்க வகையில் இந்த நூலினை அவர் படைத்துள்ளார்.

## நற்றிணை நாடகங்கள்

எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணையின் பாடல்களில் பத்தினைத் தேர்ந்தெடுத்து, பாமர மக்களும் புரிந்து கொள்ளத்தக்க

13. மு.கு.நூ.பக். 65-68.

வகையிலும், சங்கப் பாடல்களைப் படிப்பதில் ஆர்வம் உண்டாகும் வகையிலும் அவ்வப்போது பேராசிரியர் பல இதழ்களில் எழுதி வெளியிட்ட விளக்கக் கட்டுரைகள் ஒன்பதனுடைய தொகுப்பே. 'நற்றிணை நாடகங்கள்' எனும் இந்நூலாகும். பொதுவாக இந்நூலில் இழையோடிச் செல்வது, அகப்பொருள் பாடல்களில் காணப்பெறும் நாடகப் பண்பாகும். "இவற்றைத் தமிழ் மக்களுக்கு என்றே எழுதினேன் அவர்கள் என்ன நினைக்கிறார்களோ தெரியவில்லை? என் கருத்துக்கள் என் கருத்துக்களே. என் முகம்போல மற்றொரு முகம் இராது" எனும் முன்னுரையோடு, நம் ஆசிரியர், இந்த நூலைத் தொடங்கியுள்ளார்.

புன்னை மர நிழலில் நிற்கும் தலைவனோடு, தலைவி பேசி மகிழும்பொழுது, இளமைக்கால நினைவு அவளுக்கு வந்து விடுகிறது. உடனே, அவள் பேச்சை நிறுத்தி விடுகிறாள். தலைவன் காரணம் தெரியாது தவிக்கின்றான். அப்பொழுது, "இந்தப் புன்னை மரம் என் தாயாரால் அன்பாக வளர்க்கப்பட்டது; எனக்குத் தமக்கையாக இந்த மரத்தை என்னுடைய தாயார் குறிப்பிடுவார். அது நினைவிற்கு வந்து விட்டது. என் தமக்கையின் முன்னர், நான் காதற்களியாட்டத்தில் ஈடுபடுவது நாணமாக இருக்கிறது" என்று தலைவி, தன்னுடைய தயக்கத்திற்குரிய காரணத்தை வெளிப்படுத்தினாள் என்பதே நற்றிணையின் 172 ஆம் பாடலின் கருத்தாகும்.

"மரத்திற்கும் உயிர் இருக்கிறது என்பார்கள்; ஆனால், மரங்களையும் உடன் பிறந்தவராக, வாழ்க்கையிலும் கொண்டும் பாராட்டும் இந்தத் தமிழ்ப் புதுமை, தலைமுறை தலைமுறையாக உங்களிடம் வளர்ந்து வருகிற நுட்பம் - இன்றுதான் விளங்குகிறது. உலகம் முழுதினையும் மரங்கொடியுட்பட உடன் பிறந்ததாகக் கொள்ளும் அன்புள்ளம் படைத்த நற்புன்னையின் தங்கையைக் காதலியாகப் பெறும் நலமுடையேன்" எனத் தலைவன் கூறுவதாக, நம் பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.

இப்பாடல், பண்டைத் தமிழரின் ஆன்மநேயவுணர்வை வெளிப் படுத்தும் பாங்கு, தமிழ்ப் பண்பாட்டின் உள்ளார்ந்த உணர்வை நினைவுறுத்துகிறது.

இதைப் போன்ற பாடல்களின் எழிலோவிய விளக்கங்களும், நற்றிணை மாநாட்டுத் தலைமைச் சொற்பொழிவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்நூல், நற்றிணைப் பாடல்களைப் படித்தும், சுவைத் தும் மகிழ்வதற்கு ஒரு வாயிலாக அமைந்துள்ளது எனலாம்.

## பத்துப்பாட்டு ஆராய்ச்சி

பேராசிரியரின் கடைசிக் காலத்தில், வாய்மொழியாகச் சொல்ல, அவருடைய அன்பர் ஒருவர் எழுதிக் கொடுத்த நூலே, பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் இந்நூலாகும்.

இந்நூலில் ஆற்றுப்படைப் பாடல்களே சிறப்புமிகு ஆராய்ச்சிக்கு உரியனவாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 'ஆறு என்றால் வழி; படை என்றால் படுத்தல். குறிப்பிட்ட ஒரு வழியிலே செல்லும்படி செய்வதே ஆற்றுப்படையாம். இது உயர்ந்த மக்களைப் பாடும் பாடாண் திணையைச் சேர்ந்தது' எனும் முன்னுரையோடு, இந்நூல் தொடங்குகிறது.

இந்த நூலில் ஒரு புதிய கருத்தை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். தொல்காப்பியத்தில், ஆற்றுப்படை இலக்கணம் கூறும் நூற்பாவான.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்ற பயனெதிர் சொன்ன பக்கம்

(தொல். பொருள் புறத். 36)

என்று பாடாண்திணையை விளக்குகிறது. "இந்தச் சூத்திரம், பத்துப் பாட்டில் வருகின்ற நான்கு ஆற்றுப்படைகள் வளர்ந்த பின்தான், எழுதியிருத்தல் வேண்டும். பழைய ஆற்றுப்படைகள் இப்படியெல்லாம் அமையவில்லை அல்லவா?"

## தொல்காப்பியர் இருவர்

"தொல்காப்பியர் இருவர் என்று கொள்ள வேண்டி இருக்கிறது. அகத்தியன் மாணாக்கராய அவிநயனாரோடு உடன் பயின்ற ஒருவரும் தொல்காப்பியர் என்ற பெயரோடு பன்னிரு படலத்தில் வெட்சிப் பாடல் பாடியிருக்கின்றார். இவர் நாமறிந்த தொல்காப்பியர் அல்லரென்று இளம்பூரணர் கூறுகின்றார். இன்று நமக்குக் கிடைக்கும் தொல்காப்பியத்தில், பழைய தொல்காப்பியத்தின் கூறுகளும் கலந்து குழம்பியிருக்கின்றன"[14] எனும் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

இதே கருத்தினை, மொழியியல் அடிப்படையிலும் நம் பேராசிரியர் நிறுவ முயன்றுள்ளதை அடுத்து வரும் பகுதியில் காண்போம்.

பத்துப்பாட்டின் ஆற்றுப்படையை வரிசைப்படுத்துகின்ற பொழுது பொருநராற்றுப் படையை முதலாகவும், திருமுருகாற்றுப்படையை ஈறாகவும் வைத்து ஆசிரியர் ஆராய்கிறார். இந்தப் புதிய வைப்பு முறையில் ஒரு சிறப்பு அமைந்துள்ளதைக் காணலாம்.

நக்கீரர் பாடியது திருமுருகாற்றுப்படை. பத்துப் பாட்டின் ஏழாவது பாட்டாகிய நெடுநல்வாடையும் அவராலேயே இயற்றப்பட்டது.

14. பத்துப்பாட்டு ஆய்வு, பக். 3-4.

அப்பாட்டின் தலைவன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். அவனைப் போற்றிப் பாடுவதே, பத்துப் பாட்டின் ஆறாம் பாட்டாகிய மதுரைக் காஞ்சி. இதற்கு முன்னால் இருக்கும் ஐந்தாம் பாட்டாகிய முல்லைப் பாட்டும் இந்நெடுஞ்செழியனைப் பற்றியதேயாகும். எனவே, பத்துப் பாட்டின் ஐந்தாம், ஆறாம், ஏழாம் பாட்டுகளின் தலைவனாகிய நெடுஞ்செழியனைப் பாடிய புலவரான நக்கீரரே, திருமுருகாற்றுப் பாடலையும் இயற்றியுள்ளார் என்பதனால், இதனை ஆற்றுப் படைப் பாடல்களின் இறுதியில் வைத்து விளக்குவது சாலவும் பொருத்தம் உடையதாகக் கருதலாம்.

பத்துப் பாட்டைத் தொகுத்த சான்றோர்கள், முருகக் கடவுளைப் பாடும் பாடலான திருமுருகாற்றுப்படையை, நூலின் முதற்பாட்டாகக் கொண்டமைக்குக் காரணம், அதனைப் பத்துப்பாட்டு எனும் நூலிற்குக் கடவுள் வாழ்த்தாக அமைக்க வேண்டும் எனும் கருத்துடன் செய்யப்பட்டதாக இருத்தல் கூடும்.

திருமுருகாற்றுப்படை உலகிற்கு உணர்த்தும் திருச்செய்தியாக எங்கும் அருள்; எல்லாம் அருள்; அந்த அருளில் கலந்து ஒன்றாகி விட்ட வாழ்வே, வாழ்வு எனப் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

இறுதியாக, இந்த ஆற்றுப் படையைப் பற்றிப் பேராசிரியர் தெரிவித்துள்ள கருத்துகள், தமிழ் மாணவர் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

"இந்த ஆற்றுப்படையின் அமைப்பு பழைய தொல்காப்பியர் காலத்திலோ, பின்வந்த தொல்காப்பியர் காலத்திலோ அறிந்த தொன்றாக இருக்க முடியாது. இதில் புராணக் கதைகள் பலவும், வளர்ந்தோங்கிப் பொதுமக்களிடையே, பரவிய நிலையும், சங்க காலத்தில் எழுந்திருக்க முடியாது. எங்கும் சமரசம் காண்கிற அனுபவ முதிர்ச்சியும் சங்கரர் காலத்தை ஒட்டியதாக வேண்டும். சங்க நடையில் தான், புலவர் பாடுகின்றார். ஆனால், அதில் ஒரு தெளிவும், வேண்டியபடி இயங்கும் ஆற்றலும் இங்கே தோன்றுகின்றன. எனவே, விருத்தப்பாவில் விளையாடும் விளையாட்டு எல்லாம், இங்கே ஒரு சிறிது தோன்றுகின்றன. திருமுருகாற்றுப்படை பதினோராம் திருமுறையிலும் ஒரு புதுமையையேயாம். எனவே, இது சங்க காலத்தது ஆகாது"[15] எனும் துணிவுரை நம் சிந்தனையைத் தூண்டுவதாகும்.

## மதுரைக் காஞ்சி

பத்துப் பாட்டின் ஆறாவது பாட்டு மதுரைக் காஞ்சி. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் 'பத்துப்பாட்டு ஆய்வு' எனும் இந்நூலில் சிறப்புமிக்க ஆராய்ச்சிக் கருவூலமாக, இந்தப் பகுதி விளங்குகிறது.

15. மு.கு.நூ. ப.54.

பாடலின் தலைப்பினைத் தமக்கேயுரிய முறையில், நம் பல்கலைச் செல்வர் விளக்கியுள்ளார்.

"நிலையாக நிற்கும் ஒன்றினைக் காட்டி, அதன்படி வாழ்ந்து நிலையாமையை வெல்லுவதே காஞ்சியாம். 'பாங்கருஞ் சிறப்பின்' என்று தொல்காப்பியர் கூறும் சிறப்பும் இதுதான். பிற நிலையாமைப் பாடல்களைப் போலாது, மதுரைக் காஞ்சி புகழுடம்பு பெறுவோர் வாழும்போது இன்பமாக வாழ்ந்து, பிறரையும் வாழ வைப்பதே, சங்கச் சான்றோர்களின் கொள்கை எனக் கூறலாம். இன்பம் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணி, இன்பமே காணாது போவார் ஒரு புறம். இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நல்வாழ்வே, மதுரைக் காஞ்சி கூறும் வாழ்வு. இப்படிச் செல்லும் நல்வாழ்வைத்தான், புத்தரும் கூறுகிறார். யவன நாட்டு அரிஸ்டாட்டில் என்பவரும் இத்தகைய நடுவுநிலை வழியையே போற்றுகிறார். எனவே, இந்த வழியை 'நல்வழி' எனலாம். 'காஞ்சி' என்ற பெயரைக் கேட்டு, நிலையாமையையே நினைக் கின்றவர்கள், நிலையாமைக்கு இடையே விளங்கும் புகழுடம்பு தரும் வாழ்வை மதுரைக் காஞ்சி வற்புறுத்துவது கண்டு திகைப்பதும் உண்டு" என்று தெளிவுறுத்தியுள்ளார்.[16]

மாங்குடி மருதனார் எனும் புலவரே, 'மதுரைக் காஞ்சி' எனும் இப்பாடலைப் பாடியுள்ளார். இப்பாடலை இயற்றுவதற்கு முன்னர், பல்வேறு பாடல்களை அவர் இயற்றியுள்ளார். பல்வேறு கவிதைகளில் எடுத்துரைத்த கருத்துகளும், பயன்படுத்திய கலைத்திறன்களும், இப்பாடலில் முதிர்ந்தும், கனிந்தும் கவின்பெற்று விளங்குகின்றன.

'வான்கவிதை' (The Idea of a great Poetry) என்பது யாது? என்பதை இந்நூற்றாண்டில் முற்பகுதியில் ஆபர்கிராம்பி (L. Abercrombie) எனும் திறனாய் வாளர் ஆராய்ந்து, தெளிவுறுத்தி உள்ளார்.

"ஒரு நீண்ட கவிதை, வான் கவிதையாகத் திகழாமல் இருக்கலாம். ஆனால், மிகச் சிறிய உருவம் கொண்ட கவிதை வான் கவிதையாகுமா?" எனும் வினாவை முதலில் ஆபர்கிராம்பி எழுப்புகிறார்.

"சொல்லின் ஒரு மந்திரச் சக்தியைக் கொண்டே ஒரு கவிதையை 'வான்கவிதை' என்று இயம்புவதற்கில்லை. அந்தச் சொல்லிலே, எத்தகைய சிறந்த அனுபவமும், கருத்தும் வழங்கப்பட்டு இருக்கின்றன என்று பார்க்கவேண்டும். பொறிபுலன்களுக்கும், உணர்ச்சிகளுக்கும், கற்பனைகளுக்கும் சட்டென்று உணவளித்தால் போதும். சிறந்த கருத்துகளுக்கோ, உயர்ந்த மனிதப் பண்பாடுகளுக்கோ, இடம் தரும் கவிதையே 'வான்கவிதை'. தனி மனிதனுடைய பல்வேறு அனுபவங் களையும் இணைத்துப் பொதுமைப்படுத்தி, ஒரு சமுதாயத்தின்

16. மு.கு.3. ப.57.

அனுபவமாக உணர்ச்சித் துடிப்போடு, கருத்துகளை வெளியிடுவதே 'வான் கவிதை' என்று ஆபர்கிராம்பி விளக்கம் தந்துள்ளார்.[17]

இந்தப் பின்னணியில், நம் பேராசிரியர், மதுரைக்காஞ்சியை விளக்க முயன்றுள்ளார். நீண்ட நெடும்பாட்டாக 782 அடிகளைக் கொண்டு விளங்கும் மதுரைக் காஞ்சி, வீரயுகம் போற்றிய பாடலைப் போல் அமைந்துஇருக்கிறது ஆனால், சம கால நிகழ்ச்சிகளையும் மக்கள் வாழ்க்கையையும் அது சித்திரிக்கிறது. மற்றும், பிற்காலப் பரணிப் பாடல்களுக்கும், இது ஒரு முன்னோடியாக விளங்கும் வகையையும் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாங்குடி மருதனாரின் நுண்மாண் நுழைபுலத்தையும், கவித் திறனையும், கற்பனை வளத்தையும் அறிவதற்கு மதுரைக் காஞ்சி ஒரு சிறந்த வாயிலாக அமைந்துள்ளது. மற்றும், மருதனாரின் போரற்ற உலகை உருவாக்க வேண்டும் எனும் அற வேட்கையையும், மனித நேயத்தையும் நயமாக, அதே சமயத்தில், உறுதியாக எடுத்தியம்பும் உள்ளவுரத்தையும் டாக்டர் தெ.பொ.மீ. அவர்கள் துருவித்துருவி ஆராய்ந்து, வெளிப்படுத்தி உள்ளார்.

இந்நூல் நிறைவடையாமல், இந்த அளவோடு நின்று விட்டமை நமக்கு எல்லாம் ஏமாற்றத்தைத் தருகிறது.

## முல்லைப் பாட்டு

பத்துப்பாட்டின் ஐந்தாவது பாட்டு முல்லைப் பாட்டு. இதைப் பற்றி 1958 அளவில், ஆங்கிலத்திலே ஆராய்ச்சியும், திறனாய்வும் கலந்த சிறந்ததொரு நூலை, பேராசிரியர் வெளியிட்டுள்ளார்.

இந்த நூலுக்கு, அக்காலத்தமிழகத்தில் கல்வி அமைச்சராக விளங்கிய மாண்புமிகு சி. சுப்பிரமணியம் முன்னுரை வழங்கியுள்ளார்.

"முல்லைப் பாட்டு, பலவகையான விளக்கங்களுக்கு இடம் தருவதாக அமைந்துள்ளது. இதுவரை வந்துள்ள விளக்கங்கள் முழுமையான நம்பிக்கை அளிக்கவில்லை. பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் புதிய முயற்சி நம்பிக்கை ஒளியைத் தருகிறது. மேலும், மேலும் இத்தகைய முன்மைத் திறமும், மதிப்பும் வாய்ந்த நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்தால்தான், மாண்புமிகு தமிழிலக்கியப் பாரம்பரியத்தை - மரபுவழிச் செல்வத்தைப் பிறரோடு பங்கிட்டுக் கொள்ள முடியும்'' என்று அவர் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இந்நூலின் தோற்றுவாயில் ''இந்திய ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்தையும், அதனோடு தொடர்புடைய பிறமொழிகளையும்

17. The Idea of a great Poetry. PP.42-48.

உலகம் அறிந்திருக்கும் அளவிற்குத் தமிழ் மொழியையும், பிற திராவிட மொழிகளையும் அறிந்திருக்கவில்லை" எனும் குறிப்புடன் பன்மொழிப் புலவர், தம்முடைய ஆய்வினைத் தொடங்கியுள்ளார்.

"இக்கவிதை தொன்மையானதும் கவிதைக் கலைத்திறன்கள் வாய்ந்ததுமாக விளங்குவது ஒரு புறம் இருக்க, புதுமைக்கால மதி நலத்திற்கு ஓர் அறைகூவலாக இருந்துவருகிறது. இப்பாடலின் மரபு, ஒரு வகையில் இழக்கப்பட்டுவிட்டது. வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடும் 'களப்பிரர் இடையீடு' எனும் காலப்பகுதியில், அம்மரபு இழக்கப்பட்டு இருக்கலாம். அக்காலம் முதல், இப்பாடலின் உரிப் பொருளை அறிவது, ஒரு புதிராகவே இருந்து வருகிறது. இந்தப் பழம் பாடல், ஒரு புதிய கோணத்தில், மறு விளக்க ஆய்வு செய்யப்பட்டு இருக்கிறது இந்நூலில். இந்தப் புதுமைக் காலத்திற்கேற்ப, அந்தச் சிக்கலை எடுத்துரைப்பதற்கு இது ஒரு பொருத்தமான வழியென நினைக்கின்றேன்"[18] என்னும் கருதுகோளை முன்வைத்து, பேராசிரியர் இந்த ஆய்வினைத் தொடங்குகிறார்.

பத்துப் பாட்டில் இடம் பெறும் இந்த 'முல்லைப்பாட்டு' 'முல்லை' எனவும், 'ஆயர்பாடல்' எனவும் பேர் பெறும். இக்காலச் சிந்தனைப் போக்கிற்கு ஏற்பப் பண்டைக்கால இலக்கியக் கருத்துகளை விளக்க முயலுவதிலேயே சிக்கல்கள் எழுகின்றன.

இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளதைப் போல, காட்டு நிலத்தில் செழித்து வளரும் முல்லைக் கொடிகளாலேயே, அந்நிலம், 'முல்லைத் திணை' என்று பெயர் பெற்று இருத்தல் வேண்டும்.

முல்லைத் திணையின் முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் கள் எவ்வாறு, இந்த முல்லைப் பாட்டிலும் இடம் பெற்றுள்ளன என்பதைப் பேராசிரியர், பகுத்துப் பகுத்துக் காட்டியுள்ளார். தமிழ் அகப்பொருள் மரபினை அறியாதவர்கள் கூட, எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் இவற்றைத் தெளிவுறுத்தியுள்ளார்.

முல்லைக்குரிய உரிப்பொருள் 'இருத்தலும், இருத்தல் நிமித்தமும்' ஆகும். தலைவனுடைய பிரிவினால் உண்டான துன்பத்தைத் தலைவன் திரும்பி வருவான் எனும் நம்பிக்கையோடு, மனம் வருந்திக் கண் கலங்காமல் பொறுத்துக்கொண்டு இருத்தலே, முல்லைத் திணைக்குரிய காதலர் ஒழுக்கமாகும்.

பாசறையில் காதலியைப் பிரிந்து இருக்கும் தலைவனின் மன நிலையைச் சித்திரிக்கும் புலவர், அதற்கு முரணாக அரண்மனையிலே, வாட்டமே வடிவாகப் பிரிவாற்றாமையால் துன்புறும் அரச மாதேவியின் புறக்கோலத்தையும், உள்ளக் குமுறலையும் ஆசிரியர் ஓடும் திரைப்படமாக்கிக் காட்டுகிறார்.

18. Mullai. P. Pattu. P.V.

'முல்லை சான்ற கற்பு' என்பதற்கு, 'மனம் கலங்காது பிரிவுத் துன்பத்தைப் பொறுத்து இருத்தலாகிய கற்பு ஒழுக்கம்' என்பதே பொருள். ஆனால், முல்லைப் பாட்டின் இந்த அடிகளுக்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தந்துள்ள விளக்கமே, ஒரு சிக்கலை (பிரச்சினையை) எழுப்புகிறது. 'தலைவன் திரும்பி வந்தால்தான், தலைவி உயிர் வாழ்வாள்; இல்லை என்றால், அவள் இறந்துபடுவாள்' என்று நச்சினார்க்கினியர் கூறுவது மலைப்பை உண்டாக்குகிறது. அவருடைய விளக்கம், முல்லைப் பாட்டில் நெய்தல் உரிப்பொருளாகிய 'இரங்கல்' உணர்வையே வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு கொண்டால், இப்பாட்டிற்கு, 'முல்லைப் பாட்டு' என்று சான்றோர்கள் பெயரிட்டு இருப்பாரோ? எனும் எண்ணத்தை எழுப்புகிறது.

சமஸ்கிருத மொழியில் வல்லுநரான நச்சினார்க்கினியர், அம்மொழி வழக்காற்றைப் பின்பற்றி, செய்யுளில் சொற்கள் கிடக்கும் நிலையில், நேராகப் பொருள் கொள்ளாது, 'மாட்டு' எனும் உத்தியைப் பின்பற்றி, கொண்டுகூட்டிப் பொருள் கொண்டுள்ளார். இதனால், உரிப்பொருள், நெய்தலாகிய இரங்கலோ எனும் எண்ணத்தை எழுப்புகிறது.[19]

நச்சினார்க்கினியர் சிந்தனைப் போக்கு வரம்பற்ற நிலையில், மனம்போன போக்கில் அமைந்து இருக்கிறது எனக் கருதுவது தவறு என்று யாராகிலும் சொல்லுவார்களானால், முல்லைப் பாட்டும் அதைப் பாடிய புலவரும் குறையுடையவராகத் தோன்றுவர். எனவே, உண்மை காண வேண்டியதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். நச்சினார்க்கினியரின் உரைவிளக்கப்போக்கைக் கண்டிக்கும் மறைமலையடிகள், சில குறிப்புகளை நினைவூட்டாகத் தந்து இருக்கிறார். இந்தப் பின்னணியில் நோக்கினாலும், தலைவி, கண்ணீர் அரும்பிக் கலங்குதற்குக் காரணம் புலப்படவில்லை.

'ஓர்ப்பனள் கிடந்தோள்' எனும் தொடரின் உட்பொருளை, நாம் அறிய வேண்டியவராக இருக்கிறோம்.

இக்கவிதை இதனுடன் நின்றுவிடவில்லை. தலைவனுடைய 'வெற்றிமிகத் திரும்புதல்' ஆரவாரம், அவளுடைய காதுகளில் ஒலிக்கிறது. அவ்வொலி, அவள் உடலைப் புல்லரிக்க வைக்கிறது; மகிழ்வுடன் கூடிய இதயத் துடிப்பை உண்டாக்குகிறது. அவளுடைய சோர்ந்த உள்ளம், திடுமென நம்பிக்கை உணர்வோடு வீறுகொண்டு எழுகிறது. அந்நிலையில் படுக்கையில் கிடந்த அவள், நெருங்கி வரும் அந்த ஒலியைக் கூர்ந்து கேட்டுப் புத்துணர்ச்சி பெறுகிறாள்.

---

19. மு.கு.நூ. ப.20.

இந்நிலையில், இந்தப் பாடல் பிரிவுத் துன்பத்தைச் சித்திரிக்கும் பாலைத் திணைப் பண்பிலிருந்து மாறுபடுகிறது நம்பிக்கையற்ற நிலையில் ஏக்கத்தோடு அழுது கண்ணீர் வடிக்கும் நெய்தல் திணையிலிருந்தும் வேறுபடுகிறது.

எனவே, இந்த 'வெற்றியின் துன்பம்' அல்லது வெற்றியின் அவலம் முல்லைப் பாட்டின் வெளி வடிவத்தில்தான் அமைந்து இருக்கிறது. ஆனால், புதை வடிவத்தில், முல்லைப் பாட்டின் உயிர்ப் பண்பாகிய 'இருத்தல்' எனும் ஒழுக்கமும், 'முல்லை சான்ற கற்பு' எனும் அகப்பொருள் கொள்கையும் இலைமறை காயாகக் காட்சி தருகின்றன.

போரிலே வாகை சூடுவதைக் குறிக்கும் புறத்திணையாகிய வாகை, முல்லைத் திணைக்குப் புறமாக அமைந்து இருப்பதை - 'வாகைதானே முல்லையது புறனே' எனும் பொருள் இலக்கண மரபைப் போற்றிக் காப்பதாகவே, நப்பூதனார் பாடியருளிய முல்லைப் பாட்டு, வலிவும் பொலிவும் பெற்று விளங்குவதாகப் பேராசிரியர் முடிவிற்கு வந்துள்ளார்.

இந்த முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுகிறது; பரந்து பட்ட இலக்கிய அறிவை வெளிப்படுத்துகிறது; அளவை நூல் நெறி பிறழாது, சொல்லின் அமைப்பையும், தொடரின் நிலையையும் நுனித்து அறிந்து பார்க்கும் பல்கலைச் செல்வரின் மதிநுட்பத்தை, நன்கு வெளிப்படுத்துகிறது. பேராசிரியர் மு.வரதராசனாரின் 'ஓவச் செய்தி' எனும் நூலின் திறத்தையே இந்த இலக்கியப் புதைவடிவ ஆய்விற்கு ஒப்பாகக் கூறலாம்.

பழைய பாடல்களை விளக்கியுரைப்பதற்குரிய மூன்று முறைகளை, இந்த நூலை நிறைவு செய்யும் பகுதியில், டாக்டர் தெ.பொ.மீ. அவர்கள் தெளிவுறுத்தியுள்ளார். அவை புறத்தோற்றப் பொருள் விளக்கம், உள்ளார்ந்த அறவுணர்வு விளக்கக் கவிதையின் இதயவொலியாக ஒளிரும் புதைவடிவம் மெய்யுணர்வு ஒளிச்சுடர் (Mystic illumination) விளக்கம் என்பன. பிந்திய இரண்டும் பழந்தமிழ் இலக்கிய நெறியில் உள்ளுறை என்பதனுள் அடங்கும். இவற்றை ஒன்றாக்கி, மேற்கு நாட்டு 'முற்றுருவகத்தில்' (Allegory) நாம் அடக்கிக் காட்டலாம், எனவும் நம் பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.[20]

இவ்வாறு இலக்கிய ஆராய்ச்சியில், புதுமைப் போக்கினைத் தொடங்கி வைத்துள்ளதோடு, இவ்வாராய்ச்சிக்குரிய அணுகுமுறை களையும் வரையறுத்துத் தந்துள்ளமை, பேராசிரியர் தமிழிலக்கிய ஆராய்ச்சிக்கு வழங்கியுள்ள கொடையாகும்.

---

*20. மு.கு.நூ. பக். 82-83.*

## 2. திருக்குறள் ஆராய்ச்சி

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திருக்குறளில் தனி ஈடுபாடு கொண்டவராவார்; அவருடைய குருநாதர் கோ.வடிவேலு செட்டியாரிடம், திருக்குறளை முழுமையாகப் பாடம் கேட்டுள்ளார்; 1921 அளவில், திருக்குறளைப் பரிமேலழகர் உரையுடன் தம்முடைய விளக்கங்களையும் சேர்த்து, ஒவ்வொரு குறளுக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பையும் இணைத்து, சிறந்ததொரு நூலாக வெளி யிட்டுள்ளார். அந்த நூலில், இடம்பெற்ற ஆங்கில மொழிபெயர்ப்பு, இளம் வயதில் நம்முடைய பேராசிரியர், டூரு (Drew), லாசரஸ் (Lazarus) எனும் ஆங்கிலேயப் பாதிரிமார்களின் மொழிபெயர்ப்பை முன் மாதிரியாகக் கொண்டு ஆங்கில ஆக்கம் செய்ததாகும்.

இந்த நூல் நெடுங்காலம் விற்பனைக்குக் கிடைக்காமல் இருந்ததை உணர்ந்தே மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானவுடன், அங்குத் தொடங்கப்பட்ட திருக்குறள் துறையின் சார்பில், கோ.வடிவேல் செட்டியாரின் விளக்கவுரையோடு கூடிய திருக்குறள் பரிமேலழகர் உரையை மூன்று பகுதிகளாக வெளியிடப் பேராசிரியர் திட்டமிட்டார். இப்பொழுது, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இத் திருக்குறள் மூன்று பகுதிகளாக விலைக்குக் கிடைப்பது, ஐயாவின் முயற்சியினாலாகும்.

சிந்தாதிரிப்பேட்டை வேதாந்த சங்கத்தில், வெள்ளிக்கிழமை இரவுகளில் திருக்குறள் வகுப்புகளைப் பல்கலைச் செல்வர், பல ஆண்டுகள் தொடர்ந்து நடத்தியுள்ளார்; பிறகு, திருக்குறள் தொடர் சொற்பொழிவுகளைச் செய்துள்ளார். அப்பொழுது, இந்த நூலா சிரியன், ஐயாவிடம் பாடம் கேட்கும் பள்ளிச் சிறுவனாகவும், கல்லூரி மாணவனாகவும் இருந்தான் என்பதை மகிழ்வுடன் நினைவுகூர்கிறேன்.

### வள்ளுவரும் மகளிரும்

இந்நூலே, நம் பேராசிரியரால், முதன் முதல் எழுதப்பட்ட நூல், முற்றிலும் ஆராய்ச்சிமயமாக விளங்கும் நூல். இந்நூல் 1928-இல் இயற்றப்பட்டது. இதற்கு முன்பு, சில துண்டு பிரசுரங்களே ஐயாவால், வெளியிடப்பட்டுள்ளன. இந்த நூலின் தலைப்புப் பக்கத்தில், தென்பட்டினம் மீனாட்சி சுந்தரனாரால் இயற்றப்பட்டது எனும் குறிப்பு காணப்படுகிறது. இதனை சென்னை ஸ்ரீ சாதுரத்தின சற்குரு புத்தக சாலை வெளியிட்டு இருக்கிறது.

இந்நூலின் இரண்டாம் பக்கத்தில் 'உரிமையுரை' எனும் தலைப்பின் கீழ் பின்வரும் வாசகம் காணப்படுகிறது.

"மாதரின் மாண்பை அடியேன்
கண்டறிவான் வேண்டி எதிர்நின்று

மறைந்த எனது திருத்தாயார்
ருக்குமணி அம்மையார் அடிமலர்க்
கணிந்ததோர் அன்புமலராக இந்நூல் இலங்குக"

இந்தப் படைப்புரையில் இருந்து பேராசிரியரின் தாயன்பும், அந்த அம்மையாரின் பெண்மைச் சிறப்பும் நமக்கு எளிதிற் புலனாகின்றன.

இந்நூலின் 'தந்துரை' எனும் முன்னுரையில், இந்நூல் இயற்றப் பட்டதற்குரிய காரணத்தை ஆசிரியர் தெளிவுறுத்தியுள்ளார். அண்மையில் "தோன்றிய சுயமரியாதை இயக்கம் எனும் சூறாவளி, பெண்களை இந்தச் சமுதாயம் அடிமைகளாக வைத்து வழிபடுகிறது; இதற்குத் திருக்குறள் போன்ற நூல்களே காரணம்" என்று அறிவித்து வருகின்றனர். அவர்கள் சித்தாந்தத்தில் உண்மை உண்டா என்பதை அறிவதற்கு ஆவல் கொண்ட பேராசிரியர் திருக்குறளை முழுமையாக, உரையின்றிப் படித்து, ஆய்வு செய்யத் தொடங்கினார். அதன் விளைவாகப் 'பெண்களுக்குப் பெருமை தந்தவர் வள்ளுவர் பெருமானே' எனும் உண்மை, அவருக்குப் புலனாயிற்று. அதை உலகிற்கு அறிவிக்கத் 'தேசபந்து' எனும் இதழில் தொடர்ந்து பல கட்டுரைகள் வெளியிட்டார். அவற்றைக் கண்ட அன்பர்கள், அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடுமாறு பேராசிரியரை வேண்டினர். அவ்வேண்டுகோளின் விளைவாக இந்த நூல் உருவாகியது.

இந்நூலினுள் ஏழு இயல்கள் உள்ளன. அவை

1. காலமோ நூல்
2. பேதையரது பெருஞ்சிறைப் பள்ளி
3. பெண் பேயா? பேய்த்துறவா?
4. அடிமையா? வாழ்க்கைத் துணையா? - காமத்துப்பால்.
5. அடிமையா? வாழ்க்கைத் துணையா? - அறத்துப்பால்.
6. அடிமையா? வாழ்க்கைத் துணையா? - பொருட்பால்.
7. பெண் பிறவி இழிபிறவியா?

என்பனவாகும்.

நூலின் தொடக்கத்தில், குறளிலும் குற்றங் காணுகிறார்களே என்று பேராசிரியர் வருத்தப்படுகிறார்.

திருக்குறளின் எண்ணப் போக்கினை மனுதரும சாத்திரத்தோடு ஒப்பிட்டுக் காட்டி, திருக்குறளின் மூலத்தில் மனு தருமம் கூறும் 'பெண்ணடிமை' பற்றிய குறிப்புகள் யாதும் இடம்பெறவில்லை என்பதை எடுத்துக்காட்டி, திருக்குறளின் உரையாசிரியரான பரிமேலழகரே, மனுதரும சாத்திரக் கருத்தைக் கருத்தில் கொண்டு, விளக்கவுரை தந்துள்ளார். இது மூலநூல் ஆசிரியருக்கு உடன் பாடன்று என்று ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

'கேட்டதாய்', 'சிறைகாக்கும் காப்பு', 'மனத்திண்மை, இருமனப் பெண்டிர்' எனும் திருக்குறள் தொடர்களின் பொருளினை ஆராய்ந்து, எவ்வாறு அவை, பெண்ணின் பெருமையை வெளிப்படுத்துகின்றன என்பதனைப் பேராசிரியர் விளக்கியுள்ளார்.

"எனவே, திருவள்ளுவர் பெண்களைப் பிறர் எல்லாம் அறிவிலிகள் எனப் பேசுவதை மறுத்துரையாடி, அறிவிற் சிறந்த தமிழ்த்தாயினைப் புனைந்துரைக்கின்றார். பேதுறும் பெண்களின் மன நொய்ம்மையை, மாதரின் இயல்பெனக் கொள்ளாது, ஒருமை மகளிரின் மனத் திண்மையைப் புகழ்கின்றார். வீட்டில் அடைப்பதனைச் சிறை என இகழ்ந்து பேசி நிறைகாக்கும் காப்பே தலை என முடிவுகட்டிப், பெண்கள் தம்மைத் தாமே காத்துக் கொள்ளுவதை வற்புறுத்து வதோடு, அதனை உலகறி பொருளாகக் கொண்டு, ஓர் சிறந்த தமிழ் உவமையையும் காண்கின்றார்" எனும் தொகுப்புரை பேராசிரியரின் சிந்தனைப் போக்கையும், திருவள்ளுவரிடத்து அவர் கொண்டுள்ள ஈடுபாட்டையும் தெரிவிக்கின்றன.

காமத்துப்பால், அறத்துப்பால் கருத்துகளை மிக நுட்பமாக ஆராய்ந்து, திருவள்ளுவர் எவ்வாறு பெண்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார் என்பதை டாக்டர் தெ.பொ.மீ. அவர்கள் நன்கு தெளிவுறுத்தியுள்ளார். 'மாதரே நிறைமொழி மாந்தர்' எனும் தலைப்பில், "பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றால் என்னை?" நோன்பு நோற்றுச் செயற்கரிய செய்தலைக் கைவரப்பெற்ற பெரியாராகிய நிறை மொழி மாந்தர் பெருமையை, அவர் மறைமொழி காட்டி விடுதல் போலப் பெண்களும் நோன்பு முதலியவற்றை மேற்கொள்ளாமலே, செயற்கரிய செய்யும் பெருமை பெற்றுத் தமது வாய்மொழி மறைமொழியாகிப் பயன் தந்து நிற்கும் உயர் நிலையை அடைவர் என்க. மழை ஒன்றே பொழியும் என்பது அல்ல; இவர்கள் 'வாய்மொழி மறைமொழி காட்டிவிடும்' என்பதே கருத்து. 'மழை பெய்தல்' ஓர் எடுத்துக் காட்டாகப் பொருளை விளக்க வந்தது. 'தெய்வம் தொழா அள்' என்பது 'துறவியர் மேற்கொள்ளும் நோன்பு என்பன மகளிர் செய்ய வேண்டியது இல்லை' என்பதைக் குறிக்கின்றது"[21] எனும் ஆசிரியரின் விளக்கம், புத்துலகச் சிந்தனையைச் சார்ந்ததாகத் தோன்றுகிறது.

இவ்வாறு, இக்குறட்பாவின் கருத்தினை ஆசிரியர், ஒவ்வொரு சொல்லிற்கும் நுட்பமான பொருள் காண்பதன் மூலம், திருவள்ளு வருடைய சிந்தனைக்குப் புதுப் பொலிவினை ஊட்டியுள்ளார்.

இந்நூலின் இறுதி இயலாகிய, 'பெண் பிறவி இழி பிறவியா?' எனும் பகுதியில், 'பெண்ணே பெருமை உடைத்து', 'பெண்ணின் பெருந்தக்கது

21. மு.கு.நூ. ப.134.

இல்'[22] எனும் திருவள்ளுவரின் கருத்துகளைப் பல அறிஞர்களுடைய கருத்துகளோடு ஒப்பிட்டுக் காட்டி, 'ஆண்பிறவியை விடப் பெண் பிறவியே பெருமை உடையது; பயனுடையது' எனும் திருவள்ளுவரின் முடிந்த முடிபினைப் பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார். இடத்தையும், காலத்தையும் கடந்து வாழும் மாபெரும் ஞானியாகத் திருவள்ளுவர், இந்த ஒப்பற்ற உண்மையை உலகம் உள்ளளவும் உணர்ந்து போற்றுமாறு, இனிது எடுத்தியம்பியுள்ளார் என்பதனை அறுதியிட்டு உறுதியாகக் கூறியுள்ளார்.

'வள்ளுவரும் மகளிரும்' எனும் இந்நூல், பல்கலைச் செல்வரின் கன்னி முயற்சி. எனினும், அது 'தலை சிறந்த ஓர் ஆராய்ச்சி' நூலாக இன்றும் விளங்குகிறது. மற்றும், திருவள்ளுவருடைய உட்கிடையை உலகிற்கு உணர்த்தும் பணியினைச் செம்மையாகச் செய்துள்ளது இந்நூல். இந்நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ள கருத்துகள், காலத்தால் கறைபடாது, இன்றும் புதுமைப் பொலிவோடு நின்று நிலவுகின்றன.

## வள்ளுவர் கண்ட நாடும் காமமும்

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களுடைய ஆராய்ச்சி நூல்களிலே, முதன்மையும், தலைமைச் சிறப்பும் வாய்ந்தது இந்நூல். ஒப்பிலக்கிய ஆராய்ச்சி நூலாகவும், இது பெருவாழ்வு பெற்றுள்ளது எனலாம்.

இந்நூலின் முன்னுரையில், "இப்போது திருவள்ளுவரைப் பற்றி நான் எழுதிய இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஒன்று 'திருவள்ளுவர்' என்ற திங்கள் இதழில் வெளிவந்தது மற்றொன்று; தென்காசித் திருவள்ளுர் கழகத்தின் மலரில் வெளிவந்தது.

'வள்ளுவரைப்பற்றி எண்ணுவதே பெரும்பேறு...தமிழ் மக்களுக்கு என்றே எழுதினேன். அவர்கள் என்ன நினைக்கின்றார்களோ? என் கருத்துக்கள் என் கருத்துக்களே[23] என்று எழுதுவதும் இங்கு எண்ணத்தக்கது' என்று குறிப்பிடுவார்.

சமஸ்கிருத மொழியிலும் இலக்கியத்திலும் பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள். இதைப் போன்றே வேதங்கள், உபநிடதங்கள், தரும சாத்திரங்கள், புராணங்கள் முதலிய வடமொழி நூல்களிலும் அவர் புலமை பெற்றிருந்தார். இந்தப் புலமை அவருக்கு நன்மையாகவும் விளங்கியது - தீமையும் செய்தது. அவருக்குப் பலமாகவும், பலவீனமாகவும் அமைந்தது.

பிற தமிழ்ப் புலவர்களுக்கு வாய்க்கப் பெறாத (மறைமலையடிகள் நீங்கலாக) நம் தமிழ் அறிஞர்கள் இடையே, சமஸ்கிருத நூல்களுள்

22. மு.கு.நூ. ப.168.
23. தெ.பொ.மீ. வள்ளுவர் கண்ட நாடும் காமமும், பக் 1-2.

காணப்படும் ஒத்த கருத்துகளையும் முரண்பட்ட எண்ணங்களையும் எடுத்துரைக்கும் பேராற்றலை, நம் பேராசிரியர் பெற்றிருந்தார். இதனால், 'தமிழ்த் துரோகி' எனும் பழிப்புக்கும் தெ.பொ.மீ. ஆளானார். நடுவுநிலையில் நின்று, உண்மை காணும் வேட்கையோடு சமஸ்கிருத கருத்துகளைப் பேராசிரியர் எடுத்துரைப்பது வழக்கம். இதனைப் புரிந்து கொள்ள இயலாத, நம் தமிழ்ப் புலவர்கள், பேராசிரியரைப் 'பார்ப்பனர் பாதந்தாங்கி' எனவும், 'தமிழை இழித்துரைத்து, சமஸ்கிருதத்திற்குப் பெருமை தருகிறார்' எனவும் தூற்றி வந்தனர். இது உண்மை அன்று; ஐயுறவோடு ஐயாவைப் பார்த்தவர்கள் 'ஒரு வகை மாயையில் சிக்கி', மனம் போனவாறு தூற்றினர்.

1920-க்கு முன்பே, தம்முடைய வீட்டிற்குத் 'தமிழகம்' எனும் பெயரிட்டு, பெருமைப் பட்டவர் தெ.பொ.மீ. இன்றும் சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை உலகப்பன் தெருவில் தமிழகம் எனும் பெயருடைய வீடு, வீறுடன் விளங்குவதைக் காணலாம்.

திருக்குறளின் கருத்துகளைப் பற்றிப் பரிமேலழகர் காலம் முதற்கொண்டு, புலவர் குழந்தையின் காலம் வரையில் கூறப்பட்டு வந்த தவறான கருத்துகளை வடமொழிச் சார்புடையது திருக்குறள் என்பன போன்ற கருத்துகளைப் பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார், 'வள்ளுவர் கண்ட நாடும், காமமும்' எனும் நூலில், தக்க சான்றுகளைத் தந்து, ஆணித்தரமாக மறுத்துள்ளார். இதனை, இன்னும் தமிழுலகம் அறிந்து கொள்ளவில்லை புரிந்து கொள்ளவில்லை; என்றுதான், இந்தத் தமிழுலகம் 'ஞான ஒளி' பெறுமோ? தெரியவில்லை?

இந்நூலின் முதற்பகுதி 'வள்ளுவர் கண்ட நாடு' என்பதாகும். 'திருக்குறளிலா அரசியல்?' எனும் தலைப்பின் கீழ், திருவள்ளுவர் வகுத்த அரசியல் கொள்கையை டாக்டர் தெ.பொ.மீ. அவர்கள் விரிவாக ஆராய்ந்து இருக்கிறார்கள். 'திருவள்ளுவர் மாபெரும் அரசியல் தத்துவ ஞானி; ஆட்சிக்கலை வல்லார். இன்னும் உலகம் இந்தக் கண்கொண்டு வள்ளுவரைக் காணவில்லை' என்று நம் ஆசிரியர் வருத்தப்படுகிறார். அடுத்து, வரலாற்று முறைப்படி அவற்றை ஆராய்தல் வேண்டும். இங்கே, வடமொழிக் கொள்கை, தமிழ்க்கொள்கை என்னும் பேச்சுப் பெரிதும் இடர்ப்படுத்துகின்றது. வள்ளுவர் கொள்கை, கௌடில்யர் கொள்கை என்று பேசுவதில் பொருள் உண்டு. ஆதலின், மதத்தின் பேராலோ, ஆசிரியர் பேராலோ ஒரு கொள்கையை வழங்காது, ஒரு மொழியின் பேரால் வழங்குவது பொருளற்ற பொய்யுரையாம் என்று தொடக்கத்திலேயே பேராசிரியர் அறிவுறுத்தியுள்ளார்.[24]

அடுத்து, உரையாசிரியர் பரிமேலழகர் வழுக்கி வீழ்ந்தமைக்குரிய காரணத்தையும் பன்மொழிப் புலவர், பின்வருமாறு தெளிவுறுத்தி

24. மு.கு.நூ. ப. 7.

யுள்ளார். வடமொழி அரசியல் நூல்களில் கண்டபடியே, திருவள்ளுவரும் கூறியிருப்பார் எனக் கருதிய பரிமேலழகர், பல புதிய கருத்துக்களை வற்புறுத்தி எடுத்துக்காட்ட முடியாமல், பழமைக்கு ஏற்பப் பொருள் செய்து காட்ட மிக முயன்று, வருந்தியது வருந்தத் தக்கதே ஆகும். அடிமைக் காற்று அறிவையும் மழுக்குகிறது அன்றோ? உரிமைக் காற்று வீசுகிறது. குறளின் புதுமையைக் காண்போம்[25] என்று வாசகர்களைத் தம்முடன் வருமாறு பேராசிரியர் அழைப்பு விடுத்துள்ளார்.

'வள்ளுவர் கண்ட அரசு' எனும் இரண்டாவது இயலில், "ஒரு சில கொள்கைகள், வடமொழியிற் காணப்படுவதாலேயே, அவற்றை வடநாட்டுக் கொள்கைகள் என்று கூறுவது தவறு. அவை எல்லாம் உலக அறிவுக் கொள்கைகள். இந்த அறிவுக் கடலில் திளைத்த திருவள்ளுவர், கிணற்றுத் தவளை அல்லர்; கடல் தவளையே ஆவர்," எனும் தற்காப்புரையோடு, தம் ஆய்வைத் தொடங்குகிறார் ஆசிரியர்.

'படைகுடி கூழ் அமைச்சு'[26] எனத் தொடங்கும் குறட்பாவிற்குப் பரிமேலழகர் முதல் பல அறிஞர்களும் வடமொழி சார்பாக (சப்தாங்க) ஏழு உறுப்புகளைக் கொண்டதொரு முதற்பொருள் கருத்தினை விளக்கியுள்ளனர்.

நம் பேராசிரியர், வடமொழி அரசியல் நூல்களில் காண இயலாப் புதுமை ஒன்றை வள்ளுவர் புகுத்தியுள்ளதைக் காட்டுகிறார். "திருவள்ளுவர் இங்கு நுழைத்த புதுமை யாது?" "ஆறும் உடையான் அரசருள் ஏறு'' என்கின்றார் வள்ளுவர். இங்கு அரசன், ஏழு உறுப்புக்களில் ஒன்றாக அமையாது, மற்ற ஆறு உறுப்புகளையும், ஒருமைப்படுத்தி, உயிர்கொடுத்து விளங்கும் முதற்பொருளாக விளங்குகிறான். அரசனை உயிராக்கிப் பிறவற்றை உடலாக்குவது சங்க நூல் வழக்கு. 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'[26] என்னும் துணிவுரை இங்குக் கருதத்தக்கது.

'நாடு' எனும் சொல்லிற்கு மேற்கு நாடுகளின் அரசியல் சித்தாந்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நம் பேராசிரியர் தந்துள்ள விளக்கங்கள் சிறப்பு மிக்கனவாகும். நிலப்பரப்பு, மக்கள் விரும்பிக் குடியேறி வாழும் பகுதி என்பன அதற்குப் பொதுப் பொருள்கள் ஆகும்.

'நாடு' (State) எனும் சொல்லிற்கு அரசியல் தத்துவ நூல்களில், சிறப்பாகக் குறிப்பிடப்படும் பொருள் 'நாட்டு மக்கள்' என்பதாகும். இதனை

''நாடு என்பது மக்களது செயற்பாட்டின் விளைவு ஆதலின், மக்களை விட்டால், நாடு என்பது இல்லை. சமுதாயப் பண்பாடு

---

25. மு.கு. நூ. பக்.8-9.
26. மு.கு.நூ. ப. 11.

வளர்ந்துள்ள இடமே நாடு. ஆதலின், நாடு என்பது நாட்டில் வாழும் மக்களையும் குறிக்கும். இதுவே, மூன்றாம் பொருள் என்று பேராசிரியர் தெளிவுறுத்தியதோடு,

"உறுபசியும், ஓவாப்பிணியும் செறு பகையும்
சேராது இயல்வது நாடு" *(734)*

எனும் குறட்பாவில், இப்பொருளையே திருவள்ளுவர் பெய் துள்ளார் என்று அறிவுறுத்தியுள்ளார்.[27] இங்கு, அண்மைக்கால ஐரோப்பியச் சிந்தனையை, வள்ளுவர் குறளில் காண்பதும், காட்டு வதும் பேராசிரியரின் பரந்துபட்ட புலமையையும், வள்ளுவரிடம் கொண்ட ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

வள்ளுவர் கண்ட நாட்டில், வாழும் குடிமக்களிடம் மொழி ஒற்றுமை, இன ஒற்றுமை, பண்பாட்டு ஒற்றுமை, கொள்கை ஒற்றுமை, உரிமை ஒற்றுமை என்பன யாவும் நன்கு தழைத்து ஓங்கும் எனும் கருத்துடன் இப்பகுதியைப் பேராசிரியர் நிறைவு செய்துள்ளார். அவருடைய கண்ணோட்டத்தில், 'திருவள்ளுவர் கண்ட நாடு, ஒரு 'கற்பனை (Utopia) நாடு' அன்று. மண்ணின் மக்களும் ஆட்சியாளரும் சேர்ந்து அமைத்துக் கொள்ளக் கூடிய புதியதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொள்ளும் சமூகநல நாடாகும் என்பது பேராசிரியரின் (Welfare State) துணிவாகும்.

## வள்ளுவர் கண்ட காமம்

முதலில் 'காமம் தமிழ்ச் சொல் அன்று; இதனை வள்ளுவர் பயன்படுத்தி இருப்பாரா?' எனும் சில அறிஞர்களுடைய ஐயத்தை நீக்குவதற்கு ஆசிரியர் முயன்றுள்ளார்.

"குறளில், காமம் என்ன சொல்லின் வழக்காறு என்னை? இன்பம், இன்பு, இன்பத்துள் என்ற முப்பெரு வடிவ வேறுபாட்டோடும் இன்பம் என்ற சொல் திருக்குறளில் 26 இடங்களில் மட்டுமே வந்துள்ளது. ஆனால், காமம் என்பதோ காமத்தை, காமத்தால், காமத்தான், காமத்திற்கு, காமத்தின் என உருபேற்றும், காமத்து எனச் சாரியை பெற்றும், காமக்கலன் என்பதிற் போலத் தொகைச் சொல்லின் முன்மொழியாய் நின்றும், காமன் என ஆண்பால் விகுதியேற்றும், காமுறுதல், காமுறுவர், காமுற்றார், காமுற்று என உறு என்ற துணை வினையோடு வெவ்வேறு வினை வடிவமைந்தும், காமம் என்றே நின்றும் குறளில் 46 முறை வழங்கிவரக் காண்கின்றோம். இன்பம், பலவகை இன்பத்திற்கும் பொதுவான பெயராய் வரக், காமம் காதலின்பத்திற்கே சிறப்பான பெயராய் வருகிறது"[28] என்று பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளமை இங்கு நினைவுகூர்தற்குரியது.

---

*27. மு.கு.நூ. ப.32.*
*28. மு.கு.நூ. ப.153.*

"குறளிற் கண்டது அனைத்தும், வடமொழி நூற்களின் மொழி பெயர்ப்பே என்று சிலர் வாதிடுவர்"[29] இக்கருத்து முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பதாகும்.

இதற்கு மாறாக 'வடநூல் மரபே, குறளில் இல்லை என்று கூறுவதும் அடாததாம்.'[30]

"காமத்துப் பாலைப் பொறுத்த அளவில், வடமொழி மரபினை வள்ளுவர் பின் பற்றினாரோ என்பதே கேள்வி" பரிமேலழகரின் காமத்துப்பால் முன்னுரை, வடநூல் மரபினைப் பின்பற்றியே திருவள்ளுவர் காமத்துப்பாலைப் படைத்துள்ளதாகக் கூறுகிறது. அவ்வாறாயின் யாரைப் பின்பற்றி வள்ளுவர், காமத்துப் பாலைப் படைத்தார் எனும் எண்ணம் எழுகிறது.

இந்த எண்ணப் போக்கினை நுட்பமாக ஆராய்ந்த பேராசிரியர், வள்ளுவர் பாடுவதற்கும் வாத்ஸ்யாயனர் கூறுவதற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? ஒன்று பாட்டு; மற்றொன்று சாத்திர ஆராய்ச்சி. ஒன்று உணர்ச்சி வெள்ளம்; மற்றொன்று அறிவின் உழவு. ஒன்று அடைய வேண்டிய உயர்நிலையைச் சுட்டுவது; மற்றொன்று உலகில் உள்ளவற்றை இழிவு, உயர்வு என்ற பாகுபாடின்றி எடுத்துக் கூறுவது. ஒன்று ஓவியம்; மற்றொன்று புகைப்படம்"[31] என்று இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் பேராசிரியர் அழகுற வெளிப் படுத்தியுள்ளார்.

மேலும் "இங்கு வள்ளுவர் கூறுவது அறமுறையே, அன்றி விஞ்ஞான முறை அன்று வாத்ஸ்யாயனர் கூறும் முறை விஞ்ஞான ஆராய்ச்சி முறை. பலவகைச் செய்திகளையும் வகைப்படுத்திக் காணக்கூடிய முறை கண்டு, அவற்றை அடக்கியாண்டு, வேண்டும் பயனைப் பெற முயலுவதே அவர் நோக்கம். பல வகையான காம இன்பங்களையும், நல்லது தியது என்ற அறிவாராய்ச்சி முறையில் கூறுவதே, அவர் நூலின் போக்கு. வள்ளுவர் கூறுவது இந்த இருப்புநிலை ஆராய்ச்சி அன்று; உயர்நிலையில் (Normative) நம்மை ஈடுபடுத்தும் பாட்டே ஆம். இவர் கூறுவது ஒருவனும் ஒருத்தியுமாக, வாழ்கிற வாழ்க்கையே அன்றிப் பிறர் மனைவிழைவும், வரைவின் மகளிர் சேர்க்கையும், பல மனைவியர் கலவியும் அன்று"[32] என்ற விரித்துரைத்துள்ளார். இதனால், வள்ளுவருடைய காமத்துப்பாலின் நோக்கும் போக்கும், வடமொழி காம சாத்திரங்களில் இருந்து வேறுபடும் பான்மையை எளிதில் அறியலாம்.

29. மு.கு.நூ. ப. 157.
30. மு.கு.நூ. ப. 163.
31. மு.கு. நூ. ப. 169.
32. மு.கு. நூ. ப.169-170.

காமத்துப்பாலின் அமைப்பையும், அழகையும், பிரிவையும் பாகுபாட்டையும் பல கோணங்களில் பேராசிரியர் ஆராய்ந்து, தமிழ் மரபே காமத்துப்பாலில் களிநடம் புரிகிறது என்பதை நிலை நாட்டியுள்ளார்.

இவற்றுக்கெல்லாம், மணிமுடியாக, "காமத்துப் பாலில் வரும் குறள் ஒவ்வொன்றும், நாடக நூலில் வரும் பேச்சுகள் போல, யாரேனும் ஒருவர் கூற்றாக அமைந்திருப்பது வெள்ளிடைமலை. இதனால், இதனை நாடக நூல் என ஒருவகையாகக் கூறலாம்...... காமத்துப்பாலை இவ்வாறு அமைப்பதனைத் தமிழில் அன்றி, வேறெங்கேனும் கண்டதுண்டோ? வாத்ஸ்யாயனரோ, பப்ரவயரோ, நந்திகேஸ்வரரோ, உத்தாலகரோ, கொக்கோகரோ, பிறரோ இவ்வாறு கிளவிக் கோவையாக வடமொழியில் எழுதிய மரபினைக் கேட்டதேனும் உண்டோ?"[33] என்று பல்கலைச் செல்வர் வினவுகின்றார்.

'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' எனும் இந்நூல், பேராசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தையும், பரந்துபட்ட புலமையையும், ஆராய்ச்சித் திறனையும் முழுமையாக வெளிப்படுத்துகிறது.

மற்றும், முதன்முதலாக (1954) இந்நூலில்தான், பரந்துபட்ட இந்தியச் சிந்தனைப் போக்கு (Pan Indian Outlook) எனும் கொள்கையை உருவாக்கியுள்ளார். இந்தியாவில் பன்னெடுங்காலமாக வழக்கில் இருந்து வரும் கருத்துகள் ஆரியமொழியாளர்க்கு மட்டும் உரியவை அல்ல; சமஸ்கிருத மொழியில் எடுத்துச் சொல்லப்படுவதானாலேயே, அக்கருத்து வடமொழிவாணருடைய சிந்தனையில் உதித்தது எனக் கூறுவது தவறு. இந்த நாட்டு மண்ணின் மைந்தர்களான இந்தியப் பழங்குடி மக்களின் எண்ணப் போக்குகளையும், சிந்தனைகளையும் ஆரியர் தமதாக்கிக் கொண்டனர். எனவே, வடமொழியில் கூறப்பட்ட வற்றை வள்ளுவர் கடன் வாங்கியுள்ளார் என்று சொல்லுவது தவறு! அது, பரந்துபட்ட இந்தியச் சிந்தனையின் ஒரு கூறு. அதனை வள்ளுவர் எடுத்துரைப்பதைப் போல, கௌடில்யரும், மனுவும், பரதரும் எடுத்துரைத்துள்ளனர் எனும் கொள்கையை உலகிற்கு நம் பேராசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

இந்தக் கொள்கையைப் பின்பு எழுதிய நூல்களில் எல்லாம், தெ.பொ.மீ. அவர்கள், பலவாறாக அறிவித்துள்ளார்.

மற்றும், "வடமொழியில் எழுதப்பட்டவை எல்லாம், வடநாட்டவருடைய - ஆரியர்களுடைய - கருத்துகள் எனக் கூறுவது பொருந்தாது என்பதனைத் தெளிவுறுத்தியுள்ளார். இன்றைய தமிழ் அறிஞர்களாகிய நாம், பலரும் அறியும் பொருட்டு, ஆங்கிலத்தின் வாயிலாகப் பல

33. மு.கு.நூ. ப.186-187.

நூல்களைப் படைப்பதைப் போன்று, பண்டைக்கால அறிஞர்கள், 'இந்தியப் பண்பாட்டு' மொழியாகிய சமஸ்கிருதத்தில் நூல்களை எழுதினர்" என்பதை நாம் அறிதல் வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளதோடு, 'சாணக்கியர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்' எனும் மரபுவழிச் செய்தியைச் சுட்டி, தம் கருத்திற்கு வலிவும் வனப்பும் ஊட்டியுள்ளார்.

## திருவள்ளுவரின் மெய்ப்பொருளியல்

சென்னைப் பல்கலைக் கழகத்தில், சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சார்பில் மேற்கண்ட தலைப்பில், ஆங்கில மொழியின் வாயிலாகப் பன்மொழிப் புலவர் 1963-இல் சொற்பொழிவு ஆற்றினார். அச்சொற்பொழிவு, சென்னைப் பல்கலைக் கழகத்தின், சொர்ணம்மாள் அறக் கட்டளைச் சொற்பொழிவுத் தொகுப்பில் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது. அதே சொற்பொழிவைத் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு (1969) விழாவின்பொழுது, மதுரைப் பல்கலைக் கழகத்தில் தனிநூல் வடிவில் ஐயா அவர்கள் வெளியிட்டுள்ளார்.

இந்நூல் முன்னுரையோடு, மூன்று பால்களில் பொதிந்துள்ள மெய்ப்பொருள் கருத்துகளை மூன்று இயல்களில் எடுத்துரைக்கிறது.

எடுத்த எடுப்பிலேயே, "தமிழருடைய விவிலியமாக - திருமறையாக விளங்குவது திருக்குறள்"[34] எனும் கருத்தினைப் பேராசிரியர் அழுத்தந்திருத்தமாக அறிவித்துள்ளார்.

தமிழகப் பழங்கதை மரபில் திருவள்ளுவர் வாழ்வும் தொண்டும் எவ்வெவ்வாறு போற்றப்பட்டு வருகின்றன என்பதைப் பல்கலைச் செல்வர் கவர்ச்சிமிகு நடையில் எடுத்துரைக்கிறார்.

திருக்குறளில், சமஸ்கிருத நூல்களின் எதிரொலி கேட்கப்படுவதாக அறிஞர் சிலர் கூறியுள்ள கருத்துகளின் வன்மை மென்மைகளை நம் பேராசிரியர் ஆராய்கிறார்.

"இந்த இருபதாம் நூற்றாண்டில் கொடுமைமிகு ஆரிய வழிபாட்டு நெறி தோன்றியது. இது அயலாரோடு இந்தியா கொண்ட தொடர்பில் முதல் எதிர்விளைவாக இருக்கலாம். இந்த ஆரிய வழிபாட்டு நெறி, இந்திய வழிபாட்டு நெறியைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது. இதனால், பல சிக்கல்கள் அரசியல், சமூகவியல், பண்பாட்டியலில் எழுந்தன"[35] என்பதனைப் பேராசிரியர் தெரிவிக்கிறார். இந்தக் கண்ணோட்டத்தில் எதையும் கூர்ந்து நோக்குகின்ற வழக்கம் உண்டாயிற்று. அதனால், "இந்தியாவின் பல்வேறு மொழிகளிலும்,

34. Philosophy of Thiruvalluvar. P.2.

35. மு.கு.நூ. ப. 11-12.

இலக்கியங்களிலும், சிந்தனைகளிலும் இடம் பெற்றுள்ளன யாவும், சமஸ்கிருதத்தில் இருந்து கடன் வாங்கப்பட்டவையே"[36] எனும் ஆதிக்கவெறி ஒருசாராரிடம் தோன்றியதைச் சுட்டிச் சொல்கிறார் நம் பேராசிரியர். "இந்தக் கொடுமையை எதிர்த்துத் தமிழ் மொழியே முதன்முதல் புரட்சிசெய்யத் தொடங்கியது"[37] என்பதையும் தெளிவுறுத்தியுள்ளார்.

இங்குப் 'பரந்த இந்திய சிந்தனை' எனும் கொள்கையை மிக விரிவாக எடுத்துரைக்கின்றார்.

'அறம், பொருள், இன்பம் எனும் முப்பேறு பற்றிய கருத்து, திரிவர்க்கம்' - இந்திய மண்ணிற்குப் பொதுவான சிந்தனை. இந்தியாவின் மிகப் பழைமையான மொழிகளான தமிழிலும், சமஸ்கிருதத்திலும் ஒருங்கே இக்கருத்து காணப்படுவதற்குக் காரணம், இவ்விரு மொழி களின் சிந்தனையும், ஒரு தலையூற்றில் இருந்து பாய்ந்து வந்தனவாகும் - என்பதனை மாற்றார் மனங்கொள்ளத் தக்க வகையில், நயமாசப் பேராசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

'பரந்த இந்தியச் சிந்தனையின்' எல்லைக்குட்பட்ட நால்வகைப் பேறுகளின் அடிப்படையிலேயே, திருவள்ளுவரின் மெய்ப் பொருளியலை ஆராயப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.[38]

திருவள்ளுவர் மெய்ப்பொருளியல் ஆராய்ச்சிகளைப் பரந்த இந்திய எண்ணப் போக்கின் அடிப்படையில் அமைந்த நால்வகைப் பேறு களைப் பற்றிய கொள்கைகளை மையமாகக்கொண்டு சுற்றிச்சுழலு வதாக, நம் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.[39]

பல்கலைச் செல்வர் காட்டும் திருக்குறளின் மெய்ப்பொருள் கொள்கையை இங்குச் சுருக்கமாகக் காணலாம்.

மனிதனுடைய முன்னேற்றத்தை, ஆன்மீக வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டே வள்ளுவர், தம்முடைய வாழ்வியல் தத்துவத்தை விளக்கியுள்ளார். வாழ்க்கை துன்பமயமானது என்றோ, வரவர உலகம் கெட்டுப்போய்விட்டது என்றோ திருவள்ளுவர் கூறவில்லை. 'வாழ்க்கை வாழ்வதற்கே! அதிலும், நலமாகவும், வளமாகவும், சிறப்பாகவும் வாழ்வதற்கே! எனும் கொள்கையுடையவராகக் காட்சி தருகிறார்.

மிக உயர்ந்த இலட்சியங்களைச் சொல்லுகிற பொழுதும், நடைமுறை வாழ்க்கையில் மனிதனால் செயற்படுத்த இயலும் வகையில்

36. மு.கு.நூ. ப. 14.
37. மு.கு.நூ. ப. 17-18.
38. மு.கு.நூ. ப. 32.
39. மு.கு. நூ. ப. 32.

அவர் எடுத்துரைத்துள்ளார். எதைப்பற்றிப் பேசினாலும், இருவேறு எல்லைகளுக்குச் சென்றுவிடாது, நடுவழியைக் கண்டு, அதைப் போற்றி வாழுமாறு அறிவுறுத்துகிறார்.

உலக வாழ்க்கைக்கு அடிப்படையானது இல்லறம் என்பதை அவரைப்போல எடுத்துரைத்தவர்கள் உலகில் வேறு யாரும் இலர். அந்த வாழ்க்கைக்கு அன்பு, முதன்மையாகத் தேவைப்படும் பண்பு என்பதனைப் பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.

முயற்சியும் ஊக்கமும் உலக வாழ்விற்குத் தேவைப்படும் இரு பெரும் பண்புகளாகும். இல்லறத்தினை இனிது நடத்துவதன் மூலம், சாமானிய மனிதன், வீடு பேற்றை அடைய இயலும்.

மீமனிதர் (Superman) துறவு வாழ்வை மேற்கொண்டு, உள்ளத்தால் துறவு பூண்டும், நெறியோடும் முறையோடும் வாழ்ந்து, உற்றநோய் நோன்று, உயிர்க்குறுகண் செய்யாமல் வாழ்தலே தவவொழுக்கம் என்பதை வள்ளுவர் வற்புறுத்தியுள்ளார்.

தனி மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் இடையே நிலவும் உறவினையும், அந்நிலையில் அவனுடைய கடமைகளும் உரிமைகளும் பொருட்பாவில் எடுத்துரைக்கப்படுகின்றன. நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுவதற்கு மட்டும் அல்லாமல், மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குரிய ஆக்கப் பணிகளைப் பற்றிய திட்டங் களையும் குறிப்பாகப் பல இடங்களில் வள்ளுவர் தெரிவித்துள்ளார்.

சமுதாயத் தீமைகளான கள்ளுண்ணல், சூதாடல், வரைவின் மகளிரோடு வாழ்தல் போன்றவற்றை வள்ளுவர் கடிந்துரைக்கிறார். இதைப் போலவே சமுதாய நோய்களாகக் கருதப்படுகின்ற பசி, பட்டினி, வறுமை, அதனால் பிச்சை எடுத்தல் போன்றவற்றை நாட்டில் இருந்து அறவே போக்க வேண்டும் எனும் புரட்சிகரமான கருத்தை வள்ளுவர் வெளியிட்டுள்ளார். ஆனால், அவற்றை எவ்வாறு போக்க வேண்டும் என்பதற்குரிய வழி வகைகளை வள்ளுவர் வகுத்துத் தரவில்லை.

குடிமக்களின் நல்வாழ்விற்கும், நலவாழ்விற்கும் ஏற்றதாக நாட்டாட்சி அமைய வேண்டும் என்பதைத் தெளிவுறுத்தும் வள்ளுவர், ஓர் அரசன், மற்றோர் அரசனிடம் கொள்ளத்தக்க இராசதந்திர உறவுகளைப் பற்றியே மிகுதியாகப் பேசுகிறார்.

‘போரற்ற உலகைப்’ பற்றி வள்ளுவர் ஒன்றுமே சொல்லவில்லை. ‘படைமாட்சி’, ‘படைச்செருக்கு’ எனும் அதிகாரங்களில் படை

*40. மு.கு. நூ. ப. 32.*

வீரர்களின் இயல்புகளையும் படைகளின் சிறப்பையும் புகழ்ந்து உரைக்கிறார். அவருடைய காலச்சூழலில், 'போர்', மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு பகுதியாகக் கருதப்பட்டதைப் போல் தோன்றுகிறது.

திருக்குறளின் காமத்துப்பாலை, உளவியல் கண்ணோட்டத்தில் காணவேண்டும் என்று பேராசிரியர் அறிவிக்கிறார்.

பிராய்ட் (Freud) உள்ளப் பகுப்புநிலை ஆய்வு, பாலியல் வாழ்வியல் தன்னுணர்வு அற்ற நிலையை அடைவதைப் பேரின்பம் எனப் பேசுகிறது. தன்னை மறந்த நிலையில் அவன், அவளாகவும், அவள், அவனாகவும் மாறும் நிலையையே மேற்கண்டவாறு உளவியலார் போற்றுகின்றனர். மனித வாழ்க்கையில் சிறப்பித்துப் பேசப்படும் காதல், மிக உயர்ந்த நிலையை எட்டும் பொழுது, அங்கே தன்னலமற்ற - இருமையற்ற ஒருமையுணர்வே தோன்றும். இதைத்தான் அனுபூதி நிலையில், சீவன் முத்தர்கள் அடையக் கூடிய பெரும் பேறாகப் போற்றப்படுகிறது. இதனால்தான், திருவள்ளுவர் முதலான பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பாலியல் இன்ப நாட்டத்தை வேட்கையை வெறுக்கவில்லை; அல்லது அருவருக்கத் தக்கது எனப் புறக்கணிக்கவும் இல்லை. மனிதனுடைய உள்ளம், உயிர், உடல் ஆகிய மூன்றின் ஒருமித்த வளர்ச்சிக்கும், பண்பாட்டிற்கும் பாலியல் இன்றியமையாதது. ஆனால், அதையும் அளவாகத் துய்த்து வாழ்வதனால், மண்ணுலகிலேயே மனிதன், தெய்வமாக மாற வாய்ப்புண்டு.

இவ்வாறு குறைவற்ற, நிறைவான புதியதோர் இலட்சிய வாழ்க்கையை மனிதன் வாழ்வதற்குரிய நெறிமுறைகளை - நடைமுறைக்கு இயைந்து வரக்கூடிய வழி வகைகளை - வள்ளுவர் முப்பாலில் வகுத்துத் தந்துள்ளார் என்பதே பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ. அவர்களுடைய துணிவாகும்.

இந்த நூல், வெறும் இலக்கிய ஆராய்ச்சியாக அமையவில்லை; தமிழருடைய சிந்தனை வளர்ச்சியின் படிநிலைகளைக் கோடி காட்டுகிறது; தமிழருடைய எண்ணப் போக்கு, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட உலகச் சிந்தனை அரங்கில் பெற்றுள்ள பொலிவையும், தனித்தன்மையையும் எடுத்தியம்புவதுமான அறிவியல் சார்புடைய புத்துலக வாழ்க்கைக்கும் வழிகாட்டும் வான்பொருளாக நின்று நிலவுவதை இந்நூல் உலகிற்கு அறிவுறுத்தும் சிறந்ததொரு கருவியாகும்.

'மெய்ப்பொருள் என்பதனை 'இருட்டறையில் கறுப்புப் பூனையைத் தேடும் முயற்சி' என்று நையாண்டி செய்வர். இந்த நூலில், 'திருவள்ளுவருடைய மெய்ப்பொருளியல்' கொள்கை எத்தகைய மயக்கத்திற்கும் மலைப்பிற்கும் இடமின்றி, எளிமையாகத் தெளிவுறுத் தப்பட்டுள்ளமை, நம் பேராசிரியருடைய தெளிந்த ஞானத்தை வெளிப்படுத்துகிறது.

## திருவள்ளுவரின் தனிப்பெருஞ்சிறப்பு

திருவள்ளுவரின் தனிப்பெருஞ் சிறப்புகளைப் பலர், பலவாறாக விளக்கியுள்ளனர், அவர்கள் எல்லாரும் குறிப்பிடாத ஒரு புதிய சிறப்பியல்பை, நம் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் எடுத்துரைத்துள்ளார்.

ஒருவன், நமக்கு ஒரு துன்பத்தைச் செய்தால், உடனே, அவனைப் பழிக்குப் பழி வாங்க முயலுவது மனித இயற்கை. அடிக்கு அடி, கொலைக்குக் கொலை கண்ணுக்குக் கண் என்பன ஒறுக்கும் (பழிக்குப் பழி வாங்கும்) நெறியின் கோட்பாடாகும். இத்தகைய அறத்தினை அறிவுறுத்தும் அறநூல்களும் உலகில் தோன்றியுள்ளன.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ் (குறள். 156)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

சிறப்பாக இயேசுபெருமான், 'வலக் கன்னத்தில் ஒருவன் உன்னை அறைந்தால், மறு கன்னத்தையும் அவனுக்குக் காட்டு! பழிவாங்க நினைக்காதே!' என்று அருளிய அறிவுரையை இதற்குச் சான்றாகக் காட்டலாம். இதனைப் பொறுக்கும் நெறி எனப் போற்றுவர்.

இவ்விரு நெறிகளையும் பற்றி விளக்கும் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள், இதற்கு மேற்பட்ட நிலையில், வள்ளுவர் வகுத்துரைத்துள்ள புதிய நெறி ஒன்றை எடுத்துரைக்கின்றார்.

ஒருவன் தனக்குச் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுவதே, கடினம். ஒருவாறு பொறுத்துக் கொண்டாலும், அத்துன்பம் இழைத்தவனைப் பற்றி நம் உள்ளத்தில், ஆழப் பதிந்துவிட என்றும், அவனைக் காணும் பொழுது, நம்முடைய உள்ளத்தில் வெறுப் புணர்ச்சியைக் கிளர்ந்து எழச் செய்யும். வாய்ப்புக் கிடைக்கிற பொழுது, அவனுக்குத் தீமை செய்யுமாறு அவ்வெண்ணம் நம்மை உந்திச் செயல் படுத்தும். இதனால், பொறுக்கும் நெறி பயனற்றுப் போய்விடுகிறது.

மனித இயற்கையை நன்குணர்ந்த வள்ளுவர், ஒருபடி மேலே சென்று, 'ஒருவன் செய்த தீமையை மறந்து, தான் செய்த தவற்றிற்கு

அவனே நாணுமாறு, அவனுக்கு நன்மை செய்வதே சாலச் சிறந்தது என்று அறிவுறுத்துகிறார். அப்பொழுது, பாதிக்கப்பட்டவனுடைய உள்ளத்தில், காழ்ப்புணர்ச்சிக்கே இடமில்லாமல் போய் விடும் என்று புதியதொரு வழியினை வள்ளுவர் காட்டுகிறார். இதனை மறக்கும் நெறி எனும் பேரால், பேராசிரியர் சுட்டுகிறார்.

பொறுத்தல் இறப்பினை என்றும்
மறத்தல் அதனினும் நன்று.

(குறள்152)

இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

(குறள்314)

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்னபயத்ததோ சால்பு

(குறள்387)

எனும் குறட்பாக்களை மையமாகக் கொண்டு, பன்மொழிப் புலவர் தம்முடைய சித்தாந்தத்தை உருவாக்கியுள்ளார்.

இவ்வாறு, மனிதனுடைய மனவியல்பினை அறிந்து, மறக்கும் நெறியைப் போதிக்கும் அறநூல், உலகில் வேறொன்றும் இல்லை என்பது பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாருடைய துணிவாகும்.

## சுவைட்சரின் சிந்தனையைப் பரப்புதல்

1937 அளவில் ஆங்கிலத்தில் டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சரின் 'இந்திய சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' எனும் நூல், வெளியிடப்பட்டது. அந்நூலில் உலகில் வேறு எந்த அறிஞரும் காணாத புதுமைகளையும், சிறப்பியல்புகளையும், வள்ளுவருக்கு உரியவனவாக சுவைட்சர் தெரிவித்துள்ளார். அந்தக்கருத்துக்களைத் தமிழகத்திற்கு முதன் முதல் அறிமுகப்படுத்திவைத்தவர் நம் பேராசிரியர். அந்த நூலில் திருக்குறளைப் பற்றிக் காணப்படும் பத்துப் பக்கச் செய்திகளை முதன் முதல் தமிழாக்கம் செய்து வெளியிட்டதோடு அமையாது மேடைகளில் அவற்றை எடுத்து விளக்கியும் திருவள்ளுவரின் தனிப்பெருஞ் சிந்தனையை உலகம் அறியுமாறு பரப்பிய பெருமையும் நம் பன்மொழிப் புலவர்க்கே உரியதாகும்.

## சிலப்பதிகார ஆராய்ச்சி

பண்டைத்தமிழ் இலக்கியத்துள், திருக்குறளுக்கு அடுத்து, சிறப்புமிக்கதாகப் போற்றப்படும் காப்பியம் சிலப்பதிகாரம்.

இக்காப்பியத்தின் கதை மட்டும் அல்லாமல், காப்பியக் கலைத் திறன்களும் சிறப்புடையனவாக உள்ளதைச் 'சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு'' என்று மகாகவி பாரதியார் பாராட்டியுள்ளமையால் அறியலாம்.

சிலப்பதிகாரத்தைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை நம் பேராசிரியர் எழுதி, வெளியிட்டுள்ளார். அவற்றுள் சில தொகுக்கப்பட்டு மூன்று நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

அவை (1) குடிமக்கள் காப்பியம், (2) கானல்வரி, (3) நாடகக் காப்பியங்கள் என்பன. இவை, அல்லாமல், 'பிறந்தது எப்படியோ?' 'தமிழா, நினைத்துப்பார்', 'நீங்களும் சுவையுங்கள்' எனும் தமிழ் நூல்களிலும் A pageant of Tamil Literature, Tamil A Bird's eye view எனும் ஆங்கில நூல்களிலும் சிலப்பதிகாரத்தைப் பற்றிய பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவை யாவும் புதிய நோக்கில், சிலப்பதிகாரத்திற்கு ஒளி சேர்ப்பனவாக உள்ளன.

## குடிமக்கள் காப்பியம்

இந்நூலின் பெயரே புதுமையானது; புரட்சிகரமானது. 1947-இல் இந்தியா விடுதலை பெற்ற பிறகு, இந்திய குடிமக்கள் வாழ்வில், ஒரு புதிய மலர்ச்சியும் பொலிவும் உண்டாவதற்குரிய அறிகுறிகள் தோன்றின. அதனால், உண்டான உந்துதல் சக்தியைக் கொண்டு, நம் பேராசிரியர், சிலப்பதிகாரத்தை ஆராய்ந்ததன் விளைவே, 'குடிமக்கள் காப்பியம்' எனும் ஆய்வுரையாகும்.

பதினைந்து கட்டுரைகளைக் கொண்டது. 'குடிமக்கள் காப்பியம்' எனும் நூலாகும். இந்நூலின் முதல் கட்டுரையே 'குடிமக்கள் காப்பியம்' என்பதாகும்.

இளங்கோவடிகளைப் பற்றிப் பேராசிரியர் கொண்டுள்ள கருத்தினை முதலில் காண்போம்.

"இளங்கோவடிகள் செய்த புரட்சி பெரியது அன்றோ? சங்க காலமே ஒரு புரட்சிக்காலம். அந்த நாளைய புலவர்கள் பழமைக்கு அடிமையாகாது, வெற்றி பெற முயன்றார்கள்... முடிமக்கள் வாழ்க்கையில் காணும் சிறப்புகள் எல்லாம், குடிமக்கள் வாழ்விலும் கண்டால் அன்றோ காப்பியம் இனிக்கும்? காதலும் அழுகையும், வீரமும் காப்பியப் பெருஞ்சுவைகள், மாதவியும் கோவலனும் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்கின்ற காதல் வாழ்வே சிலப்பதிகாரப் புகார்க் காண்டம். கணவனையும் இழந்து கண்ணகியே அவலச் சுவையின் ஆழத்தைக் காட்டுகிறாள். அந்தக் கதைதான் மதுரைக்காண்டம். கண்ணகிக்கு எடுத்த கல்லினை வட அரசர் தலைமீது ஏற்றிவந்த செங்குட்டுவன் வீரத்தைப் பாடுவதே வஞ்சிக் காண்டம். அரசனிடம்

வீரம் கண்டால், குடிமக்கள் காப்பியம் எழுதற்கு இடமில்லை. கோவலனிடம் வீரம் காண்கிறார் இளங்கோவடிகள். இன்று உலகம் போற்றும் வீரம், காந்தியடிகள் காட்டிய வீரம், இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் காண்கிறார் இளங்கோவடிகள். யானையைக் கொல்லாமலே, யானைக்காலின் கீழிருந்த முதியவனைக் காப்பாற்று கின்றான் கோவலன்; கருணை மறவனாகக் காட்சி அளிக்கின்றான். கண்ணகி வீட்டை விட்டு வெளிவராத பெண். வெளிநாட்டில் பாண்டியனை வெல்கிறாள்; கடவுளாக மாறுகிறாள். ஈதொரு புதுமை. பரத்தையரைப் பழிப்பதே அன்றும் இன்றும் வழக்கம். பரத்தையர் குடிப் பெண்ணான மாதவி, கற்பரசியாக ஓங்குகிறாள்; துவறவத்தின் முடிமணியாகச் சிறக்கின்றார். அவள் மகள், உலக குருவாக விளங்குவதனை மணிமேகலை பாடுகின்றது. குடிமக்கள் சிறப்பினை, இதற்கு மேலும் எவ்வாறு கூறுவது? இன்று குடிமக்கட் காப்பியத்தின் பெருமையை உணர்ந்து வருகிறோம். குடியரசில் அன்றோ வாழ்கிறோம்? பழைய நூல்களைப் புதிய கண்கொண்டு உண்மை உணர இனி வழியேற்படும்"[41] எனும் பேராசிரியரின் நீண்ட முன்னுரை, இந்நூலின் பெயர்ப் பொருத்தத்தைப் புலப்படுத்துகிறது.

அடுத்து, சிலப்பதிகாரம் வாய்மொழிக் காப்பியமாக வழங்கி, பின்னர் ஒரு புலவரால் கலை நயமும் கற்பனை வளமும் தோன்ற இன்றைய காப்பிய வடிவத்தில் படைக்கப்பட்டு இருக்கலாம் என்பது பேராசிரியரின் சிந்தனைப் போக்காக அமைகிறது.[42]

## நாட்டுப்புறப் பாடல்களா?

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள வரிப்பாடல்களும், குரவைப் பாடல்களும் பேரளவிற்கு நாட்டுப் பாடல்களின் சாயல் உடையனவாக உள்ளன. தம்முடைய காலத்திலே நாட்டிலே பெருவழக்காக விளங்கிய நாட்டுப் பாடல்களுள் சிறந்தவற்றைத் தேர்ந்து எடுத்துத் தம்முடைய கதைப் போக்கிற்கு ஏற்ப, சிற்சில மாற்றங்கள் செய்து, இளங்கோவடிகள் தம்முடைய காப்பியத்தில் அவற்றைப் பொலிவுறச் செய்து இருக்கலாம் எனும் கருத்துக்களை, இந்நூலின் கட்டுரைகள் சிலவற்றில் நம் பேராசிரியர் அமைத்துள்ளார்.

## கவிதையின் மூன்று குரல்கள்

'பாட்டில் கேட்கும் குரல்' எனும் ஆய்வுரையில், குரல் வகை, நாடகம், கானல்வரி எனும் துணைத் தலைப்புகளையும், 'குரலில் எழும் குழப்பம்', எனும் கட்டுரையில் நாடகக் காப்பியம், சூழ்நிலை, நாடகப் பாத்திரத் தனிப்பேச்சு, சங்க காலத்திலேயே பிறழ்ச்சி, பிறழ்ச்சியில் பிறக்கும்

41. குடிமக்கள் காப்பியம், பக். 13-14
42. மு.கு.நூ, பக் . 40 - 41

இலக்கியம் எனும் துணைத் தலைப்புகளையும் அமைத்து, இலக்கியத்தில் - கவிதையில் - கேட்கப்படும் சிறப்புமிகு மூன்று குரல்களைப் பேராசிரியர் விளக்கிக் காட்டியுள்ளார்.

இந்த இரு ஆய்வுரைகளும், ஆங்கிலமொழிக் கவிஞரும் திறனாய்வாளருமான டி.எஸ். எலியட் (T.S.Eliot) என்பவரின் 'கவிதையின் மூன்று குரல்கள்' (Three Voices of Poetry) எனும் ஆய்வு நூலின் கருத்துக்களைத், தமிழ் இலக்கியத்தில் பொருத்திப் பார்த்து, விளக்க முயன்றதன் விளைவாக வெளிப்பட்டவையாகும்.

## இருவேறு கோவலரா?

கோவலனுடைய பண்பு நல வளர்ச்சியை ஆராய்கின்ற பொழுது, கானல்வரி வரையில் ஆடம்பர ஆர்வாரமும், கலையார்வமும்; அழகைச் சுவைக்கும் கலையுள்ளமும் வாய்ந்த கோவலன் ஒருவன் காட்டப்படுகிறான். பிறகு கண்ணகி இடத்து கழிவிரக்கம் காட்டி, அவள்பட்ட துன்பத்திற்காக வருந்தி, நைந்து உருகுகின்ற கோவலன், மதுரையின் புறஞ்சேரியில் கண்ணகி படைத்த உணவினை உண்டு, மகிழ்ந்து, அவளுடைய துன்பத்திற்கு எல்லாம் தானே காரணம் என்பதை உணர்ந்து வருந்துகின்ற கோவலன் முற்றிலும் வேறுபட்ட பண்புகளை உடையவன். 'இவ்விரு வகைப் பண்பு நலன்களை உடையவனாக ஒருவனே விளங்க இயலுமா?' எனும் ஐயத்தைத் தமிழ் ஆராய்ச்சி உலகில் எழுப்பியவர்கள் உண்டு.

இந்த எண்ணப் போக்கைப் பின்னணியாகக் கொண்டு, 'இருவேறு கோவலரா?' எனும் ஆய்வுரையை அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் எழுதியுள்ளார்.

"அவன் ஒழுக்கத்தால் உயர்ந்தோன். ஆதலின் அவன் உள்ளத்து எழும் உணர்ச்சிகளும் நல்லனவாக அமைகின்றன. இதனாலேயே, "இம்மைச் செய்தன யானறி நல்வினை' என்று மாடலன் அவனைப் புகழுகின்றான். இரு கோவலர் வருவதற்கு இருவேறு ஆசிரியர்கள் இவற்றை வெவ்வேறு நிலையில் நின்று எழுதவில்லை. ஆகவே, அடைக்கலக் காதை ஒன்றினால் மட்டும், கோவலன் சிறக்கின்றான் என்பது இல்லை. புகார்க் காண்டத்தில் வற்புறுத்த இயலாத நிலையில், குறிப்பாகக் கூறியவற்றையே, மதுரைக் காண்டத்தில் வெளிப் படையாகக் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

"படிப்படியாக நாள்தோறும், அவனோடு பழகியவர் வாயிலாக அவனுடைய உண்மை நிலையை விளக்கிக் கொண்டு வருகின்றார்.

அவ்வாறு நோக்கும்போது, எங்கும் ஒரு படித்தாகக் கோவலனது உள்ளநிலை உணர்வே வடிவாய், ஓங்கி வளர்ந்து, வீழ்வதனைக் காண்கின்றோம்"[43] என்று பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.

இங்கு நாம் ஓர் உண்மையை மறத்தலாகாது. கதைப் பாத்திரங்களை ஆராய்கின்ற திறனாய்வாளர்கள், உலகில் உள்ள மனிதர்களை, அவர்களுடைய பண்புநல வளர்ச்சியைக் கொண்டு இரு வகையாகப் பாகுபடுத்துவர். 'வளர்ச்சி இல்லாப் பாத்திரம்' (Flat Character) எனவும் வளர்ச்சியுறு பாத்திரம் (Round Character) எனவும் வகைப்படுத்துவர்.

'வளர்ச்சியுறு பாத்திரம்' என்பது தன் வாழ்க்கையின் இறுதி மூச்சு உள்ள வரையில், தன்னுடைய நடத்தையிலும், பண்பாட்டிலும் வளர்ந்தும் சிறந்தும் விளங்குவதாகும். இளங்கோவடிகள் படைத்த காப்பிய மாந்தனான கோவலன், வாழ்க்கைப் .போர்க்களத்தில் தாக்குண்டு, பையப் பையத் தன்னுடைய பண்புகளிலும் பழக்க வழக்கங்களிலும் வளர்ந்து சிறக்கிறான். 'இத்தகைய மனிதர் உலகில் உண்டா?' எனும் எண்ணம் எழலாம்.

அன்றாட வாழ்வில், சில மனிதர்களையாகிலும் இத்தகைய பண்புடையவர்களாக நாம் காணுகின்றோம். அகமுக நோக்கில் (Introspection) நம்மை, நாமே ஆராய்வோமானால், இந்த உண்மை நமக்குப் புலனாகாமல் போகாது.

'கோவலுனுக்கு மனமாற்றம் ஏன் உண்டாயிற்று? எப்படி உண்டாயிற்று?' என்பதைப் பேராசிரியர் அடுத்த கட்டுரையில் தெளிவுறுத்தியுள்ளார். இதற்கு அடுத்துள்ள கட்டுரையிலும் கோவலனுடைய பண்பு நலனே ஆராயப்படுகிறது. சுருங்கச் சொல்லுவது ஆனால், 'குடி மக்கள் காப்பியத்தில்' கோவலனுடைய பண்பு நலன், நுட்பமாக ஆராயப் பெற்றுள்ளது எனலாம்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள துணைப் ப்ாத்திரங்கள், சிறு பாத்திரங்கள் போன்றவற்றை மிகச் சிறப்பாக ஆராய்ந்து, கதையின் கட்டுக் கோப்பிற்கு, அவை எவ்வாறு உதவுகின்றன என்பதை எடுத்தியம்பியுள்ளார்.

கவுந்தியடிகள், தேவந்தி, மாடலன் முக்கிய பாத்திரங்களின் பங்கு, சிலப்பதிகாரத்தின் கதைப் போக்கிற்கு வலிவும் பொலிவும் தருகிறதா? அல்லது 'தொய்வை' உண்டாக்கி விடுகிறதா? என்பதை எல்லாம் பேராசிரியர் மதிப்பிட்டுள்ள திறம், சேக்ஸ்பியர் நாடகப் பாத்திரங் களைப் பற்றி வெளிவந்துள்ள எண்ணற்ற ஆய்வுரைகளை நினைவு படுத்துகின்றன. தமிழிலக்கியத் திறனாய்வில், இவை ஒரு புதிய இயலைத் தொடங்கி வைக்கின்றன.

---

43. மு.கு.நூ, பக் . 97

'குடிமக்கள் காப்பியம்' எனும் இந்நூலில், ஒப்பிலக்கிய ஆய்வின் முன்னோடியாக விளங்கும் இரு கட்டுரைகள் இடம் பெற்று இருக்கின்றன. அவை 'சங்கப்பாடல்களும் சிலப்பதிகாரமும்', 'குறள் வழி இளங்கோ' என்பன. இவ்விரு ஆய்வுரையும், சங்க இலக்கியங்களும், திருக்குறளும் சிலப்பதிகாரத்தில் உண்டாக்கியுள்ள தாக்கத்தையும், அதனால் விளைந்த பயனையும் நன்கு தெளிவுறுத்துகின்றன.

எனவே, 'குடிமக்கள் காப்பியம்' எனும் இந்நூல் சிறந்ததோர் இலக்கிய ஆராய்ச்சி நூலாகவும், புதுமை நோக்குடைய திறனாய்வு நூலாகவும் விளங்குகிறது. மற்றும் 'ஒப்பாய்விற்குக் கால்கோள் விழா நடத்தும் அரிச்சுவடியாகவும் இது விளங்குகிறது.

## கானல் வரி

இவ்விருபதாம் நூற்றாண்டில், தமிழில் இயற்றப்பட்ட, 'இலக்கிய ஆராய்ச்சி நூல்கள்' பல. அவற்றுள் தலை சிறந்தவை என, விரல் விட்டு எண்ண முயலுவோமானால், முதல் மூன்றனுள் ஒன்றாக அமையக்கூடியது. 'கானல் வரி' எனும் பேராசிரியரின் ஆராய்ச்சி நூலாகும்.

பன்மொழிப் புலவரான பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தமிழில் தாம் பெற்ற நுண்மாண் நுழைபுலத்தை, மேற்கு நாட்டு ஆராய்ச்சி முறைகள், திறனாய்வு நெறிகள் எனும் ஒளியின் துணையோடு, சமஸ்கிருதவாணர்களின் கனவுமிகு சுவை நலக்கோட்பாட்டுச் சுடரொளியையும் இணைத்து, ஒரு புதுமையான, அதே சமயத்தில் மரபு வழுவாத சிந்தைக்கு இனிய, இலக்கிய விருந்தினை இந்நூலில் படைத்துள்ளார்.

சிறப்புமிகு நூல்களுக்கும், இலக்கியங்களுக்கும் பேருரை (மாபாஷ்யம்) வரைவது வடமொழி மரபு. சிலப்பதிகாரத்தின் முப்பது காதைகளுள் ஆறாவது காதையாக உள்ள 'கானல் வரிக்கு' நம் பேராசிரியர், இந்த நூலின் வாயிலாக, ஒருமாபாடியத்தை வெளியிட்டுள்ளார் எனக் கூறினால், அது தவறாகாது.

இந்நூல் இரண்டு பெறும் பகுதிகளை உடையதாகும். முதற்பகுதி 'புறவுரை' எனவும், இரண்டாம் பகுதி 'பொது' எனவும் வகைப்படுத்தப் பட்டுள்ளன. முதற்பகுதி ஓர் இயலாகவும், இரண்டாம் பகுதி கோவலன்பாட்டு, மாதவியின் பாட்டு, மாதவியின் அப்பாலைப்பாட்டு எனும் மூன்று இயல்களாகவும் பகுக்கப் பட்டுள்ளன.

இந்த நூலின் முன்னுரையில் பேராசிரியர் குறிப்பிட்டுள்ள சில கருத்துகள் இங்கு நினைவுகூர்வதற்குரியன.

"சிலப்பதிகாரத்தின் உயிர்நிலை கானல்வரியைக் கொண்டு, அந்தக் கானல்வரியைச் சிலப்பதிகாரம் முழுதினையும் கொண்டு இந்நூலில் நான் விளக்கி இருக்கக் காண்கிறேன்"[44] என்று தெரிவித்துள்ளார். இதனால் இந்நூலின் நோக்கும் போக்கும் எளிதில் புலனாகிறது.

'முப்புரிச் சிக்கல்' எனும் தோற்றுவாய்ப் பகுதியில், மாதவி - கோவலன், கோவலன் - கண்ணகி, ஊழும் கோவலனும், ஊழும் கண்ணகியும் எவ்வாறு பின்னிப் பிணைந்து, முப்புரிகளாக விளங்குகின்றனர் என்பதை ஆசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.

'கண்ணகியும் கோவலனும், பழைய அகப்பொருள் மரபுவழி, திருமணத்திற்கு முன்பே, ஒருவரையொருவர் கண்டு, காதலித்துக் களவு வாழ்க்கையில் ஈடுபட்ட பின்னரே, பெற்றோரால் திருமணம் செய்து வைக்கப்பட்டனரா?' எனும் புதிய சிக்கலைப் பேராசிரியர் தோற்றுவிக்கிறார். 'காதலால் ஏத்தும் கிழமையாள்' எனும் தொடருக்கு யாது பொருள்? அவனை ஏத்திய பெண்கள், குடும்பப் பெண்களா? பரத்தையரா? எனும் வினாக்களை எழுப்பி, அவர்கள் 'கோவலனுக்கும், கண்ணகிக்கும் இடையே மலர்ந்த காதல் ஒழுக்கத்தை'யே பாராட்டி, அவர்கள் காதல் வெற்றி பெற்றதையே வாயார வாழ்த்தி மகிழ்கிறார்கள் எனும் புதிய விளக்கங்களை இளங்கோவடிகள் பயன்படுத்தியுள்ள சொற்களை நுட்பமாக நயந்தோன்றுமாறு பேராசிரியர் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

"எனவே, கோவலனும் கண்ணகியும், களவென்றும் - தமிழென்றும் கூறுகின்ற காதற் காமத்தால் - கடவுள் காதலால் - ஒன்றாகி நிற்கின்றனர். மறைந்தொளிரும் காதல் விளங்கும் அந்த நிலையில் அவர்கள் பிறர்க்கென வாழும் பெருமை பெறுவதற்கு இல்லை"[45] எனும் கருத்து, ஆசிரியரின் புதுமைச் சிந்தனையைப் பளிச்சிடுகிறது.

கோவலன், கண்ணகியை நலம் பாராட்டும் பகுதி, அவனுடைய காதற்களிப்பை - கண்டு கேட்டு, உண்டு உயிர்த்து, உற்றறியும் - கலவி இன்பத்தையே இளங்கோவடிகள் கற்பனை வளத்தோடு, புனைந்துரைத்துள்ளார் என்பது பேராசிரியரின் துணிவாகும்.[46]

கலையிலே உண்டாகும் குறை எனும் தலைப்பில் பேராசிரியர் எடுத்துரைத்துள்ள கருத்துகள், நம் சிந்தனையில் புதிய ஒளியைப் பாய்ச்சுகின்றன.

"கோவலன் சிறந்த கலைஞன், அவன் கலையில் ஒரு குறை உண்டு. கலை பொதுவுடைமை. கலைமகளைப் பொது மகளாக்காது, தன்

44. தெ.பொ.மீ. கானல்வரி, முன்னுரை

45. கானல்வரி, ப. 19

46. மு.கு.நூ. பக் 22 - 27

குடிமகளாக்கினான். ஆனால், அந்த மயக்கத்தில் மயங்கிக் கலையையும் தனி உடைமையாகக் கொள்ள முயலுகிறான். மாதவியின் கலையில் பொதுவுடைமை மிளிர்கின்றபோது, கலையின் சிறப்பியல்பென அதனை உணராது, மாதவியின் மானக்கேடென மருள்கிறான்"[47] என்று ஆசிரியர் வெளியிடுகிறார்.

கணவனுக்காகக் கண்ணகி வாழுகிறாள். ஆனால், மாதவி கலைக்காகவும் ஓரளவிற்குக் கோவலனுக்காகவும் வாழமுயலுகிறாள்.

'கானல்வரி' என்பது சிலப்பதிகாரத்தின் ஒரு பகுதி. கடற்கரைச் சோலையில் பாடிய நெய்தற்பாடல் அது என்று ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். இதற்கு மேல், ஒரு புதிய கருத்தை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

வரிப்பாடல்கள், நாடோடிப்பாடல் போன்றவை. சமுதாயப் பாடல்களாய் அவை அரசர்களையும் நாட்டையும் வாழ்த்துவது உண்டு. வேட்டுவவரி, குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை முதலியன இவ்வாறு வாழ்த்தி முடியக் க்ாண்கிறோம்"[48] என்று பேராசிரியர் தெரிவிக்கும் கருத்து, தமிழிலக்கிய ஆராய்ச்சி உலகில் ஒரு புதிய விழிப்புணர்ச்சியையே உண்டாக்கியுள்ளது எனலாம். இந்தக் 'கானல்வரிப்' பாடல்களுக்குப் பேராசிரியர் உள்ளுறையாகப் பொருள் கொண்டு, ஆன்மிக உணர்வை வெளிப்படையாக விளக்கியுள்ளமை, அவருடைய உள்ளப் பண்பாட்டையும், தத்துவச் சார்புடைய சிந்தனையையுமே காட்டுகிறது.

இங்கே, நெய்தல் கடலை, பிறவிக் கடலாகக் கொண்டு, காதல் எனும் பாசத்திலிருந்து விடுபட்ட மாதவி, பிற்கால வாழ்க்கைக்குத் - துறவு வாழ்க்கைக்குத் தேவையான மனப்பக்குவத்தைப் பெற்றுவிடுகிறாள் என உள்ளார்ந்த பொருள் காண்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.[49]

இந்த நூலில், கானல் வரிப்பாடல் ஒவ்வொன்றும் இலக்கியக் கலைத்திறன்களை மையமாகக் கொண்டு அமைந்துள்ள பாங்கினைப் பலவகையான நோக்குகளில், துருவித் துருவி ஆராய்ந்து ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இந்த ஆராய்ச்சிநூல், அமைப்பு, அணுகுமுறை, மதிப்பிடும்பாணி ஆகிய அனைத்திலுமே 'புது நெறிகளைப்' போற்றி அமைத்ததாகத் தோன்றுகிறது. இந்த முறையில் சிறப்புமிகு தமிழ் இலக்கியங்கள் சிலவற்றுக்காகிலும் வருங்காலத்தில் 'ஆராய்ச்சி விளக்கம்' எழுதப்படுதல் வேண்டும். மூல நூலாசிரியருடைய உள்ளக் கருத்தினை அறிவதற்குப் பல்வகை வாய்ப்புகளை, இந்த ஆராய்ச்சி முறை அளிக்கும் என்பது உறுதி.

47. மு.கு. நூ. பக். 45
48. கானல்வரி ப.164
49. மு.கு.நூ. பக். 174 - 75

## நாடகக் காப்பியங்கள்

இளமை முதலே, நம் பேராசிரியருக்கு நாடகத்தைப் பார்த்து மகிழ்வதிலும், படித்து மகிழ்வதிலும் பேரீடுபாடு இருந்து வந்தது. இதற்குக் காரணம், அவருடைய அண்ணா கிருஷ்ணசாமிப் பாவலரேயாவர். அவர் பழம் பெரும் தேசபக்தர். நாடக ஆசிரியர்; நாடகங்களை நடித்து அரங்கேற்றியவர். நாடகக் குழு ஒன்றினை நிறுவி, பல்வேறு நாடகங்களை நடத்தியதோடு இங்கிலாந்திலும், ஐரோப்பா விலும் பல இடங்களுக்குத் தம் நாடகக் குழுவை அழைத்துச் சென்று, பல்வகை நாடகங்களை நடித்துக் காட்டிய நாடகக் கலைஞராவார்.

இந்தச் சூழ்நிலை, நம் பேராசிரியருடைய எண்ணத்திலும், எழுத்திலும், பேச்சிலும் நாடகம் பற்றிய செய்திகளை அலையலையாக எழுப்பிக்கொண்டே இருந்தன.

'நாடகக் காப்பியங்கள்' எனும் இந்நூலில் சிலப்பதிகாரமும், கம்பராமாயணமும் நாடகக் கண்ணோட்டத்திற்கு ஏற்ப ஆராயப் பட்டுள்ளன. பதினான்கு ஆய்வுரைகள், திறனாய்வு முறையில் எழுதப் பட்டுள்ளன. அவற்றுள் முதல் ஏழு கட்டுரைகள் சிலப்பதிகாரத்தைப் பற்றியனவாக உள்ளன.

சிலப்பதிகாரத்தில் உயிர்நிலை, 'அடைக்காலக் காதை'யில் அமைந்து இருப்பதாகப் பேராசிரியர், அடிக்கடி கூறுவது உண்டு. அந்த நோக்கில் அடைக்கலக் காதை, வழக்குரை காதை, கொலைக் களக்காதை (5 கட்டுரைகள்) புதிய முறையில், ஆராயப்பட்டுள்ளன. ஏழாவது இயல் 'காப்பியக் கதையே கவிஞர் கதை' எனும் தலைப்பில், இளங்கோ அடிகளின் வரலாறு, மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நாடகத்தின் கூறுகள் மேற்கு நாட்டுத் திறனாய்வு முறையில் சுட்டிக் காட்டப்படுகின்றன. முகம், பிரதி முகம், கருப்பம், விளைவு, துய்த்தல் எனும் ஐந்து பகுதிகளையும் விளக்கியுள்ளார். நாடகத்தின் சந்தி என்னும் தலைப்பில் விளக்கியுள்ளார். இவை, இந்திய நாடகக் கொள்கையில் இடம் பெறுவன. இந்த அடிப்படையில் அறிமுகம் (முகம்), எழுச்சி (பிரதி முகம்), உச்சநிலை (கருப்பம்), வீழ்ச்சி (விளைவு), முடிவு (துய்த்தல் எனும் முறையில் சிலப்பதிகார நாடகத்தில் அமைந்துள்ள நாடகவியல்புகளைப் பல நிலைகளில், பேராசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

அடுத்து, நாடகத்தில் முதன்மை இடம் பெறுவது நாடக மாந்தரின் படைப்பாகும். இந்தப் பாத்திரப் படைப்பைப் பற்றி, அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் சிறப்பாக இப்பகுதியில் ஆராய்ந்துள்ளார்.

பாத்திரங்களின் வடிவத்தைப் பாத்திரங்களின் பேச்சைக் கொண்டும், செயலைக் கொண்டும் அறிவதே இயல்பு. பேச்சு நிலையைவிடச்

செயலே சிறந்த விளக்கமாகும். பாத்திரங்களின் சிறப்பிற்கும் நிலைக்கும் ஏற்ப, இவற்றை மதிப்பிடவேண்டும். எல்லாவற்றையும் பாத்திரங்களின் செயலாகவே, காட்டுவது என்றால், கதை அளவின்றி விரியும். ஆதலின் அத்தகைய செய்திகளைக் கதைக்கு முன் நிகழ்ந்தவையாக, அமைத்துக் காட்டுவர். அவற்றை நம்பக்கூடிய பாத்திரங்களின் முன் நிகழ்ந்தன வற்றைக் கூறும் நிலையில், பாத்திரங்களின் பேச்சாக, நாடகத்தில் நுழைப்பதும் ஒரு முறையாகும்[50] என்னும் கருத்துரை பாத்திரப் படைப்பின் நோக்கையும் பாத்திரங்களின் பேச்சில் அமையும் நாடகப் பாங்கையும் சுட்டிக் காட்டுகிறது.

இந்தப் பின்னணியில், சிலப்பதிகாரத்தில் நாடகப்பாங்கு, பலவகைக் கோணங்களில் பேராசிரியரால் காட்டப்பட்டுள்ளது.

சிலப்பதிகார நாடகத்தின் உச்சநிலை, கொலைக்களக் காதையில் வீறுடன் விளங்குகிறது. இந்தக் காதையின்அமைப்பும், முக்கியத் துவமும் நாடகப் பண்புகளும் ஐந்து இயல்களுள் விரிவாக ஆராயப் பட்டுள்ளன. இவற்றிடையே, நாடகக் கலைத் திறன்கள் பல, சிலப்பதி காரத்தில் இடம் பெற்றுள்ள நிலைகள் பற்றியும் நுட்பமாக விளக்கப் பட்டுள்ளன.

இவை அல்லாமல் பேராசிரியர் அவ்வப்போது ஆங்கிலத்தில் இரட்டைக் காப்பியம், சிலப்பதிகாரம் பற்றி வெளியிட்ட கட்டுரை களையும் மணிமேகலையைப் பற்றிய ஆய்வுரைகளையும் வெளியிட்டு உள்ளார். அவற்றுள் சில, கட்டுரை நூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

பேராசிரியரின் சிலப்பதிகார ஆராய்ச்சி நூல்களில், சிலப்பதி காரத்தின் காப்பிய அமைதியின் மாட்சியையும், இளங்கோவடிகளின் பாத்திரப் படைப்புத் திறனும், வரிப்பாடல்களின் அமைப்பும் அழகும் முதன்முதலாக முறையாகவும், முழுமையாகவும் தெளிவுறுத்தப் பட்டுள்ளன.

இன்னொரு கருத்தினை, இங்கு நினைவுகூரலாம். பச்சையப்பன் கல்லூரியில் துணைப் பேராசிரியராக விளங்கிய வி.எஸ். சுப்பிரமணிய ஆசாரியார் எனும் அறிஞர் வெளியிட்ட சிலப்பதிகார ஆராய்ச்சி, சிலப்பதிகாரமும் ஆரியக் கற்பனையும், எனும் நூல்களில் வெளியிடப் பட்ட புதுமைக் கருத்துக்களுக்கும் புரட்சிக் கருத்துக்களுக்கும் அமைதியும், விளக்கமும் கூறும் பணியினைப் பேராசிரியர் அமைதியாகச் செய்துள்ளார். மற்றும் அந்த நூலாசிரியர், சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள குறைகளாகப் பன்மொழிப் புலவர் அந்த அறிஞரின் பெயரைச் சுட்டாமல், தம் நூல்களில் மறுப்புரை வழங்கியுள்ளார்.

50. நாடகக் காப்பியங்கள், பக். 12 - 13.

## கம்பராமாயண ஆராய்ச்சி

தமிழ்ப் பெருங்காப்பியங்களில், கம்பராமாயணத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. உலக மகாகவிகளுள் கம்பருக்கு ஒப்பாக, வேறெந்தக் கவிஞரையும் காட்ட இயலாது என்பது வ.வே.சு. ஐயரின் துணிவாகும்.

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், இளமை முதலே கம்பராமாயணத்தில் பேரீடுபாடு கொண்டவராக விளங்கினார். மற்றும், இளமைப்பருவத்தில், சென்னையில் சிறப்புற்று விளங்கிய தமிழ் அறிஞர் டி.என்.சேஷாசலம் அவர்கள் நடத்திய கம்பராமாயண வகுப்புகளில் தொடர்ந்து பாடம்கேட்ட பெருமை நம் பேராசிரியருக்கே உரியதாகும். மேலும் தமிழ்நாட்டில் 1940 முதல் 'கம்பன் கழகம்' எனும் அமைப்பு நிறுவப்பட்டு, நாடு முழுவதிலும் ஆண்டு தோறும் கம்பராமாயண மாநாடுகள் நடத்தப்பட்டு வந்தன. தொடர்ந்து நடத்தப்பட்டும் வருகின்றன. அவற்றில் முக்கியப் பங்கினை நம் பேராசிரியர் பெற்றுள்ளார்.

## உயிர்நிலைப் பாட்டு

இராமாயணத்தில் பேரீடுபாடு கொண்டிருந்தவர் நம் பேராசிரியர். அதன் தலைவன், தலைவி முதலியோரைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தினையும் இராம காதையைப் பற்றியும் அவர் பல்வேறு கட்டுரைகள் எழுதியுள்ளார். இத்தகைய ஆய்வுரைகளில் ஒன்று, 'உயிர்நிலைப்பாட்டு' எனும் தலைப்பில் அமைந்ததாகும்.

"இராமாயணக்கதை உலகினர் மனத்தை இன்றும் நீர்ப்பிண்டமாய் உருக்கி வருகிறது. இந்திய நாட்டில், இந்த வகையில், இதற்கு இணையான கதையே இல்லை எனலாம். இந்நாட்டில் வழங்கும் எல்லா மொழியிலும், இக்கதை இன்பவூற்றாகச் சிறந்து, அன்பு நீராகப் பரந்து, வான் ஆறாக வெள்ளமிட்டோடி, இந்திய வாழ்வை வளர்க்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்நாடு, இவ்வாறு உருப்பெற்று வருகிறது. இராமனே, இந்நாட்டு அரசரின் மேல்வரிச் சட்டம். சீதையே, இந்நாட்டுப் பெண்களின் உயிர்நிலை" எனும் அறிமுகவுரை[51] என்றைக்கும் சிறப்புடன் விளங்கக் கூடியதாகும்.

இந்திய மொழிகள் பலவற்றில் இயற்றப்பட்டுள்ள இராம காதைகளின், சிறப்பு இயல்புகளைப் பேராசிரியர் இவ்வாறு எடுத்துரைக்கிறார். பிறகு, தமிழில் சிறப்புற்று விளங்கும் கம்பராமாயணத்தின் நோக்கையும் போக்கையும், அமைப்பையும் அழகையும் அவர் புலப்படுத்தியுள்ளார்.

51. பிறந்தது எப்படியோ, ப. 36

"கம்பன் கண்ட காட்சியோ, அன்புலகில் அறவொளியில், மிளிரும் முத்தமிழ்ப் பெருங்காட்சி" என்பதனால், கம்பனின் படைப்பு மாட்சி தெளிவாகிறது.

இதனை அடுத்து, இலக்கியத்தை எவ்வாறு ஆராய வேண்டும் என்பதனை, அறிஞர் தெ.பொ.மீ.[52] அவர்கள் தெளிவுறுத்தியுள்ளார்.

"இக்காட்சி (முத்தமிழ்க் காட்சி) இவன் வாழ்க்கையின் பெரும் புரட்சியாம். இதுவே, இவன் கலை வாழ்வில், எழுந்த பேரொளி; பாட்டாய்ப் பெருகிய, இவன் உணர்வின் எல்லையில்லா வெள்ளம். இவன் குணப்பெருங்குன்றின் கொடுமுடி; இவன் துய்த்த இன்பவான் மீன்கள் பின்னிப் பொலியும் வானகம்; இவன் அறிந்த கடவுள் மணம் வீசும் தனிக்காற்று இதன் நுட்பத்தை நாம் அறிதல் வேண்டும் என்பதே அவருடைய கட்டளை.

அடுத்து, 'பாட்டின் உயிர்நிலை என்பது யாது?' எனும் வினாவினை எழுப்பி, அதற்குச் சிறந்ததோர் விளக்கத்தையும் பன்மொழிப் புலவரே, கற்பவர் கருத்தில் ஆழப் பதியுமாறு எடுத்துரைத்துள்ளார்.

ஒரு பாட்டிற்கு ஐந்து நிலைகள் உண்டு. அவை எப்படி அமைகின்றன என்பதனைப் பேராசிரியரின் சொற்களாலேயே, அறிய முயலுவோம்.

"பாவோ, பலபல நிலையில் ஒளிர்கின்றது. சொல்லழகில் மனத்தைக் கவர்வது பாட்டின் முதல்நிலை. சொல்லழகோடு பொருளாழமும் பிரிவின்றி இயைந்து தோன்ற பாவாகப் பரந்து உள்ளத்தை வலித்து ஈர்ப்பது, பாட்டின் இரண்டாம் நிலை. கதைப் போக்கின் ஒற்றுமைப் பாட்டில், நம் மனத்தை ஈடுபடுத்துவது பாட்டின் மூன்றாம் நிலை. கதைப் போக்கின் சிறப்பனைத்தையும், பெருமகனின் வாழ்க்கைப் புரட்சியாகப் புனைந்துரைத்துப் புத்துணர்ச்சி தந்து, அலைந்தழியும் மனத்தை அமைதியாக்குவதே, பாட்டின் நான்காம் நிலை, பெருமகனின் வாழ்க்கை புரட்சியின் கதைப் போக்கிலே ஈடுபட்டுத் தன் உயிரும், உடலும், உள்ளமும் உணர்வும், இன்பமும் அன்பும், அப்புரட்சிப் பெருந்தீயில், குளித்தெழுந்த தூய்மையாக, அக்கதையினுள்ளே உலகத்தையும், உலகம் படைத்த ஒருவனையும் கண்டு, உலகத்தைச் சீர்படுத்தித் திறம்பட உருப்படுத்தும் உட்கோளாக அக்கதைப் போக்கின் உண்மையைத் தன் உயிரோடு ஒருங்கு இசைய வைத்து, உள்ளவாறு காணுந் தோறும், காணுந்தோறும் அப் பாவானது உணர்வெலாம் உருக்கிப் பார்க்கடலாய்ப் பரந்து வெள்ளமிட, அதில் எழுகின்ற இன்ப அன்பாம் திரையாட்டத்தில், உலகனைத்தும் ஆழ்ந்து, மூழ்கித் திளைக்கும் களியாட்டமே பாட்டின் ஐந்தாம் நிலையாம், இந்த

52. மு.கு.நூ. ப. 37

ஐந்தாம் நிலையே, பாவின் உயிர்நிலையாம்[53] எனும் விளக்கம் பாவிய ஆராய்ச்சிக்கு ஊட்டப்படும் புத்தொளியாகும்.

இந்தப் பின்னணியில், கம்பராமாயணத்தில்,

"அரக்கியர் அளவு அற்றார்கள்,
அவள்வயின் சூழவும் அஞ்ச
நெருக்கினர் காப்ப நின்பால்
நேசமே அச்சம் நீங்க
இரக்கம் என்ற ஒன்றும் தானே
ஏந்திழை வடிவம் எய்தித்
தருக்கிய சிறையுற்றன்ன
தகையள் அத்தமியள் அம்மா!"

*(சுந்தர. 1319)*

எனும் கம்பனுடைய பாடலை,[54] கம்பராமாயணத்தின் உயிர்நிலைப் பாட்டாகப் பேராசிரியர் விளக்கியுள்ளார். சிறை இருந்தாள் ஏற்றத்தைக் கூறுவதே இராமாயணம் எனும் கருத்தினை, பிள்ளை லோகாசாரியர் எடுத்துரைத்தமைக்கு இப்பாட்டே அடிப்படையாக இருத்தல் கூடும் என்பது டாக்டர் மீனாட்சி சுந்தரனாரின் துணிவாகும்.

இத்தகைய பகுப்பாய்வும், விளக்கமும் கொண்டது இந்தப் பாடல். இந்தப் பாடலைப் பற்றிய ஆராய்ச்சியா? திறனாய்வா? அல்லது தத்துவார்த்த உள்ளுறையா? எனும் ஐயத்தை பேராசிரியர் விளக்கம் எழுப்புகிறது; நம்மை மலைக்கச் செய்கிறது. இந்த மூன்றும் சேர்ந்த ஒன்றாகவும், இதற்கு மேலாகவும் பேராசிரியரின் ஆராய்ச்சியின் போக்கு அமைகிறது எனலாம்.

## நிமிர்ந்து நின்றான்

இத்தலைப்புடைய ஆய்வுரை புதுமையானது. கடலைத் தாண்டி, இலங்கையில் போய் குதிப்பதற்கு, மகேந்திர மலையின் மீது அனுமன் நிமிர்ந்து நின்றான் என்பது கதை நிகழ்ச்சி. இந்தச் செயலில், விஞ்ஞான செயல்திறன் வெளிப்படுவதாகப் பேராசிரியர் விளக்கியுள்ள திறம், வியப்பூட்டுவதாகும்.[55]

## கம்ப நாடகம்

இப்பெயரால், இராமாயணத்தைச் சுட்டுவது பழைய வழக்கு. இக்காப்பியத்தில் நாடகப் பண்புகள் பல, இடம் பெற்றுள்ளதை

53. மு.கு.நூ. ப. 41 - 42
54. மு.கு.நூ. பக். 45
55. மு.கு.நூ. பக். 48 - 49

ஆசிரியர் குறிப்பிடுகிறார். பிறகு, இராம காதை, எவ்வெவ்வாறு கலையுலகில் நாடகமாக நடிக்கப்படுகிறது என்பதை அவர் தெளிவுறுத்தியுள்ளார்.[56]

## கம்பன் கண்ட கனவு

இவ்வாய்வுரையின் தொடக்கம் நம் கருத்தைக் கவருவதாகும். "தமிழ்ப்பா உலகில், இமயமலையாக விளங்குபவன் கம்பனே எனலாம். அவன் கண்ட கனவு என்ன? எனும் வினாவினை ஆசிரியர் எழுப்புகிறார்.

கம்பன் கண்ட கனவு. போரற்ற, வறுமையற்ற புது உலகம், என்பதனை உலக வரலாற்றுப் பின்னணியில் யார், யார் எத்தகைய உலகைக் கற்பனையாகப் படைத்துக் காட்டியுள்ளனர் என்பதை ஆசிரியர் முதலில் கோடி காட்டியுள்ளார். பின்னர், நாட்டுப் படலம், நகரப் படலத்தில் இடம் பெற்றுள்ள கம்பன் காண விழைந்த புத்துலகச் சித்திரங்களை ஆசிரியர் நயமுற எடுத்துரைத்துள்ளார்.[57]

## கம்பன் பெற்ற தாரை

இந்த ஆய்வுரையில், வாலியின் மனைவி, 'தாரை', கணவனுடைய இறப்பிற்குப் பிறகு எத்தகைய வாழ்க்கை வாழுகிறாள் என்பதையும், அவளுடைய பண்புநலன் எவ்வாறு தமிழ்நாட்டுப் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில், மூல நூலில் இருந்து, மாற்றி அமைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் பன்மொழிப் புலவர் நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.

வான்மீகியின் படைப்பில் இருந்து, கம்பனுடைய தாரை, பலவகையில் வேறுபட்டவளாகக் காட்சி தருகிறாள். இவ்வேறு பாட்டிற்குக் காரணம் என்ன வென்பதை ஆசிரியர் நுட்பமாக விளக்கியுள்ளார்.[58]

## நாடகக் காப்பியங்கள்

இந்நூலின் முதற்பகுதி சிலப்பதிகாரத்தைப் பற்றியதாக அமைந்துள்ளதை முன்னரே கண்டோம்.

இந்நூலின் செம்பாதிக்கு மேல் உள்ள ஏழு ஆய்வுரைகள் அடங்கியுள்ளன. அவற்றுள் கம்பநாடகம், கம்பன் கண்ட கனவு, நிமிர்ந்து நின்றான், உயிர்நிலைப் பாட்டு எனும் நான்கு கட்டுரைகள் உள்ளன. இவற்றை முன்னரே, வேறு நூல்களில் இடம்பெற்றுள்ள முறையில், நாம் கண்டோம்.

*56. நீங்களும் சுவையுங்கள், பக். 43 - 45*

*57. மு.கு. நூ. பக். 56 - 59*

*58. மு.கு.நூ. பக். 59 - 61*

இந்த நூலின் சிறப்புமிக்கதாக விளங்குவன இரண்டு. ஒன்று தசரத இராச்சியமும் இராமராச்சியமும் என்பதாகும். இரண்டாவது கம்பராமாயணத்தை கற்க முடியுமா? கற்க வேண்டுமா? எனும் புதிர்க் கட்டுரையாகும்.

முதல் கட்டுரையில், தசரதராச்சியத்தின் அலங்கோலங்கள் சித்திரிக்கப்படுகின்றன. அதற்கு நேர் மாறாக, அண்ணல் காந்தியடிகள் காண விரும்பிய இராம இராச்சியத்தின் வித்து, எவ்வாறு கம்பன் படைத்த இராம இராச்சியத்தில் இடம் பெற்றுள்ளது என்பதனைப் புத்துலகச் சிந்தனையோடு இணைத்துப் பேராசிரியர் மதிப்பிட்டுள்ளார்.

கம்பராமாயணத்தைக் கற்பதற்குச் சில நெறிமுறைகளை வாசகர் பின்பற்ற வேண்டும். குற்றங் காணும் நோக்கத்தோடு அதனை அணுகலாகாது. அறிவாராய்ச்சி உணர்வோடு அதனைக் கற்பதால், ஆராய்வதால், அதன் தெவிட்டாத கனிச்சுவையை நுகர முடியாது. உள்ளத்து உணர்வு கொண்டு, இதயப்பசியோடு கம்பராமாயணத்தைக் கற்றால், இன்ப அன்பின் எக்களிப்பைப் பெற இயலும். மற்றும் புத்துணர்ச்சியும், புதியதோர் ஊக்கத்தையும் பெற இயலும் என்பது நம் பேராசிரியரின் துணிவாகும்.[59]

## ஆங்கிலக் கட்டுரைகள்

கம்பராமாயணத்தின் அருமை பெருமைகளைப் பிற மொழியாளரும் அறிவதற்கு உகந்த நிலையில், கம்பன் எனும் கட்டுரையும், இரணியன் வதைப்படலம் எனும் கட்டுரையும், கம்பராமாயணமும் காப்பிய மரபும் எனும் கட்டுரையும் ஆங்கிலத் தில் வெளியிடப்பட்டுள்ளன. இவை அல்லாமல் ஆங்கிலத்தில் வெளியிடப் பட்டுள்ள தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பராமாயணம் பற்றிய சிறந்தொரு திறனாய்வு - மதிப்பீடு இடம் பெற்றுஇருக்கிறது.

இவற்றுள் இரணியன் வரலாறு, இராமாநுசரின் விசிஷ்டாத்வைக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, பலஅரிய உண்மைகளைப் பேராசிரியர் விளக்கியுள்ளார். இது புதுமைப் போலிவும், தத்துவச் சிந்தனையும் வாய்ந்த, நுட்பமான ஆராய்ச்சிக் கட்டுரையாகும்.

## 5. பாரதியார் பாடல்களின் ஆராய்ச்சி

தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைப் படைப்புகளிலும், கட்டுரைகளிலும் அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் மூழ்கித் திளைத்தவராவர்.

59. நாடகக் காப்பியங்கள் பக். 180 - 92

பாரதியின் பாடல்களின் சந்த இன்பம், எவ்வாறு பாமர மக்களுடைய பாடல்களின் ஓசைநயத்தை அடியொற்றி, அமைந் துள்ளது என்பதனை ஆங்கிலத்தில் எழுதிய மொழியியல் கட்டுரை ஒன்றில், பல்கலைச் செல்வர் எடுத்துரைத்துள்ளார்.[60]

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர்,

ஆன்ற தமிழ்ப் புலவீர் கற்பனையே யானாலும்
வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க
யாதேனுஞ் சற்றே இடமிருந்தால் கூறீரோ (குயில்)

என்று பாரதி விடுத்த வேண்டுகோளை ஏற்று, பாரதியின் குயில் பாட்டிற்குத் தத்துவமுறையில் உரைவிளக்கம் கண்ட பெருமை, நம் பேராசிரியருக்கு உரியதாகும். இதனை அவர் ஆங்கிலத்தில் வெளி யிட்டுள்ளார்.

முதன் முதலாகத் தமிழறிஞர் ஒருவர், குயில்பாட்டிற்கு உள்ளுறைப் பொருள் கூறியவர், நம் பேராசிரியரே என்பது நினைவுகூரத் தக்கது.

பேராசிரியர் 'குயில் பாட்டினை', உலக மகாகவி தாந்தேயின் (Dante) 'தெய்விகக் காப்பியத்'தோடு ஒப்பிடுகிறார். இவற்றிடையே ஒருபுடை ஒற்றுமையே உள்ளதை முதலில் தெளிவுறுத்துகிறார். இரண்டும் முற்றுருவகம் (Allegorical) முறையில், மிக உயர்ந்த சமயத்தத்துவங்களை விளக்குகின்றன என்று கூறுகிறார். மேற்போக்காகப் பார்க்கும் பொழுது, குயில்பாட்டு சமயச் சார்பற்றதாகத் தோன்றும். ஆனால், உள்ளுறைப் பொருள் காணுகின்றபொழுது, 'அப்பாட்டு எவ்வாறு இந்தியச் சமயநெறியின் சார்புடையதாகத் தோன்றுகிறது என்பது புலனாகும் என்பது அவருடைய கருத்தாகும்.[61]

குயில்பாட்டின் தத்துவத்தைத் தெளிவுறுத்தும் பகுதியை இங்குக் காண்போம்.

''தாந்தேயின் காப்பியத்தைப் போன்றே, குயில்பாட்டு அடுக்கடுக்காகப் பலவகைப் பொருள்களைக் கொண்டதாக இருக்கிறது. எனவே, நம்முடைய மனப்போக்கிற்கு ஏற்பப் பலவகைப் பொருள்தரும் நிலையில், இப்பாட்டு எல்லாருடைய உள்ளத்தையும் கவருகிறது. தெருவில் திரிபவருக்கு இது ஒரு தாலாட்டுப் பாட்டாகத் தோன்றுகிறது; பள்ளிக்குச் செல்லும் சிறுவருக்கோ, இது ஒரு வனதேவதைக் கதையாகும். வயது வந்தோருக்கு, இந்த உலகின்

60. Ibid. P P 103 - 107
61. 'The Rhythm of the Common Speech. Its glorification by Bharathi Papers on Lingustics P P 7.

கொடுமைகளையும் துன்பங்களையும் அல்லல்களையும் அனுபவிப்ப தால், மனச்சோர்வுற்ற நிலையில் உலகத் துன்பத்தை மறந்து, அல்லது அவற்றிலிருந்து தப்பியோடுவதற்குரிய ஒரு கருவியாக - மதியை மயக்கும் அபின் எனும் போதைப் பொருளாகக் குயில்பாட்டு, பயன்படுகிறது.

பாலியல் சிந்தனையில் மூழ்கி உள்ளவர்களுக்கு, இப்பாட்டு, ஒரு காதற்பாட்டாக அகத்தெழுச்சி ஊட்டுகிறது. அவர்களுக்குத் திரைப்படக் காட்சியைப் போல, பாட்டும் கூத்தும் கலந்து ஒரு களியாட்டப் பாட்டாகவும் இது தோன்றலாம். தத்துவச் சிந்தனை யாளருக்கும், முதுமையை அடைந்தோர்க்கும் இது, ஒரு நீதிக் கதையாகத் தோன்றும்; பாமரருக்கு ஒரு நாட்டுப்புறப் பாடலாகக் காட்சி தரும். ஆனால், இத்தகைய எண்ணப் போக்குகளில் குயில்பாட்டை விளக்குவது ஒருவகை வெற்றுவேட்டு ஆரவாரமாகவே தோன்றும்; முழுமையான விளக்கமாகவோ, கவிஞரின் உள்ளக் கிடக்கையைப் புலப்படுத்துவதாகவோ, இவை அமையாது. எனவே, இவ்விளக்கங்கள் அனைத்தின் தொகுப்பே, இவற்றிற்கு எல்லாம் மேம்பட்ட அனுபூதித்தன்மை - மெய்யுணர்வு - இயல்புடைய இசை விளக்கத்தோடு பரம்பொருளைக் காணவுதவும் - கவிதையாக - ஆன்மாவின் காப்பியமாகக் காட்சி தரும்"[62] என்று அறிவித்துள்ளார்.

இதிலிருந்து புலனாகும் உண்மை யாது? குயில்பாட்டு, ஆன்மாவின் தணியாப் பெரும் வேட்கையை - இறைவனுடைய திருவருளைப் பெறத் தவிக்கும் ஆன்மீகப் பசியை, 'பேரா இயற்கைப் பெரு நிலையை அடையத் துடிக்கும் ஆரா இயற்கை ஆன்மிக அவாவையே புலப்படுத்துகிறது எனலாம்.

பேராசிரியரின் தத்துவ விளக்கத்தைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

குயில் இறைவன். கவிஞனே சீவான்மா. குரங்கு, எருது, வேடன் போன்றோர் கவிஞனின் காதலுக்குத் தடையாக உள்ளனர். இவற்றை உலகியல் சார்புடைய ஆணவம், கன்மம், மாயை எனக் கொள்ளலாம். பலபிறவிகள் எடுத்து, வினையை அறுத்துக் கொள்ளும் சீவான் மாவாகிய கவிஞன், ஞானவாளின் உதவியால், பரமான்மாவாகிய இறைவனோடு இரண்டறக் கலந்து விடுகிறான்"[63] என்பதே நம் பேராசிரியருடைய சிந்தனைப் போக்காகும். இதனை, வேதாந்த நெறிப்பட்ட விளக்கமாகக் கொள்ளலாம்.

இந்த விளக்கம், தமிழ்ச் சிந்தனையில் புதியதொரு கிளர்ச்சியை உண்டாக்கிற்று. இதைத் தொடர்ந்து பலவகையான புதிய விளக்கங் களைப் பலர், தத்தம் மனப்பக்குவத்திற்கு ஏற்ற முறையில் இதற்குத்

62. மு.கு.நூ.பக். 59-61
63. நாடகக் காப்பியங்கள் பக்.180-92

தத்துவவிளக்கம் கூறியுள்ளனர். பாரதியாரே, 'வேதாந்தம்' எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். எனவே, நம் பேராசிரியரின் விளக்கம் பேரளவிற்குப் பொருத்தமாக அமைந்துள்ளது எனலாம். கவிஞரின் உள்ளக் கிடக்கையைப் புரிந்துகொள்ளவும் இது உறுதுணையாகலாம்.

## 6. புத்திலக்கிய ஆராய்ச்சி

பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. அவர்கள், புதுமைத் தமிழ் இலக்கியத்தின் நோக்கையும் போக்கையும் நன்கு உணர்ந்தவராவர்.

இப்புத்திலக்கியங்களைப் பல வகையில் அவர், ஆராய்ந்துள்ளார். தமிழில் தோன்றி வளர்ந்து வரும் உரைநடை வளர்ச்சியை மதிப்பிடும் கட்டுரைகள் சிலவற்றை ஆசிரியர் எழுதியுள்ளார்.[64]

மற்றும், தமிழிலேயே 'பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் நாடகங்கள்' பற்றியும் சில தமிழறிஞர்களின் தமிழ்த் தொண்டினைப் பற்றியும் அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் எழுதியுள்ளார்.[65]

இவை அல்லாமல், புதுக்கவிதை பற்றியும் சில கட்டுரைகளை எழுதி, வெளியிட்டுள்ளார்.

இவை எல்லாவற்றையும் விட, சாகித்திய அக்காதமி 1955 அளவில் ஆங்கிலத்தில் வெளியிட்ட "இன்றைய இந்திய இலக்கியம்" எனும் நூலில், இக்காலத் தமிழிலக்கிய வளர்ச்சியைப் பற்றிய ஆய்வுரையைப் பேராசிரியர் எழுதியுள்ளார். அதில் பலரும் கண்ட ஒரு குறையை மட்டும் இங்குச் சுட்ட வேண்டும். 'இன்றைய தமிழிலக்கிய வளர்ச்சியை மறைமலை அடிகளோடு, ஆசிரியர் முடித்து விடுகிறார். சமகாலப் படைப்பாளர்களைப் பற்றி அவர், ஒன்றுமே குறிப்பிடவில்லை என்பதே அக்குறை.[66]

ஆனால், இந்தக் குறையை, "விடுதலைக்குப் பின் இருபத்தைந்து ஆண்டுகளில் இந்திய இலக்கிய வளர்ச்சி"[67] எனும் மற்றொரு சாகித்திய அக்காதமி நூலில், ஜெயகாந்தன் வரையில் வளர்க்கப்பட்டுள்ள தமிழின் புதுமை இலக்கியப் படைப்பாளர்களின் பங்களிப்பையும் அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் கருத்தில் கொண்டு, விரிவான ஆராய்ச்சியைத் திறனாய்வு முறையில் செய்துள்ளார்.

இக்கால எழுத்தாளர்களின் கடமைகளையும் பொறுப்பையும் பேராசிரியர், "இன்றைய இலக்கிய வளர்ச்சி, முதிர்ச்சி நிலையை, இன்னும் எட்டிப் பிடிக்கவில்லை. தங்களுடைய பன்முகத் தலைப்பு

64. தெ.பொ.மீ. நீங்களும் சுவையுங்கள், பக்.70-72
65. Tamil - A Bird eye view, P.P.59-64
66. இன்றைய இந்திய இலக்கியம் P.P.59-64
67. Indian Literature Since Independance, P.P. 297 - 321

களுக்கும், வாசகர்களுக்கும் பொருந்தும் முறையில் - புரியும் வகையில் - தாங்கள் எழுத வேண்டும் எனும் தேவையை இன்றைய எழுத்தாளர்கள், நன்குணர்ந்துள்ளனர். எல்லா வகையான கருத்துத் தெரிவிப்பு முறைகளுக்கும் ஏற்ற ஒருவகை ஊர்தியாக, இன்றைய தமிழ் மொழி வளர்ந்து வருகிறது. இதனை, எல்லா வகையான சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் தமிழ்க் கலைக் களஞ்சியமே இதற்குப் போதிய சான்று. எனினும், இன்றுவரை (1973) முழுமையான - உண்மையான செம்மை நிலையைத் தமிழ்மொழி அடையவில்லை என்பதனை நினைவில் கொள்ளுவோமாக"[68] எனும் பேராசிரியரின் அறிவுரை, இன்றைய தமிழ் எழுத்தாளர்களும், அறிஞர்களும் கருத்தில் கொண்டு செயல் படுமாறு தூண்டுவதாகும்.

## பலவகை இலக்கிய ஆராய்ச்சி

இதுவரையில் நாம் கண்ட, அறுவகை இலக்கிய ஆராய்ச்சித் துறைகள் அல்லாமல், வேறுபல துறைகளிலும் பேராசிரியர் கருத்தைச் செலுத்தியுள்ளார்.

நற்றிணையின்[69] சிறப்பினைக் குறித்தும், மணிமேகலையைப்[70] பற்றியும் ஆசிரியர் விரிவாக ஆராய்ந்துள்ளார். இதைப் போன்றே, 'இரட்டைக் காப்பியங்கள்' எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.[71]

தமிழில் தலை சிறந்து விளங்கும் இலக்கியத்துறை ஒன்று உண்டு. அதனை மேற்கு நாட்டவர்கள் மிகச் சிறப்பாகப் போற்றியுள்ளனர். அதுதான், நீதிநூல் துறையாகும். இந்தத்துறையைப் பற்றி வடநாட்டவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம், அவர்களுக்குத் தெரிந்த 'சந்தவாதி' (நீதி நூல்கள்) எனும் தொடரைப் பயன்படுத்தி 'தமிழில் நீதி நூல்கள்' எனும் நீண்டதோர் ஆங்கிலக் கட்டுரையை ஆசிரியர் வெளியிட்டுள்ளார். இந்தக் கட்டுரை இந்தி மொழியில், மொழி பெயர்க்கப்பட்டு, இந்தி பேசும் மக்களுக்குத் தமிழிலக்கியம் பற்றிய ஓர் அறிமுகமாக 'இந்தி பிரசார சபையின'ரால் 1963-இல் வெளியிடப்பட்டுள்ளது.

பலவகையில் இவ்வாய்வுரை தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். "தமிழ் நீதி நூல்கள் பற்றிய ஆராய்ச்சியில் என்னை ஈடுபடுத்தியவரே பல்கலைச் செல்வரேயாவர். என்னுடைய எம்.லிட். (M.Litt) ஆய்வுப் பட்டத்திற்குப் 'பழந்தமிழ் இலக்கியத்துள் அறத்துறைகள்' (Treatment of Ethics in Ancient Tamil Literature) எனும் ஆய்வேட்டை அவர்களின் உதவியாலேயே உருவாக்கினேன். மேலே குறிப்பிட்ட ஐயாவின் ஆங்கிலக் கட்டுரையை விரித்துரைக்கும் முறையிலேயே, தமிழில் நீதிநூல்களின் தோற்றமும் வளர்ச்சியும் எனும் ஆங்கில நூலை, உலகத் தமிழாராய்ச்சி

---

68. மு.கு.நூ.ப. 300
69. 'நற்றிணைச் சிறப்பு' பிறந்தது எப்படியோ? பக்.91-103
70. 'மணிமேகலை' 1,2, 'பிறந்தது எப்படியோ?' பக்.18-35
71. Tamil A Bird's eye view PP 21-27

நிறுவனத்தில், என்னுடைய ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக 1982-இல் எழுதி முடித்தேன்.

"தமிழ் நீதி நூல்களே, உலக அரங்கில் ஒருவகை விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தது; தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் பொன்றாப் புகழைத் தேடிக் கொடுத்தது"[72] என்பது பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

புராணங்களைப் பற்றியும் அவர், விரிவாக ஆராய்ந்துள்ளார். பரஞ்சோதியின் திருவிளையாடல் புராணத்தினைத் திருப்பனந்தாள், காசிமடப் பதிப்பிற்கு, அவர்கள் எழுதியுள்ள முன்னுரை, ஓர் ஆராய்ச்சிப் பேருரையாகும்.[73] இது, புராணங்களுக்குச் சிறப்பு மிக்க தோர் அறிமுகமாக அமைந்து இருப்பதைக் காணலாம். 'தமிழிலுள்ள திருவிளையாடல் புராணங்களே, முதன் முதலில் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வித்திட்டன'' எனும் கருத்தை முதன் முதல் இந்த நாட்டிற்குத் தெரிவித்த அறிஞர், நம் பேராசிரியரேயாவார்.

முத்தமிழின் மாட்சியைப் பற்றிப் புதிய கண்ணோட்டத்தில், சிறந்ததோர் ஆராய்ச்சியுரையை இந்த உலகிற்குத் தந்தவரும் தெ.பொ .மீனாட்சிசுந்தரனாரேயாவார்.

"உண்மை என்பதற்கு வரையறையாக அறிவு, அழகுணர்ச்சி, நன்மை என கிரேக்கரின் கோட்பாடு அமைந்துள்ளது. ஆனால், கிரேக்கர்க்கு அவை குறிக்கோளாக விளங்கத், தமிழர்க்கு இவை கல்வி முறையாக அன்றாட வாழ்க்கையாய் விளங்கின. முத்தமிழ் எனக் கொண்டதால் எல்லாவற்றையும் அழகு என முடிப்பது தமிழர்க்கு எளிதாயிற்று"[74] எனும் துணிவுரை, தமிழருடைய அழகியல் (Aesthetics) கொள்கைக்கு வழிகாட்டுவதாகும்.

இவ்வாறு பன்மொழிப் புலவர், டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் பன்முக இலக்கிய ஆராய்ச்சிப்பணி தமிழிற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் தமிழர்க்கும் ஒளி சேர்ப்பனவாக அமைந்துள்ளன.

---

72. 'Ethical Literature in Tamil' Papers on Linquistics and Literature, PP 87- 125.
73. இக்கட்டுரையை, நீங்களும், சுவையுங்கள் எனும் நூலில் (பக்.85-100) சேர்த்துள்ளனர்.
74. 'முத்தமிழ்' - பிறந்தது எப்படியோ?, பக்.13-18.

இயல் 3

# இலக்கிய திறனாய்வாளர்

# இயல் - 3

## இலக்கியத் திறனாய்வாளர்

பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாருடைய இலக்கிய ஆராய்ச்சியின் மாட்சியை, முந்தைய இயலில் விரிவாகக் கண்டோம். இனி, பேராசிரியர் போற்றிய இலக்கியத் திறனாய்வு முறைகளைக் கண்டறிய வேண்டுவது நமது கடமையாகும்.

### இலக்கியம்

முதலில் 'இலக்கியம் என்பது யாது?' என்பதனை அறிய முயலுவோம்.

எழுதப்படுவன எல்லாம் இலக்கியம் எனக் கருதுவோர் உண்டு. செய்யுள் வடிவிலே படைக்கப்பட்டவை எல்லாம், இலக்கியம் எனப் போற்றப்பட்ட காலம் மலையேறிப் போய்விட்டது. 'உரைநடையில் எழுதப்படுவனவே இலக்கியம்' எனக் கூறத்தக்க நிலையில், இன்று காலம் விரைவாக மாறி வருகிறது.

இலக்கியம் மொழியின் வாயிலாகப் படைக்கப்படும் கலை; கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பது; உணர்ச்சியையும் அனுபவத்தையும் வெளிப்படுத்துவது; கற்பனை நயந்தோன்ற கருத்துகளை எடுத்து இயம்புவது; படிப்பவரை இன்புறுத்துவதோடும், மகிழ்வுறுத்து வதோடும், அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி, உயர்த்தும் ஆற்றலையும் உடையது. இலக்கியக் கலை என ஒருவாறு இலக்கியத்தை விளக்கிக் காட்டலாம். இந்த நோக்கே, நம் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் கொண்டு இருந்தார் என்பது, முந்தைய இயலில் சுட்டிக் காட்டப்பட்டது. இந்தப் பின்னணியில், இலக்கியம் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது; படிப்பவரின் சிந்தனைக்கும் உணர்வுக்கும், கற்பனைக்கும் விருந்தாக அமைவது; மொழியினால் ஆக்கப்படுவது; சொற்கோவையாகத் திகழ்வது; தனக்கென ஒரு வடிவினை (செய்யுள் அல்லது உரைநடை) உடையது; கற்பவருடைய எண்ணத்தில், எழுச்சியையும், இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்தது; இன்புறுத்துவதோடு அறிவுறுத்தும் ஆற்றலும் வாய்ந்தது இலக்கியம் எனப் பலவகையாகத் தெளிவுறுத்தலாம்.

இத்தகைய இயல்புகளைக் கொண்டதைப் 'படைப்பு இலக்கியம்' (Creative Literature) எனும் ஒரு தொடரால் சுட்டலாம்.

## திறனாய்வு

இலக்கியத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படும் கலையே, 'திறனாய்வு' என்பதாகும். ஒரு படைப்பு இலக்கியம் சிறப்புடையதா அல்லது சிறப்பற்றதா என்பதனைத் தீர்மானிப்பதற்கு உதவும் அளவுகோலாகப் பயன்படுவது திறனாய்வு. 'ஓர் இலக்கியப் படைப்பு, எப்படிச் சிறந்தது? எவ்வாறு சிறந்தது?' என்பனவற்றிற்குரிய காரணங்களைக் கண்டறிந்து, கூறுவது திறனாய்வு?

இதனை, உருவகமுகத்தான் விளக்கலாம். திறனாய்வு எனும் அழகிய நங்கை முயற்சி, உண்மை என்னும் இருவருக்கும் பிறந்த முதன்மகள். நடுவுநிலை எனும் செவிலித் தாயால், மெய்யறிவு என்னும் அரண்மனை யிலே செல்லமாக வளர்க்கப் பெற்றவள். இளமையிலேயே, கற்பனை எனும் ஆடவனிடம் காதலால் கட்டுண்ட துணைவியாக அமைந்தாள் அவள் எனக் கூறலாம்.

விருப்பு, வெறுப்பு இல்லாமல், விரும்பியதைச் சொல்லாது, கண்டதைக் கண்டவாறு மொழிவது திறனாய்வு. ஓர் இலக்கியப் படைப்பின் குணம் நாடிக், குற்றங் குறைகளையும் நாடி, அவற்றுள் மிகுதியாக உள்ளது யாது என்பதைத் தெரிவுசெய்து, தெளிவுறுத்துவது திறனாய்வு.

ஓர் இலக்கியப் படைப்பை, நன்கு புரிந்து கொள்ள உதவுவது திறனாய்வு. அதனை விளக்கியுரைப்பது திறனாய்வு; அதன் தகுதியையும் தகுதியின்மையையும் புலப்படுத்துவது திறனாய்வு.

இன்று சிறப்புற்று விளங்கும் 'திறனாய்வுக்கலை', நமக்குப் புதியது. ஐரோப்பியருடைய கல்வித் தாக்கத்தால், நம்மிடையே கால்கொண்டது திறனாய்வு. இதனை, ஆங்கிலத்தில் 'கிரிடிசிசம்' (Criticism) எனவும், சமஸ்கிருதத்தில் விமர்சனம் எனவும், இதனைச் சுட்டுவர். குற்றங்குறைகளைக் கண்டறிந்து கூறுவதே, 'கிரிடிசிசம்' அல்லது 'விமர்சனம்' என்பது தவறான கருத்து. நல்லதன் நலனையும், தீயதன் தீமையையும், தரத்தையும் தரமின்மையையும் மதிப்பிட்டுரைப்பதே திறனாய்வு.

திறனாய்வு தேவையா?

'திறனாய்வு தேவையா?' என்பதனை முதலில் அறிய வேண்டியது நமது கடமையாகும்.

ஒரு படைப்பு இலக்கியத்தை, முழுமையாகப் படித்துச் சுவைத்துப் பயன்பெற முயலும்போது திறனாய்வு முறை நாம் அறிந்தோ

அறியாமலோ அது நம்மிடம் தோன்றுகிறது. அடுத்து இலக்கியத் தரத்தை மதிப்பிட்டு, அறிய முயலும் பொழுது, திறனாய்வு முறை தோன்றுகிறது.

கலை நயத்தை, இலைமறை காய்போல், தம் இலக்கியப் படைப்பில் அமைக்கும் கலைஞனைச் சிறந்த கலைத்திறன் உடையவன் என அறிஞர் போற்றுவர். அக்கலைத் திறன்களைக் கண்டறிந்து, மக்களுக்கு வெளிப்படுத்திக்காட்டும் முயற்சியில் ஈடுபடுபவனே, 'திறனாய்வாளன்' எனக் கூறுவர். இதனால், ஓர் இலக்கியத்தின் கலைத் திறன்களைக் கண்டறிய முயலுவதற்குத் திறனாய்வு தேவைப்படுவது புலனாகும்.

## திறனாய்வும் ஆராய்ச்சியும்

முந்தைய இயலில், 'இலக்கிய ஆராய்ச்சி' எனும் பொருளைப் பற்றிப் பார்த்தோம். 'அதற்கும், இதற்கும் என்ன தொடர்பு? அல்லது என்ன வேற்றுமை?' எனும் எண்ணம் எழலாம். 'ஆராய்ச்சி' என்பது மிகவும் விரிந்த பொருளுடையது. இதனை ஓர் ஆறாக உருவகப்படுத்தினால், அந்த ஆற்றின் தண்ணீரைப் பருகச் செல்லுவதற்குப் பயன்படும் துறை (வழி)யே திறனாய்வு எனலாம்.

ஒரு கருத்தினை அறிவதற்கு அல்லது நிலைநாட்டுவதற்குச் செய்யப்படுவது ஆராய்ச்சி. ஒரு கலைப் படைப்பின் சிறப்பையும், சிறப்பின்மையையும், தரத்தையும், தரமின்மையையும் மதிப்பிடுவதற்குப் பயன்படும் கலையே - அளவுகோலே, திறனாய்வு. ஆராய்ச்சியின் ஒருகூறாக அமையக் கூடியது திறனாய்வு. ஆனால், திறனாய்வு என்றும் முழுமையான நிலையில் ஆராய்ச்சியாகாது.

## திறனாய்வின் வகை

பன்னெடுங்காலமாகக் கலைப் படைப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டு வந்துள்ளன.

மாறிவரும் சமுதாயச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, மனிதனுடைய சிந்தனைப் போக்கும் பழக்க வழக்கங்களும் மாறிவருகின்றன. இதனால், காலந்தோறும் திறனாய்வு முறையில், சிற்சில மாற்றங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன.

பொதுவான சில அடிப்படைகள் என்றும் மாறாதவை. முதல் பொதுமுறைத் திறனாய்வினை மனப்பதிவு முறை (Impressionistic) திறனாய்வு எனவும், அறிவுநிலைத் (Scholastic) திறனாய்வு எனவும் வகைப்படுத்துவர். 'மனப்பதிவு' முறையில், ஒருவருடைய விருப்பு, வெறுப்பு இடம்பெறும். முன்கூட்டியே உணர்ச்சி நிலையில் முடிவு செய்யப்பட்ட ஒன்றை, அடிப்படையில் தற்குறிப்பேற்றமாகக் காணவும், காட்டவும் முயலுவது; உணர்ச்சி பூர்வமாகச் செய்யப்படுவது.

இதனால், திறனாய்வு முறையில் கண்ட முடிவுகள், எளிதில் மாறக்கூடியனவாக அமைவதும் உண்டு.

அறிவுநிலைத் திறனாய்வு, உணர்ச்சி வயப்படாமல், பற்றற்ற நிலையில் செய்யப்படுவது; காரண காரியத் தொடர்பை அறிந்து தருக்க முறையில் வழக்கு, எதிர் வழக்கு நிலையில் ஆராய்ந்து, நடுவுநிலையில் நின்று, கலைப் படைப்பு மதிப்பீடு செய்யப்படுவது, 'அறிவுநிலைத்' திறனாய்வாகும். இவற்றைத் தற்சார்புடைய திறனாய்வு (Subjective) தற்சார்பற்ற திறனாய்வு (objective) எனவும் குறிப்பிடுவர்.

இந்தப் போக்கினை அடிப்படையாகக் கொண்டு, மரபுவழித் திறனாய்வு, படைப்பு வழித் திறனாய்வு (நலம் பாராட்டும் திறனாய்வு), விதிமுறைத் திறனாய்வு, அழகியல் திறனாய்வு, வாழ்க்கை வரலாற்று முறைத் திறனாய்வு, வகைப்பாட்டுத் திறனாய்வு, பாத்திரப்படைப்புத் திறனாய்வு, மூலநூல் திறனாய்வு, ஒப்பீட்டுத் திறனாய்வு எனப் பலவகையாகப் பாகுபடுத்தப்படும்.

மனித மனமே, திறனாய்வுப் பணியைச் செய்ய வேண்டி இருப்பதால், 'மனப்பதிவு' சிறிது அளவிற்காகிலும் இவற்றில் இடம் பெறத்தான் செய்யும். எனவே, இதனை முற்றிலும் தவிர்க்க இயலவில்லை. மதிப்பீடு எல்லாவற்றிலும் அடிப்படையாகும்.

நம் பேராசிரியர், மேற்கண்ட திறனாய்வு முறைகளுள் பலவற்றைக் கையாண்டுள்ளார். ஒரே நூலில் இவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, இலக்கியப் படைப்புகளை மதிப்பீடு செய்ய, அவர் முயன்றுள்ளார்.

## திறனாய்வு – பேராசிரியரின் விளக்கம்

'திறனாய்வு' என்பது யாது?" என்பதனைப் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள்

> "பாவாணர்கள் பல பாடல்களைப் பாடுவார்கள்; திருத்துவார்கள்; முடிவில் ஒரு சிறந்த பாடலை, உலகுக்கு அளிப்பார்கள். இப்படிப் பாடல் வளர்ந்த வளர்ச்சியை ஆராய்வது மிகச் சுவையுடையதாகும். ஆனால், இப்படித் திருத்திய திருத்தங்களும், வளர்ந்த வளர்ச்சியும், பெரும் பான்மையும் நமக்குக் கிடைப்பது இல்லை. ஆனால், ஒரு பாடலை, எப்படியெல்லாம் சுவைத்து இருக்கிறார்கள் என்பதையும் பொருளாழத்தைக் காண எவ்வாறு எல்லாம் முயன்றுள்ளார்கள் அப்பாடலின் அருமை பெருமை களை, உலகிற்கு உணர்த்த எவ்வெவ்வாறு முயன்றுள்ளனர் பின்வந்தோர் என்பதை அறிய முயலுவோமானால், பல உண்மைகள் புலனாகும்"

என்று கூறும் பேராசிரியர், இப்படியெல்லாம், பழங்காலத்தில் உரையாசிரியர்கள் உழைத்தனர். இக்காலத்தில், திறனாய்வாளர்கள் இந்தப் பணியை, விரிவாகவும், புதிய முறைகளிலும் செய்பவர்களே, திறனாய்வாளர்கள் என்று போற்றப்படுகின்றனர், என்று எடுத்துரைத் துள்ளார்.[1]

இப்பகுதியில் 'திறனாய்வு' முறையின் இயல்புகளைப் பேராசிரியர், கோடி காட்டியுள்ளார். முதலில் இலக்கியப் படைப்பைச் சுவைக்க வேண்டும். அடுத்துப் பொருளாழத்தைக் காண்போம்; அதன் நயமும் சிறப்பியல்புகளும் யாவை என்பதை மதிப்பிட வேண்டும்; அந்த மதிப்பீட்டை, உலகிற்கு உணர்த்த வேண்டும் எனும் திறனாய்வின் நால்வகைச் செயற்பாட்டினைப் பல்கலைச் செல்வர் தெளிவுறுத்தி யுள்ளார்.

திறனாய்வுத் திறன், படைக்கும் திறனில் இருந்து வேறுபட்டது. படைப்புத் திறன் இயல்பாக அமைவது. திறனாய்வோ பரந்துபட்ட புலமையாலும் நன்மை-தீமையை எளிதில் பகுத்துணரும் கூர்த்த மதியாலும் அமைவது.

திறனாய்வாளன், எவ்வாறு இலக்கியத்தைப் படைக்க வேண்டும். எவ்வாறு அதைச் சுவைக்க வேண்டும் எனும் வழிவகைகளைத் தானாகவே கண்டறிகிறான்.

இவனுடைய பணி, இலக்கியத்தைப் பற்றித் தெளிவாகச் சிந்திக்கச் செய்வதாகும். அடுத்து அதனைச் சுவைத்து மகிழ்வதற்குரிய வழிவகை களைச் சுட்டிக் காட்டுவதாகும்.

திறனாய்வைப் பற்றி இத்தகைய நோக்குடையவர் நம் பேராசிரியர் என்பதை, அவருடைய பல்வேறு இலக்கியக் கட்டுரைகளில் இருந்து அறிகிறோம்.

பல்வேறு மொழிகளையும், அவற்றின் இலக்கண-இலக்கியங் களையும் ஆழக்கற்றுணர்ந்தவராகப் பேராசிரியர் விளங்கினார். இதனால், இலக்கியத் திறனாய்வு முறையில், அவரிடம் ஒரு பரந்துபட்ட பார்வை இருந்து வந்தது.

வடமொழித் திறனாய்வு மரபும், பண்டைக் கிரேக்க, ரோமானியத் திறனாய்வு மரபும், தமிழிலக்கணத் திறனாய்வுப் போக்கும், இக்கால ஐரோப்பியத் திறனாய்வுக் கொள்கைகளும் அறிஞர் தெ.பொ.மீ. அவர்களிடம் கலந்தும், கரைந்தும் உறவாடின. இதனால், அவருடைய திறனாய்வு முறைகளில் ஒரு வகைப் புதுமைப் பொலிவும், கவர்ச்சிமிகு கருத்து விளக்கமும் கவினுற்று விளங்குகின்றன.

---

1. பத்துப்பாட்டு ஆய்வு, பக்.57-60

## திறனாய்வு நூல்கள்

பேராசிரியர், திறனாய்வு நெறிமுறைகளை விளக்கும் விதிமுறை நூல்கள் ஒன்றும் எழுதவில்லை. ஆனால், திறனாய்வுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, 'செயல்முறைத் திறனாய்வு' வகையில், பல இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும், அவர் வெளியிட்டுள்ளார். அவற்றுள் சிலவற்றை நாம், 'இலக்கிய ஆராய்ச்சி' எனும் தலைப்பில் விரிவாகக் கண்டோம். எடுத்துக் காட்டாகக் 'குடிமக்கள் காப்பியம்', 'கானல்வரி' என்பனவற்றைக் குறிப்பிடலாம். எனவே, இவை நீங்கலாக உள்ள, பிறநூல்கள் சிலவற்றின் நோக்கையும் போக்கையும் இங்குக் காண்போம்.

(1) அன்புமுடி, (2) சேக்கிழாரும் கண்ணப்பரும்
(3) நீங்களும் சுவையுங்கள் (4) பிறந்தது எப்படியோ?
(5) தமிழ் மணம் (6) பாட்டிலே புரட்சி
(7) இரு நாடகங்கள்

மற்றும் ஆங்கில நூல்களில் உள்ள சில கட்டுரைகள் இந்தப் பணிக்குப் பயன்படக் கூடியனவாக உள்ளன.

இந்த நூல்களைத் தனித்தனியே காண்பதை விடுத்து, 'திறனாய்வு நெறிமுறைகளுள்' முக்கியமானவற்றைப் பேராசிரியர் எவ்வெவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்பதனைக் காணமுயலுவோம். பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் திறனாய்வு நூல்கள் யாவும், செலுத்து நிலைத் (Applied Criticisn) திறனாய்வு நூல்களாகவே உள்ளன என்பதனைக் கருத்தில் கொள்ளுவோமாக.

## திறனாய்வின் போக்குகள்

"ஒவ்வொரு தலைமுறையும், அவற்றின் சிந்தனைப் போக்கிற்கும் காலத்தின் தேவைக்கும் எற்ற வகையில், பழைய இலக்கியங்களைப் புதிய ஒளியில் திறனாய்வு செய்ய வேண்டும். காலந்தோறும் சுவையுணர்வும் வண்ணமும் மாறி வருகின்றன. இவற்றிற்கேற்பத் திறனாய்வு பயன்பட வேண்டும். மற்றும், காலந்தோறும் புதியதாகப் பெருகி வரும் சிந்தனைப் போக்கையும் திறனாய்வின் நோக்கையும் ஒன்றாக இணைத்து ஓர் இலக்கியப் படைப்பை, மதிப்பிட வேண்டிய தேவை உண்டாகிறது. எனவே, திறனாய்வின் பணி, காலத்திற்குக் காலம் விரிந்து கொண்டே செல்லுகிறது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு, திறனாய்வாளன் செயல்பட வேண்டிய பொறுப்பும் கடமையும் பெருகி வருகின்றன"[2] என்பது டி.எஸ். ஈலியட்டின் (T.S.Eliot) கருத்து.

2. T.S. Eliot, The Sacred wood, PP 64-65

பேராசிரியருடைய பல படைப்புகள் இந்தப் பணியைச் செம்மையாகவும், முழுமையாகவும் செய்துள்ளன. இந்தியா, அயலாரின் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றபின் எழுந்த உரிமைமிகு சிந்தனையும், எல்லோரும் இந்நாட்டு மன்னர் எனும் எண்ணப் போக்குமே, சிலப்பதிகாரம் எனும் பழம்பெரும் காப்பியத்தைக் குடிமக்கள் காப்பியமாகப் பேராசிரியர் காணவும், காட்டவும் முயன்றதைச் சென்ற இயலில், கண்டோம்.

இதைப் போன்றே, 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம்' இந்த நாட்டிலே' எனும் சுதந்திர இந்தியாவின் மக்கள் மனப்போக்கைப் பிரதிபலிக்கும் வகையிலேயே 'கானல்வரி'யில் கோவலனோடு மாதவி உரிமைப் போர் தொடுப்பதாகவும், 'பெண்களை வீட்டில், அடைத்து வைக்க வேண்டும்; தனக்கே, உரியவள், நாலுபேர் பாராட்டுமாறு பொது மன்றத்தில் ஆடுவதா?" எனும் பழங்கால மனப்போக்குடைய கோவலனை, 'ஆண்களின் ஆதிக்கவெறி பிடித்தவனாக' (Male Chauvinism) சித்திரிக்கப்படுவதும் இந்த நோக்கிலேயே யாகும்.

சுயமரியாதை இயக்கச் சூறாவளி, இந்த நாட்டில் வீசியதன் பயனாக சமஸ்கிருத ஆதிக்கப் போக்கும், 'எல்லா வகையான அறிவும், சமஸ்கிருத நூல்களில் இருந்தே தமிழர் கடன் வாங்கியுள்ளனர் என்னும் 'சமஸ்கிருத மேம்பாடும்' பற்றிய கருத்துகளும், நம்பிக்கைகளும் தகர்த்து எறியப்பட்டன. இதனால் இந்தச் 'சமஸ்கிருத அடிமை மனப்பான்மை' அகற்றப்பட வேண்டிய நெருக்கடி நிலை உண்டாயிற்று.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் 'வள்ளுவரும் மகளிரும்' எனும் நூல், 'திருவள்ளுவர் பெண்ணை ஆணிற்கு அடிமையாக்கிக் கூற வில்லை. பரிமேலழகர் எனும் உரையாசிரியரே, 'வடமொழி மோகத் தால்' திருவள்ளுவரின் உள்ளக் கருத்தினைப் புரிந்து கொள்ளாமல், பல இடங்களில் திரித்துக்கூறியுள்ளார். இதனால், அவர் வழுக்கி வீழ்ந்த இடங்கள் பல' என்பதனை, நம் பல்கலைச் செல்வர் தெளிவுறுத்தி யுள்ளதையும் முன்னரே கண்டோம்.

இதற்குமேல், ஒரு படி மேலே சென்று, 'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' எனும் நூலில், "திரிவர்க்கம், ஆறங்கம், அரசியல் அமைப்பு முதலியவை வடமொழி வாணருக்கு மட்டும் உரியது அல்ல. அவை, பரந்த இந்திய மக்கள் மனப்போக்கு' (Pan-Indian) எனும், கருத்தினை முதன்முதல் உருவாக்கி, சமஸ்கிருத ஆதிக்கக் கோட்டையைத் தகர்க்கப் பேராசிரியர் முயன்றுள்ளதையும் முன்னரே கண்டோம். மற்றும், காமத்துப்பாலின் கருத்துக்களோ, அமைப்பு முறையோ வாத்சாயன ரிடமோ, கொக்கோகரிடமோ கடன் வாங்கப்பட்டவை அல்ல' என்பதைப் பேராசிரியர், அறிவுறுத்தியுள்ள முறையையும்

பார்த்தோம்.[3] இவை அல்லாமல், 1945-ஆம் ஆண்டுவரை, தம்முடைய பெயரினை 'மீனாக்ஷிசுந்தரம்' என்று எழுதியும், பதிப்பித்தும் வந்த பேராசிரியர், 'க்ஷ' எனும் எழுத்து வடமொழிச் சார்புடைய கிரந்த எழுத்து என்பதனைக் கருத்தில் கொண்டு, அந்த எழுத்தை நீக்கிவிட்டு, 'மீனாட்சிசுந்தரம்' என்று எழுதவும் தலைப்பட்டார். இவை யாவும், டி.எஸ். எலியட் குறிப்பிட்ட திறனாய்வின் சிறப்புமிக்க போக்கிற்குச் சான்ற பகருவனவதாக உள்ளன.

பன்மொழிப் புலவர் போற்றியுள்ள திறனாய்வு நெறிமுறைகள் சிலவற்றை, இங்குக் காண முயலுவோம்:

(1) பாட்டு - இலக்கணம், இயல்புகள், வடிவம், உள்ளடக்கம் பற்றிய விரிவான ஆய்வு ஐயாவால் மேற்கொள்ளப்பட்டுள்ளதை இங்குச் சுட்டலாம்.

(2) இலக்கியக் கலைத்திறன்கள் - சிறப்பாகக் கற்பனை, படிமம், நன்வோடை உத்தி.

(3) பாத்திரப்படைப்புத் திறனாய்வு.

(4) ஒப்பிலக்கியத் திறனாய்வு

என்பன பேராசிரியருடைய திறனாய்வு நெறிகளாக உள்ளன.

## பாட்டும் பயனும்

'பாட்டு என்பது யாது? செய்யுள் பாட்டாகுமா?' எனும் வினாக்கள் எழலாம். கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில், செய்யுளும் பாவும், பாட்டும் ஒரே பொருள் உடையனவாகவே வழங்கப்பட்டன. இதற்குப் பிறகே, 'பாட்டு' எனும் சொல், இசைப்பாட்டையும் 'செய்யுள்' என்பது சுவையற்ற பாக்களையும், 'கவிதை' என்னும் சொல், கற்பனை வளமும், கருத்தாழமும் கொண்ட செய்யுள்களையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வழக்கம் தோன்றியது.

பா, சொல்லழகு உடையது; பொருளாழம் கொண்டது; நம் சிந்தனையையும் உணர்ச்சியையும் கவருவது; கற்பனையாகப் பல கருத்துகளையும் செய்திகளையும் புனைந்து உரைத்து, மனத்திற்கு அமைதியை அளிப்பது, அகத்து எழுச்சியை ஊட்டிப் புதிய பொருள்களை நவில்தோறும் நயம் பயப்பது; இன்புறுத்துவதோடு வாழ்வைச் செம்மைப்படுத்துவது[4] என்பது பேராசிரியரின் கருத்தாகும்.

இது பாட்டிற்குத் தரப்பட்டுள்ள பொதுவான விளக்கமாகும். இந்த விளக்கத்தில், பாட்டின் வடிவழகுக்குரிய இயல்புகளும், உள்ளீட்டுச்

3. காண்க: 'விடுதலையும் இலக்கியமும்' - பாட்டிலே புரட்சி, பக்.135-140.
4. உயிர்நிலைப் பாட்டு, பிறந்தது எப்படியோ? பக்.41-42.

சிறப்புக்குரிய பண்புகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. மற்றும், பாட்டின் வளத்திற்கும் கலையழகிற்கும் தேவைப்படும் கற்பனை, ஓசை நயம், உணர்ச்சித் துடிப்பு, உயிரோட்டம் போன்ற கூறுகளும் ஒட்டு மொத்தமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

பாட்டைப் பற்றிய இந்த வரையறை, இரத்தினச் சுருக்கமாக இருந்தாலும், அதனுடைய பல்வேறு இயல்புகளைப் புலப்படுத்துவதாக உள்ளமை இங்குக் கருதத்தக்கது.

பாட்டு எனப்படும் இலக்கியம், “உணர்ச்சி வழியாகக் காணும் காட்சிக்குக் கலைவடிவம் தந்து வெளியிடுவதாகும். சுருங்கச் சொல்லுதல் வேண்டும்; விளங்க வைத்தல் வேண்டும்; ஓதுகின்றவர்க்கு ஓர் இனிமை தோன்ற வேண்டும் நல்ல சொற்களையே தேர்ந்து எடுத்தல் வேண்டும் நல்லதோர் ஓசை நயமும் அமைதல் வேண்டும்; பொருளாழமும் பொலிதல் வேண்டும்; பொருள்களை ஒருமுறையாகக் கோவை செய்தல் வேண்டும். உலகம் மலைத்து மயங்க வேண்டும் என்னும் நோக்கம் இன்றி, அறிந்து, இன்புற்றுத் தெளிய வேண்டும் என்ற நோக்கமே, முன்னிற்க வேண்டும், சிறந்த கருத்துக்களைக் கூறுதல் வேண்டும்; அதுவும் எல்லோர்க்கும் விளங்கக் கூடிய எடுத்துக்காட்டு களோடு மிகமிகத் தெளிவாக அமைதல் வேண்டும். இவையே பத்தழகுகளாம். இவற்றோடு எதுகை, மோனை, முரண் முதலிய செய்யுள் உறுப்புகள் கலந்து வரத் தொடுப்பதே சிறந்த கவிதையாம்”[5] எனும் பேராசிரியரின் மரபுவழிப்பட்ட கவிதை விளக்கம், அவருடைய திறனாய்வு நோக்கின் அடிப்படையாக அமைந்துள்ளது எனலாம்.

## பாவலன் பண்பு

பாட்டியற்றும் பாவலன், உயிர்த்துடிப்பு இல்லாமல் கவிதை இயற்றுவான் ஆனால், அது உயிரற்ற பிணமாகவே மதிக்கப்படும். இதனை ஆசிரியர் இலக்கணம் எல்லாம் நன்குவரக் கவிபாடினாலும், பாட்டு என்ற உயிர்நிலை இல்லையானால், உயிரில்லாப்பாட்டே வரும்; பொய்ம்மையே மிஞ்சும். பாடுபவன் உண்மைப் பாவலனாதல் வேண்டும். உள்ளே காட்சி எழுதல் வேண்டும். அந்த உட்பாடு, வெளிப்பாடாவதே கவி. தாம் கண்ட மெய்ப்பாட்டோடு, தாம் கண்டவற்றைக் காட்ட வல்லவர்களே கவிகள்[6] என்று கவிஞர்க்குரிய பண்புகளைப் பேராசிரியர் எடுத்தியம்பியுள்ளார்.

## வடிவம்

அடுத்துப் பாட்டின் வடிவம் பற்றி, அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள், பல அரிய கருத்துகளைத் தெரிவித்துள்ளார். ‘வடிவம்’ என்பதனைப் பாட்டின் உடலாகக் கூறுவர்.

5. பாட்டிலே புரட்சி, பக்.77-79.

6. ‘இலக்கிய மரபு’, பிறந்தது எப்படியோ? பக்.106-107.

"கவி உணர்ச்சி ததும்பி வழியும் போது, அதனை வெறும் உணர்ச்சி வெள்ளமாய் ஓடிப், பாழாய் ஒழிய விடுதல் ஆகாது. வெள்ளத்தினை அணைகட்டி, மடை வழியே வயலிற் பாய்ச்சினால், நீண்ட நாள் அதன் பயனையும் பெறலாம். கவி, வெள்ளத்தினை அணைகட்டித் தேக்கி, மடையிற் பாய்ச்ச வேண்டும். இலக்கியக் குதிரை ஓர் ஒழுங்கிற்கு அடங்கி ஓடும்படி, இலக்கணக் கடிவாளம் இட்டு ஓட்டி, கவியின்பமாம் முடிவிடம் சேர வேண்டும். யாப்பிலக்கணம் முதலிய இத்தகைய கடிவாளமேயாகும். சீர், தளை முதலியனவே, கவி வெள்ளத்திற்குக் கட்டும் அணைகளாம்; மடைகளாம்"[7] இதிலிருந்து, பாட்டின் வடிவத்தை அமைப்பதற்கு யாப்பு இலக்கணம் தேவைப்படுவது புலனாகிறது.

இந்த யாப்பிலக்கணம், காலத்தின் போக்கிற்கும் தேவைக்கும் ஏற்ப, வளைந்தும் நெகிழ்ந்தும் வளர்ந்து வந்துள்ளதைக் காணுகின்றோம். இதனால்தான் சங்க காலத்தில் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, பரிபாடல் எனும் நால்வகைப் பாடல்களாகச் சிறந்து நின்ற பாவகை, வெண்பாவோடு சேர்ந்து வழங்கலாயிற்று.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' எனும் உண்மைக்கு இணங்க, சங்க காலத்திற்குப் பிறகு பரிபாடல் மறைய, கலிப்பா வெண்பாவோடு இணைந்து வெண்கலிப்பா, கலிவெண்பா, கட்டளைக் கலித்துறை எனும் புதிய வடிவத்தைப் பெற்றது.

இதற்கு, அடுத்த நிலையில், வரிப்பாடல்கள் போன்ற நாட்டுப் புறப்பாடல் அமைப்புகளில் இருந்து, 'விருத்தப்பா' எனும் புதுவடிவம் கிளைத்தெழுந்தது. இப்பாவினத்தோடு நால்வகைப் பாக்களும் இணைத்துப் பாடும் வழக்கம் உண்டாயிற்று. இதனால், பலவகை விருத்தங்களும் பல்கிப் பெருகின.

இவ்வாறு பல்வேறு பாவகையால் யாப்பு மாற்றத்தால் கவிதையின் வடிவங்கள் மாறலாயின. இந்த மாற்றம் ஒவ்வொன்றும் பாவலனுடைய கருத்தோட்டத்திற்கும் உணர்ச்சிப் பெருக்கிற்கும் வலிவும் வனப்பும் அமையுமாறு செய்தன.

இந்த 'வடிவம்' பற்றிய நோக்கம், எல்லா நாட்டுக் கவிமரபிலும் இருந்து வருகின்ற ஒன்றேயாம்.

"பாவலன் கண்ட மனக்காட்சி, அதே வடிவத்தில் நம் எதிர் தோன்ற வேண்டும் என்பதே நோக்கமாம். மனக் காட்சியின் ஒற்றுமை, பாட்டிலே, பாவின் ஒற்றுமையாகத் தோன்ற வேண்டும்"[8] என்பதற்காகவே எதுகை, மோனை, சீர், தளை, தொடை, அடி எனும்

7. மு.கு.நூ.ப.107.
8. மு.கு.நூ.ப.112.

உறுப்புகளோடு செய்யுள் இலக்கணம் படைக்கப்பட்டுள்ளது இங்குக் கருதத்தக்கதாம்.

எனவே, பாடல் இயற்றப்படுவதற்குப் பின்பற்றப்படும் 'மரபு' என்பது, அதனுடைய வடிவத்தைப் பற்றிய யாப்பு இலக்கணம் என்பது தெளிவாகிறது.

## பாட்டின் நோக்கம்

'பாட்டை இயற்றுவதற்குரிய நோக்கம் யாது? அல்லது பாட்டைப் படிப்பதால் உண்டாகும் பயன் யாது?' என்னும் வினாக்களைத் திறனாய்வாளர் எழுப்புவர்.

இன்பம் தருவதற்காகவே, ஒரு பாட்டு படைக்கப்படுகிறதா? அல்லது படிப்பவருடைய மனத்தைப் பண்படுத்தி, வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காக ஒரு பாட்டு இயற்றப்படுகிறதா? என்பதனைக் கண்டறிந்து, கூற வேண்டியது திறனாய்வாளர் கடமையாகக் கருதப்படுகிறது. இதனைக் 'கவிதை - கவிதைக்காகவா? அல்லது கவிதை வாழ்க்கைக்காகவா?' எனச் சுருக்கமாகக் கூறலாம்.

நம்முடைய நாட்டில், பன்னெடுங்காலமாக இலக்கியம் இன்புறுத்துவதோடு, அறிவுறுத்துவதாகவும் அமைய வேண்டும் எனும் கொள்கை வேரூன்றி, வளர்ந்து வந்து இருக்கிறது.

இதைப்பற்றி டாக்டர் தெ.பொ.மீ. அவர்கள் கொண்டுள்ள கருத்துக்களைக் காண்போம்.

பாட்டின் நற்செய்தி எனும் பேராசிரியரின் மிகப் பழைய கட்டுரை இத்தகைய ஆய்வினை வெளிப்படுத்துகிறது.[9]

இந்தக் கட்டுரையின் தலைப்பே, ஆசிரியருடைய திறனாய்வு நோக்கினைப் புலப்படுத்துகிறது. 'பாட்டு' என்பது, யாதாகிலும் ஒரு நற்செய்தியை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும் என்பது பேராசிரியரின் சித்தாந்தமாகத் தோன்றுகிறது.

எடுத்த எடுப்பிலேயே, 'வயிற்றுப் பசியைத் தீர்ப்பது சோறு; உள்ளப் பசியைத் தீர்ப்பது பாட்டு. **"குறைமனம் நிறைமனமாகிறது. இந்த நிறைநிலை பாட்டின் நற்செய்தி"**[10] என்பது பேராசிரியரின் துணிவாகும்.

மேலும், அவர் "துண்டு துணுக்குகளாய் இருக்கும் உலகம் நிறை நிலையைத் தெளிந்து, உயிர்பெற்று ஒளிர்வது பாட்டில்தான்" **"ஆதலின் பாட்டு வெறும் பொழுது போக்கன்று, துன்பத்தை விடுக்க உட்கொள்ளும்**

9. மு.கு.நூ. எப்படியோ? பக்.120-129
10. மு.கு.நூ.ப.120

**கள் அன்று; இன்பக் கனவு காண உண்ணும் அபினியும் அன்று. வாடி வதங்கிய நெஞ்சம் அள்ளிக் குடிக்கும் தெள்ளிய நீர். இது கவலை இன்றி உலகினைப் பார்த்துக் களிக்கும் இன்பப் பலகணி. உள்ளத்தினை முழுநிலையில் வைத்து, உலகத்தினையும் முழுநிலையில் காட்டும் உணர்ச்சி விளக்கு"** என்றும் தெளிவுறுத்தியுள்ளார். இதனாலும் அவருடைய நோக்கினை அறிய இயலுகிறது.

பாவலனுடைய அழகை நுகரும் அனுபவம், அவனுடைய பாட்டில் வெளிப்படுவது இயல்பு. "காண்பானும் காட்சியும் வேறு நில்லாது, ஒன்றித்த தனி அனுபவமே பாட்டு. ஆதலின் அனைவர்க்கும் ஒத்த அனுபவமாக அது அமையக்கூடும்... தான் அனுபவித்த அனுபவமே, பாட்டைக் கேட்கின்றவன் மனத்திலும் எழுமாறு செய்துவிடுகின்றான் புலவன். பொருளை அறிவிக்கும் ஆற்றலும், இன்பமூட்டித் துய்ப்பித்து, அனுபவம் ஊட்டும் ஆற்றலும் பொருந்துமாறு படைக்கப்படுவதே, சிறந்த பாட்டு"[11] என்பது பன்மொழிப் புலவரின் கருத்தாகும்.

"பாட்டின் நற்செய்தி" யாது? என்பதை நெஞ்சினைப் பண்படுத்தி, துன்பத்திற்கு ஈடுகொடுக்கும் நிலையில், ஓர் அமைதியை விளைவித்து, இன்ப ஆழத்தில் அழுத்தி, உலகினை அழகுக்கண் கொண்டு, காணச் செய்வதே பாட்டின் பொருளாழமாம்''[12] என்று பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

இந்த விளக்கத்திலிருந்து, தனிநிலையில், அறிவுறுத்துவதாகவோ, இன்புறுத்துவதாகவோ அமைவது பாட்டின் - இலக்கியத்தின் நோக்கமாகாது. இரண்டும் இணைந்தும், இழைந்தும் இயங்குவதே சிறந்த பாட்டாகக் கருதப்பெறும் எனும் உண்மையினைப் பேராசிரியர், நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.

## இலக்கியக் கலைத்திறன்

பாட்டினை ஏரும், எழிலும் பெற்று விளங்குமாறு செய்வதற்குப் பலவகைக் கலைத்திறன்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனை இலக்கிய உத்திகள் எனச் சிலர் சுட்டுவர். ஆனால், இப்பெயர் பொருத்தமானது அன்று. எனவே கலைத்திறன்கள் எனும் சொல்லையே, பயன்படுத்தலாம்.

இலக்கியத்தை அழகுபடுத்துவதை 'அணி' என்று நம் முன்னோர்கள் போற்றினர் 'அணியியல்' என்பது இலக்கியத்தை அழகு படுத்துவதற்குரிய நெறிமுறைகளை விளக்கி உரைக்கும் இலக்கணப் பகுதியாகும். இதனை, வடமொழியாளர் 'அலங்கார சாத்திரம்' என்பர். ஆங்கிலத்தில் 'பாவியல்' (Poetics) என்பர்.

*11. மு.கு.நூ.ப.128*
*12. மு.கு.நூ.ப.129*

தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூலினுள் உவமஇயல், மெய்ப்பாட்டியல் எனும் பகுதிகள், இந்தக் கலைத்திறன்கள் பற்றிய தாக உள்ளதைக் காணலாம்.

கற்பவர் உள்ளத்தைக் கவரும் வகையில் கருத்துகளைக் குறிப்பாகவும், ஒப்பிட்டும், வேறுபடுத்தியும், வேறொன்றாகச் சித்திரித்தும் புனைந்துரைப்பது மரபு. இதனை, உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி முதலிய உவமைகளிலும், நகை, அழுகை போன்ற எண்வகை மெய்ப்பாட்டு வழி வெளிப்படும் இன்பம், சோகம் முதலிய சுவைகளிலும் அணிகளோடு இணைத்துப் பாட்டியற்றுவது நெடுநாளைய வழக்கமாகும்.

இக்காலத்தில், இவை எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகத் தன்னகத்தே அடக்கிக் கொண்டுள்ள இதனை 'இமாஜினேஷன்' (Imagination) என்று கூறுவர். இந்த ஆங்கிலச் சொல்லிற்கு நேரான தமிழ்ச் சொல்லாகக் 'கற்பனை' என்பதையே பெரும்பாலும் பயன் படுத்துகிறோம். இலக்கியக் கலைத்திறன்களில் முதன்மையானது 'கற்பனை' என்பதைக் கருத்தில் கொள்ளுவோமாக.

## கற்பனை

பாட்டின் சிறப்பிற்குத் தேவைப்படுவது கற்பனை உணர்வு. கவிஞனுடைய உள்ளவுணர்ச்சிகளோடு, அறிவுத் திறனும் கலப்பதனால் கற்பனை நலங்கனிந்த கவிதை பிறக்கிறது.

'கவிதைக்கு உயிர் உணர்ச்சி; உடல் கற்பனை; உடை ஒலிநயம்' என அறிஞர் கூறுவர். கலைகளின் சிறப்பிற்கு இன்றியமையாப் பண்பாக இருப்பது கற்பனை. கவிதைக்குப் பொலிவூட்டுவது கற்பனை; புலன்கள் நேராக ஒரு பொருளை நுகராத பொழுதும்; அந்தப் பொருளை நினைவிற்குக் கொண்டுவந்து, அந்தப் பொருளிடத்து மீண்டும் துய்க்கும் அனுபவத்தை ஏற்றவல்ல ஆற்றலாக அமைவதே கற்பனை. ஐம்புலன்களால் உணர இயலாத புறவியல் சார்பான பொருள்களைக் கருத்தியல் வடிவங்களாக மாற்றும் இயற்கை ஆற்றலே கற்பனை.

"நம் பேராசிரியர் 'கற்பனை' எனும் இலக்கியக் கலைத்திறனைக் கம்பனில் கற்பனை நலம்''[13] எனும் கட்டுரையில் விரிவாக விளக்கியுள்ளார்.

"கற்பனை என்பது 'க்லுப்' என்ற அடியில் இருந்து பிறப்பது. இது தக்க, செய்து முடித்த, விளைவாகிய, குறித்த போக்குடைய முதலிய பொருள்களைக் குறிக்கும். ஏதோ, ஒரு நோக்கத்திற்குத் தக்க அல்லது

13. இரு நாடகங்கள், பக்.151-168

நோக்கத்தை விளைவிக்க அல்லது செயல்படுத்த ஓர் ஒழுங்காக அமைப்பதே கற்பனையாகும்” என்பது பேராசிரியரின் கருத்தாகும்.

இவருடைய கருத்துப்படி, ‘கற்பனை’ எனும் சொல் வடமொழிச் சொல்லாகும். ஆனால், இக்கால வடமொழிவாணரும், மொழியியல் அறிஞரும் நாம் கூறும் பொருளில், ‘கற்பனை’ (Imagination) எனும் சொல் வழங்கப்படுவது இல்லை என்பர். கற்பனை எனும் இலக்கியக் கலைத்திறனைப் பொருத்தமாக எடுத்துரைப்பதற்குச் சமஸ் கிருதத்தில் சரியான சொல் இல்லை. இதனோடு ஒருபுடை ஒற்றுமை உடைய உத்பிரேட்சை என்னும் சொல்லால், வடமொழிவாணர் இதனைச் சுட்டுவர். தமிழில் வழங்கும் ‘கற்பனை’ என்னும் சொல் தனித்தமிழ்ச் சொல். கற்பித்தல் எனும் பொருள் தரும். ‘கல்’ எனும் வேர்ச் சொல்லடியாகப் பிறந்ததே தமிழ்ச்சொல். எனவே, பேராசிரியர் ‘க்லுப்’ எனும் வடமொழிவேர்ச் சொல்லைக் கொண்டது, ‘கற்பனை’ என்று கூறுவதை இக்கால அறிஞர்கள் - சிறப்பாகக் கற்பனையைப் பற்றி ஆராய்ந்தவர்கள் உடன்படுவது இல்லை.

## வேறு பெயர்கள்

கற்பனைக்குத் தமிழில் வழங்கும் வேறு பெயர்கள் ‘ஒரு கருத்தானது, பெறும் தனிப்பெருங் கோலமே, இத்தகைய படைப்பாகும். இவ்வாறு பொருந்தக் கூறும், புனைந்து, ஒப்பநாடி, ஓர் ஒழுங்காக அமைப்பதே கற்பனையாகும். இவ்வாறு ஓர் ஒழுங்குக் கோலத்தில், அமைப்பதால், இதனைப் ‘புனைந்துரை’ என்றும், கற்பனை என்றும், ‘அலங்காரம்’ என்றும் வழங்குவர்”[14] என்பது பேராசிரியர் தரும் விளக்கமாகும்.

இவரே, மிகச் சுருக்கமாகக் ‘கற்பனை’ என்பதை ‘மனக்காட்சி’ எனவும் கூறலாம்” என்று தெளிவுறுத்தியுள்ளார்.

## கற்பனையின் வகை

பொதுவகையாகக் கற்பனையைப் பின்வருமாறு பேராசிரியர் பாகுபடுத்தியுள்ளார். உண்மைக் கற்பனை (Imagination) போலிக் கற்பனை (Fancy) என்பன அப்பாகுபாடு. இது மிகவும் அடிப்படையான பாகுபாடு. சொல்லோவியங்களைத் தீட்டிக் காட்டும் ஆற்றல் உடையது உண்மைக் கற்பனை. இதற்கு எடுத்துக்காட்டாகப் பசிப்பிணி மருத்துவன், ‘பேசும் பொற்சித்திரம்’ என்னும் இலக்கிய வழக்குகளைக் காட்டலாம். எண்ணத்தை உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வெளிவரச் செய்து, இணைத்துக் காட்டும் திறனுடையது ‘போலிக் கற்பனை’ அல்லது ‘வெறுங் கற்பனை’ எனப்படும். ‘சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பெய்தது போல்’ என்பது ‘போலிக் கற்பனை’யாகும்.

14. *மு.கு.நூ.பக்.152*

உண்மைக் கற்பனையைச் சிறப்பாக ஆராய்கின்ற நிலையில், அதனை நான்கு வகையாகப் பேராசிரியர் வகுத்துக் காட்டுவர். அவை படைப்பு நிலைக் கற்பனை, நினைவூட்டுக் கற்பனை, கூட்டுநிலைக் கற்பனை, தொனிநிலைக் கற்பனை என்பனவாகும்.[15]

இவற்றை 'படைப்பு நிலைக் கற்பனை' (Creative Imagination) என்பதனைப் 'படைப்புக் கற்பனை' எனவும், 'நினைவூட்டுக் கற்பனை' (Associative Imagination) என்பதனை 'இயைபுக் கற்பனை' எனவும், 'கூட்டு நிலைக் கற்பனை' (Interpretative Imagination) என்பதைக் கருத்து விளக்கக் கற்பனை எனவும் 'தொனிநிலைக் கற்பனை' (Auditory Imagination) என்பதனைச் 'செவிப்புலக் கற்பனை' எனவும் இக்காலத் திறனாய்வாளர் கூறுவர்.[16]

இவற்றைப் பேராசிரியர் விளக்கியுள்ள பாங்கினைக் காண்போம்.

'படைப்பு நிலைக் கற்பனை' என்பது பல இடங்களில் நிகழ்ந்ததை, ஓரிடத்தில் நிகழ்வனவாகப் பொருத்திக் காட்டுவதாகும். இதுதான், புலனெறி வழக்கு. அடுத்து நினைவூட்டுக் கற்பனை என்பது ஒழுங்கில்லாத காட்சிகள், நினைவுகளின் குப்பையாக உள்ளவற்றை, ஓர் ஒழுங்கிற்குட்படுத்திப் படைத்துக் காட்டுவது. இது 'கூட்டு நிலைக் கற்பனை' என்பதாகும். இதனை 'இயைபுக் கற்பனை' எனக் கூறுவதும் பொருந்தும்[17] என்பது பன்மொழிப்புலவரின் கருத்தாகும். கூட்டுநிலைக் கற்பனை, கருத்துகளைத் தொகுத்து விளக்குவதாகும். இதனைக் 'கருத்து விளக்கக் கற்பனை' எனும் பெயரால் சுட்டுவது பொருந்தும்.

இந்த மூன்று வகைக் கற்பனைக்குள், எல்லா வகையான அணிகளையும் அடக்கி விடலாம். இம்மூவகை பலருக்கும் தெரிந்த ஒன்றே. இவற்றைப் பின்னணியாகக் கொண்டு, கம்பனுடைய படைப்புகளைப் பேராசிரியர், இக்கட்டுரையில் தெளிவுறுத்தியுள்ளார்.

## தொனிக் கற்பனை

அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள், மேற்கண்ட மூன்றுடன், தொனிக் கற்பனை என்று ஒன்றைப் புதியதாகச் சேர்த்துக் கூறியுள்ளார்.

இதனைச் செவிப்புலக் கற்பனை (Auditory Imagination) என அணிமைக் காலத் திறனாய்வாளர் கூறுவர்[18] இத்தகைய ஒரு

15. மு.கு.நூ.பக்.154. 158; இப்பாகுபாட்டின் முதல் மூன்றினை வின்செஸ்டர் எனும் ஆங்கிலேய அறிஞரின் இலக்கியத் திறனாய்வின் சில கொள்கைகள் எனும் நூலில், காணலாம்.

16. க.த.திருநாவுக்கரசு, திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், பக்.51-53.

17. மு.கு.நூ.பக்.157-166.

18. க.த.திருநாவுக்கரசு, மு.கு-நூ.. பக்.53-54.

கற்பனையைத் தமிழில், முதன் முதல் புகுத்தியவர் எடுத்துரைத்தவர் நம் பேராசிரியர்.[19]

இதைப் போன்ற ஒன்றை ஆங்கிலத்தில் டி.எஸ்.எலியட் எனும் கவிஞரும் திறனாய்வாளருமான அறிஞர், எடுத்துரைத்துள்ளார்.[20]

இந்த அறிஞர் கற்பனையைக் காட்சிக் கற்பனை (Visual Imagination) எனவும், கேள்விக் கற்பனை' எனவும் வகைப்படுத்தி யுள்ளார். 'கேள்விக் கற்பனை'யைச் செவிப் புலக் கற்பனை எனச் சுட்டுவதே பொருந்தும். இதனைப் பேராசிரியர் 'தொனிக் கற்பனை' எனச் சுட்டுகிறார். தமிழ் அகப்பொருள் மரபில், இறைச்சி எனும் இலக்கியத்திறன், குறிப்புப் பொருள் பயப்பதாகப் பேசப்படுகிறது. இதனைத் தொனிப் பொருள் பயப்பது எனவும், சில நிலைகளில் தொனிக் கற்பனை எனவும் சுட்டுகின்ற வழக்கு இருந்து வருகிறது. எனவே, இதனால் உண்டாகக் கூடிய மயக்கத்தைப் போக்கவே, 'செவிப் புலக் கற்பனை' எனும் தொடரை இந்த ஆய்வாளன் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே பயன்படுத்தியுள்ளான். மேலும் 'ஆடிட்ரி' (Auditory) எனும் ஆங்கிலச் சொல்லிற்குரிய பொருளைத் தருவது 'செவிப்புலன்' எனும் சொல்லேயாகும்.

கவிதைக்கு உடல் போன்றது கற்பனை என்பதனை முன்னரே கண்டோம். அவ்வுடலின் உறுப்புகளாக உள்ளவை சொற்கள். சொற்களோ எழுத்துகளால் அமைந்தவை. எழுத்துகளோ ஒலிவடிவம், வரிவடிவம் எனும் இரண்டு இயல்புகளை உடையன. எழுத்துகளைக் கொண்டு, சொற்களைப் படைத்து, அவற்றை ஓர் ஒழுங்குமுறைப் படுத்துகின்றபொழுது, அதில் இழும் எனும் ஒலிநயம் - இசை - சந்த இன்பம் எழுகிறது. இவ்வொலி நயம், பொருளில் இருந்து விலகிநிற்பது அன்று. பொருளொடு இயைந்து நிற்பது. சிறந்த பாட்டுகளில், ஒலிநயம் துள்ளுநடை போடுவதை உணர்ந்து மகிழ்கிறோம்.

இத்தகைய ஒலிநயத்தை, செவிப்புலனால் நாம் உணருகிறோம். இதனையே 'செவிப்புலக் கற்பனை' என டி.எஸ்.எலியட் சுட்டுவர்.[21]

தமிழில், இதனை எதுகை, மோனை, அந்தாதித்தொடை முதலிய செய்யுள் உறுப்புகளும், திரும்பத் திரும்ப ஒரே சொல், குறித்த ஒரு பொருளையே பயக்கும் நிலையில் அமையும் நிரனிறை அணி, முரண் அணி, தீவக அணி எனும் பொருளணிகளும், அந்தாதி, விற்பூட்டு, நிரோட்டகம் எனும் சொல்லணிகளும் இச்செவிப்புலக் கற்பனையால் அமைவன.

---

19. தெ.பொ.மீ., மு.கு.நூ.பக்.167-169.
20. T.S. Eliot, The use of poetry and the use of Criticism P.P.118-119.
21. Auditory Imagination.

இதை முதன்முதல், தமிழில் புகுத்தியவர் நம் பேராசிரியர். கம்பர் 'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர்' எனவும், 'உறங்குகின்ற கும்பகர்ண' எனவும் தொடங்கும் பாடல்களை, இதற்குச் சிறந்த காட்டுகளாகத் தந்துள்ளார். இதை விரிப்பின் பெருகும்.

## படிமம்

கற்பனையில் முதிர்ச்சி நிலை'யில் கருத்தோவியங்களும், சொல்லோவியங்களும் கவிஞனால் படைக்கப்படுகின்றன. இவற்றைச் சென்ற நூற்றாண்டு வரையில் உருவகம் எனும் பேராலேயே சுட்டிவந்தனர்.

சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாவில் படிமவியல் (Imagery) இயக்கம் தோன்றியது. அதன் விளைவாகப் பழைய பாணியில் கவிதை இயற்றும் நிலை மாறியது. புதிய முறையில், புதிய நோக்கில் புதுமையான கவிதைகளைப் படைக்கலாயினர். இதனை, இலக்கிய உலகில் தோன்றிய 'புரட்சி' என, நம் பேராசிரியர் கூறுவது வழக்கம்.

"இப்புரட்சியின் அடிப்படையை அறிய இத்தகையோருடைய புரட்சி முரசினைக் கேட்பது அல்லது மேனாட்டில் இந்த வழியிலே பாவாணரிடையே படிமக் கொள்கை (Imagination) என்பது, ஒரு புரட்சிக் கொள்கையாகத் தோன்றியது. இக்கொள்கையினர், இதனை விளக்க ஒரு திட்டத்தினை வெளியிட்டனர். அவை கவிதைகளில், சரியான சொல், புதுச் சந்தம், புதுமைப் பொருள், கருத்தின் பிழம்பு, தெளிவு விளக்கம், நிகழ்காலம், சமகால உணர்வும் சிந்தனையும், பாவம், அங்கதப் போக்கு, மனித வாழ்க்கையே மையம் எனும் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே புதுக்கவிதை இயற்றப்பட வேண்டும் என்று அறிவித்தனர்.[22]

இந்த இயக்கத்தினரே, இமேஜ் (படிமம்) எனும் சொல்லையும், இமேஜரி (படிமவியல்) எனும் சொல்லையும் பயன்படுத்தினார். இந்த 'இமேஜ்' எனும் சொல்லைப், பலர், பலவாறாகத் தமிழாக்கம் செய்துள்ளனர். பிரதிமை, உருவகம், கருத்தியல் வடிவம், சொற்சித்திரம், கருத்தோவியம், சொல்லோவியம் என்பன அவற்றுள் சில. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் 1957-இல் கலைக்கதிரில் 'பாட்டிலே புரட்சி' எனும் சொல்லையும் பயன்படுத்தினார். 'இமேஜ்' என்பதற்குப் 'படிமம்' எனும் சொல்லையும் இமேஜரி எனும் சொல்லுக்குக் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, தமிழ்த் திறனாய்வு உலகில், 'படிமம்' எனும் கலைச் சொல்லே, பெருவாழ்வு பெற்று வருகிறது. பலவகை நோக்குடைய இலக்கிய விமர்சகர்களும் ஒப்ப ஏற்றுக் கொள்ளும் இந்தச் சொல்லைப் படைத்துக் கொடுத்த பெருமை பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரையே சேரும்.

---

*22. பாட்டிலே புரட்சி, பக்.20-29.*

இலக்கியத்தில் இடம்பெறும் 'சொற் சித்திரங்களே' படிமங் களாகும். பாரதியாரின், 'பேசும் பொற்சித்திரம்', 'ஆடி வரும் தேரும்', 'மாம்பழக் கன்னம்' போன்றவையும், 'பாவேந்தரின் குடும்ப விளக்கு', 'பாடி வரும் நிலா', 'உலகப்பன்', 'பழம் பஞ்சாங்கம்' போன்றவையும் படிமங்களே.

இக்கால, இலக்கியத் திறனாய்வில் சிறப்பிடம் பெற்றுள்ள 'படிமம்' எனும் சொல்லையும், அதன் கொள்கையையும் தமிழில் புகுத்திய முதற் பெருந்தமிழறிஞர் தெ.பொ.மீ. அவர்களே ஆவார்.

## நனவோடை உத்தி

பல்வேறு இலக்கியக் கலைத் திறன்களிலே, இந்நூற்றாண்டில் படைக்கப்பட்ட சிலவற்றுள், நனவோடை உத்தி என்பது சிறப்பு மிக்கது. இது உளவியல் சார்பானது. மனிதனுடைய எண்ணங்கள், எவ்வாறு அவனுடைய உணர்ச்சிகளோடு பின்னிப் பிணைந்து செயற்படுகின்றன என்பதனைப் புலப்படுத்துவதற்கு ஸ்டிரீம் ஆஃப் கான்சியஸ்னஸ் (Stream of Consciowsness) எனும் தொடர் மொழியை ஆங்கிலத்தில் பயன்படுத்தினர். இந்த உத்தியைப் பெரிதும் புதினங்களின் கதைப் போக்கிற்கே பயன்படுத்தி வருகின்றனர்.

1956 அளவில், இந்த உத்தியையே முழுமையாகக் கையாண்டு, ஜேம்ஸ் ஜாய்ஸ் (James Joyce) எனும் படைப்பாளர் 'யூலிசிஸ்' (Ulyssess) எனும் உலகப் புகழ்வாய்ந்த மாபெரும் புதினத்தைப் படைத்தார். டிராய் நகரப் போருக்குப் பிறகு, கடலில் எங்கெங்கோ புயலால் பாதிக்கப்பட்டு அலைந்து, திரிந்து, பன்னிரண்டு ஆண்டுகள் கழித்துத் தன்னுடைய தீவுக்குத் திரும்பிய கிரேக்க மாவீரன் டிலிசிஸ் என்பவன் ஆவான். இவனைத் தலைவனாகக் கொண்டு, ஹோமர் என்னும் கிரேக்கக் கவிஞன், ஒடிசி (Odyssey) எனும் புகழ்மிக்க காப்பியத்தைப் படைத்துள்ளார். இதனை யாவரும் அறிவர்.

ஜேம்ஸ் ஜாய்ஸ், இதில் ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளார். மனித மனம் இந்த உலக வாழ்க்கையில் சிந்திச் சீரழியும் அலைச்சலையே, இவர் 'யுலிசிஸ்' என்று உருவகப்படுத்தியுள்ளார். கதைத் தலைவனின் 'மனவோட்டத்தை' ஓயாது எழுப்பும் எண்ண அலைகளை, 'நனவோடை' எனும் உத்தியைப் பயன்படுத்திப் படைத்துள்ளார். இந்தப் புதினம், நம் பேராசிரியர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து இருக்கிறது.

மக்களுடைய மனவோட்டத்திறகு ஏற்பப் புதினங்களின் போக்குகளும் மாற்றமுறுகின்றன. இந்த முறையில் புதினங்கள் பெருவாழ்வு பெற்று வருகின்றன. அவை, மனித மனத்தின் இயல்புகளை நுட்பமாகப் புலப்படுத்த முயலுகின்றன.'' மனித உள்ளத்தின் குமுறல்களையும், போராட்டங்களையும் உள்ளடக்கி எண்ணங்கள் ஒன்றோடொன்று முட்டியும் மோதியும் வெளிப்படுகின்றன.

அந்நிலையில் அடி மனத்தில் தங்கிவிட்ட ஆசைகளும், நிறைவேறா எண்ணங்களும், வெளிப்படுத்த இயலாத் துன்பங்களும் பீறிட்டு வெளிக்கிளம்ப முயலுகின்றன. அவரவர் நினைவில் தொடர் புடையவையே இவ்வாறு தாவிக் குதிப்பது போலத் தோன்று கின்றன. எதிரே, புலனாகும் பொருள்கள், இந்த நினைவோட்டத்தை மடக்கிக் கொண்டு தமக்குத் தொடர்பு கொண்ட பழைய நினைவுகளையோ, உணர்வுகளையோ நினைப்பூட்டி விடும். கற்பனையின் திருக்கூத்தும் இங்கு உண்டு. பழைய நினைவுகள், புதிய உணர்வுகள், கற்பனை என்று மூன்றன் வழியே நோக்கினால், குரங் காட்டத்திலும் பொருளாழம் இருப்பக் காண்கிறோம்.[23] இந்த நிலையில் தொடர்ந்து எழும் எண்ணப் பெருக்கையே 'நனவோடை' என்பர். இந்த உத்தியை 'நினைவோடை' எனச் சுட்டுவர். இதனைப் பெரிதும் கதைகளில் இக்காலப் படைப்பாளர்கள் பயன்படுத்து கின்றனர்.

இந்த உத்தியைப் பற்றித் தமிழில் முதன் முதல் எழுதியவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரேயாவர்.

'ஸ்டிரீம்' எனும் ஆங்கிலச் சொல்லை, 'ஓடை' எனவும், 'கான்ஷியஸ்னஸ்' எனும் ஆங்கிலச் சொல்லை, 'நனவு' (நினைவு) எனவும் தமிழாக்கம் செய்து, 'நனவோடை' எனும் கலைச் சொல்லைப் பேராசிரியர் படைத்துள்ளார். இந்தச் சொல்லே, இன்று வழக்கில் இருந்து வருவது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

## பாத்திரப்படைப்புத் திறனாய்வு

காப்பியங்களில் இடம் பெறும் தலைமைப் பாத்திரங்களைப் பற்றி மட்டுமல்லாமல் துணைப்பாத்திரங்களைப் பற்றியும் பேராசிரியர் அப்பாத்திரத்தின் முக்கியத்துவம் வெளிப்படுமாறு நயமுறத் திறனாய்வு செய்துள்ளார். சிலப்பதிகார மாந்தராகிய கண்ணகி, கோவலன் பாத்திரப் படைப்பைப் பற்றிப் பேராசிரியர் திறனாய்வு செய்துள்ளதை, குடிமக்கள் காப்பியம் எனும் நூலில் காண்கிறோம். அதே நூலில் தேவந்தி எனும் பாத்திரம் பற்றிய திறனாய்வு புதுமைப்பொலிவோடு விளங்குகிறது.

இதைப் போன்றே இராமாயணக் கதைப் பாத்திரங்களின் திறனாய்வுகளும் வலிவும் பொலிவும் உடையனவாகப் பேராசிரி யரால் எழுதப்பட்டுள்ளன.

## ஒப்பிலக்கிய ஆய்வு

தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வினை வ.வே.சு.ஐயர் தொடங்கி வைத்தார். நம் பேராசிரியர், வடமொழி நூல்களோடும், ஆங்கில இலக்கியங்க

23. 'நனவோடை நாவல்', பாட்டிலே புரட்சி, பக்.66-67.

ளோடும் தமிழிலக்கியங்களை - சிறப்பாகத் திருக்குறளையும், கம்பராமாயணத்தையும் - ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இந்த வகையில், விருப்பு வெறுப்புக்கு இடமின்றி, நடுவுநிலையில் நின்று, உண்மை காணும் நோக்கொடு அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் தம்முடைய ஒப்பாய்வுப் பணியைச் செம்மையாகவும் சிறப்பாகவும் செய்துள்ளார்.

இவ்வாறு, நம் பேராசிரியர் பலவகையிலும், தமிழிலக்கியத் திறனாய்விற்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் அரும் பணியாற்றி உள்ளார்.

இயல் 4

# இலக்கியக் கொள்கையாளர்

# இயல் - 4

## தமிழ் இலக்கியக் கொள்கையின் தந்தை

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இலக்கிய ஆராய்ச்சி யாளராகவும், திறனாய்வாளராகவும் சிறப்புற்று விளங்கியதை முந்தைய இயல்களில் விரிவாகக் கண்டோம்.

இந்த இயலில், தமிழில் இலக்கியக் கொள்கையைப் பற்றி, முதன்முதல் சிந்தித்த அறிஞர் தெ.பொ.மீ. என்பதனை, அவருடைய ஆய்வுரைகளைக் கொண்டு நிலைநாட்ட முயலுவோம்.

### இலக்கியம்

'இலக்கியம் என்பது யாது?' என்பதனை ஓரளவிற்கு விளக்கி யுள்ளோம். ஆயினும், அவை முடிந்த முடிபு அல்ல. காலத்தின் தேவைக்கும், அறிஞர்களின் மனப்போக்கிற்கும் ஏற்ப, இலக்கியம் பற்றிய சிந்தனை வளர்ந்து கொண்டே வருகிறது. வளர்ச்சி என்றால், சிற்சில மாற்றங்களாகிலும் இருக்கும் அல்லவா?

பண்டைத் தமிழ்ச் சான்றோர், 'செய்யுள்', 'பா' எனும் சொற்களா லேயே இலக்கியத்தைச் சுட்டினர்.

"பலவகைத் தாதுக்களால் (மூலப்பொருள்) உண்டாக்கப்பட்டு, உயிரைத் தாங்கி நிற்கும் உடலைப் போல, பல சொற்களால் பொருளுக்கு இடனாக, உணர்வினில் வல்லோர் அழகுறச் (அணி) செய்வது செய்யுள்" எனும் பொருளினை

> **"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல**
> **சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினில்**
> **வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"** (நன்னூல் 268)

என்னும் பவணந்தி முனிவரின் நூற்பா நவில்கிறது. பலவகையான தாதுக்களால் அமைந்தது நம் உடல். அது உயிர்க்கு இடமாக இருப்பது. இதைப் போல, பலவகைச் சொற்களினால் விழுமிய பொருளினுக்கு இடமாக அமைத்து, நயமிகு செய்யுளை - இலக்கியத்தை - உணர்வில் வல்லவராக - உணர்ச்சிப் பெருக்கும் படைப்புத் திறனும் உடையவராக விளங்குவோர் படைப்பதாகும் என்பது இதன் விளக்கமாகும். இந்த

நூற்பாவில் உள்ள 'உணர்வின் வல்லோர்' எனும் தொடர் பலவகைப் பொருளைத் தருவதாகும். உணர்ச்சித் துடிப்புடையோர், 'அறிவில் தெளிவு உடையோர்', 'கற்பனையுணர்வு வாய்க்கப் பெற்றோர்' எனப் பலவாறாகப் பொருள் கொள்ளலாம்.

இந்த வரையறை, செய்யுளுக்குத் தரப்பட்டது. எனினும், பொதுவாக பாவினால், படைக்கப்படும் இலக்கியங்களுக்கு மட்டும் அல்லாமல், உரைநடையால் அமைந்துள்ள இக்கால இலக்கியங் களுக்கும் பொருந்துவதாகும்.

இதுவரையில் நாம் கண்ட இலக்கிய விளக்கங்களோடு, இதன்யும் சேர்த்துக் கருதுவோமாக.

## இலக்கியக் கொள்கை

இலக்கியம் பற்றிய கொள்கை இலக்கியக் கொள்கை எனப் போற்றப்படுகிறது. இங்குக் கொள்கையைப் பற்றிப் புரிந்து கொள்ளத் துடிக்கிறோம். வாழ்க்கையில் சிறந்தவை, உயர்ந்தவை எனப் போற்றப்படும் கருத்துகளை, நெறிமுறைகளை, கைக்கொண்டு கடைப்பிடித்து ஒழுகுவோமானால், அப்பொழுது அது கொள்கை யாக ஊற்றம் பெறுகிறது. 'கைக்கொள்ளப்படுவது கொள்கை' எனச் சுருக்கமாகக் கூறலாம். இந்த அடிப்படையில் இலக்கியம் பற்றி, இலக்கிய வாணர்களால் சிறப்புமிக்கனவாகக் கொள்ளப்படும் கருத்துகளும், நெறிமுறைகளும், நோக்கங்களும் சேர்ந்த ஒரு தொகுதியையே 'இலக்கியக் கொள்கை' என உலகம் போற்றுகிறது.

'இலக்கியக் கொள்கை' (Literary Theories) எனும் ஆங்கிலமொழித் தொடரைப் படைத்துத் தந்தவர் டாக்டர் ரெனே வெல்லக் (Rene Wellek)[1] அறிஞராவர். இந்நூற்றாண்டின் முப்பதுகளில் இந்தப் பொருள் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி, கடந்த ஐம்பது ஆண்டுக் காலத்தில், இப்பொருள் குறித்து நுட்பமான ஆராய்ச்சியை அவர் தொடர்ந்து செய்துள்ளார். அவருடைய மாபெரும் முதற்பெரும் படைப்பு 'இலக்கியக் கொள்கை' (Literary Theories) எனும் நூலேயாகும்.

"இலக்கியம் தோன்றுவதற்குரிய உந்துதல் சக்திகள் யாவை, இலக்கியத் தோற்றம் எவ்வாறு அமைகிறது? இலக்கியப் படைப்பாளன் எவ்வாறு, எந்த நோக்கொடு இலக்கியத்தைப் படைக்கிறான்?"[2] என்பன இலக்கியக் கொள்கையின் அடிப்படை. அடுத்து "குறிப்பிட்ட ஓர் இலக்கியத்தின் பண்புகள் யாவை? கூறுகள் யாவை?" என்பனவற்றைப்

1. Rene Wellek is the first writer who wrote a book called, the theory of Literature in 1941.
2. Rene Wellek, The concepts of criticism, P.142.

பகுத்தும், தொகுத்தும், விளக்குவது இலக்கியக் கொள்கையின் மூன்றாவது நிலையாகும்.[3]

"ஓர் இலக்கியத்தின் பாடுபொருள்கள் எவ்வாறு, அதனுடைய காலத்தின் தேவையை நிறைவேற்றுகின்றன? அல்லது சமகாலச் சார்பில்லாமல் வேறுபட்டு விளங்குகின்றன?" என்பதை விளக்குவது இலக்கியக் கொள்கையின் நான்காம் பகுதியாகும்.

குறிப்பிட்ட ஓர் இலக்கியத்தின் வடிவமும் கட்டமைப்பும் எவ்வாறு அமைகின்றன? எதற்காக அந்த வடிவில் அமைக்கப் படுகின்றன? அந்த அமைப்பின் கூறுகள் யாவை? பயன்பாடு யாது? அந்த அமைப்பின் - வடிவின் - நிறைகுறைகள் யாவை? அந்தவடிவை உருவாக்கப் படைப்பாளன் பயன்படுத்தியுள்ள கலைத்திறன்கள் யாவை? என்பனவற்றைத் தெளிவுறுத்துவது இலக்கியக் கொள்கை யின் ஐந்தாம் பகுதி.

ஓர் இலக்கியம் அடைந்துள்ள பரிணாம வளர்ச்சியும், புதிய வடிவங்களும், கிளைகளும் தோன்றுவதற்குரிய காரணங்களும், புதுமைச் சிந்தனை, புதிய வடிவம் ஆகியவற்றால், அந்த இலக்கிய வளர்ச்சி எவ்வாறு சிறக்கிறது? என்பதனை அறிவுறுத்துவது இலக்கியக் கொள்கையின் ஆறாம்படி நிலை எனலாம். இதனை இலக்கிய வகை பற்றிய ஆராய்ச்சி எனவும் கருதலாம். இது, தனிப்பட்ட நிலையில் செய்யத்தக்கது. ஆயினும், இந்த எண்ணப் போக்கோடு ஓர் இலக்கியத்தின் வகையை ஆராய முயலுவது இலக்கியக் கொள்கையின் ஒருவகை அணுகு முறையாகும்.

அறுவகைக் கூறுகளை உடையது இலக்கியக் கொள்கை என்பதைக் கண்டோம். இதனை இரத்தினச் சுருக்கமாகக் கூறவேண்டுமானால், இலக்கியத்தின் தோற்றம், அமைப்பு, பண்பு, வடிவம், வகை எனும் ஐந்து கூறுகளையும் ஒட்டு மொத்தமாக ஆராய்ந்து, பல அரிய உண்மைகளைத் தெளிவுறுத்தும் இலக்கியக் கல்வியின் முடிந்த பயனாக விளங்குவதே இலக்கியக்[4] கொள்கை எனலாம்.

## இலக்கியக் கொள்கையும் இலக்கியத் திறனாய்வும்

'இங்குச் சிறப்பித்துப் பேசப்படுகின்ற இலக்கியக் கொள்கைக்கும் முந்தைய இயலில் விளக்கப்பெற்ற 'இலக்கியத் திறனாய்விற்கும் என்ன வேற்றுமை?' எனும் எண்ணம் எழலாம். இலக்கியக் கொள்கை என்பது, இலக்கியத்தைப் பற்றிய முறைப்படுத்தப்பட்ட சிந்தனை. இலக்கியத் திறனாய்வு என்பது ஓர் இலக்கியப் படைப்பின் பயன்மதிப்பை (values) சீர்தூக்கிப் பார்த்து, மதிப்பிடுவது. அதாவது 'இது தரமான படைப்பா

3. Theory of Literature PP 2-3.

4. ரெனே வெல்லக், இலக்கியக் கொள்கை, பக்.48-49.

அல்லது தரங்குறைந்த படைப்பா?' என்பதனை ஆராய்ந்து வெளிப்படுத்துவது. இதுதான், இவை இரண்டிற்கும் இடையே காணப்படும் தலையாய வேறுபாடு. இலக்கியத்தை நிறைவான ஒரு முழுமைப் பொருளாகப் பார்ப்பது இலக்கியக் கொள்கை. இலக்கியத்தின் பல்வேறு கூறுகளையும், இயல்புகளையும் தனித்தனியாகப் பிரித்தெடுத்து, அவற்றின் இனங்கண்டு, ஏற்றத்தையோ தாழ்ச்சியையோ தெளிவுறுத்துவது திறனாய்வு. வேறுவகையாகச் சொல்லுவதானால், புதுமைப் பொலிவுடன் மலர்ந்து மணம் பரப்பும் தாமரை மலரை, ஓர் உவமையாக இலக்கியத்திற்குக் கூறலாம். அந்த மலரை, முழுமையாகக் கண்டு, அதன் அழகிலீடுபட்டு, நுகர்ந்து மகிழ்வதைப் போன்றது இலக்கியக் கொள்கை.

தாமரை மலரினைப் புற இதழ், அக இதழ் என வெவ்வேறாகப் பிய்த்து எடுத்து, மலரின் நடுவில் இருக்கும் பொகுட்டில் பொதிந்து கிடக்கும் மகரந்தத் தூளை மோந்தும், அதில் ஊறும் தேனைச் சுவைத்தும் மகிழ்வதைப் போன்றது இலக்கியத் திறனாய்வு.

இலக்கியத் திறனாய்வு ஒருவகைப் பகுப்பு ஆய்வு. இலக்கியக் கொள்கையோ ஒருவகைத் தொகுப்பு இணைப்பியக்க ஆய்வு. ஆனால், இவ்விரு முறைகளுக்கும் தேவைப்படுவது தற்சார்பற்ற மனப்போக்கு என்பதை மறத்தலாகாது.

இதனை "இலக்கிய நெறிகள் வகைகள், அடிப்படை நிலைகள் ஆகியவை பற்றிய கல்வி இலக்கியக் கொள்கை எனப்படும். இலக்கிய நெறிகள், படைப்புகள், வகைகள், அடிப்படை நிலைகளைக் கற்கத் தூண்டுவது இலக்கியக் கொள்கை. இலக்கியக் கலைப்படைப்பை நயமுணர்ந்து கற்பது இலக்கியத் திறனாய்வு. இலக்கியக் கொள்கை என இந்நூல் கொள்ளுவது ஓரளவிற்கு இலக்கியத் திறனாய்வோடும் இலக்கிய வரலாற்றோடும் தொடர்பு உடையது"[5]

தொல்காப்பியனாரும் அரிஸ்டாடிலும் இலக்கியக் கொள்கையாளர் களாகவே காட்சி தருகின்றனர். ஆனால், வ.வே.சு. ஐயரும், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனும் இலக்கியத் திறனாய் வாளராகவே புகழ் பெற்றுள்ளனர்.

## தமிழிற்குப் புதிதா?

'இலக்கியக் கொள்கை' எனும் கருத்தோட்டம் தமிழிற்குப் புதியதா? இந்நூற்றாண்டிற்கு முன்னர் இருந்தது இல்லையா?' எனும் ஐயம் எழலாம். பேரளவிற்கு இந்தச் சிந்தனை நமக்குப் புதியதே யாகும்.

நம்முடைய செய்யுளியல், மரபியல், மெய்ப்பாட்டியல், உவம இயல் எனும் தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதிகள் அனைத்தும்,

5. ரெனே வெல்லக், இலக்கியக் கொள்கை, மு.கு.நூ.ப.44.

சேர்ந்து செய்யுளைப் பற்றித் தெரிவிப்பன யாவும் இலக்கியக் கொள்கைக்கு உரியனவாகும். இலக்கியத்தின் அமைப்பு, வடிவம், வகை, கலைத் திறன்கள் போன்றவை, ஒரு 'கலவையாக' மேற்கண்ட தொல்காப்பியப் பகுதிகளில் சிதறுண்டு காணப்படு கின்றன.

பிற்காலத்தில் யாப்பிலக்கண நூல்கள் பேரளவிற்கு இலக்கிய வடிவத்தைப் பற்றிப் பேசுகின்றன; பாட்டியல் நூல்களில் இலக்கிய அமைப்பு, நிலை, வகை என்பன பேரளவிற்கு எடுத்துரைக்கப் படுகின்றன. இவற்றோடு, சிறிதளவு இலக்கிய வடிவத்தைப் பற்றியும் பாட்டியல் நூல்கள் பேசுகின்றன. ஆனால், இந்நூல்களின் பல்வேறு கருத்துகளையும் ஒருங்கு திரட்டி, வகைப்பாட்டோடு முறைப்படுத்தி அமைத்தால்தான், நாம், நம் இலக்கியங்களைப் பற்றிய ஒருவகைக் கொள்கையைப் பெற இயலும்.

எனவே, நம்மிடையே, இலக்கியக் கொள்கைகளைப் பற்றிய கருமுதல்களே பரவலாகச் சிதறுண்டு உள்ளன எனக் கூறினால், அது தவறாகாது.

இந்தக் கண்ணோட்டத்தில் காணுகின்ற பொழுது, இறுகப் பிணைக்கப்பட்ட கட்டமைப்பு உடையதாய், படிப்படியாகக் கொள்கைகளை விரித்துச் செல்லும் மேற்கு நாடுகளின் இலக்கியக் கொள்கை நமக்குப் புதிய வரவேயாகும் எனக் கூறுவதனால் உண்டாகக் கூடிய மானக்கேடு ஒன்றும் இல்லை.

## பேராசிரியரின் முன்னறிதிறன்

கல்லூரிப் படிப்பின் பொழுது, ஆங்கில இலக்கியத் திறனாய்வை ஆர்வத்தோடு கற்றவர் நம் பேராசிரியர். பிறகு கிரேக்க, இலத்தீன், சமஸ்கிருத இலக்கியங்களையும் ஆங்கிலத்தின் வாயிலாக, இவர் ஆழமாகக் கற்க முயன்றுள்ளார். காளிதாசனின் படைப்புகள், பாசருடைய படைப்புகள் முதலியவற்றைச் சமஸ்கிருதப் புலவர் களிடம் அறிஞர் தெ.பொ.மீ. பாடமும் கேட்டுள்ளார்.

மொழியாராய்ச்சியில் பேரீடுபாடு கொண்ட காலத்திலேயே, இவர் இலக்கியத் திறனாய்விலும் கருத்தைச் செலுத்தியுள்ளார்.

நம் தமிழ் இலக்கியங்களின் அமைப்பையும் அழகையும் மேற்கு நாட்டு அறிவொளியில் ஓரளவு கண்ட பேராசிரியர், நம் நாட்டுச் சிந்தனைப் போக்கில் அவற்றின் அருமை பெருமைகளைக் கண்டறிந்து, உலகிற்கு உணர்த்த முயன்றுள்ளார். நம் மூதாதையர் கொண்டுள்ள எண்ணங்களைத் தொகை வகைப்படுத்தி ஆராய்ந் தால், நம்முடைய இலக்கியங்களுக்கு நம்முடைய நாட்டுச் சிந்தனை யின் அடிப்படையில் சுதேசிய முறையில் - இலக்கியக் கொள்கையை உருவாக்க வேண்டும் எனும் ஆர்வம் மேலோங்கி நின்றது; அந்த நிலையில், பிற

தமிழறிஞர்கள் கனவில் கூட நினைத்துப் பாராத புதிய துறையில், முதன் முதலாக நம் பேராசிரியர் ஐம்பதுகளிலேயே 'பரிசோதனை' முயற்சிகள் சிலவற்றைச் செய்தார். இம் முயற்சியில், ஐயா அவர்கள் வெற்றியும் பெற்றார். ஆனால், ஒரேவொரு குறையுண்டு. தனித் தனிக் கட்டுரை களாகப் பலவகை இலக்கியக் கொள்கைகளை வெளியிட்டுள்ளார். ஆனால், அவற்றைத் தொகுத்து, ஒரு நூலாக வெளியிடவில்லை. எனினும், தமிழ் இலக் கியங்களுக்கு முதன்முதல் இலக்கியக் கொள்கையை உருவாக்கியவர் அறிஞர் தெ.பொ.மீ. என்பதனை யாரும் மறுக்க இயலாது. எனவே, அவரைத் 'தமிழ் இலக்கியக் கொள்கையின் தந்தை' எனப் போற்றுவது பல்லாற்றாலும் பொருந்துவதாகும்.

## தமிழ் இலக்கியக் கொள்கைத் தலைப்புகள்

அவருடைய மணிவிழா மலரிலேயே (1961),

(1) தொல்காப்பியரின் செய்யுள் (இலக்கியக்) கொள்கை

(2) சங்கப் பாடல்களின் (இலக்கியக்) கொள்கை

எனும் இரண்டு ஆங்கிலக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள ஆங்கில நூலில்

(3) தமிழில் நீதிப் பாடல்கள் எனும் கட்டுரை வெளியிடப் பட்டுள்ளது. அதில் 'நீதி இலக்கியக் கொள்கை' கணிசமான அளவிற்கு இடம் பெற்று இருக்கிறது.

மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்த காலத்து, அப்பல்கலைக்கழகத்தின் ஆய்வேட்டில்

(4) பக்தி இலக்கியக் கொள்கை எனும் விரிவான ஆங்கிலக் கட்டுரையை அவர் வெளியிட்டுள்ளார்.

மற்றும் தமிழில் இவர் வெளியிட்டுள்ள பல்வேறு கட்டுரைகளை வகைப்படுத்திக் காணுகின்றபொழுது,

(5) காப்பிய இலக்கியக் கொள்கை

(6) புராண இலக்கியக் கொள்கை

(7) புதுக் கவிதை (இலக்கிய)க் கொள்கை எனும் மூன்று வகை இலக்கியக் கொள்கைகளை நாம் படித்துப் பயன்பெற இயலும் என்பது இந்த நூலாசிரியனுடைய துணிவாகும்.

அடுத்து இவருடைய இலக்கியக் கொள்கையின் நோக்கையும் போக்கையும் காண்போம்.

## 1. தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை

பேராசிரியர் தெ.பொ.மீ அவர்கள் இத்தலைப்பில் இரு ஆய்வுரைகளை வெளியிட்டுள்ளார். முதல் கட்டுரை 'தொல்காப்பியரின் செய்யுள் கொள்கை' என்பதாகும். இது, இவருடைய அறுபத்தோரா வது பிறந்தநாள் விழா மலராக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள பேராசிரியரின் ஆங்கில நூலில் உள்ளது. மற்றொன்று, 1966-இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் இரண்டாவது தொகுப்பில் ஆங்கிலத்தில் உள்ளதாகும்.

இந்த ஆய்வுரை "தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை" எனும் தலைப்பிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இது முந்தைய கட்டுரையை விடச் செறிவானது; விரிவானது; பலவகைப் புதிய கருத்துரைகளை எடுத்துரைப்பதுமாகும்.

இவ்வாய்வுரை பொதுக் கொள்கை, சரிபார்த்தலில் உள்ளடங்கியுள்ள கொள்கை, அவற்றின் சிறப்பியல்புகள் எனும் பகுதிகளை உடையதாக அமைக்கப்பட்டு இருக்கிறது. 'பொதுக் கொள்கை' எனும் தலைப்பில், இலக்கியக் கொள்கை பற்றிய அறிமுகம் இடம் பெற்று இருக்கிறது. தொல்காப்பியம், முழுமையாக இல்லா விட்டாலும், அதன் சில பகுதிகளாகிலும் தமிழில் உள்ள மிகப் பழைய நூலாகும். அதில் பேச்சு மொழிக்கும், இலக்கிய மொழிக்கும் இடையே வேறுபாடு உள்ளதை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். 'செய்யுள்' எனவும் 'வழக்கு' எனவும் சுட்டும் ஆசிரியர் செய்யுளில் இலக்கிய வழக்கையே சுட்டுகிறார். பேச்சு மொழியில் மட்டும் அல்லாமல், எழுத்து மொழியிலும் இந்த வேறுபாடு இருப்பதை இந்நூல் புலப்படுத்துகிறது.

இதன் மூலம், இலக்கியம் படைப்பதற்குப் பின்பற்றப் படுவதற்குரிய மரபுகள், கோடிகாட்டப்படுகின்றன. அம்மரபுகள் இலக்கண வடிவங்களில் மட்டும் அல்லாமல், இலக்கிய வடிவிலும், பாடுபொருளிலும், அமையும் பாங்கினைத் தொல்காப்பியனார் தெளிவுறுத்தியுள்ளார். ஆயினும், இலக்கியப் படைப்பில் இலக்கியச் சொற்கள், வழக்குச் சொற்கள், வட்டார வழக்குச் சொற்கள் அயல் மொழிச் சொற்கள் எனப்படும் 'செய்யுள் ஈட்டச் சொற்கள், இடம் பெறும்.

அடுத்து இலக்கியத்தில் இடம் பெறும் பாடுபொருள் அகம், புறம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அகப்பொருள் பாடல்களில் யாருடைய இயற்பெயரையும் சுட்டக்கூடாது என்பது அடிப்படையான அகப்பொருள் இலக்கிய மரபாம். இதிலிருந்து இலட்சிய அல்லது முழு நிறைவான பண்புகளையுடைய ஆணையும் பெண்ணையுமே கதைப்பாத்திரங்களைப் போல அகப்பொருள் இலக்கியம்

பயன்படுத்துகிறது எனும் செய்தி, புலனாகிறது. இது தனிமனிதனுடைய வாழ்க்கை வரலாற்றை, அடிப்படை நோக்கிலும் அனைத்துலக நோக்கிலும் சித்திரிக்கிறது.

இது அகப்பொருள் இலக்கியத்தின் உள்ளே பொதிந்துள்ள ஆன்மாவாகும். பலதிறப்பட்ட கதைப் பாத்திரங்களின் மூலமும், இயற்கைப் பின்னணியின் மூலமும், வரலாற்று அடிப்படையிலும், பன்முக நோக்கில் அகப்பொருள் பாடல்களின் உள்ளே அமைந் துள்ள 'கருமுதலை' வெளிப்படுத்துகிறது. பாடலும், காணப்படும் சுவரில் அமைந்துள்ள வண்ணம். அவை தனித்தனியே, முழுமையான இந்த அண்டத்தைச் சிறு பார்வையின் மூலம் பிரதிபலிக்கிறது; தனி மனித நோக்கில் அண்டத்தையும், மண்ணுலகையும் பிரதிபலிக்கும் அழகிய பனித்துளி எனக் கூறலாம். இவ்வாறு, இலட்சிய நிலைப்படுத்தப்பட்ட காதல், காதலையும் கடவுளையும் ஒன்றெனவே அடையாளம் காட்டுவதற்குத் தொல்காப்பியருக்குப் பேருதவியாக அமைந்தது எனலாம். தனிப்பட்ட மனிதரின் காதல் ஏக்கங்களும் வேட்கைகளும் பொதுநிலைப்படுத்தப்பட்டு, அனைத்துலகப் பண்பாக மாற்றப் பட்டுள்ளமை அகப்பொருள் பாடல்களின் சிறப்பியல்பாகும். புறப்பொருள் பாடல்களோ, பலதிறப்பட்ட தனிமனிதரின் அனுபவத்தைத் தன்னுணர்ச்சியை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இந்த அனுபவத்தைக் காலவரன் முறைப்படுத்தியோ, வரலாற்று மாந்தர்களுடையதாகவோ இனங்கண்டு கூறமுடியும். இதனால், இப்பாடல்கள் அனைத்துலகப் பண்புகளைப் பெறாதவை எனக் கருத வேண்டா. தனி மனிதருடைய அனுபவம், இப்பாடல்களில், உயர்நிலையில் பொதுமைப்படுத்தப் பட்டு, அனைத்துலக இயல்பைப் பெறுமாறு செய்யப்பட்டுள்ளன.[6]

'தொகை நூல்கள்' எனும் தலைப்பில், இந்தப் பாட்டுகளின் ஒரு புதுமையான சிறப்பியல்பு இங்குக் கருதப்படுவதற்குரியதாகும். இப்பாடல்கள் யாவும் 'நாடகத் தனிநிலைக் (Monologue) கூற்றுகளாக உள்ளன. அகம், புறம் பாடல்களின் பல்வேறு பண்புகளில் தொல்காப்பியர் சில பண்புகளைக் கணக்கிட்டுக் காட்டுகிறார். அவற்றை 'விளக்கச் சூழ்நிலைகள்' எனச் சுட்டலாம். எனவே, அக்காலத்தில் கதைப் பாடல்களோ, காப்பியங்களோ தமிழில் தோன்றவில்லை. இது, தொல்காப்பிய இலக்கியக் கொள்கையின் முக்கியமான இயல்பு எனக் கூறலாம். அக்காலத்தில், தனிப் பாடல்களே இயற்றப்பட்டன. அவை நாடக முன்னிலைக் கூற்று களாகவே உள்ளன.

'தொகை நூல்கள்' என்பன குழுப் பாடல்களின் அமைப்பை உடையன. இதனால், சங்கப் பாடல்கள் தலை சிறந்த குழுப் பாடல்

6. Tamil Literature The Theory of Cankkam Poetry, Collected papers, PP 64-70

(Chorus) களாக விளங்குகின்றன. இவற்றை நாட்டுப் பாடல்களாகக் கருதுவதற்கு இயலாது. எனினும், இவற்றுள் குழுப் பாடல்களின் தன்மை மேலோங்கி நிற்கிறது.[7]

## இலக்கிய மரபுகள்

செய்யுளியலின் இறுதிப் பகுதியில் தொல்காப்பியர் கூறும் 'எண்வகை வனப்பு', ஒருவகையான 'கிளத்தல்' (Narrative) பாடல்கள் இருந்திருக்க வேண்டும் எனும் எண்ணத்தை எழுப்புகின்றது. மற்றும், மக்களின் பேச்சு மொழியில் சிற்சில இலக்கியங்கள் படைக்கப் பட்டமையும் தெரிய வருகிறது. செய்யுளும் உரையும் கலந்து ஒருவகை இலக்கியமும் அக்காலத்தில் படைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவற்றால், கிளத்தல் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அக்காலத்தில் பெருவழக்காக விளங்கிய 'நாடகத் தனி நிலைக் கூற்றாகிய' தனிப் பாடல்களுக்கே தொகைப் பாடல்களுக்கே தொல்காப்பியர் முதன்மைச் சிறப்பினை அளித்துள்ளதாகக் கூறலாம்.[8]

தொல்காப்பியனார் இலக்கியத்தின் உயிராகச் சுவையுணர்வை (மெய்ப்பாட்டின் விளைவு)க் கருதுகிறார். உவமையை மையமாகக் கொண்ட இலக்கிய அணிகளைச் சிறப்பிப்பதில் இருந்து, தொல்காப்பியனாரின் இலக்கியக் கொள்கையில் கற்பனை எனும் இலக்கியக் கலைத்திறன் சிறப்பிடம் பெற்றுள்ளதை அறிய இயலுகிறது. இதையொட்டி, மறைமுகப் பொருளை உணர்த்தும் உள்ளுறை யுவமமும், குறிப்புப் பொருளை உணர்த்தும் உள்ளுறையும் இறைச்சியும் விளக்கப்படுகின்றன. இவை தொல்காப்பியனாரின் இலக்கியக் கொள்கையில் இடம் பெற்றுள்ள கலைத் திறன்களில் முதன்மை யானவையாகும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு இருந்து தமிழில் வளர்ந்து வந்துள்ள சிறப்புமிகு இலக்கிய மரபாக இவற்றைக் கூறலாம். அல்வழிப்புணர்ச்சித் தொகைகளும், வேற்றுமைத் தொகைகளும் குறை வாக்கியங்களாக அமைந்து, பாட்டின் நயத்தை மேம்படுத்துவதோடு, வீறார்ந்த நடை அமைப்பிற்கும் உறுதுணையாக அமைகின்றன என்பது பேராசிரி யரின் கருத்தாகும். 'செய்யுளியற்றுவதில் அமைந்துள்ள இலக்கியக் கொள்கையின் உள்ளார்ந்த இயல்புகள்' எனும் இரண்டாம் பகுதியில் யாப்பு இலக்கணத்தின் வழிப்பட்ட அவற்றின் அமைப் பையும், வடிவையும் தொல்காப்பியனார் தெளிவுறுத்தியுள்ளார்.

தொல்காப்பியனாரின் 'செய்யுட் கொள்கை'யை, உறுப்பியக் கொள்கை (Organic Theory) எனப் பேராசிரியர் சுட்டியுள்ளார். உறுப்புகள் முப்பத்து நான்கினைக் கொண்டது செய்யுள் என்று கூறும்முகத்தான், தொல்காப்பியனார், செய்யுளை 'உறுப்பியமா'கக்

7. மேற்படி
8. மேற்படி

(Organism) கொள்ளுவது புலனாகிறது. இந்த முப்பத்து நான்கு உறுப்புகளை, வடிவம் பற்றியவை, பாடுபொருள் பற்றியவை என இருவகையாகப் பிரிக்கலாம். வடிவம் என்பது செய்யுள் வடிவத்தை மட்டும் குறிப்பதாகக் கருதாமல், ஒலியியல் வடிவம் (Phonetic Structure), பொருளனியல் (Morphomic Structure) வடிவம் எனும் இரண்டையும் கருத்தில் கொண்டே, செய்யுளின் உறுப்புகளைத் தொல்காப்பியனார், தொகுத்துக் கூறியுள்ளார். அவை (1) எழுத்தொலிகள் அல்லது ஒலியன்கள் (எழுத்து), (2) கால அளவு (மாத்திரை), (3) அவற்றின் இணைப்பால் உண்டாகும் அசை (4) இவ்வசைகள் பலவகையில் மாறிமாறி இணைந்து அமையும் சீர், (5) சீர்கள் பலவகையாக ஒருங்கு இயைந்து உண்டாக்கும் அடிகள், (6) செய்யுள் அடிகளும் இலக்கண நெறியும் இயைந்து அமையும் யாப்பு, (7) சொல்லாட்சி வழக்கு எனப்படும் மரபு (8) அடிப்படைச் செய்யுள் தொனி அல்லது அடிப்படைச் செய்யுள் பண்களால் அமையும் தூக்கு, (9) எண்ணற்ற மாலை போன்ற யாப்பு இணைப்புகளை வார்ப்புகளால் எதுகை, மோனை ஒத்திசைவால் அமையும் ஒலிநயம் ஆகிய தொடை, (10) இவை எல்லாம் இணைந்து தாமாகவே செய்யுளின் குறித்த ஒரு கருத்தை அல்லது எண்ணத்தை அடக்கி நிற்பது அல்லது விளக்கி நிற்பது ஆகிய நோக்கு, (11) பாவின் வார்ப்புகள் அல்லது தமிழ் மொழியின் நிலையானதும் இயல்பானதுமான பலவகை மரபுச் சொற்களின் கலப்பு நிலையால் அமையும் பாவகை, (12) செய்யுளின் பரிமாணம் அல்லது நீளத்தைக் குறிக்கும் அளவு (13) பெருந்தன்மையை நாடும் இலட்சியப் படைப்பாகத் திகழும் மனிதவினத்தின் நடத்தையாகிய திணை, (14) அவர்களுடைய பல திறப்பட்ட செயற்பாடுகளின் முக்கியப் போக்குகள், (15) பேசுபவரின் கூற்றே பாவாக அமைதல், (16) யாரை முன்னிலைப்படுத்தி பா சொல்லப்படுகிறதோ அதைக் கேட்போர், (17) கவிதையின் நிலைக்களனாகிய இடம் எனப்படும் களம், (18) கவிதையின் நிலைக்களனாகிய பொழுதினைப் புலப்படுத்தும் காலம் (19) பாவின் விளைவால் ஈடேறும் இலட்சியமாகிய பயன், (20) அதில் குமிழிட்டு வெளிப்படும் உணர்ச்சிக் கனிவு அல்லது உணர்ச்சிக் கொந்தளிப்பு (21) கூற்றினாலும் குறிப்பினாலும் எஞ்சி நின்று பின் கொணர்ந்து முடிக்கப்படும் இலக்கணத்தொடு பொருந்தியது எச்சம். (22) செய்யுளைக் கேட்போன், இவ்விடத்து தோன்றியே இம்மொழியைச் சொல்லுதற்கு (23) அவற்றின் உள்ளே பொதிந்துள்ள பரந்துபட்ட பொருண்மையுடைய பொருள், (24) செய்யுளின் கவிதைத் தன்மையைப் புலப்படுத்தும் துறை, (25) கடந்ததையும், எதிர்ப்படுவதையும் இணைத்துப் பொருள் நயம் காணும் மாட்டு, (26) செய்யுளுடைய ஒலிநயத்தின் சந்த வேறுபாடு (வண்ணம்), (27) எட்டுவகைச் செய்யுள் முகப்புகள் அல்லது கவிதைப் படைப்பின் எட்டுவகைப் பாடல் நெறிகள் என்பன தொல்காப்பியர் கண்ட செய்யுளின் உறுப்புகளாகும். இந்த உறுப்புகள் ஒன்றாகச் சேர்ந்து அமைந்துள்ள உறுப்பியே

(Organism) செய்யுள் என்பது தொல்காப்பியனாரின் கருத்து.[9] இதிலிருந்து, இலக்கியத் தோற்றம் பற்றிய 'உறுப்பியக் கொள்கையை' (Organic Theory) நம் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் உருவாக்கியுள்ளார். இவருக்கு முற்பட்ட காலத்திய எந்தத் தமிழ் அறிஞரும், இந்த நோக்கில் தமிழ் இலக்கியப் படைப்பைப் பற்றி ஆராயவில்லை என்பது இங்குக் கருதத் தக்கதாகும்.

## செய்யுள் உறுப்புகளின் சிறப்பியல்புகள்

இதுவரையில் குறிப்பிடப்பட்ட செய்யுள் உறுப்புகளை மேற்போக்காகப் பார்த்தால், தெளிவில்லாக் கருத்துக் குவியலாகத் தோன்றும். ஆனால், கூர்ந்து நோக்கி, பொறுமையாகப் பகுப்பாய்வு செய்து, அவற்றை வகைப்படுத்திக் காண்போமானால், தொல்காப்பியரின் இலக்கியம் பற்றிய உறுப்பியக் கொள்கை தெளிவாகப் புரியும் எனப் பேராசிரியர் நம்புகிறார்.[10]

அறிஞர் டி.எஸ். எலியட் கூறும் செவிப்புலக் கற்பனைக்கும், பேராசிரியர் ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் அறிவித்துள்ள சொல்லாட்சி மரபும், அவற்றின் சிறப்பும், தொடர் மொழிக் கோவையும் ஒன்றாக இணைந்து ஓர் 'உறுப்பியத்தை' உருவாக்கும் யுக்தியினையும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியனாரின் செய்யுட் கொள்கையில் நாம் காணுகின்ற பொழுது வியப்பு உண்டாகிறது.[11] இவ்வகையில், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை, அவருடைய சமகால உலகச் சிந்தனைகளில் இருந்து வேறுபடுகிறது; முற்போக்குச் சிந்தனையும், புதுமைப் பொலிவும், காலம் கடந்து வழிகாட்டும் பேராற்றலும், நுட்பமான பகுப்பாய்வுத் திறனும் உடையதாக விளங்குவதைக் காணுகின்றோம்.

## (2) சங்க இலக்கியச் செய்யுள் கொள்கை

தமிழில் உள்ள பழம் பேரிலக்கியம் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாகும். இந்தச் சங்கப் பாடல்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கையைப் பற்றி நம் பேராசிரியர், 1952-இல் ஆங்கிலக் கட்டுரையாக வெளியிட்டுள்ளார்.[12]

ஐயா அவர்கள் மறைவதற்கு முன்பு, சங்க இலக்கியக் கொள்கையைத் தமிழில் விரிவாகத் தெளிவுறுத்தியுள்ளார்கள். ஆனால் அவர் இறந்தபிறகு, அதனை வெளியிட்டவர்கள். தமிழ் இலக்கிய வரலாறு சங்க காலம் எனும் தவறான - பொருத்தமில்லாத தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார்கள். ஆங்கிலக் கட்டுரையை இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்வோம்.[13]

---

*9, 10, 11. மு.கு.நூ.பக். 64-70*

*12. மு.கு.நூ. பக்.64-70*

*13. அந்தத் தமிழ் நூலினை, இலக்கிய ஆராய்ச்சியாளர் எனும் தலைப்பில் விரிவாக முன்னரே பார்த்துவிட்டோம்.*

முதலில் சங்கம் பற்றிய பல்வேறு கருத்துகளைச் சீர்தூக்கிப் பார்த்து, முடிவாகப் பிற்கால (இடைக்கால) அறிஞர்கள் தங்களுடைய கால இலக்கியங்கள் தரங்குறைந்து வருவதைக் கண்டு மனம் வருந்தி, இப்படி (சங்கம்) ஓர் அமைப்பு இருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணியேங்கிய நிலையில் 'புலவர் கண்ட கனவே', சங்கம் பற்றிய கதைகளாக இருத்தல் கூடும்[14] எனும் கருத்தை வெளியிட்டுள்ளார்கள். ஆனால், இந்தக் கருத்தைப் பிற்காலத்தில் மாற்றிக் கொண்டுள்ளார்கள் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.[15]

அடுத்துத் 'தொகை' எனும் சொல்லின் பொருளை ஆராய்ந் துள்ளார்கள். தாமாகவே, தம் விருப்பத்திற்கு இணங்கப் புலவர்கள் ஒன்றாகக் கூடி, தமிழாராய்ந்த பொழுது, போற்றிய இடத்திற்கு அமைப்பிற்குத் 'தொகை' எனும் பெயர் முதன்முதலில் வழங்கி இருக்கலாம் எனும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதன் பிறகு 'சங்கம் என்பது' பட்டி மன்றமாக இருந்திருக்க இயலுமா எனும் எண்ணத்தை வெளியிட்டுள்ளார். மேலும் ஒருபடி மேலே சென்று, பல்லவர் காலத்திய காஞ்சி கடிகைகளைப் போன்றோ, வட இந்திய நாளந்தாப் பல்கலைக்கழகம் போன்ற ஓர் அமைப்பாக இருந்திருக்க இயலுமா? எனப் பலவாறாகச் சிந்தித்துப் பார்க்கிறார் நம் பேராசிரியர்.

## தனிச் சிறப்பியல்புகள்

சங்க கால இலக்கியத்தின் தனிக்கொள்கைகளாக அறிஞர் தெ.பொ.மீ. பின்வருவனவற்றைச் சுட்டுகிறார்:

*(1) சங்கப் பாடல்கள் யாவும் தனிப் பாடல்களாக - உதிரிப் பூக்களாக உள்ளன. (2) ஓர் உணர்ச்சியை, ஒரு நிகழ்ச்சியை ஒவ்வொரு பாட்டும் சித்திரிக்கின்றன. (3) ஒவ்வொரு பாட்டும், நாடகத் தனிநிலைக் கூற்றாக உள்ளமை சிறப்பியல்பாகும். (4) பொருள் தொடர்நிலைச் செய்யுள்களோ, காப்பிய அமைப்புகளோ அக்காலத்தில் படைக்கப்படவில்லை (5) தனிப் பாட்டுகள் யாவுமே அகம் அல்லது புறம் எனும் பொருள் பற்றிய பாடல்களாகவே உள்ளன (6) பாடல்கள் யாவும் வடிவால் சிறுபாட்டு, குறும்பாட்டு, நெடும்பாட்டு எனச் சொல்லத்தக்கனவாக உள்ளன. முப்பத்தோர் அடியளவுடைய பாடல்களும், கலித்தொகை எனும் நீண்ட பாட்டுகளும் செய்யுள்களாகவே கருதப்பட்டன. (7) இசைப்பாட்டு வகையான பரிபாடல் புதுமையானது (8) பத்துப் பாட்டுத் தொகையில் உள்ளனவற்றைப் பாட்டு எனப் போற்றுவதற்கு அதன் நீண்ட, நெடும்*

14. A History of Tamil Literature PP 18-20
15. T.P.M., Tamil-A Bird's Eye view, PP 3-15.

வடிவமே காரணமாகக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். (9) அரிய உவமைகளும், படிமங்களும் அமைந்த பாடல்களை இயற்றிய புலவர்களுக்கு, அந்த உவமை, உருவகம், படிமம் அமைந்துள்ள தொடர்களையே அவர்களுக்குப் பெயர்களாகச் சூட்டும் மரபு (10) மூவேந்தர் ஆட்சி அமைப்புகளால் பிளவுபட்டிருந்த தமிழகத்தில் - சேர, சோழ, பாண்டிய நாடு என்று வழங்கிய நாடுகளைக் கொண்ட இந்தத் தென்னாட்டைத் 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்று மொழிவழித் தேசிய ஒருமைப்பாட்டு ணர்வை ஊட்டுவன சங்கப் பாடல்கள் (11) உலகின் பிறபகுதிகளில் பண்டைக் காலம் தொட்டு மாபெரும் கவிஞர்களான காளிதாசன், கம்பன், ஷேக்ஸ்பியர், விர்ஜில், தாந்தே எனும் தனி மனிதர்களின் கவித்திறனையே வெளிப்படுத்தும் படைப்பு இலக்கியங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் சங்கப் பாடல்களில் பாட்டியற்றிய பாவலனுடைய ஆளுமை காணப்படுகிறது. ஆனால் படைப்பு வேறு, படைத்த புலவன் வேறு எனப் படைப்பாளனுடைய ஆளுமை பிளவுபட்டு நில்லாமல், தனிப்பட்ட நிலையில் தோன்றாமல், அவனுடைய படைப்பிலேயே இணைந்தும் இழைந்தும் வெளிப் படுவது சங்கப் பாடல்களின் தனிச் சிறப்பாகும். எல்லாப் புலவர் களின் ஆளுமையும் ஒருங்கு திரண்டு, பரந்துபட்ட கடலின் அலை கள் வேறுபட்டு நில்லாமல், கடலில் கடலோடு கலந்து நிற்பதைப் போலச் சங்கப் பாடல்களில் புலவர்களின் ஆளுமை திரண்டு காணப்படுகிறது. திரட்சி பெற்றுத் தோன்றுகின்றன. உலகப் பெருங் கவிஞர்களுடைய பெயர்கள் எல்லாம், அவர்கள் படைத்துள்ள படைப்புகளின் பரிமாணத்தால் - பருமை அளவாய் பெற்ற பெருமையாகவும், புகழாகவுமே கருதப்படுகின்றன. ஆனால், சங்க காலத் தமிழ்ப் புலவர்களின் பெயரும், புகழும், அவர்கள் இயற்றிய சிறிய, குறுகிய, நெடுமையான தன்னுணர்ச்சிப் பாடல்களாலேயே நிலைபெற்று வாழுகின்றன. அவர்களுடைய படைப்பு ஆற்றலும், முதன்மைத்திறனும், கற்பனை வளமும் உணர்ச்சிச் செறிவும், அனைத்துலகக் கண்ணோட்டமும் எத்துணைச் சிறப்புடையதாக இருந்தாலும், அவை எல்லாம் வெளிப்பட்டு விளங்குவதற்கு நிலைக்களனாக உள்ளவை 'லிரிக்' (Lyric) எனப்படும் தனிப் பாடல்களேயாகும் என்பது இங்குக் கருதத்தக்கதாகும். இத்தகைய கவிஞர்களே தம் இனத்தின் கிளைமொழியைத் தூய்மைப் படுத்துபவர்கள், இத்தகைய கவிஞர்கள் செஞ்சொற் கவியின்பம் பயக்கும் கவிதைகளை, செவிநுகர் கனிகளான இனிய இழும் ஒலியோடு சிறப்புற்றிலங்கச் செய்கின்றனர் ஆனால், கவிதையின் பாடுபொருளையும், அக்காலத்திய நாட்டு மக்களின் மொழியையும், பேச்சுரையையும் புதுப்பிக்கின்றன. அவர்கள் பயன்படுத்தும் இலக்கியத் திறன்களைப் புத்தாக்கம் செய்கின்றனர் தங்கள் சமகாலத்தவருக்குக் குறிப்பாகப் பல உண்மைகளை உணர்த்து கின்றனர் தங்களுக்குப் பின்னர் வரக்கூடியவர்களுக்கு அந்த மொழியில் உள்ள புதிய திறன்களையும், கவிதை வெளிப்பாட்டிற்குரிய புதிய

வழிவகைகளையும் அவர்கள் கோடி காட்டுகின்றனர் என்று போற்றியுள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும்.[16]

சங்கப் பாடல்களின் மற்றொரு சிறப்பியல்பு (12) அவை எல்லாம் குழுப் பாடல்களாக உள்ளமையாகும். நாட்டுப்புறப் பாடல்களும், பழமொழிகளும் குழுப்பாடல்களாகப் பாடப்படுவதோடு, தனி நிலையில் புலவர் பெயர் அறியப்படாதனவாய், சமுதாயப் பாடல்களாக - அம்மொழி பேசும் மக்களின் சமுதாயப் பாடல்களாகவே போற்றப் படும். சங்கப் பாடல்கள், பண்பாட்டு நிலையில் மிகவுயர்ந்தனவாக விளங்குவதால், அவற்றை நாட்டுப்புறப் பாடல்கள் எனக் கருத இயலவில்லை. எனினும், அதன் தோற்றம் ஒரு தனிச் சமுதாயச் சூழ்நிலைப் பின்னணியாகக் கொண்டு ஒரு நாட்டினத்திற்குரிய பண்புகளை வீறுடன் எடுத்தியம்பும் தேசியப் பாடல்களாக உள்ளதை மறுக்க இயலாது.

இந்தப் பின்னணியில் நோக்குகின்ற பொழுது, சங்கப் பாடல்களைத் 'தொகை' எனவும் 'குழுப்பாடல்' எனவும் சமுதாயப் பாடல் எனவும் கருதுவதற்குரிய அடிப்படை எனலாம். இது சங்க இலக்கியக் கொள்கையின் ஆணிவேராக அமைந்துள்ளது.[17]

சங்க இலக்கியக் கொள்கையின் சாரத்தைப் - பிழம்பினை - இது வரையில் கண்டோம். இவ்வாறு சங்க இலக்கியக் கொள்கையைப் பேராசிரியர் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே, அரிதின் முயன்று தெளிவுறுத்தியுள்ளார். அவருடைய மாணாக்கர் ஒரு சிலரைத் தவிர, தமிழுலகம் இன்னும் இவற்றைப் புரிந்து கொண்டதற்குரிய அறிகுறிகள் ஒன்றையும் இதுவரையில் வெளி வந்துள்ள சங்க இலக்கிய ஆராய்ச்சி நூல்களில் காண இயலவில்லை என்பது வருந்தத்தக்கதாகும்.[18]

## (3) நீதி இலக்கியக் கொள்கை

தமிழின் பெருஞ்சிறப்பிற்குக் காரணமாய் உள்ள இலக்கிய வகை, நீதி இலக்கியங்களாகும். 'அறத்துறை இலக்கியம்' எனும் பெயரே இவற்றிற்கு மிகவும் பொருத்தமாகும். ஆனால், 'நீதி நூல்கள்' என்பதே பலரும் அறிந்து போற்றும் பெருவழக்காகத் தமிழில் இருந்துவருகிறது.

தமிழில் வழங்கும் 'அறம்' என்னும் சொல், மிகவும் விரிந்த பொருள் உடையது. அதற்கு இணையான சொல், இந்திய மொழிகளிலேயே இல்லை. சமஸ்கிருதத்தில் வழங்கும் 'தருமம்' எனும் சொல், வருணாசிரம

16. மு.கு.நூ.பக். 68 - 69.
17. மு.கு.நூ.பக். 69.
18. இங்குக் குறிப்பிடப்பட்ட பத்துக் கொள்கைகளே, அண்மையில் ஐயாவின் நூலாக வெளிவந்துள்ள 'தமிழ் இலக்கிய வரலாறு - சங்க காலம்' எனும் நூலில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தருமத்தையே அடிப்படைப் பொருளாகக் கொண்டது. வேறு பல பொருள்களும் தருமத்திற்குக் கூறப்படுகின்றன. எனவே, 'தருமம்' - வருணாசிரம தருமம் - 'அறம்' என ஒருபுடை ஒற்றுமை கருதி அறத்திற்கு ஓரளவு ஒப்புமையுடைய வடசொல்லாகத் தருமத்தைக் கூறலாம்.

வடமொழியில் 'நீதி' எனும் சமஸ்கிருத மொழிச் சொல், இராச நீதியையே குறித்தது. சுக்கிரநீதி, காமாந்தக நீதி சாத்திரம் எனும் சொற்களில், இவ்வழக்காறு பெற்றுள்ளதைக் காணலாம்.

சமண சமயத்தவர், அறத்தைச் சுட்டுவதற்கு 'தருமம்' எனும் வடசொல்லைக் கடன் வாங்கப் பயந்தனர். அச்சொல்லில், சாதி வேறுபாட்டைப் புலப்படுத்தும் 'வருணாசிரமம்' எனும் பொருளே முதன்மைப் பொருளாக விளங்குவதைக் கண்டு அஞ்சினர். ஆகவே அவர்கள் இச்சொல்லை அறவே வெறுத்தனர். இதனால் சமஸ்கிருதத்தில் அருகிய வழக்காக இருந்த நீதி எனும் சொல்லை கடன் வாங்கி, அதற்கு அறத்திற்குரிய பொருளை எல்லாம் ஏற்றிப் போற்றினர். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஏழாம் நூற்றாண்டுவரை, வட இந்தியாவிலும் நடுஇந்தியாவிலும் சிறப்புற்று விளங்கிய அர்த்தமகதி, அபப்பிரமிலும் முதலான பிராகிருத மொழிகளில், 'நீதி' எனும் சொல்லே, பெருவழக்குடைய சொல்லாகப் போற்றப்பட்டது.

இந்த நிலையில், பௌத்த சமயத்தினர், 'தர்மா' எனும் வட சொல்லைத் திரித்தும், அதன் 'வருணாசிரமம்' எனும் முதன்மைப் பொருளை நீக்கியும், 'தர்மம்' எனும் பாலிமொழிச் சொல்லாகப் படைத்துக் கொண்டனர். இச்சொல்லே, பாலி முதலிய பௌத்த சமயச் சார்புடைய மொழிகளில், பெருவாழ்வு பெற்றன. புத்தர் பெருமானின் காலத்திலேயே (கி.மு.ஆறாம் நூ.ஆ), தம்மம், அறம் எனும் பொருளில் பெருவழக்கிற்கு வந்துவிட்டதைக் காணு கின்றோம்.

பேரரசன் அசோகனுடைய பாட்டனாகிய சந்திரகுப்த மௌரியன் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் தமிழ்நாடு சமணர்களோடு நேரான தொடர்பு கொண்டதை வரலாற்றேடுகள் எடுத்துரைக்கின்றன.[19]

இச்சமயத்தினர், சங்ககாலத் தொடக்கத்திலேயே தமிழரோடு நெருங்கிப் பழகத் தொடங்கியமையால், சமண மொழிச் சொல்லான நீதி, தமிழில் நுழைந்துவிட்டது. அது பேச்சுமொழி வழக்குச் சொல்லாகவே நெடுங்காலம் இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

19. க.த. திருநாவுக்கரசு, தமிழர் நாகரிக வரலாறு - முதற்பகுதி - விடிவெள்ளி, ப.42.

சங்கப் பாடல்களில் 'நீதி' எனும் சொல்லாட்சியைக் காண இயலவில்லை. முதன் முதலாக 'நீதி' என்னும் சொல் திருமூலர் திருமந்திரத்திலும் (கி.பி.ஆறாம் நூ.ஆ), இதற்கு அடுத்து, கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதையிலும் (கி.பி.ஏழு அல்லது எட்டாம் நூ.ஆண்டின் தொடக்கம்) நீதி எனும் சொல் வழங்கத் தலைப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.

இச்சொல், தமிழ்மொழியில் அறத்தின் பல்வேறு பொருள்களை உணர்த்தக்கூடிய மக்கள் வழக்குச் சொல்லாகப் பெருவாழ்வு பெற்றது. இதனால் 'நீதி நூல்கள்' எனும் வழக்குத் தமிழில் நிலைத்து விட்டது.[20]

'நீதி' எனும் சொல் இந்தி முதலிய இந்திய மொழிகளில் 'சந்த்வானி' எனும் சொல்லால் சுட்டப்படுகிறது. நம் பேராசிரியரும் ஆங்கிலத்தில் 'தமிழ் நீதி நூல்கள்' குறித்து விரிவான ஆராய்ச்சியுரை ஒன்றினை வெளியிட்டுள்ளார். அவ்வுரையில் நீதி இலக்கியக் கொள்கையை ஓரளவிற்குப் பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.[21]

சமயத்துறைச் சார்பான இலக்கியங்களில் மெய்யுணர்வு (அனுபூதித் தன்மை) ஒருவகை மேம்பட்ட நிலையை உணர்த்துகிறது. இதைப் போன்று, தமிழ் நீதி நூல்களிலும் ஒருவகை மெய்யுணர்வு பெருக்கெடுத்து ஓடுகிறது எனக் கூறலாம்.

## இருவகை நீரோட்டம்

தமிழ் இலக்கியத்துள் அறநெறிக் கருத்துகள் வலியுறுத்தப்படும் முறையிலும், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள வகையிலும், தனிச்சிறப்பு வாய்ந்த பண்புடையதாகக் காணப்படுகிறது. இதற்குச் சமண-பௌத்த சமயங்கள் தமிழில் பெற்ற செல்வாக்கே காரணம் எனச் சிலர் கூறுவர். ஆனால், இச்சமயங்களின் தாக்கத்தைப் பழந்தமிழ் இலக்கியமான சங்கப் பாடல்களில் காண இயலவில்லை. சங்க காலத்திற்குப் (கி.பி.350) பிற்பட்ட நிலையிலேயே மேற்கண்ட சமயங்கள் தமிழ் மக்களுடைய எண்ணத்திலும், சிந்தனைப் போக்கிலும், தம் முத்திரையைப் பொறித்துள்ளன. பின்னர் சமய மலர்ச்சிக் காலத்திலும் பின்னரும் சமய மெய்யுணர்வு வயப்பட்ட நீதி நூல்கள், ஏராளமாகத் தமிழில் இயற்றப்பட்டுள்ளன. இப் பின்னணியில், தமிழில் உள்ள நீதி நூல்களில், 'அறவியல் மெய் யுணர்வு', 'சமயவியல் மெய்யுணர்வு' எனும் இருவகை நீரோட்டங்கள் பெருக்கெடுத்து ஓடுவது புலனாகின்றது.

---

20. க.த.திருநாவுக்கரசு, திருக்குறள்: நீதி இலக்கியம், பக்16-23. சமஸ்கிருத மொழியில் கி.பி. ஒன்பதாம் நூ.ஆ.விலேயே நீதி எனும் சொல், தருமத்திற்குரிய நேரான சமஸ்கிருதச் சொல்லாகக் கொள்ளப்பட்டது.

21. Collected Papers of Prof. T.P.M.'s 62nd Birth Day, PP 42-60.

தெ.பொ.மீ. அவர்களுடைய நீதி இலக்கியக் கொள்கையைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

(i) சங்கப் பாடல்களில் அறநெறியுணர்வு.

(ii) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் உணர்த்தும் அறவியல் இலக்கியக் கொள்கை.

(iii) இளம் பிள்ளைகளுக்குப் பெரிதும் போதிக்கப்படும் நீதி நூல்களின் இலக்கியக் கொள்கை.

(iv) சித்தர் பாடல்கள் உணர்த்தும் நீதி இலக்கியக் கொள்கை.

(v) சதக நூல்கள் உணர்த்தும் நீதி இலக்கியக் கொள்கை.

(vi) திருக்குறளின் தாக்கம்.

என்பனவாகும்.

## (i) சங்கப் பாடல்களில் அறநெறியுணர்வு

பழந்தமிழ் இலக்கியம், எவ்வாறு காலத்தால் மிகப் பழமை யானதோ, அதைப் போன்றே தமிழருடைய அறவியல் மெய் யுணர்வும் மிகப் பழமையானது எனக் கூறலாம்.

தொகை நூல்களான சங்க இலக்கியத்துள் நாடக முன்னிலைக் கூற்றுகளே பெருஞ்சிறப்பு உடையனவாக விளங்குகின்றன. சங்கப் பாடல்களில் ‘பாடுபொருள்’, ‘அகம்’ எனவும், ‘புறம்’ எனவும் பகுக்கப்பட்டுள்ளன. இவ்விருவகை இலக்கியத்திலும் அறக் கருத்துகள் இடம் பெற்றுள்ளன. எனினும், புறப்பொருள் பகுதியில், அறக்கருத்துகள் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளன. தனி மனிதரின் கடமைகளும் உரிமைகளும் அறக்கருத்துகளாகப் அப்பாடல்களில் பேசப்படுகின்றன. மற்றும், தனி மனிதனுடைய ஆளுமை வளர்ச்சிக்குத் தேவையான நெறிமுறைகள், புறப்பாடல் களில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

வெற்றியைச் சிறப்பிக்கும் ‘வாகை’ எனும் துறை, போர்க்கள வெற்றியையோ, உலக வாழ்க்கையின் வெற்றியையோ சிறப்பாகக் கருதவில்லை. ஆன்மிக விடுதலையையே செம்பொருளைக் காணும் நிலையையே ‘மாபெரும் வெற்றியாகப்’ புறத்திணைப் பாடல்கள் போற்றுகின்றன.

புறப்பொருள் பாடல்களில் இடம் பெற்றுள்ள ‘அறவியல் மெய்யுணர்வு’, இலட்சிய மனிதனாகிய ‘சான்றோனை’ உருவாக்குவதிலேயே கருத்தைச் செலுத்துகிறது. அன்பு நெறிப்பட்ட

அருளற வாழ்வே, சிறப்புமிகு மனித வாழ்வாகப் புறப்பாடல்கள் தெரிவிக்கின்றன. அறம் பற்றிப் பேசுவதே சங்கப் பாடல்களின் முதன்மையான நோக்கமாகத் தோன்றுகிறது.

## (ii) பதினெண் கீழ்க்கணக்கு உணர்த்தும் அறவியல் இலக்கியக் கொள்கை

இந்த இலக்கியங்கள் இயற்றப்பட்ட காலத்தை, 'அறவியல் குறும்பாடல்களின் காலம்' (The Age of Ethical Epigrams) என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.[22]

'கீழ்க்கணக்கு' எனும் பெயர், நீதிநூல்களுக்குத் தரப்பட்டதற்குரிய காரணத்தைப் பேராசிரியர் ஆராய்ந்துள்ளார். அறநெறிக் கருத்துகளைப் போதிக்கும் வெண் (குறும்) பாக்களால் இயற்றப் பட்ட பாடல் தொகுதியை, இப்பெயர் சுட்டுவதாகத் தெரிவித் துள்ளார்.

'முப்பால்' எனும் பெயரில் வழங்கும் ஈரடிக் குறும்பாட்டில் (குறள் வெண்பாவில்), 'திரிவர்க்க' மான அறம், பொருள், இன்பம் பற்றிய தமிழரின் கொள்கைகள் இடம் பெற்றுள்ளன. மனித வாழ்வின் சிறப்பான பயன் மதிப்புகளுக்கு எல்லாம், அறமே அடிப்படை யானதாகக் கருதப்பட்டமை புலனாகிறது.

இலக்கியமும் அறமும் பற்றிப் பேராசிரியர் இப்பகுதியில் தெளிவுறுத்தியுள்ளார். நீதிப் பாடல்களில் கணிசமான அளவிற்குக் கற்பனைக்கு இடம் தரப்பட்டுள்ளது. அறப்பாடல்கள் வெறும் சொல்லடுக்காலான செய்யுள்கள் அல்ல. தெய்வீக அகக் காட்சியும், நயமிகு கற்பனைத் திறனும் பரிசாகப் பெற்றுள்ள சிறப்புமிகு ஆன்மா ஒன்றின் வெளிப்பாடே, நீதிப் பாடல்களாகத் தமிழில் வெளிப்பட்டுள்ளன. இதனால், அவற்றில் அறவியல் மெய்யுணர்வு பொங்கி விழுகின்றது. இவை, மாண்புமிகு அறவாழ்வின் வெளிப்பாடாகவே காட்சி தருகின்றன.

இக்காலத்திய நீதி இலக்கியங்களில், அறமும் பொருளும் போற்றப்பட்ட முறையிலேயே 'காமமும்' வாழ்க்கையின் சிறப்புமிகு ஒரு கூறாகவே கருதப்பட்டது. முறையான பெண் இன்பம் அக்காலத் தில் வெறுக்கப்படவில்லை. பிறர் மனைவியை நாடுதலும், பொது மகளிர் இன்பமுமே, பாவச் செயலாகக் கருதப்பட்டன. பெண் களைப் பிற நிலைகளில் மதித்துப் போற்றும் பண்பு திருக்குறள் முதலான நீதி இலக்கியங்களில் சிறப்பான இடம் பெற்றுள்ளது. 'பெண்ணாகி வந்தது ஒரு மாயப் பிசாசு' எனும் எண்ணப் போக்கு இக்காலத்தில் எழவில்லை. காமத்துப்பால், நாடகத் தனி நிலைக் கூற்றுகளாக இருப்பது, நீதி

22. மு.கு.நூ.ப97.

இலக்கியத்திலும் காணப்படும் சிறப் பியல்பாகும். அறிவுறுத்துவதற்குச் சிறந்த கருவியாக, வெண்பா எனும் பாவகை கொள்ளப்பட்டது. அப் பாவின் ஓசையைச் 'செப்பலோசை' என்பர். உரையாடல் பாணியில் அமைந்த கருத்துத் தெரிவிப்பாகும். பதினெண்கீழ்க் கணக்கு நீதிநூல்கள் பலவற்றுள், அருகில் இருப்பவரை விளித்துக் கூறுவதைப் போல் பாடப் பட்டுள்ளன. அரசனை முன்னிலைப் படுத்தியும் பெண்களை முன்னிலைப்படுத்தியும் விளித்து அறவியல் கருத்து ஒன்றை எடுத்துரைக்கும் நீதி இலக்கிய மரபு, பதினெண் கீழ்க்கணக்கு நூல் களின் காலம் முதல் (கி.பி.நான்காம் நூ.ஆ.) தோன்றி வளர்ந்து வந்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## (iii) சிறு பிள்ளைகளுக்கு அறிவூட்டும் நீதிநூல்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

அறநெறிக் கருத்துகளைச் சிறுவர்களுடைய உள்ளத்தில் ஆழப் பதியுமாறு பசுமரத்தாணி போலப் பதியுமாறு செய்வது நல்லது. அவர்கள் பெரியவர்களாக வளர்ந்த பிறகு அவை அவர்களுக்குப் பயன்படும் எனும் நம்பிக்கையோடு, உலகின் பல பகுதிகளில் இத்தகைய நீதி நூல்கள், பல்வேறு மொழிகளில் இயற்றப்பட்டுள்ளன. சில நேரங்களில், அவற்றில் முதியோர்க்கும் புரிய இயலாத சில உயர்ந்த கருத்துகளும், சிக்கலான கருத்துகளும் இடம் பெற்று விடுவது உண்டு. இந்த ஒரு காரணத்தினால், இவற்றைச் சிறு வருக்காக இயற்றப்பட்ட நீதி நூல்கள் அல்ல என ஒட்டு மொத்தமாக மறுத்துவிடுவது பொருத்தமற்ற செயலாகும்.

கி.பி.பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு சங்க இலக்கியக் கல்வி அருகத் தொடங்கியது. மற்றும், பிறமொழியாளருடைய பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் தமிழ்ச் சமுதாயத்தில் நுழைந்து விட்டன. இதன் விளைவாகக் குழப்பம் பாமர மக்கள் இடையே தோன்றியது. அதாவது பண்பாட்டு நிலையில் தமிழ்ச் சமுதாயம் பல வழிகள் சந்திக்கும் கூட்டு வழிகள் நிறைந்த ஒரு கட்டத்தை அடைந்தது. அந்த நிலையில் எந்த வழியாகச் சென்றால் - வாழ்க்கையை அமைத்துக் கொண்டால், வாழ்க்கையைத் துன்பம் இல்லாமல் நடத்த இயலும் எனும் மனக் குழப்பம் உண்டாயிற்று.

இதைக் கண்ட சமுதாய உணர்வு வாய்ந்த அறிஞர்களான புலவர்கள் 'நல்வழியை' - நன்னெறியைக் காட்ட முயன்றனர். மரபு வழிப்பட்ட, நன்மை விளைவிக்கக் கூடிய அறக் கருத்துகளோடு, அக்காலத்திற்கேற்ற புதுமைக் கருத்துகள் சிலவற்றையும் சேர்த்துச் சிறு வடிவிலும், குறுவடிவிலும் பல நீதி நூல்கள் தமிழில் இயற்றப்பட்டன. அவ்வையார் (இடைக்காலத்தைச் சேர்ந்த புலவர்) இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை எனப்படும் வாக்குண்டாம் எனும்

நீதிநூல்கள் இன்றும் தமிழ்நாட்டின் தொடக்கப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகியவை இரண்டு முதல் நான்கைந்து சொற்களில் அமைந்த தொடர் மொழிகள். இவற்றைச் சிறப்புமிகு "நெடுங்கணக்கு" நீதிநூல்கள் எனலாம். ஒவ்வோர் அடியில் முதல் எழுத்து, தமிழ்மொழியின் அகர வரிசையை ஒட்டி அமைக்கப்பட்டவை. இவற்றை மேற்கு நாடுகளில் 'கருத்து முதிர்ச்சி உடைய தொடர்கள்' (Gromic) என்பர். இத்தகைய நீதி இலக்கிய வகை, பதினெண்கீழ்க் கணக்கு நூல்களிலேயே இடம் பெற்றுள்ளன. எனினும் அவ்வையின் கையில்தான், அவை பெருவாழ்வு பெற்றுள்ளன. அடுத்துள்ள அவ்வையின் படைப்பு களான நல்வழி மூதுரை என்பன, குறும்பாட்டுகள் (Epigrams). பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இத்தகைய வடிவம் உடையனவே மிகுதி. மனிதன், வாழ்க்கையில் செய்யத்தக்கனவற்றையும்(dos), செய்யத்தகாதனவற்றையும்(don'ts), அழுத்தம் திருத்தமாகவும், ஓரளவிற்குக் கவிதைமணங்கமழுமாறும் இவை இயற்றப் பட்டுள்ளன. குறும்பாடல்கள், வெண்பா யாப்பில், விளித்துக் கூறும் பாணியிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வையாரின் நீதி நூல்கள் சமகாலத்திய மக்களுடைய உள்ளங்களைக் கவர்ந்ததோடு, அடுத்து வந்த ஒவ்வொரு தலைமுறையினரையும் பெரிதும் கவர்ந்து வந்துள்ளது. அவ்வை எனும் பெயருடைய வேறு புலவர்கள் சிலரும் தோன்றியுள்ளனர். இந்த நூற்றாண்டில், அவ்வையாரின் ஆத்திசூடியைப் போல பதினைந்து சிறு நீதிநூல்கள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன. இவ்வாறு, இன்றும் வாழும் நீதி இலக்கியமரபாக அவ்வையாரின் படைப்புகள் பெருவாழ்வு பெற்றுள்ளன.

வெற்றி வேற்கை, உலகநீதி என்னும் நீதிநூல்களும், செறிவுமிகு சில சொற்களைக் கொண்ட கருத்துரைகளாகும். இவற்றுக்கு இனியதோர் ஓசைநயம் அமைந்துள்ளன. எளிதில் மனப்பாடம் செய்யத் தக்கனவாக உள்ளன.

சமஸ்கிருத நீதி சாத்திரக் கருத்துகளைத் தழுவி, 'நீதி வெண்பா' எனும் நூலும் இயற்றப்பட்டு இருக்கிறது. சிவப்பிரகாசரின் நன்னெறியும், குமரகுருபரரின் 'நீதிநெறி விளக்கமும்' பிற்கால நீதிநூல்களில் தலை சிறந்தவை. கி.பி பதினேழாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட 'நீதிநெறி விளக்கம்' எனும் நூல், தமிழ் நீதிநூல்களுள், திருக்குறளுக்கு அடுத்த சிறப்புமிகு நீதி இலக்கியமாகும். ஆனால், வெறும் அறத்தைப் பற்றியே அறவழியைப் பற்றியே இந்நூல் பேசுகிறது. எனினும், திருக்குறளுக்குச் செய்யுளில் எழுதப்பட்ட ஓர் உரை விளக்கமாக இது விளங்குகிறது.

இந்த இடைக்கால நீதிநூல்கள் யாவுமே சமயச் சார்புடையன; வழக்காற்று ஒழுக்கநெறிக்கே - ஆசாரத்திற்கே முக்கியத்துவம் கொடுப்பன. எளிய தமிழில் அமைந்தவை; ஓரிரு நூல்களைத் தவிர, மற்றவை எல்லாம் இலக்கிய வளம் அற்ற வெறும் நீதி நூல்களேயாகும்.

## (iv) சித்தர் பாடல்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

மெய்யுணர்வு வாய்ந்த 'சித்தர்கள் கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் இன்று வரையில் தமிழகத்தில் வாழ்ந்தனர்; வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய நெறி, அனுபூதித் தன்மையும் யோகத்தில் ஈடுபாடும் உடைய சித்தர் நெறியாகும்.

சித்தர் நெறியின் இயல்புகளில் முதன்மையானவை (1) சடங்குகளைக் கண்டிப்பது (2) இறைவனை, அவரவர் உள்ளத்திலேயே காண முயலுவது, (3) யோக நெறியின் மூலம் ஐம்பொறிகளையும் அடக்கி, மனத்தைத் தியானத்தில் ஒருமுகப்படுத்துவது, (4) உலக நிலையாமையைப் போதிப்பது, (5) வாழ்க்கையை வெறுப்பது, (6) பெண்ணைப் பழிப்பது (7) புரியாத புதிர்மொழிகளில் பேசுவது இவை யாவற்றையும் விட தலைசிறந்த கொள்கைகள் மூன்று சித்தர் நெறியில் சிறப்பிடம் பெற்றுள்ளன. அவை (1) மனிதநேயம், (2) ஒன்றே குலம்; ஒருவனே தேவன், (3) அனைத்துலக சகோதரத்துவம் என்பன.

இவர்களுடைய பாடல்களில் மனிதனை மனிதனாக வாழத்தூண்டும் அறவுரைகளும், அறிவுரைகளும் நிறைந்திருக்கும், பெரிதும் ஏழை, எளிய மக்களைச் சார்ந்தே சித்தர்கள் வாழ்ந்தனர். இதனால், பாமர மக்களுக்குப் புரியத் தக்க வகையில், பேச்சு மொழியைக் கொச்சை மொழியைப் பயன்படுத்திப் பாடல்களைப் பாடியுள்ளனர். மற்றும், மக்களுக்கு நன்கு தெரிந்திருந்த நாட்டுப்புறப் பாடல் முறைகளைப் பின்பற்றிச் சந்த இன்பம் தோன்றத் தக்க வகையில், சிறு சிறு பாடல்களையே பெரிதும் பாடியுள்ளனர்.

நீதிநூல்களுக்கேயுரிய வெண்பாவை, ஓரளவிற்கே இவர்கள் பயன் படுத்தியுள்ளனர். பிற்காலப் பாவின வகையைச் சேர்ந்த கண்ணி களையும், சிந்துகளையும் பேரளவிற்குப் பயன்படுத்திப் பாடியுள்ளனர். தமிழ்நாட்டுச் சித்தர்கள் பெரிதும் சிவ வழிபாட்டினராகவும், சிவாத்துவித நெறியாளர்களாகவும் விளங்கினர். இதனால் இவர்களைச் சமயவாதிகள் எனவும், அவர்களுடைய பாடல்களைச் சமயச் சார்புடையன எனவும் கூற இயலாது. மக்கள் வாழ்விற்கு உதவாத சமுதாய, சமயப் பழக்க வழக்கங்களை எதிர்த்து, சீர்திருத்த பிரசாரத்தைப் பேரளவிற்கு இவர்கள் செய்தனர். 'வருணாசிரம தருமத்தின் சாதிக் கோட்டையை'த் தகர்த்து எறிய சித்தர்கள் முயன்றனர். இந்த வகையில், இவர்களுடைய பாடல்களில், புதிய அறநெறிக் கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

இத்தகைய சித்தர்கள் வட இந்தியாவிலும் சீனாவிலும் சிறப்புமிகு நீதி நூலாசிரியர்களாக விளங்கியுள்ளனர்.

## (v) சதகங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

விசய நகரப் பேரரசின் காலத்தில் (கி.பி.14 நூ.ஆ.18 நூ.ஆ. முடிய) தென்னிந்திய மொழிகளில் 'சதகம்' எனும் புதுவகையான நீதிநூல்கள் தோன்றின. 'சதகங்கள்' யாவுமே நீண்ட நெடும் பாட்டுகள். பெரிதும் விருத்தப்பாக்களாக - ஆசிரிய விருத்தங்களாக அமைந்தவை. இந் நூல்கள் ஒவ்வொன்றிலும் நூறு (சதம்) பாடல்கள் இடம் பெற்றமையால் சதகம் எனும் பெயரைப் பெற்றது. மனிதன் உலக வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவதற்குரிய சரியான பழக்க வழக்கங்களையும், ஆசாரங்களையும் போதிப்பன. பெரிதும் 'உலகியல் அனுபவ ஞானத்தையே' சதகங்கள் அறிவுறுத்துகின்றன என்று சொன்னால், அது தவறாகாது.

'சதகங்கள் சிறுவர்களின் கருத்தைக் கவர இயலாத நயமற்ற பாடல்களாக உள்ளன. இதனால், பெரிதும் சதகங்கள் வயது வந்தோர் கருத்தைக் கவருகின்றன. தங்களுடைய புலமையைப் பகட்டு ஆர்வத்துடன் வெளிப்படுத்த வயது வந்தோர் இதன்மூலம் முயலுவதை காணலாம். ஹாம்லட் (Hamlet) நாடகத்தில், போலொனியஸ் (Polonius) எனும் அமைச்சன் அவனுடைய மகனுக்குக் கூறிய 'அறிவுரைகள்' போன்று அமைந்துள்ளன. ஆனால், அவற்றில் அவ்வையின் பாடல்களிலும், பிறருடைய செய்யுள்களிலும் பொங்கி வழியும் அறவுணர்வின் அகத்தெழுச்சியை மருந்திற்குக் கூட இவற்றில் காண இயலாது.

## (vi) திருக்குறளின் செல்வாக்கு

தமிழ் நீதி நூல்களில் தலைசிறந்த இலக்கியப் படைப்பாக இருப்பது திருக்குறளின் தாக்கம், அதற்குப் பின் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் எல்லாம் திருக்குறளின் தாக்கம் ஆழப் பதிந்துள்ளது. அதன் கருத்துகளையும், சொற்களையும் தொடர் களையும் பயன்படுத்தாத தமிழ் இலக்கியங்களே இல்லை.

இந்தச் செல்வாக்கு இந்த நிலையோடு நிற்கவில்லை. திருக்குறளின் இரண்டு அடிகளை ஒரு வெண்பாவின் முதல் இரண்டு அடிகளாகக் கொண்டு, பின்னிரண்டு அடிகளில் நாட்டு மக்கள் நன்கு அறிந்த நிகழ்ச்சிகளையும், புராணக் கதைகளையும் உவமையாக, விளக்கக் குறிப்பாக அமைத்துப் பாடும் வழக்கம், பதினெட்டாம் நூற்றாண்டு முதல் தமிழில் தோன்றியது. திருக்குறள் சோமேசர் முதுமொழி வெண்பா, திருக்குறள் முதுமொழி மேல்வைப்பு என்பன போன்ற நூல்கள் பல இயற்றப்பட்டுள்ளன. இத்தகைய நீதிநூல் வகையின,

இந்திய மொழிகளில் மட்டும் அல்லாமல், உலகின் பல்வேறு மொழிகளிலும் காணப்படவில்லை என்பது தமிழ்நீதி இலக்கியக் கொள்கையின் தனிச் சிறப்பாகும்.[23]

## (4) பக்தி இலக்கியக் கொள்கை

தமிழின் தனிப்பெருஞ் சிறப்பாக விளங்குவது பக்தி இலக்கியம். இந்தியாவில் எத்தனை சமயங்கள் உண்டோ, அத்தனை சமயங்களுக்கும் உரிய தோத்திர நூல்களும் சாததிர நூல்களும் தமிழில் உண்டு. வேறு துறைகளில் வளமிக்கதாய் விளங்கும் சமஸ்கிருத மொழி, இத்துறையில் தமிழிற்கு ஒப்பாக விளங்கவில்லை. மேற்கு நாடுகளின் புதிய சமயங்களான இசுலாம், கிறித்துவம் எனும் இரண்டின் பக்தி இலக்கியங்கள் சமஸ்கிருத இலக்கியத்துள் இடம் பெறவில்லை என்பது இங்குக் கருதத்தக்கது.

## புதுமைப் போக்குகள்

ஏறக்குறைய கி.பி. 600 முதல் 850 வரை தமிழ்நாட்டில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அறிவுநலச் சமயங்களான சமணம், பௌத்தம் ஆகிய இரண்டு சமய நெறிகளுக்கும் எதிராகத் தோன்றியதே பக்திநெறி. மக்களுடைய உணர்ச்சிகளை மதித்துப் போற்றி ஆடலும் பாடலும் நிறைந்த ஒருவகை வழிபாட்டு நெறியாக, இது மலர்ச்சியுற்றது.

இச்சமயங்களும், தத்துவமும் பண்டைத் தமிழ் இலக்கியத்துள் இருவகை வழிபாட்டு முறைகளாக வளர்ந்து இருந்தன. இவற்றையொட்டிப் பையப்பைய கோயில்கள் பல தோன்றின. சோழன் செங்கணான் போன்ற அரசர்கள் திருமாலிற்கும், சிவனுக்கும் பலவகைக் கோயில்களை எழுப்பினர். சமயச் சார்பற்ற சங்ககால வாழ்க்கை முறை, மெல்ல மறையலாயிற்று.

இந்நிலையில், சமண, பௌத்த சமயங்கள் போதித்த உலக நிலையாமையை மையமாகக் கொண்ட உலக மறுப்புக் கொள்கையை எதிர்த்து 'வாழ்க்கை வாழ்வதற்கே' இறைவனுடைய அடிகளில் அடைக்கலம் அடைந்து தூய்மையான உள்ளத்து அன்பால், இறைவனை நினைந்தும், போற்றியும் வழிபட்டால் போதும். இதற்கு மனிதப் பிறவி தேவை. அமரர் உலகமும் தேவை இல்லை. திருக்கோயில் 'படியாய்க் கிடந்து நின் பவள 'வாயைக்' காண பிறவி வேண்டும் என ஆழ்வார்களும், நாயன்மார்களும் இறைவனை வேண்டினர். 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்' என்று திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளமை, இக்கால இலக்கியத்தின் தனிப்பெருஞ் சிறப்பாகும். 'அவனருளாலே அவன் தாள் வணங்கி, 'என் கடன் இறைபணி செய்து

23. மு.கு.நூ.ப.87 - 134.

கிடக்கும் புதிய நெறி, இந்த நாட்டுப் பாமர மக்களுடைய ஆன்மாவின் ஏக்கத்திற்கு ஒரு வெளிப்பாடாக அமைந்தது.

இந்தப் பக்தி இலக்கியம் 'தொண்டே, தொழுகை' எனும் புதிய கொள்கையை எடுத்துரைத்தது.

"......... எம்பிரான் கோயில்புக்கு
புலர்வதற்கு முன் அலகிட்டு, மெழுக்கி
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியே என்றும்
ஆரூரா என்று அன்றே அலராகில்லா?"

(திருநாவு.தேவா.)

"தொழுது மலர்தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்று கின்றாரையும்"

(திருநாவு.தேவா.)

"பூக்கைக் கொண்டு அரனடி போற்றுமின்"

(திருநாவு.தேவா.)

என்று திருநாவுக்கரசர் அறிவித்துள்ள பக்தி நெறியுள்ள தொண்டே முதன்மை இடம் பெறுவதைக் காணலாம்.

இதே நோக்கில், நம்மாழ்வார்,

"புண்ணியம் செய்து நல்ல புனலோடு மலர்கள்தூவி
எண்ணுமின்! எந்தை நாமம்! இப்பிறப்பறுக்கும்
திண்ணமாம் அறியச் சொன்னேன் செறிபொழில் சூழ் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம் அணுகுவார்! அமரராவர்"

(நா. திவ்விய பிரபந்தம்)

என்று அறிவித்துள்ளமையும் இங்கு கருதத்தக்கது.

இவற்றால், இறைவனைத் தொழுது வழிபடும், எளிய வழியைப் பின்பற்றுமாறு பக்தி இயக்க காலத்திய அருளாளர்கள், சாமானிய மக்களைத் தம் நெறியில் சேர்ந்து உய்யுமாறு வேண்டுகின்றனர். இவ்வகையில் பக்திநெறி மக்கள் இயக்கமாக மாறியது. கற்றோர் மட்டும் அல்லாமல், கல்வியறிவே இல்லாத பாமர மக்களும் சாமானிய மக்களும் கடைத்தேற வழிகாட்டும் வான்பொருளாகப் பெருஞ்சிறப்பினைப் பெற்றது.

### மக்கள் இலக்கியம்

தமிழ்நாட்டு மக்கள் பேசிய மொழியிலேயே உயர்ந்த சமயக் கருத்துகளை எல்லாம் அருளாளர்கள் எடுத்துரைத்தனர். நேரடியாக மக்கள் உள்ளத்தைத் தொடக்கக்கூடியதாய், இனிய ஓசை நயத்தோடு

மக்களுடைய உள்ளத்தைப் பக்திப் பாடல்கள் ஈர்த்தன. பக்தி இலக்கியப் பாடல்கள், எல்லாருக்கும் உரிய சனநாயகப் பாடல்களாகும். சாதி மாறுபாடற்ற நிலையில் இறைவனிடத்தில் பக்திகொண்ட அனைவருக்கும் பொதுவானவை. குறிப்பிட்ட ஒரு சமயத்தின் அடியாராகி விட்டால், பிராமணர்கள் வாழும் வருணாசிரம தரும அடிப்படையில், காட்டப்படும் தாழ்வு நிலைகள்-சூத்திரன், தீண்டத்தகாதவன் எனும் கொடுமைகள் மறைந்துவிடுவதாக அருளாளர்கள் கருதினர்.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்!"

(திருநா. தேவா)

"அங்கம் எல்லாம் குறைந்தழுகும் தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந் தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர்! நாம் வணங்கும் கடவுளாரே!"

(திருநா. தேவா)

"குலந்தாங்கு சாதிகள் நாவினும் கீழிருந்து, எத்தனை
நலம்தானிலாத சண்டாளர் சண்டாளர்களாகினும்
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு
கலந்தார், அடியார்; தம்மடியார் எம் ஆளென்று உள் அடிகளே!"

(நா.திவ்)

எனும் பாடல்களில் சைவ சமயக் குரவரான திருநாவுக்கரசரும், வைணவ சமய அருளாளரான நம்மாழ்வாரும் குறிப்பிட்டுள்ளமை, பக்திப் பாடல்கள் சனநாயகத் தன்மை வாய்ந்தவை என்பதை வெளிப்படுத்துகின்றன.

மற்றும், இறைவனுக்கு வேத வேள்விகள் செய்ய வேண்டும் என்றோ, கடுந்தவம் செய்ய வேண்டும் என்றோ, யோக நெறியில் ஈடுபட்டு மூச்சை அடக்கித் துன்புற வேண்டும் என்றோ ஆழ்வார்களும் நாயன்மார்களும் அறிவிக்கவில்லை.

ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு
உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம்செய்ய வேண்டா

(நா.திவ்.1158)

எனும் திருமங்கை ஆழ்வாரின் அறிவுரை "சேரவாரும் செகத்தீரே பரமனுக்குத் தொண்டு செய்து உய்யலாம்" என நாட்டு மக்கள் அனைவரையும் நோக்கி அழைப்பு விடுப்பதாக அமைந்துள்ளதை நாம் உணரலாம்.

பக்தி நெறியின் மற்றொரு சிறப்பு உண்மையான அன்பினை இறைவன் இடத்துச் செலுத்துவதும், அவனுடைய அடியார் களிடத்துச் செலுத்துவதும் ஆகிய தொண்டு நெறியாகும். பக்தி வழிபாட்டைப் 'பூசை நெறி' - "பூவினைக் கொண்டு இறைவனைப் போற்றி வழிபடும் நெறி" என்பர்.[24]

இத்தகைய சனநாயகப் பண்புகள் வாய்ந்த பக்தி இலக்கியம், 'கடையவனும் கடைத்தேர்வதற்குரிய வழிவகையைக் காட்டும்', உண்மையான மக்கள் இலக்கியமாக மாட்சியுற்றது.

## மக்களுக்கு தெரிந்த நடை

இந்த நோக்கத்தோடு, பக்திப் பாடல்கள் இயற்றப்பட்டமையால், மக்களுக்குத் தெரிந்த, எளிதில் புரியக்கூடிய ஒருவகைக் கவிதை நடையை அருளாளர்கள் பின்பற்றினர். மக்களுக்கு எளிதில் அகத்து எழுச்சிவூட்டுவனவாகவும், அவர்கள் அறிந்த நிகழ்ச்சிகளையும் புராணக் கதைகளையும் விளக்குவனவாகவும் பக்திப் பாடல்கள் அமைந்தன.

## நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கத்தைத் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் காணலாம்.

ஆண்டாளும், மாணிக்கவாசகரும் இயற்றியுள்ள திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. திருவாசகத்திலும் திவ்வியப் பிரபந்தத்திலும் இடம்பெற்றுள்ள திருப்பள்ளி எழுச்சி எனும் தலைப்பில் அமைந்த பாடல்கள், அன்றைய பாமரர் வழக்கில் இருந்துவந்த நாட்டுப்புறப் பாடல்களின் சாயலில் அமைந்தவையேயாகும்.

திருவாசகத்தில் உள்ள குயிற்பத்து, திருப்பொன்னூசல், திருப்பொற்சின்னம், திருத்தெள்ளேணம், திருப்படையாட்சி முதலிய பாடல்கள் யாவும், மாணிக்கவாசகருக்கு நாட்டுப்புறப் பாடல்களில் இருந்த ஈடுபாட்டையே காட்டுகின்றன.

இவ்வாறு நாட்டுப்புறப் பாடல்களைப் போல, தம் ஆன்மீகப் பாடலைப் பாடும் பாணியை, அக்கால அருளாளர்கள் ஒருவகை இலக்கியக் கலைத்திறனாகவே கையாண்டுள்ளனர். இதனோடு, 'இசை'க்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். மனித உள்ளத்தின் பல்வேறு உணர்ச்சிக் கொந்தளிப்பையும் வெளிப் படுத்தும் முறையில் பலவகைச் சுவையுணர்வுகளும் வெளிப்படும் வகையில்

24. S.K. Chattarji, The Rig Vedic Age, P.160.

தம்முடைய பாடல்களைப் பார்த்துள்ளனர். இசைப் பாடல்கள் இயற்றுவதற்கும், பல்வேறு சந்த இன்பம் தோன்றுமாறு செய்வதற்கும் பன்னெடுங்காலமாக வழக்கில் இருந்து வந்த பாக்கள் இடம் தரவில்லை. இதனால், பல புதுவகைப் பரிசோதனைகளில் அவர்கள் ஈடுபட்டனர். தாண்டகம் எனும் புதிய யாப்பு வகையில் ஓர் இசைப்பாடலை அவர்கள் உருவாக்கினர். இந்த யாப்பில் நாவுக்கரசர் ஆயிரக்கணக்கான பாடல்களைப் புனைந்துள்ளார். இதனால், 'தாண்டக வேந்தர்' எனும் சிறப்புப் பெயரையும் அவர் பெற்றர். திருமங்கை ஆழ்வார், இந்தப் புதிய முறையில் அமைந்த செய்யுளான தாண்டகங்களை இயற்றியுள்ளார். இது 'இழும்' எனும் ஓசை நயத்தோடு, பல்வேறு பாவங்களையும் சுவையுணர்வுகளையும் எளிதில் புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது.

'கட்டளைக் கலித்துறை' எனும் புதுமையான பாவினம், சந்த இன்பத்தை வெளிப்படுத்துவதற்காகவே பேரளவில் கையாளப் பட்டுள்ளது.

இவை யாவற்றையும்விட நீண்ட கருத்தோட்டங்களைச் சிறுசிறு துண்டுகளாக அறுபடா வண்ணம் முழுமையாகத் தருவதற்கு ஏற்றதும், எடுத்தல், படுத்தல் ஓசைகளை இலேசாகப் புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்ததுமான 'விருத்தம்' எனும் யாப்பினை, அருளாளர்களே முதன்முதல் முழுமையாகப் பயன்படுத்தியுள்ளனர். தேவைக்கு ஏற்ற புதிய யாப்பு முறையில் பாவினங்களைப் படைத்துக் கொள்ள அருளாளர்கள் தயங்கவில்லை. முன்னோர்கள் போற்றிய பழைய பாக்களைக் கண்மூடிக் கொண்டு பின்பற்றவில்லை 'போலச் செய்தல்' பயனற்றது என்பதை அவர்கள் நன்கு அறிந்து இருந்தனர்.

பக்திப் பாடல்கள் அறிவுநெறிக்கு எதிராகப் போர்முரசு கொட்டின; புரட்சி செய்தன.

சாத்திரம் பல பேசுவதால் பயனில்லை; கங்கையில் நீராடுவ தாலோ காவிரியில் குளிப்பதாலோ என்ன பயன்? இறைவனிடத்துக் காதலாகிக் கசிந்துருகி கண்ணீர் மல்கி, நைந்துருகும் பக்தியுணர்வே தலையாயது; வேண்டப்படுவது எனும் உண்மையைப் பலவகையில் அருளாளர்கள் ஒல்லும் வகையில்லாம் ஓயாது எடுத்துரைத்தனர்.

## தன்மயமாக்குதல்

பக்தி இலக்கிய காலத்தில், தமிழ்நாட்டில் சமஸ்கிருத, பிராகிருத, பாலி மொழிகளின் செல்வாக்குத் தமிழகத்தில் மேலோங்கி நின்றது. முதலில், இந்த அயல் மொழிகளின் சிந்தனைப் போக்கும், இலக்கிய வடிவங்களும், மரபுகளும் சொல்லாட்சிகளும் ஒரு பிரச்சினை யாகவே தோன்றின.

காலப்போக்கில், அவற்றுள் தேவையானவற்றையும், சிறந்தன வற்றையும் 'தன்மயமாக்கிக்' (Synthesis) கொள்ளும் முயற்சியில் அக்கால அறிஞர்கள் ஈடுபட்டனர். இதன் விளைவாக, இருவகைப் 'பண்பாட்டுக் கலப்பின் இணக்கம்' (Acculturisation) உண்டாயிற்று. இதன் எதிரொலியை நம் பக்தி இலக்கியத்துள் கேட்கிறோம்.

தமிழின் வாக்கிய அமைப்பில் தொகைநிலைத் தொடர்கள் தொடர்நிலைச் சொற்களாகப் பெருவாழ்வு பெற்றன.

வடமொழியின் தாக்கத்தாலும் செல்வாக்காலும் தமிழில் சப்தலங் காரங்களும், சொல்லணிகளாகிய சித்திரகவிகளும் தோன்றின.

பழைய மரபுகள் முற்றிலும் புறக்கணிக்கப்படவில்லை. ஆனால், அவை செல்வாக்கை இழந்தன. புதிய உத்திகள் இடம்பெறலாயின. எண்ணுப் பெயர்களைக் கொண்டு 'சித்து விளையாட்டு'களில் பக்தி இலக்கியப் புலவர்கள் ஈடுபட்டனர்.

"ஒன்றவள் தானே; இரண்டவள் இன்னருள்;
நின்றனள் மூன்றினில்; நான்கு உணர்ந்தாள்"

என்பன போன்ற எண் அலங்காரக் கவிமரபு தோன்றியது.

ஒவ்வொரு பாடல் தொகுதிக்கும் தனிப்பெயரும், ஒவ்வொரு பதிகத்திற்கும், பாசுரத்திற்கும் 'பண்'முறை வகுக்கப்பட்டுள்ளதாகவும் காணுகின்றோம்.

கவிதை என்பது அகத்தெழுச்சியால் தோன்றுவது; உணர்ச்சியின் பொங்கலாக அமைவது, தெளிந்த மனநிலையில், பொங்கி எழும் உணர்ச்சிகளை மறுமுறை தொகுத்துப் பார்ப்பது என்னும் இலக்கியக் கொள்கை இந்தக் காலத்தில் மேலோங்கி நின்றது.

## புதிய இலக்கிய வகை

தேவார, திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் அமைந்த அந்தாதித் தொடைப் பாடல்கள், 'அந்தாதி' என்னும் தனி இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றது. காரைக்கால் அம்மையாரின் 'அற்புதத் திருவந்தாதி' இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

பெரியாழ்வாரும், குலசேகரரும் கண்ணனுடைய குழவிப் பருவத் தின் பல்வேறு நிலைகளைத் தாயின் பாசத்தோடு பாடியுள்ளனர். இந்தப் பக்திநெறிவழிப்பட்ட 'பிள்ளைப்பாட்டு' மரபைப் பின்பற்றி, ஒட்டக்கூத்தர், மூன்றாம் குலோத்தங்கன் மீது, சமயச் சார்பற்ற 'பிள்ளைத் தமிழ்' எனும் சிற்றிலக்கியத்தைப் படைத்தார்.

சீவன்மாவாகிய காதலி, பரமான்மாவாகிய இறைவன்மீது காதல் கொண்டு, அவனை அடையத் துடிப்பதாக ஆழ்வார்களும், நாயன் மார்களும் பாடினர். 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' எனத் தொடங்கும் அப்பரின் தேவாரப்பாடல் இதற்குச் சிறந்ததொரு சான்றாகும்.

இந்த மரபைப் பின்பற்றி 400 கிளவிகளைக் கொண்ட காதற் காப்பியமாகிய 'கோவை' இலக்கியத்தைப் படைத்தனர். மாணிக்க வாசகரின் 'திருக்கோவையார்' சிறப்புமிகு படைப்பு இலக்கியமாகும்.

இவ்வாறு உலா, தூது, மாலை, மும்மணிக்கோவை, நான்மணிக் கோவை, தசாங்கம் முதலிய சிற்றிலக்கியங்கள் பக்தி இலக்கியத்துள் இருந்து கிளைத்து எழுந்தன.

எனவே, பக்திப் பாடல்கள், பக்திநெறிப்பட்ட சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்கு மூலகாரணமாக அமைந்தன. காலப்போக்கில், இந்த அடிப்படையில் சமயச் சிற்றிலக்கியங்களும் தோன்றலாயின.

மண்ணகக் காதல், விண்ணகக் காதலாக - தெய்விகக் காதலாக - மெய்யுணர்வுக் காதலாக மனித உணர்வினை மனமாற்றம் செய்த பெருமை சைவ நாயன்மார்களையும், வைணவ ஆழ்வார்களையுமே சேரும். இந்த அடிப்படையில் தூது, உலா, கலம்பகம், மடல், அந்தாதி போன்ற சிற்றிலக்கியங்கள் பல்கிப் பெருகின.

சங்க இலக்கிய மரபான காதல்நெறியை வெறுத்து ஒதுக்க விரும்பாத அருளாளர்கள், அதற்கு ஒரு புதுவாழ்வு அளித்துள்ளது பக்தி இலக்கியக் கொள்கைகளின் சிறப்பு இயல்பாகும்.

பக்திப் பாடல்கள் யாவுமே, அவற்றை அருளாளர்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் ஆன்மீகப் பாடல்களாக அமைந்துள்ளன.

தாந்திரிக நெறியின் செல்வாக்குப் பக்தி இலக்கியத்தில் கணிசமான அளவிற்கு இடம் பெற்றிருக்கின்றது என்பது பன்மொழிப் புலவரின் துணிவாம்.

சப்த பிரபஞ்சம், அர்த்தப் பிரபஞ்சம் பற்றிய கருத்துகள் இலக்கியக் கொள்கையை உருவாக்குவதில் முக்கியப் பங்கினைப் பெற்றுள்ளன.[25] சொற்களை மந்திரமாக - ஐந்தெழுத்து மந்திரம், ஆறெழுத்து மந்திரம் - எனப் போற்றும் இலக்கிய மரபு இக்காலத் தில் உருவாயிற்று. வடமொழி வேதம், தமிழ் வேதம் எனும் கருத் தோட்டமும் இக்காலத்தில் தான் எழுந்தது. 'மணிப்பிரவாளமா'கிய கலவை நடையை அருளாளர்கள் வெறுத்தனர்.

25. The Tamil Literary Theory of the Bhakthi Period in The Journal of Madurai University, Dec.1970, Vol.II No.2.P.P.8-9.

சுருங்கக் கூறுவதானால், 'பக்தி இலக்கியம்' யாவுமே ஆவேச வெளிப்பாடாக (Ecstratic Expression), சீவான்மா பரமான்மாவோடு கலக்கும் தெய்வீக ஒன்றியத்தை, தமிழ்ப் பக்தி இலக்கியக் கொள்கையாகக் கருதலாம். இந்த முடிவுரையோடு, பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் பக்தி இலக்கியக் கொள்கையை நிறைவு செய்துள்ளார்.[26]

இந்நிலையில் தமிழில் உள்ள 'பக்தி இலக்கியம்' பற்றி, வேறோர் இடத்தில் குறிப்பிட்டுள்ள கருத்து இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

"தமிழ் மக்கள், தங்களுடைய ஆழ்ந்த இறை அன்பினை-பக்தி பெருக்கைத் தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் இலக்கியங்களிலுள்ள பாடல்களின், பாசுரங்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். இதைப்போன்ற பக்திச் சுவைநலங் கனிந்த பாசுரங்களை வேறு மொழிகளில் காண இயலாது"[27] என்பது பேராசிரியரின் துணிவாகும்.

## (5) காப்பிய இலக்கியக் கொள்கை

பேராசிரியர் சிலப்பதிகாரத்திலும், கம்பராமாயணத்திலும் பேரீடுபாடு கொண்டவர்; பயிற்சியும் தேர்ச்சியும் மிக்கவர். மற்றும் மணிமேகலை, சீவக சிந்தாமணி, சூளாமணி போன்ற காப்பியங்களின் ஆராய்ச்சியிலும் அவர் ஈடுபட்டுள்ளார்.

'காப்பிய நோக்குகள்' எனும் ஆய்வுரையில் 'கவிஞன் பாடுவது காவியம்; 'காவ்யம்' என்ற சொல்லைக் 'காப்பியம்' என்று தமிழனது நா வழங்குகிறது. கவி எழுதுவது எல்லாம் காப்பியம் ஆவது இல்லை. உயர்ந்த குறிக்கோளாக வெளிப்படுத்தும் வகையில் செய்யப்படும் இன்பக் கதையே, பாட்டு வடிவில், பலபல புனைந்துரைகளோடு சொல்லும்போது, 'காப்பியம்' என்று பெயர்பெறும்''[28]என்று பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.

### காப்பிய வகை

இந்தக் காப்பியத்தைச் சிறு காப்பியம் என்றும், பெருங்காப்பியம் என்றும் தமிழ்நாட்டு அறிஞர்கள், தண்டியார் காலத்தில் இருந்து பேசிவரலாயினர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களை நோக்கமாகக் கொண்டது பெருங்காப்பியம். அத்தகையது அல்லது - நான்கில் குறையக் கூறுவது சிறுகாப்பியம் என மரபுவழி விளக்கத்தைத் தந்துள்ளார் பேராசிரியர்.

---

*26. மு.கு.க., பக்.1-20.*

27.Collected Papers, 61st Birthday, P.23.

*28. தெ.பொ.மீ. நீங்களும் சுவையுங்கள், பக்.62.*

## உறுதிப்பொருள்

எனவே, புருடார்த்தங்களாய், உறுதிப் பொருள்களாய்த் திரண்ட உயர்ந்த நோக்கமே காப்பியத்தின் பெருமை என்பதாயிற்று. இங்கு ஓர் ஐயம் எழலாம். 'பாட்டு' என்பது மனத்தின் அமைதியிலே, இன்பம் வெள்ளம் இடுவதைக் காட்டுவது அன்றோ? எனும் வினாவினை எழுப்பி, இன்பம் பயக்கும் கலைப் படைப்பிற்கு நோக்கம் என்றும் ஒன்று இருக்கலாமா? எனும் தடையை வெளிப்படுத்துகிறார்.

"பாவலன் தான் கண்ட காட்சியை, அதே நிலையில், அதே உணர்ச்சியில், நாம் காணச் செய்யும் கண்கட்டு வித்தை அன்றோ பாட்டு? இதுதானே அவனது மந்திர சக்தி! 'கலைக்காகவே கலை', 'பாட்டிற்காகவே பாட்டு' என்பதன்றோ முடிந்த முடிவு! அன்றியும் அறம் கூர்வது, தர்மோபதேசம் செய்வது அறவன் அடிகள் கடமையாம். பொருள் நூலின் நுட்பம் கூறுவது சாணக்கிய தந்திரமாகும். பாவலன் அவ்வாறு மாறி மாறி வந்தால், அவன் பாட்டைப் படிப்பவர் யார்? எனும் வினாக்களை அறிஞர் தெ.பொ.மீ. அடுக்கிக் கொண்டே போகிறார். தன் பாடலை ஓதுவார், தான் கண்ட இன்பக் காட்சியைக் கண்டு, களிக்கச் செய்வதே கலைஞன் கைத்திறம்... காதலியின் கனிந்த பேச்சுக்களைப் போன்றதே காப்பியம் என்பர். காதலின் பேச்சில் உயர்ந்த உட்கோள் உள்ளூர ஒளிர்வதைப் போலக் காப்பியத்திலும் அவை வெளிப்படையாகத் தோன்றும். பூவும், இலையும், பழமும் போலானது. வேராய், பாடுகின்ற பாவலனது பண்பாடாம் அவன் உயர்விற்கேற்ப அனைத்தையும் தாங்கி நிற்கக் காண்கிறோம்.

## கதையும் சுவையும்

பலரும் அறிந்த கதையினையே பாவலர்கள் பாட வருகின்றார்கள். பலருள்ளத்தும் ஊடாடி வெளிப்பெறாதனவற்றையே, கவிஞன் பாடுகின்றான். கேட்பவனும் 'என் நெஞ்சில் இருப்பதையே, இவன் பாடுகிறான்' என்று களித்துக் கூத்தாடுகிறான். ஆகவே, 'காவியங்கள்'தான் எழுதுகின்ற உலகத்தின் எதிரொலியாக விளங்குவதும் இயல்பேயாம். வீரரது பெருமையே பேசுகின்ற மேனாட்டுக் காப்பியங்கள், பெண்ணின் பெருமை பேசி, இன்ப அறத்தினை எடுத்துக்காட்டுவதும் அருமையிலும் அருமை! கீழ்நாட்டுக் காப்பியங்கள் அறமும், இன்பமும், பொருளும் வீடும் பயக்கும் உறுதிப்பொருள்களைப் பெண்ணின் பெருமையாகப் பாடி, வேறொரு வடிவம்கொண்டு விளங்குகின்றன."

## பாவிகம்

காப்பியம் உணர்த்தும் திரண்ட அறநெறிக் கருத்தினைப் பாவிகம் என்பர். இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம், அரசியல்

பிழைத்தோர்க்கு அறம் கூற்றம் ஆவதையும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவதையும் ஊழ்வினை உருத்து வந்தூட்டுவதையும் முப்பேர் உண்மைகளாக உலகிற்கு உணர்த்துகிறது.

கம்பனுடைய இராமகாதை, பிறன்மனை நயத்தலால் உண்டாகும் கேட்டையும், அறத்தின் மாட்சியையும், 'இம்மை இப்பிறவியில் இருமாதரை என் சிந்தையாலும் தொடேன்' எனும் ஏகபத்தினி விரதத்தையும் உலகிற்கு உணர்த்துகிறது.

பெண்ணின் பெருமையைப் பாடும், மற்றொரு காப்பியமான பாரதம், 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், பிறகு தருமம் வெல்லும்' எனும் விழுமிய பொருளைப் பயப்பதாகும். இவ்வாறு ஒவ்வொரு காப்பியமும் உயர்ந்தும் சிறந்ததுமான தலைமைக் கருத்தை (பாவிகம்) உணர்த்துவதாக உள்ளமையும், தமிழருடைய காப்பியக் கொள்கையின் தலைசிறந்த பண்பாகப் போற்றப்படுகிறது.

## காப்பியத்தின் தலையாய பண்பு

காலத்திற்கேற்ப எழும் தலைசிறந்த காப்பியங்கள், அந்தக் காலத்தோடு நின்றுவிடாது காலத்தையும் கடந்து, எக்காலத்தவர் நெஞ்சினையும் அள்ளும் இயல்பு வாய்ந்தனவாகும். காலனைக் கடந்த கடவுள், காப்பியமே ஆகும்[29] என்பது பேராசிரியரின் துணிவாகும். இந்த உண்மை, உலகத்தின் தலைசிறந்த காப்பியங்களில் எல்லாம் காணப்படும் முக்கியப் பண்பாகும்.

## கதைப்பாத்திரங்கள்

காப்பியங்களில் இடம்பெறும் தலைவன், தலைவி எனும் தலைமைப் பாத்திரங்களே அல்லாமல், துணைப் பாத்திரங்களையும், சிறுபாத்திரங்களையும் பற்றிப் பேராசிரியர் தனிச்சிறப்பு வாய்ந்த கருத்தினைக் கொண்டுள்ளார். கதையின் வளர்ச்சிக்குத் துணைப் பாத்திரங்களும், சிறுபாத்திரங்களும் பேருதவி புரிகின்றன. வெறும் நிகழ்ச்சிகளின் தொகுப்பாகக் கதையை அமைத்தால், படிப்பவருக்குச் சுவையற்றதாகிவிடும். ஒரு நிகழ்ச்சியை விமரிசிக்கும் பாத்திரம் ஒன்றைப் படைத்து, ஓரிரு நிகழ்ச்சிகளில் அதனை இடம் பெறச் செய்து, அதன் பேச்சு, நடத்தை முதலியவற்றின் மூலம் கதையை நடத்திச் செல்லுவது, காப்பியத்தின் ஒரு கலைத் திறனேயாகும்.

கதையின் முன்நிகழ்ச்சிகளையும், பின்னர் நிகழப்போவனவற்றையும் வாசகருக்கு அறிவித்த இத்துணைப்பாத்திரங்களே சிறந்த கருவிகளாகப் போற்றப்படுகின்றன.

29. தெ.பொ.மீ. 'மணிமேகலை-1' - பிறந்தது எப்படியோ, ப19.

தலைமைப் பாத்திரங்களின் பண்புகளைப் பட்டொளி வீசிப் பிரகாசிக்கச் செய்வதற்குரிய சிறந்த வாயிலாக அமைவன சிறுபாத்திரங்களும் துணைப் பாத்திரங்களுமேயாகும் என்பது பேராசிரியரின் துணிவாகும்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் காப்பிய கதைமாந்தர்களுள் தலைமைப் பாத்திரங்களான தலைவன் தலைவியரைப் பற்றிச் செய்துள்ள ஆராய்ச்சித் திறனாய்வு மிகக் குறைவாகும். ஆனால் பிறபாத்திரங்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கே முதன்மை இடம் கொடுத்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் காந்தியடிகள், தேவந்தி, மாடலன் போன்ற சிறு பாத்திரங்களின் பங்கு யாது என்பதை அறிஞர் தெ.பொ.மீ. அவர்களே, முதன் முதல் மதிப்பீடு செய்து அறிவித்துள்ளார். மாதவியின் பாத்திரப் படைப்பைப் பற்றி ஓரளவிற்குக் கானல்வரி எனும் நூலில் நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.

'மணிமேகலை' எனும் காப்பியத்தில் இடம் பெறும் 'அமுதசுரபி' எனும் கருவியையே, சாத்தனார் ஒரு பாத்திரமாக்கியுள்ளார் எனும் கருத்துடையவர் நம் பேராசிரியர். 'ஆதிரை' எனும் மங்கை நல்லாளின் மாட்சிமை பொருந்திய பாத்திரப் படைப்பை, நுட்பமாகப் பேராசிரியர் ஆராய்ந்துள்ளார்.

கம்பராமாயணத்தில் வரும் அனுமன், தாரை, வீடணன் போன்ற சிறு பாத்திரங்கள் காப்பியக் கதையின் வளர்ச்சிக்கும், கதை நிகழ்ச்சிகளின் சிறப்பிக்கும், காப்பிய நாயக, நாயகியரின் பெருஞ் சிறப்பினைப் புலப்படுத்துவதற்கும் உரிய கருவியாக விளங்கும் திறத்தை, நம் பேராசிரியர் நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.

இவற்றில் இருந்து பேராசிரியருடைய காப்பியக் கொள்கையில், சிறு பாத்திரங்களும், துணைப்பாத்திரங்களும் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளமை புலனாகிறது. பாத்திரங்களின் வடிவத்தைப் பாத்திரங் களது பேச்சைக் கொண்டும் செயலாகக் காட்டுவது கதை அளவின்றி விரியும் ஆதலின் அத்தகைய செய்திகளைக் கதைக்கு முன் நிகழ்ந்தவையாக அமைத்து விட்டு, அவற்றை நம்பக்கூடிய பாத்திரங்களின் வாயிலாக நிகழ்ந்தவற்றைக் கூறும் நிலையில், பாத்திரங்களின் பேச்சாக நாடகத்தில் நுழைப்பதும் ஒரு முறையாகும்.[30] இதனைக் காப்பியக் கலைத்திறனாகவே இளங்கோவும், கம்பரும் பயன்படுத்தியுள்ளனர்.

காப்பியச் சுவைகளைப் பற்றி விரிவாகப் பேராசிரியர் ஆராய்ந் துள்ளார். அவற்றுள் வீரமும், அவலமும் முதன்மை இடம்

30. நாடகக் காப்பியங்கள், பக். 12-13.

பெறுகின்றன. இவற்றுள் அவலத்தைக் காப்பியத்தின் சிறப்பிற்குரிய சுவையாகப் பேராசிரியர் போற்றியுள்ளார்.

"அவலம் என்பது வாழ்க்கையிலும் இலக்கியத்திலும் இடம் பெறும் ஒரு சுவையாகும். அவலத்திற்கும் அழுகைக்கும் வேற்றுமை நிரம்ப உண்டு. அவலத்தின் முடிவு அழுகையாகவும் இருக்கலாம். அழுகையைவிடச் சிறப்பாக வியப்புச் சுவையை, ஆண்டுக் காணப்படும் அவலத் தலைவன் அடைகின்ற ஒவ்வொரு துன்பமும், நம்நாட்டு அச்சத்தோடு கூடிய ஒரு வியப்பை உண்டாக்குகிறது.[31]

இவ்வாறு காப்பியத்தில் இடம் பெறும் சுவைகளுள், அவலம் விளங்குவதைப் பேராசிரியர் பலவகையாகத் தெளிவுறுத்தியுள்ளார்.

அறிஞர் தெ.பொ.மீ. அவர்களுடைய காப்பிய இலக்கியக் கொள்கைச் செறிவானது. மேற்கு நாட்டு 'அவலக் காப்பியம்' எனும் கொள்கை தமிழ்க் காப்பியங்களுக்கு முற்றிலும் பொருந்தாது எனும் கருத்துடையவர் நம் பேராசிரியர். அவலத் தலைவர்களைத்தான், நம் காப்பியங்களில் காண இயலும் என்பது தெ.பொ.மீ.யின் கருத்து.

காப்பியங்களின் நோக்கம் விழுமியதாக இருக்க வேண்டும் அந்த விழுமிய நோக்கமே இலட்சியமே, காப்பியத்தில் 'பாவிகம்' எனப் போற்றப்படுகிறது. இந்தப் பண்பினை வெளிப்படுத்துவதே தமிழ்க் காப்பியக் கொள்கை என்பதை அழுத்தம் திருத்தமாக அறிவித்துள்ளார்.

## (6) புராண இலக்கியக் கொள்கை

பழங்கதையைப் பேசுவது புராணம். தமிழில் பத்தாம் நூற்றாண்டு முதல் எண்ணற்ற புராணங்கள் தோன்றியுள்ளன. அவை சான்றோர் களின் வரலாற்றைக் கூறுவனவாகவும், குறிப்பிட்ட ஓர் ஊரில் உள்ள திருக்கோயிலின் வரலாற்றைச் சொல்லுவனவாகவும் இருவகைப் படும்.

இவையல்லாமல் வேறு சில போக்குகளை உடைய புராணங் களும் தோன்றியுள்ளன. பெரியபுராணம், கந்தபுராணம், பாகவத புராணம், அரிச்சந்திர புராணம் போன்றவை தெய்வங்களின் கற்பனை கலந்த வரலாற்றையும் அருளாளர்களின் தியாகம் நிறைந்த தொண்டுகளையும் சித்திரிப்பவையாகும். இவை பெரிதும் கலைக் காப்பிய மரபை ஒட்டி இயற்றப்பட்டுள்ளன. இத்தகைய புராணங்களை, 'புராணகாப்பியங்கள்' எனும் பெயரால் சுட்டுவதே சாலவும் பொருந்தும் என்பது பன்மொழிப் புலவரின் துணிவுரையாகும்.

---

*31. அ.ச.ஞானசம்பந்தன், இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும், சிறப்புரை அவலம், பக்.16-18.*

தலபுராணங்கள், குறிப்பிட்ட ஊர்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டனவாகும். இவை பெரிதும் திருக்கோயில்களை மையமாகக் கொண்டு, அக்கோயில்களில் எழுந்தருளியுள்ள தெய்வத்தின் வீர தீரச் செயல்களையும், அருள் உணர்வையும் புலப்படுத்தும் வகையில் பாடப்பட்டன ஆகும். இவற்றில் நாட்டுப்படலம், நகரப்படலம், புண்ணியத் தீர்த்தங்களின் சிறப்பு, இவ்வூர்களில் வாழும் குடிவளம் போன்றவை சிறப்பாக விரித்துரைக்கப்படும். இந்நிலையில் தலபுராணங்களில் கற்பனைக்கு அப்பாற்பட்ட வியப்பூட்டும் செய்திகளும் வருணனைகளும் இடம்பெறுவது இயல்பாகும்.

இத்தகைய, தலபுராணங்கள் வட்டார வரலாற்றை அறிவதற்குப் பேருதவி புரிவனவாகும். காலப்போக்கில் தலபுராணங்கள் உயிர்த் துடிப்பு அற்ற வெற்றுடம்புகளாக மாறிவிட, இவற்றுள் 'போலச் செய்தலே' முதன்மை இடம் பெறுவதாயிற்று. இதனால், தல புராணங்கள் 'இலக்கியம் எனும் மதிப்பை இழந்துவிட்டன' என்பது அறிஞர் தெ.பொ.மீ. அவர்களின் புராண இலக்கியக் கொள்கையாகும்.

## (7) புதுக்கவிதை (இலக்கிய)க் கொள்கை

பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், 1957 அளவிலேயே புதுக்கவிதையைப் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகளை, கலைக்கதிர் இதழிலே வெளியிட்டுள்ளார். அவற்றுள் சில, பாட்டிலே புரட்சி எனும் நூலில் இடம் பெற்றுள்ளன.

"புதுக்கவிதை இயக்கத்தை 'பாட்டிலே புரட்சி'யை உண்டாக்கிய இயக்கியம் என்று பன்மொழிப் புலவர் குறிப்பிட்டுள்ளார். அறிவியல் வளர்ச்சிக்கும் இயந்திரத் தொழில் மேம்பாட்டிற்கும் இடையே மனிதன் சிக்கித் தவிக்கின்றான். அவனுக்கு ஓய்வு கிடைப்பதே அரிதாக இருக்கிறது, கிடைக்கும் குறைந்த நேர ஓய்வில் அவனால் நீண்ட காப்பியங்களையோ, நெடும்பாடல்களையோ, பெரும் கதைகளையோ படிப்பதற்கு வாய்ப்பில்லை. சிறிய வடிவில் உள்ள கவிதைகளும் கதைகளுமே அவன் கருத்தைக் கவரலாயின. அவையும் மக்கள் பேச்சு மொழியில் அமைந்து இருந்தால் அவனுக்கு எளிதில் புரியக் கூடியனவாக இருப்பதை உணர்ந்தான். அப்பொழுதுதான் அவற்றைச் சுவைத்து மகிழ இயலுகிறது என்பதையும் அவன் அனுபவத்தில் கண்டான்."[32]

பொதுமக்களின் இந்த எண்ணப்போக்கே புதுக்கவிதை இயக்கத்தை தோற்றுவித்தது. அவற்றில் பாரதி சொல்லிய எளியபதம் 'எளிய சந்தம் யாவரும் விரும்பும் மெட்டு' எனும் கூறுகள் இடம் பெற்றன.

32. பாட்டிலே புரட்சி, பக். 9-36

அவற்றின் வடிவத்திலும் உள்ளீட்டிலும் மாபெரும் மாற்றங்கள் செய்யப்பட்டன. அவை உவமை, உருவகங்களை அடிப்படையாகக் கொண்ட படிமக்காட்சி, கீழ் வெட்டு எனப்படும் எள்ளல், புதுமை மோகம், பாவத்தோடு கூடிய பாட்டு இரண்டாட்டம் எனும் இருண்மை, மனிதநேயம், பச்சையாகச் சொல்லுதல், வழக்குச் சொற்களைப் பயன்படுத்துதல், பொருத்தமான சொல், உணர்ச்சியைக் கிளறும் சந்தக் குறிப்பு முதலிய கூறுகளைக் கொண்டதாகப் பாடப்படுவதே புதுக்கவிதை. பெரிதும் வாழ்க்கையின் நிழற்படமாகப் புதுக்கவிதைகள் அமையும். அதில் பால்உறவுச் சிக்கல்களால் சீரழியும் காதல் உறவுகள் படம் பிடித்துக் காட்டப்படும். இறந்த காலத்தை விட எதிர்காலத்தில் பெரியதொரு நம்பிக்கையை ஊட்டுவனவாகப் புதுக்கவிதைகள் அமையும். வகுப்பு வேறுபாடின்றி, மனிதனை மனிதனாக மதித்துப் போற்றும் மாண்புமிகு எண்ணப்போக்கு அவற்றில் பொங்கி வழியும்.

இத்தகைய இயல்புகளையும் உணர்வுகளையும் கொண்டதாக விளங்குவதே புதுக்கவிதை என்பது பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் கருத்தாகும்.

புதுக்கவிதையின் புறத்தோற்றத்தில் வடிவ அமைப்பில் உண்டான மாற்றங்களையும் நம் பேராசிரியர் ஆழமாக ஆராய்ந்துள்ளார். அவருடைய கூர்த்த மதிக்கு அவை புதுமையாகத் தோன்றவில்லை. எனவே அதனை 'பழமையே புதுமை' எனும் தலைப்பில் விளக்கியுள்ளார்.[33]

பெரிதும் அவை நெடுங்காலமாகத் தமிழில் வழங்கி வரும் சொல்லணிகளாகிய 'சித்திர கவிகளையே' நினைவுபடுத்துகின்றன என்பது பன்மொழிப்புலவரின் முடிவாகும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாறு பேராசிரியர் வகுத்தளித்த புதுக்கவிதைக் கொள்கை, இன்றுவரை தமிழில் வளர்ந்து வந்திருக்கும் பல்வகைப் பட்ட புதுக்கவிதைகள் அனைத்திற்கும் பொருந்தி வரக்கூடியதாக அமைந்துள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

அடிப்படை ஆராய்ச்சி நெறிக்கும் வரலாற்று மொழியியலுக்கும் முன்னோடியாகத் தமிழறிஞர்களுள் தெ.பொ.மீ. விளங்குவதை முன்னரே கண்டோம். இதைப் போன்றே, தமிழின் இலக்கியக் கொள்கையை முதன்முதலில் உருவாக்கித்தந்தத பெருமை நம் பேராசிரியரையே சாரும். இவ்வகையில் நோக்குகின்ற பொழுது நம் பேராசிரியர் 'தமிழ் இலக்கியக் கொள்கைக்குத் தந்தையாக விளங்குகிறார்' எனப் போற்றுவது பொருத்தமாகும்.

---

33. பாட்டிலே புரட்சி, பக். 51-58

இயல் 5

# மொழியியல் அறிஞர்

## இயல் - 5

## மொழியியல் அறிஞர்

பெரும் படிப்பாளியாகிய பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், மாபெரும் ஞானியாவார். அவர் கற்ற கலைஞானங்களும், பயின்ற மொழிகளும், தேர்ச்சி பெற்ற அறிவுத்துறைகளும் மிகப்பல.

### தொண்டுள்ளம்

'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' எனும் வாய்மொழிக்கு ஏற்ப, அவருடைய ஆழ்ந்த அறிவும், பரந்துபட்ட புலமையும், நுட்பமான ஆராய்ச்சித் திறனும் காசுக்காக விற்கப்படவில்லை; தமிழிற்கு வளஞ் சேர்ப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டன. இதனால், பொருட் செல்வம் போதிய அளவிற்கு அவருக்கு வாய்க்கவில்லை. ஆனால், அருட்செல்வம் கடைசிவரை, அவரை விட்டுப் பிரியாது உற்ற துணையாக இருந்து வந்தது. எந்நிலையிலும், பேராசிரியர் பெருமான், "சிந்தையின் நிறைவே செல்வம்'' எனும் நோக்குடையவராக வாழ்ந்து, மறைந்தார். தமிழிலக்கியத்துறைக்கு அவர் ஆற்றியுள்ள அரும்பணியைக் கண்டோம்.

இலக்கிய ஈடுபாட்டிற்கு அடுத்த நிலையில், அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் மொழி ஆராய்ச்சியில் கருத்தைச் செலுத்தினார். இந்த நூற்றாண்டில், தமிழகத்திற்கு 'மொழியியல்' எனும் புதிய சிந்தனைப் போக்கை-கலைத்துறையை அறிமுகப்படுத்தி வைத்தவர், பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரேயாவர்.

ஒரே சமயத்தில் அக்கலையின் மாணவனாகவும், தலை சிறந்த அறிஞராகவும் விளங்கிய சிறப்பு, ஐயாவிற்கே உரியதாகும். தமிழகம் மட்டும் அல்லாமல், பாரதமும், ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளும் டாக்டர் தெ.பொ.மீ. அவர்களை, மாபெரும் 'மொழியியல் அறிஞராகவே' (Linguist) போற்றி வருகிறது.

### மொழியியல் புதிய துறையா?

ஒரு மொழியின் பல்வேறு இயல்புகளை, ஒலிப்பு முறை, சொற்களின் கட்டமைப்பு முறை, தொடரியல் அமைப்பு, தொடரமைப்பில்

சொற்கள், பெறுமிடம், சொற்பொருளியல், கிளை மொழியியல், வட்டார மொழியியல், பேச்சு மொழியின் சிதைவும் திரிபும், மொழிக் குடும்பங்கள் போன்றவற்றின் இயல்புகள் முதலியனவற்றைக் கண்டறிந்து, உலகிற்கு உணர்த்தும் ஆய்வுத் துறையே அறிவுத்துறையே 'மொழியியல்' என்பதாகும். "மொழியைப் பற்றிய முறைப்படுத்தப்பட்ட அறிவியல் சிந்தனையே, மொழியியல்" என இரத்தினச் சுருக்கமாக விளக்கம் தரலாம்.

மொழியியல் என்னும் கலை, புதிய துறையா? எனும் வினாவினை எழுப்புவோர் உண்டு. ஐயப்பாட்டிற்கு இடமின்றி 'மொழியியல்' ஒரு புதிய துறையே என உறுதியாகக் கூறலாம்.

இலக்கிய வளம் பெற்ற மொழிகளுக்கு எல்லாம், பன்னெடுங் காலமாக இலக்கணம் எனும் நூல் எழுதப்பட்டுள்ளதே எனும் எண்ணம் எழலாம். உண்மை இதனை மறுப்பாரில்லை. உலகிலேயே முதன் முதலில் மொழிக்கு இலக்கணம் படைத்தவர்கள் நம் நாட்டவரே.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே, தொல்காப்பியனார், நம் தமிழிற்கு முப்பேர் அமைப்பை உடைய இலக்கணத்தைப் படைத்துத் தந்தார். சமஸ்கிருத மொழிக்குப் பாணினி என்பார் அஷ்டாத்தியாய (எட்டு அத்தியாயங்களை உடையது) இயற்றி உள்ளார். இவை, இரண்டும் ''மனித இனத்தினுடைய மதிநுட்பத்தைக் காட்டும் மாபெரும் தொல்பொருள் சின்னங்கள்'' என அறிஞர் போற்றுகின்றனர்.[1]

## இலக்கணமும் மொழியியலும்

'இலக்கணம்' என்பது மொழியின் இயல்புகளைப் புலப்படுத்துவது அவ்வியல்புகள் எப்படி அமைகின்றன? எந்தெந்தச் சூழல்களில் அவை மாறுகின்றன? அல்லது திரிகின்றன? என்பனவற்றைக் கண்டு அறிந்து, அவற்றை விதிகளாக வகுத்துக் கூறுவது இலக்கணம். அடுத்து ஒரு மொழியின் எழுத்தொலிகள், எவ்வாறு ஒன்றாகக் கூடி, சொற்களை அமைக்கின்றன? சொற்கள் சேர்க்கையில் தொடர் மொழிகள் எவ்வாறு அமைகின்றன? அச்சொற்களின் பொருட் செறிவும், பொருள் திரிபும் எக்காரணங்களால் எவ்வாறு உண்டாகின்றன? என்பன போன்ற ஒரு மொழியின் பல இயல்பு களைப் பெரிதும், விதிமுறை வகையாக எடுத்துக்கூறுவது இலக்கணம்.

இவை அனைத்தும் 'மொழியியல்' எனும் அறிவாராய்ச்சித் துறையிலும் அமைகின்றன. ஆனால், இவை யாவும், மொழியியலின் செயல்பாடுகளுள் கால்பகுதியேயாகும். இதனால், மொழியியல் ஆராய்ச்சிக்கு ஆழமான இலக்கண அறிவு தேவை என்பது புலப்படும்.

---

1. க.த.திருநாவுக்கரசு, தொல்காப்பியரின் மொழிநூற்புலமை, ப 237.

ஆனால், மொழியியலுக்கும் இலக்கணத்திற்கும் அடிப்படை வேற்றுமைகள் உள்ளன. இலக்கணம் என்பது எழுதப்பட்ட மொழியையே - இலக்கியச் சிறப்புடைய மொழிகளையே ஆராய்கிறது. மொழியியலோ, பேச்சு மொழிக்கே முதன்மை இடம் கொடுக்கிறது. எழுத்து வடிவமே பெறாத காட்டுவாழ் மக்களுடைய மொழிகளையும் ஆராய்ந்து, விளக்கம் கூறுகிறது மொழியியல்.

இலக்கணம், கடந்த காலத்தில், ஒரு மொழி எப்படி இருந்தது என்பதையே படம்பிடித்துக் காட்டும். இதனால், மொழியின் அரும் பொருள் காட்சியகமே (Museum) இலக்கணம் எனக் கூறுவர். மொழியியல், ஒரு மொழி இன்றுள்ள நிலையைப் பல கோணங்களில் படம்பிடித்துக் காட்டுவது. இன்றைய நிலையில் காணப்படும். இயல்புகள், முற்காலத்தில் எப்படி இருந்திருக்கக் கூடும் என்பதை உய்த்துணர்வு வகையால் பெறவைப்பது மொழியியல்.

இலக்கணம், விதிமுறை (Prescriptive) வகையால், ஒரு மொழியின் இயல்புகளை எடுத்துரைப்பது. மொழியியலோ, விளக்கவியல் முறையால், ஒரு மொழியின் (Descriptive) இயல்புகளைப் பகுத்துக் காட்டி, விளக்குவதாகும்.[2]

மொழியியல் அகன்றது, பரந்தது விரிந்தது. இலக்கணம், நான்கு சுவர்களுக்கு உட்பட்ட குறுகிய ஆய்வுத்துறை. மொழியியல், இந்நூற்றாண்டில் விரைவாக வளர்ந்துள்ள அறிவுத்துறை என்பதைத் தெளியலாம்.

## மொழியியலும் ஒப்பியன் மொழி நூலும்

இந்தக் கட்டத்தில், 'சென்ற சில நூற்றாண்டுகளில் சிறப்புற்று விளங்கிய ஒப்பியன் மொழி நூல்' (Comparative Philology) எனும் அறிவுத் துறையாக, மொழியியலைக் கொள்ள இயலாதா? எனும் ஐயம் எழலாம்.

இன்றைய மொழியியல், ஒன்பது பெரும் பகுதிகளாக அல்லது வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றே, 'வரலாற்று மொழியியல்' (Historical Linguistics) என்பதாகும். இதனுடைய ஒரு பகுதியாகக் கொள்ளப்படுவது 'ஒப்பியன் மொழி நூல்'. பெரிதும், இந்த மொழி ஆராய்ச்சி, இலக்கியச் செல்வம் வாய்க்கப் பெற்ற மொழிகளையே நிலைக்களனாகக் கொண்டது. மற்றும், கடந்த காலத்திய நிலையையும், இயல்பையும் மட்டுமே எடுத்துரைப்பது ஒப்பியன் மொழி நூல்.

---

*2. இதைப்பற்றி விரிவாகப் பேராசிரியர் நசுப்புரெட்டியாரின், மணிவிழா மலரில் 'இலக்கணமும் மொழியியலும்' எனும் இந்த ஆசிரியனுடைய ஆய்வுரையில் காணலாம்.*

இந்த விளக்கம் 'மொழியின் ஒருவகைப் புதிய அறிவுத்துறையே' என்பதனைப் புரிந்துகொள்ள உதவும் என நம்புகின்றேன்.

## பேராசிரியருக்கு உண்டான கவர்ச்சி

மொழியியல் கலையில் பேராசிரியருக்கு ஒருவகைத் 'தனிக் கவர்ச்சியே' இருந்து வந்தது. இதற்கு நான்கு வகைக் காரணங்களைக் கூறலாம் என நினைக்கின்றேன்.

பேராசிரியர் தமிழ் இலக்கணத்தை - தொல்காப்பியம் முதல் இலக்கண விளக்கம் வரையிலான இலக்கண நூல்களை - ஆழமாகக் கற்றவர் எழுத்து எண்ணிக் கற்றவர் ஒரு மொழியில் ஆழ்ந்த புலமை பெறுவதற்கு இலக்கண அறிவே முக்கியமானதாகக் கருதப்பட்ட காலத்தில், பேராசிரியர் தமிழையும், வடமொழியையும் கற்றார்.

இரண்டாவதாக இந்திய அளவை (தருக்க) நூல்களிலும், மேற்கு நாட்டு அளவை நூல்களிலும் (Logic) அவருக்கு ஆழ்ந்த புலமை இருந்து வந்ததுமேயாகும். இந்திய தத்துவ நூல்கள் பலவற்றைப் பேராசிரியர் கற்றவர். கல்லூரியில் இளங்கலை (B.A.) வகுப்பில், தத்துவத்தையே விருப்பப்பாடமாக பயின்றவர். அப்பொழுது அரிஸ்டாடிலின் அளவையியல் முதலாகச் சிரைட்டனின் தருக்கவியல், நீட்சேவின் (Nietzsche) சொல்லாட்சிக்கலை (Dialectics) ஈறாகப் பலவற்றைக் கற்றவர். இவற்றோடு, இன்றைய ஆராய்ச்சி நெறி முறைக்கு (Research Methodology) அடிப்படையாக அறிவாராய்ச்சி இயல் (Epistemology) எனும் கலையையும் அவ.ர் ஆழக்கற்று இருந்தார். இந்தப் புலமை, மொழியியல் சிந்தனையில் பேராசிரியருக்கு இயல்பாகவே ஒரு நாட்டத்தை உண்டாக்கிற்று.

மூன்றாவதாக, டாக்டர் யூலே பிளாக் (Jules Block) எனும் பிரான்சு நாட்டு மொழியியல் அறிஞர் ஒருவரின் நட்புறவு, இந்தநாட்டிலேயே உண்டானது ஓர் உந்துதல் சக்தியாக அவருக்கு அமைந்தது.

புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு இந்தியவியல் பண்பாட்டுக் கழகத்தின் (Institute of Indological Studies) தலைவராக 1935 அளவில், யூலே பிளாக் பதவியேற்றார். மொழியியல் அறிஞரான பிளாக், சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் திராவிட மொழியியலின் புதிய பரிமாணங்கள் (New Dimensions of Dravidic Studies) என்னும் தலைப்பில், 1937-இல் தொடர் சொற்பொழிவுகள் நான்கினைப் பிரஞ்சு மொழியில் ஆற்றினார். அதை, உடனுக்குடன் தமிழாக்கம் செய்தவர் நம்முடைய பேராசிரியர். அக்காலத்திலேயே பிரஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளை நம் அறிஞர் கற்றுக்கொண்டு இருந்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பன்மொழிப் புலவரான தெ.பொ.மீ. அவர்கள், உலக மொழிகளுள் தமிழுக்குரிய உண்மையான இடம் யாது என்பதைக் கண்டறிய

வேண்டும் எனும் பேரார்வம் உடையவராக அக்காலத்தில் இருந்தார். 'எத்திசையும் புகழ்மணக்க வீற்றிருந்த தமிழணங்கே!' எனப் பாடுவது போதாது! அவருடைய உண்மையான சிறப்புகளை உலகிற்கு உணர்த்த வேண்டும் எனும் துடிப்புடையவராக விளங்கியவர் தெ.பொ.மீ. இதனால், 1956-இல் அமெரிக்காவில் ஃபோர்ட் நிறுவனச் (Ford Foundation) சார்பில், பூனே தக்கணக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம் 'மொழியியல் கோடை வகுப்புகளை' இந்தியாவில் தொடங்கிய பொழுது, பேராசிரியர், பேரார்வத்தோடு சேர்ந்தார். டாக்டர் எம்னோ, டாக்டர் பர்ரோ, டாக்டர் கிளீசன், டாக்டர் நைடா, டாக்டர் யாசோப்சென், டாக்டர் ஹொயிங்ஸ் வால்ட், டாக்டர் சுநீதகுமார சாட்டர்ஜி போன்ற மொழியில் கலையின் ஜாம்பவான்களிடம் மொழியியலைக் கற்றார்.

ஆனால், ஆறு மாதத்திற்குள் ஒரு வியப்பிற்குரிய நிகழ்ச்சி நடந்தது. அந்த ஆண்டின் 'குளிர்கால மொழியியல் வகுப்பு', பூனேயில் நடைபெற்றது. அந்த வகுப்புப் பயிற்சியின் பொழுது, திராவிட மொழிகளின் வரலாற்று மொழியியல் பகுதிக்குப் பேராசிரியர் தெ.பொ.மீ., பேராசிரியராக நியமிக்கப்பட்டு இருந்தார். இந்திய மொழியியல் துறையின் தந்தையாக விளங்கிய டாக்டர் சுநீத குமார சாட்டர்ஜி, பேராசிரியரை இனங்கண்டு கொண்டார். பூனே ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநரான டாக்டர் கத்ரே, மகிழ்ச்சியோடு நம் பேராசிரியரை, அப்புதிய பொறுப்பில் அமர்த்தினார். தெ,பொ,மீ.யின் அறிவாற்றலை மதித்துப் போற்றத் தயங்கிய தமிழறிஞர்கள் பலர் அக்காலத்தில் இங்கு இருந்தனர் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

## பேராசிரியர் போற்றிய துறைகள்

இயல்பாகவே, பேராசிரியர் பேச்சுத்தமிழைப் போற்றியவர், 1950 வரையில், சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் வாழ்ந்த பாமர மக்களின் பேச்சுநடையிலேயே, மேடைகளில் முழங்கியவர் நம் பேராசிரியர். 'புலமை மிக்க பண்டிதர் ஒருவர், இப்படிக் கொச்சை மொழியில் பேசலாமா?' என்று அங்கலாய்த்துக் கொண்ட தமிழறிஞர் பலர் இருந்தனர்.

பள்ளி மாணவராக இருந்த எங்களுக்கே, சில சமயங்களில் அருவருப்பாக இருக்கும். சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் விழா ஒன்றில், 'பழகு தமிழ்' எனும் தலைப்பிலே பன்மொழிப் புலவரின் பேச்சைக் கேட்ட பொழுதுதான், எனக்கு அவருடைய பேச்சின் போக்கிலே ஈடுபாடு உண்டாயிற்று.

"சென்ற சில நூற்றாண்டுகளாகத் தமிழ்மொழி பேசப்படுவதிலே பெரிய பிளவு உண்டாகி இருக்கிறது. நாம் வீட்டில் பேசும் தமிழ், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சொல்லிக் கொடுக்கப்படும் தமிழினின்றும் வேறாக உள்ளது; மேடையிலே பேசும் தமிழ்

அன்றாடப் பேச்சு வழக்குத் தமிழிலே இருந்து வேறுபட்டு இருக்கிறது. இதைக் கண்ட ஐரோப்பியப் பாதிரிமார்கள், மக்கள் தமிழாகிய பேச்சு மொழியைக் 'கொடுந்தமிழ்' எனவும் இலக்கியத் தமிழைப் பண்டிதர் தமிழ், எனவும் 'செந்தமிழ்' எனவும் பெயரிட்டனர். இதோடு அவர்கள் நின்றுவிடவில்லை. கொடுந்தமிழ் இலக்கணம் எனும் நூலையும் எழுதினர்.

ஏன் இந்த நிலை ஏற்பட்டது? போதிய அளவிற்குத் தமிழறிவு நம் மக்களிடம் இடம் பெறாமையாலும், பலமொழியாளர்கள் தமிழ் நாட்டில் ஆதிக்கம் செலுத்தியமையாலும் இந்த மாற்றம் உண்டாயிற்று.

இப்பொழுது மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேற்றுமை, வீட்டுத் தமிழிலும் படிப்புத் தமிழிலும் காணப்படுகிறது. பண்டிதர் தமிழ் உயிர்த் துடிப்பு இல்லாது செயற்கையானது. நம் சனங்களுடைய உதடுகளில் எல்லாம் உலாவரும் தமிழ், பழகு தமிழ், அது உயிரோட்டம் உடையது. உயிர்த்துடிப்பு மிக்கது. உணர்ச்சியையும் பாவத்தையும் வெளிப்படையாகக் காட்டுவது.

இந்த இரண்டு தமிழையும் ஒன்றாக்கினால்தான், 'நல்ல தமிழ்' நாட்டில் உருவாக முடியும். இதனாலேயே, நான் பண்டிதத் தமிழில் பேசுவதில்லை! மக்கள் தமிழில், கொஞ்ச கொஞ்சமாக மாற்றம் செய்து, அவர்கள் பேசுவதைப் போலவே பேசி வருகிறேன். காலப் போக்கில், கொடுந்தமிழிற்கும் பண்டிதத் தமிழிற்கும் இடையே உள்ள இடைவெளி தூர்க்கப்படும். அப்பொழுது 'பழகு தமிழ்', 'கட்டளைத் தமிழாக' (Standard Tamil) மாறும்.

இந்தப் பணியை இராயப்பேட்டை முனிவர் திரு.வி.கலியாண சுந்தரனார் செய்து வருகிறார். சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களும் செய்தனர். இது போதுமா? போதாது.

இப்பொழுது தமிழில் வெளியிடப்படும் பத்திரிகைகளும், இந்த எண்ணத்தோடு வெளியிடப்பட வேண்டும். இன்றைக்கும் நம் பள்ளிக்கு விருந்தினராக வந்துள்ள திருவாளர் ஆதித்தநாடார், இந்தச் சிறந்த பணியை - பழகு தமிழைப் பரப்பும் பணியை அவருடைய பத்திரிகை[3] மூலம் செய்து வருகிறார் என்று வரவேற்புரை நிகழ்த்தினார். இந்த உள்ளார்ந்த உணர்வினால், பேராசிரியர் பேச்சுமொழி, கொச்சை மொழி ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டு இருந்தார். இதன் விளைவாக வட்டார மொழி இயல்பு பற்றியும், சாதி, தொழில் அடிப்படையில் பேசப்படும் கொச்சை மொழி பற்றிய ஆராய்ச்சியான சமூக மொழியியல் பற்றியும் அறிந்து கொள்ளுவதில் அவர் பேரீடுபாடு கொண்டு இருந்தார்.

3. அப்பொழுது (1945), 'தினத்தந்தி' அலுவலகம், சிந்தாதிரிப்பேட்டை அருணாசல நாயக்கன் தெருவில், மாதாகோயில் எதிரில் இருந்தது.

பிற்காலத்தில், மொழியாராய்ச்சியில் ஈடுபட்ட காலத்தில், ஒலியியல் (Phonology), வட்டார மொழியியல் (Dialectology) சமூக மொழியியல் (Socio-Linguistics) போன்ற துறைகளில் அவர் ஆர்வம் காட்டி வந்தர். இவற்றுடன், பண்டை இலக்கிய மொழிகளுக்குரிய வரலாற்று மொழியியல் (Historical Linguistics) துறையில் மூழ்கித் திளைத்தார். இதன் பிறகு *1955*-க்குப் பிறகு வளர்ச்சியுற்ற மாற்றிலக்கண (Transformational Grammar) மொழி இயலிலும் அறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் ஆழ்ந்த புலமையும் பரந்த அறிவையும் பெற்று, தமிழகத்தில் - தென்னிந்தியாவில் - ஒப்பற்ற மொழியியல் அறிஞராகச் சிறப்புற்று விளங்கினார்.

'வரலாற்று மொழியியல்' பேராசிரியரைப் பெரிதும் கவர்ந்த துறை என்பதை இங்குச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

**கற்றுக்குட்டி**

இவ்வாறு புதிய கலையாகத் தோன்றி வளர்ந்த மொழியியலில், பேரறிவு வாய்ந்தவராக விளங்கிய நம் பேராசிரியர், தம்மைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்து, நம்மைத் திடுக்கிடச் செய்கிறது.

"மொழியியல் தமிழிற்கு ஒரு வகையில் புதிதுதான். ஆனால், அதன் அடிப்படையில் சில, பழைய இலக்கிய அறிஞர்கள் கண்டவையே. ஒரு சிலர் மட்டும் அறிந்து, மூலைமுடுக்குகளில் முடங்கிக் கிடந்த விட்டவற்றை, எல்லோரும் அறிய வருவது இந்நாளைய போக்கின் சிறப்பாகும். இந்தப் புதிய வகையிலே மொழியியல், இக்காலத்தில் மேற்கேதான் வளரத் தொடங்கியது. உலகம் முழுவதும் ஒன்றாகி வருகின்ற இந்த நூற்றாண்டில், மேற்கில் எழுந்தாலும், கிழக்கில் எழுந்தாலும், விரைவில் அது, உலகப் பொதுப்பொருளாகி விடுகிறது. அந்த நிலையை மொழியியல் அடைந்து வருவதைக் காணலாம். ஆனால் மொழியியல் வளர்ச்சி நாளுக்கு நாள் மாறி, முன்னேறிக் கொண்டு வருகிறது. மொழியியலை மேனாட்டில் வளர்த்து வருவாரும், இந்த முன்னேற்ற ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க இயலாமல், திகைக்கின்றார்கள். இந்த நிலையில், இக்காலத் தமிழ் இலக்கணப் புலவர்கள், மொழியியலின் போக்கை அறுதியிட்டு உணர முடியாமையால், ஒன்று அதைக் கண்டு எள்ளி நகையாடுகிறார்கள் அல்லது தவறாகப் புரிந்து கொண்டு குட்டையைக் குழப்புகிறார்கள். இந்த அவல நிலை நீங்க வேண்டும் எனும் எண்ணத்தாலே, நான் ஏதேதோ எழுதி வருகின்றேன்"[4] என்று பேராசிரியரே, மொழியியலின் நோக்கையும் போக்கையும் தெளிவுறுத்தினார்கள்.

அடுத்துத் தம்மைப் பற்றி அவர் கூறியுள்ளதைக் காண்போம்.

---

4. மொழியியல் விளையாட்டு, முன்னுரை.

"நான் ஒரு கற்றுக்குட்டி. நான் பேராசிரியனாக இருந்த எந்தத் துறையிலும் பட்டம் பெற்றவனல்ல. எனவே, பேருக்குத் தான் நான் ஆசிரியன். உலகம் எப்படியோ என்னைத் தூக்கிலிட்டுக் கொண்டு வருகிறது. இருந்தாலும் அந்தந்தத் துறைகளிலே, கூட, எல்லா வற்றையும் அறிந்தேன் என்று நான் நினைத்தது இல்லை. இன்றும் மாணவன் சென்ற நிலையில், நான் அறிந்துகொண்டு வருவனவற்றை என்னுடைய தமிழன்பர்களோடு பகிர்ந்து, விருந்துண்ணவே விரும்புகின்றேன்"[5] எனும் அவையடக்கக் குறிப்புரை, அவருடைய சான்றாண்மையை வெளிப்படுத்துவதாகும்.

## பேராசிரியரின் மொழியியல் நூல்கள்

(1) தமிழ் ஒலிகள் (Tamil Sounds) எனும் எம்.ஒ.எல். (M.O.L.) பட்ட ஆய்வேடு (நூலாக) வெளியிடப்படவில்லை.

(2) அறுபத்தோராம் ஆண்டு மணிவிழா மலர் (ஆங்கிலம்)

(3) பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் மொழியியல், இலக்கிய ஆய்வுரைகள் ஆங்கிலம் (Sixty - First Birthday Commemoration Volume)

(4) தமிழ் மொழி வரலாறு (ஆங்கிலத்திலும் தமிழிலும்)

(5) தமிழ் (ஆங்கிலத்தில்)

(6) தமிழ் இலக்கணத்துள் அயற் பண்புகள் - ஆங்கிலம் (Foreign Models in Tamil Grammar)

(7) மொழியியல் விளையாட்டுக்கள்

(8) மாற்றிலக்கணம்.

இந்த எட்டு நூல்கள் அல்லாமல், நூற்றுக்குக் குறையாத மொழியியல் கட்டுரைகள், அவரால் பல்வேறு இதழ்களுக்கும் மலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்து இந்நூல்களின் சிறப்பு இயல்புகளைக் காண்போம்.

### (1) தமிழ் ஒலிகள்

புதுச்சேரியில் சிறப்புற்று விளங்கிய பிரான்சு நாட்டு மொழியியல் அறிஞரான டாக்டர் யூலே பிளாக்கின் மேற்பார்வையில், நம் பேராசிரியர் அவர்கள் 1937 முதல் 1940 வரை, எம்.ஒ.எல். (M.O.L.) பட்டத்திற்காகச் செய்த ஆராய்ச்சியே தமிழ் ஒலிகள் என்பதாகும். 1942-இல் நடைபெற்ற விடுதலைப்ம போராட்டத்தில் சிறை சென்று, மீண்டவுடன் 1943-இல் M.O.L. பட்டத்தை, இந்த ஆய்வேட்டிற்காக நம் பேராசிரியர் பெற்றார்.

5. மு.கு.நூ. முன்னுரை

இக்கால மொழியியலில், ஒலியியல் (Phonetic) எனப் போற்றப்படும் துறையில் பெற்ற பட்டம் இது.

தமிழ் மொழியில் வழங்கும் முப்பது முதலொலிகளையும், பிற சார்பொலிகளையும் பற்றிய ஆராய்ச்சி இது. அக்காலத்தில் மொழியியல் துறையில் சிறப்புற்று விளங்கிய கொள்கைகளின் ஒலியில், தமிழ் மொழியின் ஒலிகளை இந்நூலில் பன்மொழிப் புலவர் ஆராய்ந்துள்ளார். தொல்காப்பியம் முதல் முத்துவீரியம் வரையிலான தமிழ் இலக்கண நூலார், தமிழில் வழங்கும் ஒலிகளைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துகளையும், உரையாசிரியர்கள் தெரிவித்துள்ள அரிய செய்திகளையும் ஆய்விற்கு ஆசிரியர் எடுத்துக் கொண்டுள்ளார். டாக்டர் கால்டுவெல், குண்டர்ட், கிரியர்சன், சேஷகிரி ஐயர், பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி, மாகறல் கார்த்திகேய முதலியார் முதலிய அறிஞர்களின் எண்ணங்களை ஒப்பிட்டும், சீர்தூக்கி மதிப்பீடும் செய்துள்ளார். தமிழிற்கு இவ்வாய்வேடு ஒரு புதிய வரவு. தமிழாராய்ச்சி உலகில், ஒரு புது வழியை இது அமைத்துக் கொடுத்தது எனலாம்.

இந்தஆய்வேடு, இன்று வரை நூலாக வெளியிடப் பெறவில்லை எனும் மனக்குறை சிலருக்கு உண்டு. ஆனால், உண்மையைத் தெரிந்து கொண்டால், இம்மனக்குறைக்கு இடமில்லாமல் போகும்.

தமிழில் வெளிவந்துள்ள கலைக்களஞ்சியத்தின் ஒன்பது தொகுதிகளிலும், இடம் பெற்றுள்ள தமிழ் எழுத்துகளைப் பற்றிய கட்டுரைகள் யாவுமே, தெ,பொ,மீ,யால் எழுதப்பட்டவை. அவற்றுள், செம்பாதிக்குமேல், ஆய்வேட்டில் கருத்துகளாகத் தரப்பட்டுள்ளன. இவற்றோடு, தமிழ் எழுத்துகளின் வடிவங்களைப் பற்றிய வரலாறும் விளக்கப் படமும் புதியவனவாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த விளக்கவுரைகள் செறிவாகவும், செம்மையாகவும், முழுமை யாகவும் உள்ளன. 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப் போல, நாம் இப்பொழுது, தமிழின் சிறப்பொலியும் எழுத்துமாகிய ழகரத்தைப் பற்றிய தெ.பொ.மீ.யின் விளக்கத்தைக் காண்போம்.

"ழ" இது, தமிழ் மெய்யெழுத்து வரிசையில், பதினான்காம் எழுத்து. இதை இடையெழுத்தில் ஒன்றென்று இலக்கணப் புலவர் கூறுவர். இது ஒலிப்படை ஒலி (Voiced Letter) தொல்காப்பியத்தின்படி ரகரமும், றகரமும் பிறக்கும் இடத்திலேயே, இதுவும் பிறக்கும் (சூ 94).

அலரி நுனிநா அண்ணம் வருட ரகரமும் ழகரமும் பிறக்கும் என்பர் (சூ 95)

எனவே, இதை நாமடி (Retroflex) எழுத்து எனலாம்.

இன்று வல்லண்ணத்தின் இடைவரையில் நாநுனி செல்ல, ழகரம் பிறக்கிறது.

'ஷ' என்பது ஒலிப்பில் ஒலியானால், அதற்கேற்ற ஒலிப்புடை ஒலியாக, ழகரம் அமையும் எனலாம். ஆனால், ஒரு சிலர் ஒலிக்கும் முறையில், 'ழ' என்பத உரசுதல் (Fricative) இல்லாததாய்த் தொடர்ந்து ஒலிக்கும் (Continuant) ஒலியாகக் காண்கிறோம். ஆனால், இன்று ரகரம் பிறக்கும் இடத்தில் இது பிறப்பது இல்லை. பிரேகு (Prague) என்ற இடத்தில் இதனை ஆராய்ந்தபொழுது, வாயில், முன்னொலியாக அமைந்த ரகரத்திற்கு ஒப்ப, அவற்றுக்கு இடையே ஒலிக்கும் ஒலியாக இதைக் கண்டனர். இந்த ழகரம், ரகரம் போல நாவானது, அடுத்தடுத்து அசைவதால், ஒலிக்கும் என்பர். கமில்சுவெலபில். இது ளகரம் போல வாயின் இரு ஓரங்களிலும் மூச்சொலி தழுவப் போவதால், எழுவது அன்று. இதனை, ஒலிக்கும் போது, நாவின் இரு ஓரங்களும் அண்பல்லை ஒட்டி நிற்கக் காண்கிறோம். அடிநா, அண்ணத்தை நோக்கி எழும்பி, வீங்கி நிற்கவும் காண்கிறோம். இதனால், அவற்றின் பின்னே, யகரம் நீங்கிய இடையெழுத்துக்கள் ஒலிக்கும்போது, உகரவொலி விடுவொலி யாகக் (Release) கேட்கும்...

"ழகரம் பிற திராவிட மொழிகளில் ரகரமாகவும், ளகரமாகவும் பகரமாகவும் மாறக் காண்கிறோம். பிற்காலச் சோழர் காலத்தில் ழகரம், ளகரத்தோடும் மயங்கியது"[6]

இதுவரையில், நாம் கண்டது ழகரம் எனும் தமிழிற்கே சிறப்பாக உள்ள எழுத்தொலியின் பிறப்பு, ஒலிப்பு முறை, காலந்தோறும் அதன் ஒலிப்புமுறை எவ்வாறு திரிந்துள்ளது, அதன் பிறப்பு முறை பற்றி, இக்கால மொழியியல் அறிஞர் என்ன கருதுகின்றனர். இன்றைய திராவிட மொழிகளில் ழகரம், எவ்வெவ்வாறு திரிந்து வழங்குகின்றது என்பனவற்றைப் பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ள திறத்தைக் கண்டோம்.

இவ்வாறு ஆராய்வதை, ஒலியமைப்பு விளக்கவியல் (Phonological Description) முறை எனவும், ஒப்பீட்டு ஆய்வு (Comparative Method) முறை எனவும் மொழியியலில் கூறப்படும். இவ்விரு ஆய்வு முறைகளையும் இணைத்து, இக்கால ஆய்வின் முடிவுகளையும் சேர்த்து, பன்மொழிப் புலவர் விளக்கம் தந்துள்ளார். இதை அடுத்து அதன் வரிவடிவ வளர்ச்சியைக் கல்வெட்டுகளைக் கொண்டு விளக்கப் படங்களோடு பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.

இந்த வகையில் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள், திராவிட மொழிகளின் ஒலியமைப்பியல் (Dravidian Phonology) ஆராய்ச்சிக்கு முன்னோடியாக விளங்குகிறார்.

இந்த ஆய்விற்கு மேற்பார்வையாளராகவும், வழிகாட்டியாகவும் இருந்தவர் யூலே பிளாக் என்பதனை முன்னரே கண்டோம்.

---

*6. கலைக் களஞ்சியம், தொ9; ப.555.*

கால்டுவெலின் நூலில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி, சங்கப் பாடல்களைப் பயன்படுத்தி, பண்டைத் தமிழ்மொழியின் உண்மையான இயல்புகளை உலகிற்கு உணர்த்த அவர் முயன்றார். புதிய கண்ணோட்டத்தில், யூலே பிளாக் திராவிட மொழிகளை ஆராய முனைந்தார். அந்த முயற்சிக்கு நம் பேராசிரியர் உறுதுணையாக விளங்கினார். இவர்களின் முயற்சியின் பயனாக ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, பிரெஞ்சு மொழியிலே ஒரு நூல் உருப்பெற்றது. அது ஃபிரெஞ்சு மொழியில் வெளியிடப்பட்டது. அதனுடைய ஆங்கில மொழி பெயர்ப்பு 1954-இல், தக்கணக் கல்லூரி, ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பெயர், திராவிட மொழிகளின் இலக்கண வடிவ அமைப்பு (Grammation Structure of Dravidian Language) என்பதாகும்.

இந்நூலின் பல்வேறு கருத்துகளை, நம் பேராசிரியர் வகுப்பு அறையில் தண்ணீர் பட்ட பாடாக, எடுத்துரைப்பார்.

### (2) பேராசிரியர் தெ.பொ.மீ. அறுபத்தோராம் பிறந்தநாள் மலர் (ஆங்கிலம்)

இந்நூல், 1940 முதல் 1960 வரையில், ஆங்கிலத்தில் பேராசிரியர் வெளியிட்டிருந்த கட்டுரைகள் பதினைந்தை இலக்கியம், மொழியியல் எனும் இரு தலைப்புகளில், தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளனர். 'மொழியியல்' எனும் தலைப்பிலே ஆறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் இலக்கண மரபை அடியொற்றி எழுதப்பட்டனவாகத் தோன்றுகின்றன. தமிழ் இலக்கணத்தைப் பயிற்றுவிக்கும் முறை, தமிழ்ச் சொற்களில் போர்ச்சுகீசியரின் செல்வாக்கு, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பதினேழாம் நூற்றாண்டு தமிழ்மொழியின் எழுத்துகளும் ஒலிகளும், பதினேழாம் நூற்றாண்டின் தமிழ் மொழி, பதினெட்டாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கணம் எனும் கட்டுரைகள் இதில் உள்ளன. இவை ஓரளவிற்குப் புதுமைப் போக்குடையன.

'தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்' எனும் ஆய்வுரையில் கூறப்பட்டுள்ள கருத்துகள், எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய முழுமையான எழுத்துச் சீர்திருத்தத்திற்கு ஒரு திட்ட வரைபடமாக (Blue-Print) என்றும் உதவும் எனக் கூறலாம்.

### (3) பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் மொழியியல் இலக்கிய ஆய்வுரைகள் (ஆங்கிலம்)

இந்த நூலில், திராவிட மொழிகளில் பால்பாகுபாட்டின் வளர்ச்சியும் வரலாறும், இந்திய மொழிகளில் திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் செல்வாக்கு, மொழி பிரதிபலிக்கும் சமூக

இயல்புகள், தமிழ்ச்சொல், பொது மக்களின் பேச்சு மொழியில் 'இழும்' எனும் ஒலி நயமும், பாரதியார் அதைப் போற்றிய பாங்கும் எனும் ஐந்து கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

இவை, ஒவ்வொன்றும், ஒவ்வொரு வகையில் சிறப்புடையன. பேராசிரியரின் பன்மொழிப் புலமையையும் இவை வெளிப்படுத்துகின்றன.

### (4) தமிழ்மொழி வரலாறு

தமிழ்மொழியின் வரலாறு பற்றி முறையான ஒரு நூல், அறுபத்து ஐந்தாம் ஆண்டு வரையில் தமிழிலோ, ஆங்கிலத்திலோ முழுமையாக எழுதப்படவில்லை.

### முன்னோடி நூல்கள்

1900 அளவில், வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், 'தமிழ் மொழி வரலாறு' என்னும் சிறிய நூலினை வெளியிட்டார். அதனுள் தமிழ் இலக்கிய வரலாறு நான்கு இயல்களாகவும், தமிழ்மொழி வரலாறு இரண்டு இயல்களாகவும் அமைக்கப்பட்டு இருந்தன. பின்னர், 1946 அளவில் டாக்டர். பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரியாரால், 'தமிழ்மொழி வரலாறு' எனும் நூல் வெளியிடப்பட்டது. இந்நூலும் அளவால் சிறியதே. போதிய விளக்கம் இல்லாமல், ஆனால், புதிய நோக்கில் இந்நூல் எழுதப்பட்டு இருந்தது.

இதனை அடுத்து, 1953 அளவில், பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார், 'மொழி வரலாறு' எனும் நூலினை முதுகலை வகுப்புப் பாடத் திட்டத்திற்கு ஏற்றவாறு எழுதி, ஒரு நூலினை வெளியிட்டார். எண்பது பக்க அளவில் 'தமிழ்மொழி வரலாறும்' எனும் ஓர் இயல், இந்நூலில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். இந்தப் பகுதியில், தமிழ் மொழியின் வரலாறு, பண்பாட்டு வளர்ச்சி நிலையில் விளக்கப்பட்டு இருந்தது. வரலாற்று மொழியியல் நோக்கில் இவ்வியல் அமைக்கப்படவில்லை.

அந்நாள் வரை வெளிவந்து இருந்த மேற்கண்ட மூன்று நூல்களை, ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தாலும், தமிழ்மொழியின் முழுமையான வரலாறு கிடைக்கவில்லை. எனவே, இத்துறையில் சிறந்ததொரு நூல் தேவை எனும் மனக்குறை தமிழ் மாணவர் மத்தியிலும் அறிஞர் இடையேயும் இருந்து வந்தன.

### சிகாகோ சொற்பொழிவு

இந்த நிலையில் 1962-இல், சிகாகோ பல்கலைக் கழகத்தில் திராவிட மொழித் துறையைத் தொடங்கி வைப்பதற்கு நம் பேராசிரியர் அழைக்கப்பட்டார். அங்குத் தமிழ் மொழியைப் பற்றியும், தமிழிலக்கிய

வரலாற்றைப் பற்றியும் டாக்டர் தெ.பொ.மீ. அவர்கள், தொடர் சொற்பொழிவுகள் பத்தினை ஆங்கிலத்தில் செய்தார். அவற்றின் தொகுப்புகள், தாயகம் திரும்பிய பிறகு இரு நூல்களாக வெளியிடப்பட்டன.

தெ,பொ.மீ. அவர்கள், அமெரிக்காவிற்குப் புறப்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், மொழியியல் வகுப்புகளில் படித்து வந்த என்னைப் போன்ற மாணவர்களுக்குப் புரியும்வண்ணம், தம்முடைய சொற் பொழிவுகள் அமைந்துள்ளனவா என்பதை, வகுப்பு நேரங்களில் படித்துக் காட்டி, அவற்றுள் மாற்றமும் திருத்தமும் செய்து கொண்டார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## நூலின் சிறப்பு இயல்புகள்

இந்நூலை 1965-இல் தக்கண முதுநிலைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம், ஆங்கிலத்தில் வெளியிட்டது. பின்னர் 1973-இல் இந்நூலின் தமிழாக்கத்தை மதுரை, சர்வோதய இலக்கியப் பண்ணை வெளியிட்டுள்ளது. இந்நூலினை வெளிநாட்டு அறிஞர்களும், தாய்நாட்டு அறிஞர்களும் சிறப்புமிக்க ஒரு 'சாதனை'யாகப் போற்றலாயினர்.

இந்நூல் மொழியியல் கண்ணோட்டத்தில், வரலாற்றுப் பின்னணியில் எழுதப்பட்டது. மொழியியலில் பல துறைகள் உள்ளன. அவற்றுள் 'வரலாற்று மொழியியல்' என்பது ஒன்று. இந்தத் துறையில் நல்ல புலமை பெற்றவராக நம் பேராசிரியர் விளங்கினார்.

மொழிப் பாகுபாடு, மொழிக் குடும்பம், சொல்லமைப்புவழி மொழிப் பாகுபாடு, எழுத்துச் சான்றுகள் பயன்படும் பாங்கு, ஒப்பாய்வு முறை, மீட்டுருவ ஆக்கம், மொழியில் உண்டாகும் திரிபுகள், இழப்புகள் பற்றிய ஆய்வு, காலந்தோறும் சொற் பொருளில் உண்டாகும் மாற்றம், சொற்களைக் கடன் வாங்குதல் - ஒரு கிளைமொழியில் இருந்து மற்றொரு கிளைமொழிக்குக் கடன் வாங்கல், ஒரு மொழியில் இருந்து பிறிது ஒரு மொழிக்குக் கடன் வாங்கல் - எனும் பதினொரு வகை அமைப்புகளைக் கொண்டது பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. அவர்களின் தமிழ்மொழி வரலாறு எனும் நூலாகும்.

## அணுகுமுறை

'வரலாற்று மொழியியல்' ஆராய்ச்சியில் இருவகை அணுகு முறைகள் உள்ளன. குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், ஒரு மொழி எவ்வாறு இருந்தது என்பதை ஆராய்வது ஒரு முறை. இதனைக் குறிப்பிட்ட கால முறை என்பர். மற்றொன்று, காலந்தோறும் ஒரு மொழி, மாறியும், திரிந்தும் வளர்ந்துள்ளது என்பதை முற்காலத்தோடும், பிற்காலத்தோடும்

ஒப்பிட்டு ஆராய்ந்து, மொழி வளர்ச்சியின் நோக்கையும் போக்கையும் அறிய உதவுவதாகும். இதனைக் காலந்தோறும் மொழிநிலை வரலாறு என்பர். இவ்விரு அணுகுமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டே, தம்முடைய நூலினை, நம் பேராசிரியர் படைத்துள்ளார்.

## மொழியாராய்ச்சி

இத்தகைய மொழியாராய்ச்சியைப் பற்றிப் பேராசிரியர் மொழிந்துள்ளதை இங்கு நினைவுகூர்தல் வேண்டும்.

"இலக்கணம் என்பது ஒரு குறிப்பிட்ட மொழியைப் பற்றிய கொள்கை (Theory of Languages) என இந்நாளையோர் கூறுகின்றனர். இந்தக் கொள்கையின்படி எடுத்துக் கொண்டால் மொழியின், அடிப்படையாக விளங்கும், 'வாக்கியம் எப்படி அமைகிறது?' என்பதைப் பற்றிய கொள்கையே, சிறப்பிடம் பெறும்".

"எழுத்திலோ, பேச்சிலோ தனியன்களாக (Units) நிற்பவை எழுந்தும் அல்ல; சொல்லும் அல்ல; முற்று நிலைத் தொடரான வாக்கியமே ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டு ஆராய வேண்டும் என்பதே எழுத்துப் புரட்சி! ஆனால், பர்த்ருஹரி, தமது வாக்கியப் பதியத்தில், இக்கொள்கையைத்தான் பழங்காலத்திலேயே வற்புறுத்தியுள்ளார்" எனும் கருத்துரை இங்குக் கருதத்தக்கது.

## ஆதாரங்கள்

'தமிழ் மொழி வரலாறு' எனும் நூலினைப் படைப்பதற்குத் தொல்காப்பியம் முதல் பாரதி வரை வளர்ந்து வந்துள்ள. தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பேராசிரியர் ஆய்விற்கு எடுத்துக் கொண்டுள்ளார்.

மற்றும் சங்க காலத்திய குகைக் கல்வெட்டுகள் முதல் நாயக்கர் காலத் தமிழ்க் கல்வெட்டுகள் வரையிலான தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்பெறும் தமிழின் இயல்புகளை எல்லாம், பேராசிரியர் தம்முடைய ஆய்விற்குப் பயன்படுத்தியுள்ளார்.

## இருவகை வரலாறு

தம்முடைய நூலில், தமிழ்மொழியின் வரலாற்றை அகவரலாறு, புறவரலாறு என இரு பகுதிகளாக அவர் பகுத்துக் கொண்டுள்ளார். அகவரலாற்றில், தமிழ் மொழியின் இயல்புகள் காலந்தோறும் எவ்வாறு மாறியும் திரிந்தும் வந்துள்ளன என்பதைத் தெளிவுறுத்தியுள்ளார்.

## மொழி வரலாற்று நூல் தோன்றாமைக்குக் காரணம்

"பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு என்பது அறிவியல் அடிப்படையில் முதன் முதலாக உயிரியல் மாற்றங்களை ஆராய்வதற்கே

பயன்படுத்தப்பட்டது. பின்னர் அக்கோட்பாடு, மானிடவியலின் (Humanities) பல்வேறு துறைகளுக்கும் விரிவுபடுத்தப் பட்டது"[7] எனும் கருத்தினைப் பேராசிரியர் வெளியிட்டுள்ளார்.

ஆனால், இத்தகைய அடிப்படையில் நம் மொழியை ஆராய, நம் பெரியோர்கள் தயங்கியமைக்கு ஆசிரியர் ஒரு காரணத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

"மாறாத இளமையுடையதாக கன்னித் தமிழாக-மொழியைப்போற்றி மொழியைத் தெய்வ நிலைக்கு ஏற்றி, வழிபாடு செய்ததும், மொழி பற்றிய வரலாற்று அணுகல் முறைக்கு இடையூறு பயந்தது"[8] என்னும் கருத்துரை, ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

மற்றும், "பழமையை வழிபடுவதோடு, சரியானதென ஒப்புக் கொள்ளப் பொதுவாக மறுப்பினும்கூட, தமிழ் மொழி வரலாறு என்னும் கருத்துருவாக்கம் புதுமையானது. தமிழ் மொழியின் திரிபுற்ற வரலாறு என்பதிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது"[9] என்று தற்காப்பு முன்னுரையை ஆசிரியர் அமைத்து இருப்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

## தொல்காப்பியர் ஒரு புதிர்

இந்த நூலின் 'தொல்காப்பியத் தமிழ் ஒலியனியல்' சிறப்பு மிக்கதாகும்.

தொல்காப்பிய நூற்பாக்கள் இடையே காணப்பெறும் முரண் பாடுகள் பற்றி தெ.பொ.மீ. கொண்டுள்ள கருத்துக்கள் இங்குச் சிந்திக்கத் தக்கன.

தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றுக்கிடையில், முரண் பாடுகள் காணப்படுகின்றன. இதற்கு இரண்டு விதமான விளக்கங்கள் தரலாம்.

(1) தொல்காப்பியத்தில் சில இடைவெளிகள் காணப்படுவதாக எண்ணி, தொல்காப்பிய மாணவர் சிலர், நூற்பாக்களைத் தாங்களாகவே சேர்த்து இருக்கலாம்.

(2) தொல்காப்பியம் என்பது தனிப்பட்ட ஒருவரால் எழுதப் பட்டது என்பதைவிட, காலப்போக்கில் வளர்ச்சியுற்ற ஓர் இலக்கணச் சிந்தனை வட்டத்தினரின் கூட்டு முயற்சியால் உருவானதொன்றாக இருத்தல் கூடும்.[10]

என்னும் விளக்கத்தைப் பேராசிரியர் தந்துள்ளமை இங்கு ஆராயத் தக்கதாகும்.

7. தமிழ்மொழி வரலாறு, முன்னுரை.
8. மு.கு.நூ.முன்.
9. மு.கு.நூ.முன்.
10. மு.கு.நூ.பக். 77-78

மேலும், தொல்காப்பியத்துள் முரண்பாடுகள் உள்ளன என்பதனைப் பின்வரும் சான்றுகள் தந்து, பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.

"தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இறுதியில் உள்ள மரபியலில், 'பிள்ளை' என்ற சொல், குழந்தையைக் குறிக்க ஒரு பொழுதும் வழங்காது எனக் கூறப்படுகிறது. ஆனால், பொருளதிகாரப் புறத்திணை இயலில், 'பிள்ளை' என்ற சொல் குழந்தையைக் குறிக்கிறது. மரபியலில் வரும் சில நூற்பாக்கள் செய்யுளியலில், 'நூல்' பற்றிக் கூறப்பட்டவைகளின் தேவையற்ற "கூறியது கூறலும்", விரிவுமேயாம். இந்நூற்பாக்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டனவாக இருக்க வேண்டும்."

இவ்வாறு, பேராசிரியர் வெளிப்படுத்தியுள்ள கருத்து உண்மை நாடும் ஆராய்ச்சிப் போக்கில் எடுத்துரைக்கப்பட்டதாகும். இலக்கிய ஆராய்ச்சியில், இதே வகையான கருத்தினை வேறொரு முறையில் பேராசிரியர் தெரிவித்துள்ளதைக் கண்டோம்.

அடுத்து, புணர்ச்சி நிலையில், தமிழ்ச் சொற்களில் உண்டாகும் மாற்றங்களையும், திரிபுகளையும், சிதைவுகளையும் ஆசிரியர் விரிவாக விளக்கியுள்ளார். இதுவரையில் நுட்பமாக ஆராயப் பெற்றவை அனைத்தும், தமிழ் மொழியின் அக வரலாற்றில் அடங்குவன.

## புறவரலாறு

தமிழ் மொழியின் புறவரலாறு எனும் பகுதியில், தமிழும் பிற மொழிகளும் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்' எனும் பகுதி வட்டார மொழியியலையும், கிளைமொழியியலையும் பற்றியதாகும்.

## ஆராய்ச்சிக்குரிய குறிப்புகள்

இந்த நூல் முழுவதிலும், எதிர்காலத்தில் தமிழ் மொழியில் செய்யப்பட வேண்டிய ஆராய்ச்சிகளுக்குப் பயன்படக் கூடிய குறிப்புகள் பலவற்றை அங்கங்கே பேராசிரியர் சுட்டிச் செல்லுகிறார். அவை, தமிழ்மொழி ஆராய்ச்சியில் நாட்டம் கொண்டவருக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக அமையும் என நம்புகின்றேன்.

## குறையா? நிறையா?

இந்த நூலைப்பற்றிப் பலரால் பொதுவாகக் கூறப்படும் குறை, ஒன்றுண்டு. "இந்நூல், பயில்வோர்க்குப் (Learners) பயன்படுவதைக் காட்டிலும், பயின்றோர்க்கே (அறிஞர்களுக்கே) பெரிதும் பயன்படக் கூடியதாக உள்ளது" என்பதாகும்.

---

*11. மு.கு.நூ.பக்.78.*

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள், முறையான ஒரு வரலாற்றைத் தமிழ் மொழிக்கு, முதன்முதல் முழுமையாக எழுதி, வெளியிட்டுள்ளார்கள். மொழியியலின் அடிப்படையை அறியாதவர் களுக்கு இந்நூல் ஓரளவிற்குத்தான் பயன்படும். எனவே, இது இந்நூலின் குறை அன்று. முதலில், இந்த நூலை எழுதிய ஆசிரியர், எந்த நோக்கத்தோடு அதனைப் படைத்துள்ளார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## (5) தமிழ் (ஆங்கிலம்)

இந்த நூலினை, பண்பாட்டுத் தொடர்பை வளர்க்கும் 'இந்தியக் கழகம்' வெளியிட்டுள்ளது. இது சிறிய நூல். ஆனால் செறிவான, தெளிவான நூல்.

தமிழை அறியாத பிற மொழியாளர்கள், தமிழை அறிவதற்குப் பயன்படத்தக்க ஓர் அறிமுக நூல் என இதனைக் கூறலாம்.

தமிழ் மொழியின் ஒலியமைப்பில், தமிழ் மொழியின் இலக்கணக் கட்டமைப்பு, சொல்வளக் கட்டமைப்பு, சொற்பொருளியல் கட்டமைப்பு, மொழியின் வரலாறு எனும் பகுதிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.[12]

கலைக் களஞ்சியம் நான்காம் தொகுதியில், பத்துப் பக்கங்களுக்கு மேலாகத் தமிழ் மொழியின் வரலாற்றைப் பேராசிரியர் தெ.பொ.மீ. எழுதியுள்ளார். பலவகையில் அதனுடைய சுருக்கத்தை, ஆங்கிலத்தின் வாயிலாக, இந்நூல் வடிவில் முறைப்படுத்தித் தந்துள்ளார் எனக் கருத இடமுண்டு.

## 6. தமிழ் இலக்கணத்துள் அயல் கூறுகள் (ஆங்கிலம்)

இந்த நூலினைப் பேராசிரியர் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியைத் துறந்தவுடன் 'திராவிட மொழியியல் சங்கத்தின்' சிறப்பு அறிஞராகப் (Fellow) பொறுப்பேற்று, செய்த ஆய்வுத் திட்டத்தின் விளைவாகும்.

இந்த நூலின்[13] முன் - குறிப்புரையில் "பல்வேறு மொழிகளில் உள்ளனவற்றைத் தொகுதிநிலையில் இணைத்துத் தருவதில் ஒப்பற்ற அறிஞரான தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்"[14] என்று குறிப்பிட்டுள்ளமை கருத்தில் தக்கதாகும்.

## நூலமைப்பு

இந்நூலினுள், பதின்மூன்று இயல்கள் உள்ளன. அவை, தமிழ் இலக்கண வரலாறு, தொல்காப்பியத்தின் காலம், தமிழிலக் கணத்துள்

12.இந்நூலினை, Tamil; A Bird's Eye View. எனும் நூலில் சேர்த்துள்ளனர்.
13.Foreign Models in Tamil Grammar
14.Ibid. P.ii.

*சமஸ்கிருத அணுகுமுறை (வினைச் சொற்கள்), கலவை-1, கலவை-2, நிறைவுரை-1 வீர சோழிய காலத்திய தமிழின் புதுமைக் கூறுகள், நிறைவுரை-2: தமிழ் எழுத்து முறை (தழுவலா?), நிலைவுரை-3: எழுத்து முறையும் அதன் செல்வாக்கும், நிறைவுரை-4: முக்கிய திராவிட மொழிகளில் சிறப்பாகக் காணப்படும் இலக்கண ஒப்பாய்வுக்குரிய கூறுகள் என்பன.*

*இந்தத் தலைப்புகளே, ஓரளவிற்கு இந்நூலின் நோக்கும் போக்கும் யாது என்பதைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.*

## இலக்கண வரலாறு

*கடந்த ஈராயிரம் ஆண்டுகளில், தமிழில் பலவகை இலக்கணங்கள் தோன்றியுள்ளன. முதலில் எழுத்து, சொல், பொருள் எனும் முப்பகுதிகளைக் கொண்டதாக இருந்த தமிழிலக்கணம் காலப் போக்கில், நான்காக (யாப்பு), ஐந்தாக (அணியியல்), ஆறாகப் (பாட்டியல்) பல்கிப் பெருகின. இவற்றுள், இந்த நூலில், பெரிதும் எழுத்து, சொல், இலக்கணப் பகுதிகளே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.*

## பரந்த இந்திய மனப்போக்கு

*அடுத்துள்ள 'தொல்காப்பியனாரின் காலம்' எனும் இயல், சிக்கலான ஒரு பிரச்சினையை, நடுவு நிலையில் மொழியியல் கண்ணோட்டத்தில் அணுகுவதைக் காணுகின்றோம்.*

*தொல்காப்பியருக்குச் சமஸ்கிருத அறிவு இருந்தது. அதனாலேயே "வடசொற்களைத் தமிழில் எவ்வாறு வழங்க வேண்டும்" என்பதைத் தெரிவித்துள்ளார் என்பது பிரயோக விவேக இலக்கண நூலாரின் கருத்து. இதை ஒரு குறைபாடாகச் சிலர் கருதுவதில் பொருள் இல்லை. அன்றைய இந்தியாவில், 'தமிழோடு ஒத்த வளமுடைய மொழி, சமஸ்கிருதமே. எனவே, மொழி இலக்கன அறிஞரான தொல்காப்பியர் அந்த மொழியைப் பயின்றவராக இருந்தால், அதனால் வரக்கூடிய குறை யாது?' என்பது நம் பேராசிரியர் எழுப்பியுள்ள வினாவாகும்.*

*இங்குப் பன்மொழிச் செல்வருக்குப் பெரிதும் விருப்பமான அவருடைய 'பரந்த-இந்திய மனப்போக்கு'* (Pan Indian) *எனும் கொள்கையின் ஒளியில் இந்தச் சிக்கலுக்கு விளக்கம் கூற முயன்றுள்ளார். "பரந்த இந்தியாவிற்குரிய சமஸ்கிருத மொழியைத் தொல்காப்பியர் அறிந்திருந்தமையால், 'தனித்தமிழ் மதி நுட்பத்தை' அவர் ஒன்றும் கெடுத்துவிடவில்லை"[15] என்று அறிஞர் தெ.பொ.மீ. அறிவுறுத்துகிறார்.*

*15. மு.கு.நூ. ப.17*

## தொல்காப்பிய அடுக்குகள்

தொல்காப்பியத்தில் பல அடுக்கடுக்கான கருத்துகள் இடம் பெற்றுள்ளதைக் கோடி காட்டுகிறார். பிறகு இந்தக் குழப்பத்தில் இருந்து, தெளிவு உண்டாக வேண்டுமானால், ஒரே பெயரையுடைய இரு அறிஞர்கள், காலத்தால் முன்னும் பின்னும் வாழ்ந்து இருக்கலாம். அவர்கள் இருவருமே மாபெரும் ஆசான்களாகச் சிறப்புற்று விளங்கி இருக்கக்கூடும். அவர்களுடைய எண்ணப் போக்குத் தமிழின் வளர்ச்சி நிலைகளைக் குறிப்பனவாகக் கொள்ளலாம்[16] என்பது பேராசிரியரின் துணிவாகும்.

இதனால், அவருடைய நூல்கள் அனைத்திலுமே, தொல் காப்பியனார் எனும் பெயரில், குறைந்தது இருவராகிலும் இருந்திருத்தல் வேண்டும் எனும் கருத்து, முனைப்பாகத் தோன்றுகிறது.

## வடமொழி நோக்கில் தமிழ் இலக்கணம்

வீரசோழியமும், பிரயோக விவேகமும் சமஸ்கிருத மொழியின் இலக்கண இயல்புகளைத் தமிழிலக்கணத்தில் பொருத்திக் காட்டியுள்ளமையை அடுத்து ஆசிரியர் மதிப்பீடு செய்துள்ளார்.

திராவிட மொழி இலக்கணங்களிடையே, காணப்படும் பொதுமைக் கூறுகள் வருங்கால ஆராய்ச்சியாளர்களுக்குப் பேருதவியாக அமையும்.

இந்த நூல் ஒரு புதிய முயற்சி, சிக்கலான முயற்சி: பேருழைப்போடு பல ஆண்டுகள் தொடர்ந்து செய்யப்பட வேண்டிய முயற்சி. குறுகிய காலத்தில், பேராசிரியர் இந்த ஆய்வுத் திட்டத்தைச் செயல் படுத்தியுள்ளார்.

## நூலின் தலைப்பு

'தமிழிலக்கணத்தில் அயல்மொழிக் கூறுகள்' எனும் தலைப்பு, முற்றிலும் பொருந்தக் கூடியதாகத் தோன்றவில்லை. இந்நூலில், பெரிதும் சமஸ்கிருத இலக்கணக் கூறுகள், எவ்வாறு தமிழில் இடம் பெற்றுள்ளதாக, வடமொழி மாயையில் சிக்கிய இரு இலக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் பொருத்திக் காட்ட முயன்றுள்ளதையே, இந்நூல் விரித்துரைக்கிறது. எனவே, "தமிழ் இலக்கணத்தில் சமஸ்கிருத இலக்கணத்தின் தாக்கம்" எனும் பெயரினை, இந்நூலுக்குச் சூட்டியிருந்தால் மிகவும் பொருந்தமாக இருந்திருக்கும்.

## 7. மொழியியல் விளையாட்டுக்கள்

தம்மை மொழியியல் கற்கும் ஒரு குழந்தையாகக் கருதும் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள், "எனவே, குழந்தை விளையாட்டுப்

---

16. மு.கு.நூ. ப.19.

போல, என்னுடைய மொழியியல் விளையாட்டுக் களையும் எழுத வேண்டும். விளையாடி, விளையாடித்தானே குழந்தை உயர்கிறது"[17] என்று தெரிவித்துள்ளார்.

## எளிய முறையில் அரிய கருத்து விளக்கம்

இந்நூலில் உள்ள முதல் கட்டுரை, மொழியியல் வரலாறு என்பதாகும். பண்டை உலகில் நடைபெற்ற மொழிபற்றிய ஆராய்ச்சி, இடைக்கால உலகில் நிகழ்ந்த மொழிபற்றிய ஆராய்ச்சி ஆகியவற்றைச் சுருக்கமாக, இக்கட்டுரையின் முற்பகுதி கூறுகிறது. அடுத்துப் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் உலகில், மொழியாராய்ச்சி, ஒப்பிலக்கண ஆராய்ச்சிக்காக வளர்ந்த பாங்கு ஆசிரியரால், நன்கு தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

பிறகு, இந்நூற்றாண்டில், மொழியியல் ஆராய்ச்சி எவ்வாறு பல வகையாகப் பெருகி வளர்ந்துள்ளது என்னும் முறையை மிகவும் விரிவாகப் பேராசிரியர் எடுத்துரைத்துள்ளார். இடையிடையே, புதிதாக வளர்ந்துள்ள சிக்கலான மொழியியல் கொள்கைகளை, எளிமையான எடுத்துக்காட்டுகளைக் கொண்டு, தெளிவுறுத்தும் முறை, நம் சிந்தையைக் கவருவதாகும்.

'பேச்சின் ஆழத்தைப் பார்' எனும் இரண்டாவது கட்டுரை, நோம்சாம்ஸ்கியின் இலக்கண மரபைச் சுவையான காட்டுகள் தந்து, ஆசிரியர் விளக்கியுள்ளார்.

'மொழிக் கோயில்' எனும் மூன்றாவது கட்டுரை, மொழியியல் ஆராய்ச்சி நிறுவனங்களைப் பற்றிய பொதுச் செய்திகளைத் தொகுத்துத் தருவதாகும்.

அடுத்துத் 'தகப்பன்', வந்தேங்கிறங்கோ எனும் இரு சொற்களின் அமைப்பினையும், புணர்ச்சி நிலையையும், திரிபினையும் அவற்றின் வரலாற்றையும் நம் பேராசிரியர் விளக்குமுகந்தான், சொல் ஆராய்ச்சியை நயமுறச் செய்துள்ளார்.

இந்த நூலினை, எளிய முறையில் யாவரும் மொழியியல் உண்மைகளை உணரத் தக்க வகையில், அறிஞர் தெ.பொ.மீ. விளையாட்டாகவே வெளியிட்டுள்ளார்.

## 8. மாற்றிலக்கணம்

பேராசிரியரின் மறைவிற்குப் பிறகு, வெளியிடப்பட்ட நூல்களுள் இது ஒன்று. மொழியியல் சிந்தனையில், இருபது ஆண்டுகளுக்கு முன்னர், திடுமெனத் தோன்றி, பெருவளர்ச்சியைப் பெற்ற துறை, மாற்றிலக்கணம் (Transformational Grammar) என்பதாகும்.

17. மொழியியல் விளையாட்டுக்கள், முன்.

## நூல் அமைப்பு

இச்சிறு நூலில், ஆறு இயல்கள் உள்ளன. மொழியியல் விஞ்ஞானம், மாற்றியல் - கண்ணாம்பூச்சி (மாற்று இலக்கணம்), உள்வாக்கியம், நிகண்டும் சொற்கூறுகளும், வினைச் சொல், பெயர் பற்றி எனும் இயல்கள் உள்ளன.

எல்லோர்க்கும் தெரிந்த உவமைகள், பழமொழிகள், மரபுச் சொற்களைக் கொண்டு, பல நுட்பமான மொழியியல் கருத்துகளை ஆசிரியர் விளக்கிச் சொல்லுகிறார். தெ,பொ.மீ. அவர்களுடைய முதிர்ந்த அறிவும், கனிந்த அனுபவமும் இந்த நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் பளிச்சிடுகின்றன. ஓரளவிற்கு மொழியறிவு உள்ளவர்களும் இந்த நூலைப் படித்துப் புரிந்து கொள்ளலாம்.

''மாற்றிலக்கணம் பற்றிய தமிழ் நூல், முதன்முதலாக, நம் பேராசிரியர் கைவண்ணத்தால் தமிழுலகிற்குக் கிடைத்துள்ளது. சிறப்புமிகு இந்த மொழியியல் துறை பற்றிய நூல்கள், இன்றுவரை தமிழில் இரண்டு நூல்களே வெளிவந்துள்ளன. இதற்கு முன்னோடி, பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. அவர்கள் படைத்துள்ள இந்நூலேயாகும்."

இந்நூலின் கருத்துகளை மேற்கோளாகக் காட்டி விளக்க இயலாது. நூலினை முழுவதுமாகப் படித்துத்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

எளிய, சிறிய, தெளிவான நூலாக இது அமைந்து இருக்கிறது. மொழியியலுக்கு, இந்நூல் சிறந்ததொரு கொடையாகும்.

## கால்டுவெல் ஒப்பிலக்கணம் அடிச்சொற்கள் (மொழிபெயர்ப்பு)

மேற்கண்ட எட்டு நூல்கள் அல்லாமல், வேறு பல கட்டுரைகள் மொழியியல் தொடர்புடையனவாக ஆங்கிலத்திலும் தமிழிலும் பேராசிரியரால் வெளியிடப்பட்டுள்ளன.

இவை அல்லாமல், கால்டுவெலின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண'த்துள் முதல் அதிகாரமான 'அடிச்சொற்கள்' தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

காரல்மார்க்சின் மாபெரும் படைப்பான மூலதனம் (Das Capital) எனும் நூலைப்பற்றிப் பேர்னாட்ஷா தெரிவித்த கருத்து ஒன்று நினைவிற்கு வருகிறது. இன்று உலகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும், சுற்றாரும் கல்லாத வரும், மார்க்சின் மூலதனத்தைப் பற்றிப் பேசுவதை ஒருவகை நாள் வண்ணமாகக் கொண்டுள்ளனர்.

ஆனால், இவர்களுள் எத்தனைப் பேர், அந்த நூலை முழுமையாகப் படித்துப் பார்த்து விட்டு, அதன்பிறகு, அதனைப் போற்றவோ, தூற்றவோ செய்கிறார்கள் என நினைக்கிறீர்கள்?...

நான் அறிந்தவரையில் இரண்டே பேர்தான் அந்த நூலை முழுமையாகப் படித்தவர்கள். அவர்களுள் ஒருவரே, அந்த நூலைப் புரிந்து கொண்டவர்! அந்நூலைப் பதிப்பித்தவரும், மார்க்சின் கூட்டாசிரியருமான ஏங்கல்ஸ் (Engels) என்பவர் ஒருவராவர். மற்றொருவர், மார்க்சின் தத்துவத்தை நடைமுறைக்கு ஏற்பச் சிறிது மாற்றி, 'கம்யூனிசக்' கொள்கையாக்கி, சோவியத் ருஷியாவை, அந்தக் கொள்கைப்படி ஒரு கம்யூனிச நாடாக மாற்றிய மாபெரும் தலைவரான லெனின் என்றும் ஷா தெரிவித்துள்ளார்.

இதைப் போன்றுதான், திராவிட மொழி ஆராய்ச்சியாளர்களைப் பற்றியும் கூற வேண்டும். மொழியில் அறிஞர்கள் - சிறப்பாகத் தென்னிந்திய மொழி ஆராய்ச்சியாளர்களும், முதுகலைப் பட்டம் பெற்றவர்களும் கால்டுவெலின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக் கணத்தைப்' பற்றிப் பலவாறாக எழுதியும் பேசியும் வருகின்றனர்.

ஆனால், எத்தனை பேர், அதனை, முழுமையாகப் படித்துப் பார்த்தவர்கள் என்பதை ஆராய்வோமானால், தமிழ் நாடடைப் பொருத்த வரையில், ஐந்து அல்லது ஆறு அறிஞர்கள்தான் தேருவர். விரல்விட்டு எண்ணக்கூடிய அந்த 'ஒரு சிலருள்', நம் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் முதன்மை இடம் பெறத் தக்கவராவர்.

இந்த நூலைப் பற்றிப் "பேராசிரியர் கால்டுவெல் - அவர்களின் ஒப்பிலக்கணம் அறிஞர் உலகம் போற்றும் ஒரு நூல். திராவிட மொழி ஆராய்ச்சிக்குக் கடைகாலாக என்றென்றும் இந்நூல் விளங்கி வரும்"[18] என்று பேராசிரியர் மொழிந்துள்ளமை, இந்த நூலின் சிறப்பிற்குச் சூட்டப்பட்ட புகழ்மாலையாகும்.

### வாழும் கால்டுவெல்

பேராசிரியர் கால்டுவெலின் கருத்துகளை அப்படியே ஏற்றுக் கொள்ளுவதில்லை. *1960*-இல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், கால்டுவெலின் படத்தைத் திறந்து வைத்து, நூற்றாண்டு விழாச் சிறப்புச் சொற்பொழிவினைப் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் ஆற்றினார். அச்சிறப்புரையின் தலைப்பு, 'வாழுகின்ற கால்டுவெல்' என்பதாகும். அச்சொற்பொழிவின் முடிவுரையில், 'அவருடைய நூலின் நாற்பது' பக்கங்களிலேயே கால்டுவெல் இன்றும் வாழ்ந்து வருகிறார் என்று தெ.பொ.மீ. அவர்கள் மதிப்பீட்டு முறையில் தம் கருத்தைத் தெரிவித்தார்.

கால்டுவெலின் 'அறிமுகம்' எனும் பகுதியில் சில கருத்துகளும், வினைச் சொற்களைப் பற்றியுள்ள சில கருத்துகளையும் தவிர, பிற கருத்துகள் யாவும், காலத்தால் கறைபட்டுவிட்டன. கால்டுவெலுக் குப் பிறகு செய்யப்பட்டுள்ள திராவிட மொழிகளின் ஆராய்ச்சி களால்,

*18.* கால்டுவெல் ஒப்பிலக்கணம் - அடிச்சொற்கள், முன்னுரை.

அவருடைய கருத்துகளுள் பெரும்பாலானவை பொய்த்துப் போய்விட்டன என்பது டாக்டர் தெ.பொ.மீ. அவர்களின் கருத்தாகும். "அழகிய ஆங்கில நடைக்காக அந்நூலை ஒருமுறை முழுவதுமாகப் படிக்கலாம். ஆனால், அந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துகளுள் எண்பது விழுக்காட்டிற்கு மேல், இன்று பொருந்தாதவை என்பதனை மறந்துவிடலாகாது" எனும் துணிவுரை, மொழியியல் மாணவர்க்கும் அறிஞர்க்கும் தெ.பொ.மீ. அவர்கள் செய்துள்ள எச்சரிக்கையாகும். இவ்வாறு ஆணித்தரமாகத் திடுக்கிடச் செய்யும் கருத்தை அவர் கூற வேண்டுமானால், எத்தனை முறை அந்த நூலை அவர் படித்து இருப்பார் என்பதை நாம் நினைந்து பார்க்க வேண்டும்.

தம்முடைய கால்டுவெலின் மொழிபெயர்ப்பு நூலின் ஒவ்வொரு பக்கத்திலும், அடிக்குறிப்புகளை மிகுதியாகப் பேராசிரியர் கொடுத்துள்ளார். அவற்றுள் சில, கால்டுவெலின் கருத்திற்கு விளக்கம் தருவனவாகவும், சில அவருடைய கருத்துகளை மறுப்பனவாகவும் உள்ளன.

அந்த நூலின், அடிக்குறிப்பு எண், ஐந்தினை, ஓர் எடுத்துக் காட்டாக இங்குக் கொள்ளலாம்.

''சிலபில் (Syllable) என்றால், அலகு பெறும் எழுத்தாம். வடமொழியில் எழுத்துக்கள் வர்ணங்கள் என்றும், அக்ஷரங்கள் என்றும் பிரிப்பர். வர்ணம் ஆங்கிலம் முதலியவற்றில் வழங்கும் எழுத்தாம். அக்ஷரம் அலகு பெறும் எழுத்தாம். தனி மெய்யும், தனி உயிரும் வர்ணமாம். உயிர்மெய் எழுத்தும், தனியே எழுதப் பெறும். உயிர் எழுத்தும் அக்ஷரமாம். பின்னவையே அலகு பெறும்" என்பது கால்டுவெலின் கருத்திற்கு ஐயா தந்துள்ள விளக்கமாகும்.

இனி, கால்டுவெலின் கருத்தினை ஐயா, மறுக்கும் நிலை, ஒன்றைக் காண்போம். அடிக்குறிப்புப் பதின்மூன்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

"காய்க்கு' எனவொரு வடிவம் தமிழில் காணக்கிடைக்கவில்லை. காய், காய்க்க (ஆடா-நி), காய்ச்ச என்ற வடிவிலேயே வழங்குகின்றன. இவ்விரண்டிற்கும் வேற்றுமை உண்டு. காய்ச்ச என்பதிலிருந்து 'காய்க்க' என்ற பகுதியைக் கற்பனையாகக் கால்டுவெல் கொள் கின்றனர் போலும்". எனும் நியாயமான மறுப்புரை, இங்குச் சிந்திக்கத் தக்கதாகும். இவ்வாறு பேராசிரியர், கால்டுவெலின் கருத்துகளை மறுக்கும் இடங்கள் பல. அவற்றையெல்லாம், தொகுத்துப் பார்த்தால், திராவிட மொழியியலின் வளர்ச்சிநிலை புலப்படும்.

## 'சாரியை' என்பன யாவை?

1959 ஆம் ஆண்டில், மொழியியல் அறிஞர் டர்னரின் (Turner) சிறப்பு மலர் ஒன்றினை "இந்திய மொழியியல்" (Indian Linguistics) எனும்

ஆராய்ச்சி இதழ் வெளியிட்டது. அதில், "The So called Inflexional Increments in Tamil. எனும் ஆய்வுரையை தெ.பொ.மீ. வெளியிட்டுள்ளார்கள்.[19] அக்கட்டுரையின் ஒரு பகுதியை இங்குக் காண்போம்.

"சாரியைகள் பொருளைப் புலப்படுத்துவன இல்லை என்பது மரபுவழிப்பட்ட கருத்து. இதனைத் தெ.பொ.மீ. அவர்கள் மறுத்துரைக்கிறார். "சாரியைகளும் பொருள் தருவனவே" என்பது அவருடைய துணிவு. இதற்கு எடுத்துக்காட்டாக

நான் - நாம்

நின் - நும்

தன் - தம் என்பனவற்றை ஒப்பு நோக்கினால், னகரம் ஒருமை உருபு என்பதும், மகரம் பன்மை உருபு என்பதும் புலப்படும்.

தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட தமிழில், 'மரன்-மரம்' என்னும் வழக்கு இருந்தது. 'மரன்' என்பது ஒருமையையும், 'மரம்' என்பது பன்மையையும் உணர்த்தி இருக்க வேண்டும்.

இத்தொடர்பு மறக்கப்பட்ட பிற்காலத்தில், மரன்-மரம் போலியாயின. அன் சாரியை அம் சாரியையாக மாறினாலும், அது ஒருமையைச் சுட்டவல்லதாகவே இருந்து வருகிறது. இதனால்,

அன் - ஒருமை உணர்த்தும் உருபாகவும்

அம் - பன்மை உணர்த்தும் உருபாகவும்

தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட நிலையில் இருந்திருத்தல் வேண்டும்.

'அம்'மைப் போன்று 'அர்', 'இர்' என்பனவும் பன்மையைச் சுட்டுவன என்பது அறிஞர் தெ.பொ.மீ. அவர்களின் துணிவாகும்.

இந்த அடிப்படையில்,

யான் - யாம்

நான் - நாம்

என் - எம்

இவற்றை எல்லாம் கால்டுவெலே, ஒருமை, பன்மையென்று விளக்கியுள்ளார்.

மரன்-மரம் என்னும் அஃறிணைச் சொற்களிலும் ஒருமை, பன்மையையே கட்டவனவாக அறுதியிட்டு தெ.பொ.மீ. கூறியுள்ளமை, 'சாரியை' பற்றிய புதிய ஒளியைத் தருகிறது.

19. R.L. Turner"s Jubilee Volume Indian Linguistics, No.2.

இவை அல்லாமல், கிளை மொழிகள், வட்டார மொழிகள், பேச்சு மொழிகள் பற்றியும் அறிஞர் தெ.பொ.மீ. அவர்களின் சில ஆய்வுரைகளை வெளியிட்டுள்ளார். 'தமிழில் பிறமொழிச் சொற்கள்' பற்றியும் விரிவான ஆராய்ச்சியைப் பேராசிரியர் செய்துள்ளார்.

மற்றும் தமிழ்மொழியின் தமிழ் எழுத்துகளை, அறிவியல் வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் மாற்றியும், திருத்தியும் குறைத்தும் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் எனும் கருத்து உடையவராகப் பன்மொழிப் புலவர் விளங்கினார். இவருடைய கருத்துப்படி ஐந்து உயிர் எழுத்துகளும், பதினைந்து மெய் எழுத்துகளும் இருந்தால் போதும் என்பதாகும்.

இவ்வாறு இந்த நூற்றாண்டில், வளர்ந்து வந்துள்ள மொழியியலின் பல்வேறு பகுதிகளைத் தமிழ்மொழிக்குப் பொருந்திக் காட்டியும், அம்முறைகளில் வளர்த்தும் வந்துள்ளார். வருங் காலத்தில் செய்ய வேண்டிய ஆராய்ச்சித் துறைகளையும் பேராசிரியர் இவற்றுக்கு இடையே கோடி காட்டியுள்ளார்.

# பேராசிரியர் டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் நூல்கள்

## (அ) தமிழ் நூல்கள் (கால அடைவு)

### 1. ஆராய்ச்சி நூல்கள்

1. கோயிலை இடிப்பதா? கொண்டு திருத்துவதா?
   -சாதுரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை, 1929.
2. இராமாயண போராட்டம் (குருடன்கனா, ஊமையன் உளறல்)
   -சாதுரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை, 1929.
3. வள்ளுவரும் மகளிரும்.
   -சாதுரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை, 1930.
4. மானத சாத்திரம் (Psychology) பகுதி 1-2
   -சென்னைத் தமிழ்ச் சங்கம், சென்னை, 1944.
5. கால்டுவெல் ஒப்பிலக்கணம் - அடிச்சொற்கள் (மொழி)
   குறிப்புரையுடன் - சென்னைத் தமிழ்ச் சங்கம், சென்னை, 1944.
6. சூளாமணி (வசனம்)
   -சென்னைத் தமிழ்ச் சங்கம், சென்னை, 1945.
7. அன்புமுடி
   -அல்லயன்சு, சென்னை, 1945.
8. பிறந்தது எப்படியோ?
   -பாரி நிலையம், சென்னை, 1950.
9. தமிழா நினைத்துப் பார்
   - தெ.பொ.மீ. வெள்ளிவிழாக்குழு, சென்னை, 1954.
10. நீங்களும் சுவையுங்கள்
    - தெ.பொ.மீ. வெள்ளிவிழாக்குழு, சென்னை, 1954.
11. வள்ளுவர் கண்ட நாடும் காமமும்
    - தெ.பொ.மீ. வெள்ளிவிழாக்குழு, சென்னை, 1954.
12. நற்றினை நாடகங்கள்
    - தெ.பொ.மீ. வெள்ளிவிழாக்குழு, சென்னை, 1954.
13. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1955.

14. சம்பந்தரும் சமணரும்
- ருத்திரா பதிப்பகம், சென்னை, 1957.

15. குலசேகரர்
-மணிவிழாக்குழு, கலைக்கதிர், கோவை, 1961.

16. சமணத் தமிழ் இலக்கிய வரலாறு
-மணிவிழாக்குழு, கலைக்கதிர், கோவை, 1961.

17. கானல்வரி
-மணிவிழாக்குழு, கலைக்கதிர், கோவை, 1961.

18. கவிஞர் இரவீந்திரநாத தாகூர்
-அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், 1961.

19. குடிமக்கள் காப்பியம்
- தொல்காப்பியர் நூலகம், சென்னை, 1961.

20. சயாமில் திருப்பாவை திருவெம்பாவை
- பாரிநிலையம், மதுரை, 1962.

21. தமிழ்மணம்,
- மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1962.

22. பாட்டிலே புரட்சி
- தொல்காப்பியர் நூலகம், சென்னை, 1961.

23. கல்விச் சிந்தனைகள்
- சேகர் பதிப்பகம், சென்னை, 1965.

24. நாடகக் காப்பியங்கள்,
- சேகர் பதிப்பகம், சென்னை, 1965.

25. தமிழும் பிற பண்பாடும்
- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1974.

26. ஆழ்நிலைத் தியானம்
- சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1974.

27. வாழுங்கலை
- சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1975.

28. மொழியியல் விளையாட்டுக்கள்
- சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1977.

29. தேனிப்பு
- சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1978.

30. தமிழ் இலக்கிய வரலாறு - சங்க காலம்
- சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1981.

31. பத்துப்பாட்டு ஆய்வு
- சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1981.

32. உலக நாகரிகத்தில் தமிழரின் பங்கு
- சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1982.

33. மாற்றிலக்கணம்
- சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1985.

## 2. மொழிபெயர்ப்பு

34. தமிழ்மொழி வரலாறு, (மொழி)
- ச. செயப்பிரகாசம், மக்கள் நல்வாழ்வு மன்றம், மதுரை, 1973.

## 3. பதிப்புகள்

35. மாகபுராண அம்மானை
- அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை, 1954.

36. Simon kassic chetty"s The Tamil Plutarch, Srilanka, 1958.

37. தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-கல்லாடர் உரை
- அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை, 1974.

38. தில்லைவிடங்கன் மாரி முத்தாப்பிள்ளையின் அன்னீத நாடகம்
- சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1980.

## (B) ENGLISH WORKS

39. Mullai-Pattu, The Idyll of Jasmine
- Orient Longmans, Madras, 1958.

40. Prof.T.P.Meenakshisundaranar's Sixty First Birthday
- Commemoration Volume, Annamalai University, Annamalainagar, 1961.

41. A History of Tamil Language,
- Post Graduate Research Institute, Deccan College, Poona, 1965.

42. A History of Tamil Literature,
- Annamalai University, Annamalai Nagar, 1965.

43. A Pageant of Tamil Literature,
- Sekhar Pathippakam, Madras, 1965.

44. Papers on Linguistics and Literatures of Prof.T.P. Meenakshisundaram.-Department of Linguistics, Annamalai University, Annamalai Nagar, 1965.

45. Lectures on Saiva Siddhanta
- Tiruppananthal Mutt, Tirupananthal, 1965.

46. Tamil
- Indian Council for Cultural Relations, New Delhi, 1971.

47. Philosophy of Tiruvalluvar
- Madras University, Madurai, 1974.

48. Advaita in Tamil
- Madras University, Madras, 1974.

49. Foreign Models in Tamil Grammar
- Dravidian Linguistic Association, Trivandrum, 1974.

50. Tamil: A Bird's Eye View
- Makkal Nalvalvup Pathippakam, Madurai, 1976.

51. Some Aspects of Indian Social Philosophy
- Madras University, Madras, 1977.

52. Aesthetics of the Tamils
- Madras University, Madras, 1977.

---

*தோற்றம் : 2-1-1901*

*மறைவு : 27-8-1980*

**சிறப்புப்பட்டங்கள்**

| | | |
|---|---|---|
| *1. பல்கலைச் செல்வர்* | - | *தருமபுர ஆதீனம் 1955.* |
| *2. பத்மபூஷண்* | - | *1976 - நடுவண் அரசு* |
| *3. கலைமாமணி* | - | *1977 - தமிழக அரசு* |
| 4. Fellow fo Sahitya Akademi | - | 5-7-75. |
| 5. D.Litt. | - | *மதுரைப் பல்கலைக் கழகம்.* |

# UNIVERSITY OF MADRAS
## PUBLICATIONS DIVISION

| Sl. No. | Title | Author/Editor | Rate Rs. |
|---|---|---|---|
| 1. | Deciprering The Indus Script | Dr. S. Gurumurthy | 120/- |
| 2. | Facets of Saiva Siddhanta | Dr. P. Krishnan | 100/- |
| 3. | Journal of the Madras University Section - A Humanities (Volume LXIV of April 2000) | Dr. D. Amarchand | 65/- |
| 4. | Indian Philosophical Annual (Volume 22) | P. Gopalakrishnan<br>S. Pannerselvam<br>Godabarisha Mishra | 150/- |
| 5. | Crime in Railways | R. Thilagaraj | 90/- |
| 6. | A Comparative grammar of the Dravidian or South-Indian Family of Languages | Robert Calwell<br>(Paper back)<br>(Deluxe Binding) | <br>160/-<br>200/- |
| 7. | The Colas | K.A. Nilakanta Sastri | 250/- |
| 8. | Foreign Notices of South India | K.A. Nilakanta Sastri | 165/- |
| 9. | Annals of Oriental Research (Volume XXXIII) | Prof. Pon. Kothandaraman | 75/- |
| 10. | Aspects of the Process of Inscription of A National Cultural Ideology in Suharto's Orba Regime : Puristic Islam and Pancasila | Dr. Chitra Sivakumar | 40/- |
| 11. | Sri Lanka, India and the Tamil Liberation Struggle | Dr. Chitra Sivakumar | 40/- |
| 12. | Tribal Ecology and Development | V. Karuppaiyan<br>K. Parimurugan | 100/- |
| 13. | We Dare the Waters | P.T. Mathew | 225/- |
| 14. | New Catalogus Catalogorum (Volume Fourteen) | Dr. N. Veezhinathan<br>Dr. (Mrs.) E.R. Rama Bai | 165/- |
| 15. | Social and Economic Dimensions of Caste Organisations in South Indian States | Dr. R. Balasubramanian | 200/- |
| 16. | மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடல்கள் (இரு இசைப் பேழைகளுடன் இணைக்கப்பட்டது) | Dr. S. சீதா | 200/- |
| 17. | சிதம்பரம் இராமலிங்கரின் சித்தி வளாகம் | வை. இரத்தினசபாபதி | 65/- |
| 18. | திருஞான சம்பந்தர் ஓர் ஆய்வு முதல் பகுதி | வை. இரத்தினசபாபதி | 65/- |
| 19. | திருஞான சம்பந்தர் ஓர் ஆய்வு இரண்டாம் பகுதி | வை. இரத்தினசபாபதி | 65/- |
| 20. | புறத்திரட்டு | ச. வையாபுரிப்பிள்ளை | 160/- |
| 21. | முன்னோடிகள் மூவர் | ம.ரா.போ. குருசாமி | 36/- |
| 22. | தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல் | க.த. திருநாவுக்கரசு | 66/- |
| 23. | தமிழியல் ஆய்வுமேம்பாடு | இ. சுந்தரமூர்த்தி | 70/- |
| 24. | ஆசாரிய ஹிருதயம் | பி.ஆர். புருஷோத்தம நாயுடு | 240/- |